உ

முருகன் துணை

# தாயுமானவர் வரலாறும்

## நூலாராய்ச்சியும்

மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

ஆசிரியர்

திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை, M.A., M.L.,

தமிழ்ப் பேராசிரியர்,

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

திருவள்ளுவர் கழகம்

15-16, பெரியகடை வீதி

மயிலாப்பூர் :: சென்னை

1940

உரிமைகள் ஆசிரியர்க்கே

[விலை ரு. 1-4-0.

PRINTED AT
THE B. N. PRESS,
MOUNT ROAD, MADRAS.

# முன்னுரை

இந் நூலானது, தாயுமானப் பெருந்தகையாரது வாழ்க்கை வரலாற்றினை ஆராய்ச்சியுடன் சுருக்கமாகவும் தெளிவாகவும் கூறுவதுடன், அப்பெரியாரது திருவருட் பாடற் றொகுதியுட் போந்த மெய்ந்நூற் கருத்துக்க ளனைத்தையும் தொகுத்து வகுத்து விளக்குமியல்பிற்று. கடவுள், உயிர், மனம், தத்துவம், பாசம் என்பவற்றைப் பற்றிய அடிகள், கருத்துக்களை இதன்கண் தெளிவாகக் காணலாம். இறை வழிபாட்டின் இன்றியமையாமை, உடற்சித்தி உயிர்முத்திக்குத் துணையாதல், நால்வகைச் சாதனவியல்பு, பேரன்பர் திறம் முதலிய அரும்பொருள்களின் சார்பாய உண்மைகள் யாவும் இந்நூற்கண் தொகுக்கப்பட்டிருப்பதால், இதனைக் கற்போர் நற்பயனடைவரென்பது என் நம்பிக்கை. இத்தகையான ஆராய்ச்சி நூல்களுள், இதுவே முதலாக வெளிவந்துளது.

இதனை அச்சூர்தி யேற்றுதற்கு ஒரு பகுதிப் பொருளுதவி யருளிய தருமையாதீனம் உயர்திரு மகாசந்நிதானம் அவர்கட்கும், இருபகுதிப் பொருள் நல்கிய திருநெல்வேலி ஆடைவணிகர் திலகர் சைவத் திருவாளர் நா. சுப்பையாப் பிள்ளை அவர்கட்கும் இம் முயற்சியில் என்னை யூக்கிய பிற நண்பர்கட்கும் எனது மனமார்ந்த வணக்கம் உரித்தாகின்றது.

அண்ணாமலை நகர்,
26–9–'40.

இங்ஙனம்:
**கா. சுப்பிரமணியம்.**

# உரிமையுரை

---

செந்நெறிச் செல்வமும் நன்னெறிச் சீரும்
வேளாள வண்மையும் தாளாண்மைத் தலைமையும்
உடைய சைவத் தோன்றல்
நெல்லைமாநகர்

**ந. சுப்பையாப் பிள்ளை அவர்கட்கு**

இந்நூல் ஏற்புடைத்து.

உ

சிவமயம்

# தாயுமானசுவாமிகள் வரலாறும் நூல் ஆராய்ச்சியும்

## தாயுமான அடிகள் வரலாறு

சிராப்பள்ளி மலைமேவுந் தட்சிணா
மூர்த்தியருள் நல்கப் பெற்றுப்
பராபரமு மெந்நாளும் பைங்கிளியும்
பலபாவும் பாடிப் பாடித்
தராதலமா னிடர்க்கெல்லாந் தண்ணமிர்தாய்த்
தந்தருளுந் தாயுமான
நிராமயனா ரருட்பெரிய கவிதையினாற்
பொருளதனை நினைந்து வாழ்வாம்.

ஒவ்வொரு காலத்திலே ஒவ்வொரு பெருந்தகையார் தோன்றி உலகிற்குப் பெருநன்மை விளைத்திருக்கின்றனர். ஆசிரியர் திருவள்ளுவனார் உலகுள்ளவரை நிலவும் பொது மறை யளித்தனர். மணிவாசகப்பெருமான் சிவனது அறிவு நெறியை நிலைநாட்டினர். சம்பந்தரும், அப்பரும் சமணரை வென்று அன்பு நெறியைப் பாதுகாத்தனர். திருநாவலூரார் யோகமும் வீடும் நல்கும் இறைவன் பேரருளை விளக்கித்

தமிழ்நாட்டுத் தொண்டர் தொகுதி செப்பினர். திருமூலமா முனிவர் மந்திர யோகஞான மாண்பு விளக்கினர். நம்பி யாண்டார் நம்பிகள் திருமுறையை வெளியாக்கினர். ஆசிரி யர் சேக்கிழார் இணையற்ற திருத்தொண்டர் புராண மீந்த னர். கச்சியப்பர் எப்பொருளும் செறிந்த கந்தபுராணம் தந்தனர். கம்ப நாட்டடிகள் தமிழ்நலஞ் செறிந்த பொதுப் பெருங் காப்பியமியற்றினர். குமரகுருபரர் இமயத்திற் சைவக்கொடி நிலைநாட்டினர்.

இவ்வாறே உலகம் யாவும் போற்றும் ஒரு முதல் வனின் விரிந்த பொதுத்தன்மைகளை இன்சுவை ததும்பும் அமுதப் பாடல்கள் வாயிலாக அறிவுறுத்திய பாவலரும், உயர்ந்த பேரின்பநிலை யொன்றினையே விழைந்து செல்லும் உயிரினியல்பைத் தந்நிலை கூறுமுகத்தாற் பன்னிய பெரியா ரும், மனமாயையினுட்ப முரைத்த மூதறிவாளரும், தாயு மான அடிகளென்னுஞ் சிவானுபூதிப் பெருஞ்செல்வரே ஆவர். அவர் எவ்வுயிரையுந் தன்னுயிர்போ லெண்ணி யிரங்கும் அருளொழுக்கத்தை உலகினர்க்குரைப்பதில் ஒப் பற்ற ஆர்வமுடையவர். தாழ்வெனுந் தன்மையிற் றலை சான்றவர். உலகினர் யாவரும் மெய்ந்நெறி கடைப்பிடித்து அகண்டாகார சிவத்தைத் துய்க்கும் வண்ணம் கூவுங் கருணை முகிலனைய அப்பேரறிவாளரது வாழ்க்கை வரலாறு சுருக்கமாக ஈண்டு ஆராயப்படும்.

சோழநாட்டிலே, தேவாரத் திருமறையின் பெரு மையை இனிது விளக்கிய திருமறைக்காட்டிலே ஏறக் குறைய முந்நூற்றைம்பது ஆண்டுகட்கு முன் கேடிலியப்ப பிள்ளை யென்பவர் சைவ வேளாளகுல முதல்வராய்த்

திகழ்ந்தனர். அவர் கல்வியறிவொழுக்கமும் வினையாள் திறனும் ஒருங்கு வாய்ந்தவராதலின் அவ்வூர் இறைவர் திருத்தளிக்கு அவரை அறத்தலைவராகச் சைவ ஆதீனத்தார் ஏற்படுத்தினர். தமது தமையனார் மகப்பேறின்றி வருந்தினமையால் அவருக்குத் தமது புதல்வராய சிவசிதம்பரம் பிள்ளையைத் தெத்தாகக் கொடுத்துவிட்டுத் தமக்கு ஒரு பிள்ளை யருளும்படி இறைவன்பால் வேண்டி நோற்றனர். ஆயகாலை திரிசிராப்பள்ளியில் அரசாண்ட நாய்க்கர் வழியில் எட்டாவது தலைமுறை யரசனாகிய முத்துக்கிருட்டின நாயக்கர், நற்பொழுதிலே கடன் முழுக்காற்றக் கருதித் திருமறைக்காடு போந்தனர். கேடிலியப்ப பிள்ளை அரசனை மிகவும் சிறப்பாக எதிர்கொண்டு இறைவரைத் தொழுவித்தனர். அவரது உதவிகளால் மகிழ்வு மீக்கூர்ந்த மன்னன், அவரது கணக்கு வல்லமையை அறிந்து அவரைத் தனது அரசாங்கத்திலே பெருங் கணக்கரென்னும் உயர்பதவியி லிருத்தினன். அவனும், கி. பி. 1608-ல் அவனுக்குப்பின் பட்டத்திற்கு வந்த முத்துவீரப்ப நாயக்கனும் தங்கள் கணக்கரைப் பெரிதும் மதித்துப் போற்றினர். அவர் திரிசிராப்பள்ளியிற் குடும்பத்தோடு தங்கி அவ்வூரிற் றிருக்கோயிலில் வீற்றிருக்குந் தாயுமானப் பெருமான்பாற் பிள்ளைவரம் வேண்டினர். அவ்வண்ணல் திருவருளாலே உலகிற் கெல்லாம் திருவருட் பெருமையை விளக்கவரும் அருந்தவ ஆண்குழந்தை யொன்று பிறந்தது. அக்குழந்தை பிறந்த இடம், மறைக்கா டென்பாரு முளர். அதற்குத் தாயுமானவன் என்ற திருப் பெயரிட்டனர். அடிகள் தமது திருப்பாடல்கள் சிலவற்றிலே இப்பெயரை வழங்கியிருக்கின்றார்.

"அந்த மாதியு மளப்பருஞ் சோதியே யடியார்தஞ்
சிந்தை மேவிய தாயுமா னவனெனுஞ் சிரகிரிப் பெருமானே"
—ஆசையெனும் 10.

"தடுத்த வாறும்புகலாய்
சிரகிரித்தாயுமான தயாபரமூர்த்தியே
தாயுந்தந்தையு மானோய்
சிரகிரித் தாயுமான தயாபர மூர்த்தியே"
—எடுத்ததேகம் 12.

என்றது காண்க.

தாயுமானவர் உரிய காலத்திலே கல்வி கற்கத் தொடங்கி வடநூற்கடலும் தென்னூற்கடலும் நிலை கண்டுணர்ந்தனர். பாடற்றிறமையும் பண்பொடு பழகிப் பண்ணிசைந்த மூவர் பாடலின் இணையற்ற தீஞ்சுவையையும், மணிமொழியாரின் திருவாசகக் கனிவையும் நுகர்ந்தனர். திருவருட் பெற்றியோர்ந்து அதனை எப்போதும் பாடியுந் தேடியும் பயன்பெறும் பேரவாவுற்றனர். அது,

"சந்ததமும் நின்கருணை சாற்றுவதல் லால்வேறு
சிந்தை யறியேனுன் சித்தம் பராபரமே"—பராபரம் 8.

"மண்ணொடு விண்காட்டி மறைந்துமறை யாவருளைக்
கண்ணொடு கண்ணாக வென்று காண்பேன்"

என்றமையாற் றெளிக.

அந்நாளிலே அவர் தகப்பனார் விண்ணெய்தினமையால், அரசன் அவரை வரவழைத்து, அவர் ஆற்றலைப் பரிசோதனையா லறிந்து மிகவியந்து தந்தை பதவியை மைந்தருக்கு நல்கினன்.

மைந்தரும் அரசாங்கக் கடமையைச்செவ்விதினியற்றி வருங்காலை, உலக நிலையாமை யுணர்ந்து சிவ நுகர்ச்சிப்

பேரின்பப் பேற்றினையே பெரிதும் விழைந்து அது எஞ் ஞான்று தமக்குக் கிட்டுமோ வென்று கவலையுறுவா ராயி னர்.

"இறப்பொடு பிறப்பை யுள்ளே
யெண்ணினால் நெஞ்சது பகீரெனும் துயிலுறாது
இருவிழியு மிரவு பகலாய்ச்
செந்தழலின் மெழுகான தங்கமிவை யென்கொலோ"
—சின்மயானந்தகுரு 5.

"பாவிபடுங் கட்கலக்கம் பார்த்திலாயோ"—கல்லாலின் 15.

"கண்டிலையோ நான்படும் பாடு" —ஷை 22.

"மோகமாதி தருபாச மானதை
யறிந்து விட்டுனையு மெனையுமே
மூழுது ணர்ந்துபர மான இன்பவெளம்
மூழ்க வேண்டுமிது வன்றியே
தேகமே நழுவி நானுமோ நழுவிற்
பின்னை யுய்யும் வகையுள்ளதோ"
—சிற்சுகோதயம் 5.

என்றது காண்க.

பேரின்ப நாட்ட மிகுதிப்பாட்டால் அடிகள் பித்துக் கொண்டவர் போலானார் என்பது,

"சுத்த வறிவாய்ச் சுகம்பொருந்தி னல்லால்என்
சித்தந் தெளியாதென் செய்வேன் பராபரமே" —பராபரம் 22.

"மாறா அனுபூதி வாய்க்கின் அல்லால்என் மயக்கந்
தேறாது என் செய்வேன்" —ஷை 23.

"தாகமறிந் தின்பகிட்டை தாராயேல் ஆகெடுவேன்
தேகம் விழுந்திடினென் செய்வேன் பராபரமே" —ஷை 24.

"பாராயோ வென்னைமுகம் பார்த்தொருகா லென்கவலை
தீராயோ வாய்திறந்து செப்பாய் பராபரமே"

—பராபரம் 28.

என்பனவற்று லறியப்படும்.

அடிகளது தாழ்வெனுந் தன்மை,

"என்போ லெளியவரு மெங்கெங்கும் பார்த்தாலும்
உன்போல் வலியவரு முண்டோ பராபரமே"

—பராபரம் 116.

என்னுந் திருப்பாட்டாற் புலனும்.

அருட்பெருந் தகையராகிய அடிகள் இளமையிலேயே இறைவன் தன்னைப் பித்துக் கொள்ளும்படி செய்தனரென்பார்,

"அன்பின் வழியறியாத என்னைத்தொடர்ந்து என்னை
யறியாத பக்குவத்தே
ஆசைப் பெருக்கைப் பெருக்கிக் கொடுத்துநான்
அற்றேன் அலந்தேன் என்ன
என்புல மயங்கவே பித்தேற்றி விட்டாய்"

என்றார்.

அருட் குருவை நாடி அடிகள் அலைந்தமை,

"தேடினேன் திக்கனைத்துந் தெண்டனிட்டேன் சிந்தைநைந்து
வாடினேன் னென்மயக்க மாற்றாய் பராபரமே"

—பராபரம் 200.

"எந்தநாள் கருணைக் குரித்தாகும் நாளெனவும்
என் இதயம் எனைவாட்டுதே" —சுகவாரி 11

என்பனவற்றால் தெளிக.

பெருநிலை யெய்துதற்குத் தனக்குந்தகுதியில்லை; திரு வருளு மிரங்கவில்லை யென்று பல விடங்களில் அடிகள் குறிக்கின்றார்.

"எத்தனை விதங்கள்தான் கற்கினும் கேட்கினுமென்
இதயமும் ஒடுங்க வில்லை
யான்என் மகந்தைதான் எள்ளளவும் மாறவில்லை"

—ஆனந்தமானபரம் 9.

எப்பொருளின் கண்ணுமுள்ள பற்றானது என் சித்தத் திற் குடிகொண் டிருக்கின்றது. ஈகையும் இரக்கமும் யான் அறிகிலேன். சீலமும் தவமும் விரதமுங் கனவிலும் கடைப் பிடியேன். பொய்ம்மொழியல்லால், மருந்துக்கும் மெய்ம் மொழி பேசேன். பிறர்க்கு நன் மதி புகட்டுவதல்லாமல், நான் சும்மா இருந்து அருள் பொருந்திடேன். இத்தனை குணக்கேடு உடையவர்களை இவ்வுலகிற் கண்டதுண்டோ, கேட்டதுண்டோ, சொல்லுக என்றது காண்க.

பாட்டுப்பாடி நின்னை வாழ்த்துதற்கு வேண்டும் பத்தி எனக்கில்லை. மறைமொழியாதல், மூவர் தீந்தமிழாதல் ஓது வதற்கு இசையுணர்ச்சி யில்லை. யோக நெறி பயில்வதற்கு உடம்பு இடங்கொடுக்கவில்லை. உணவினை வெறுப்பது உயிரை வெறுப்பதுபோன்றிருக்கின்றது.—

[சச்சிதானந்தசிவம் 3.]

வேறு எளிதான நற்செயல் செய்யலாகாதோ வெனின், மனமயல் சிறிதும் நீங்கவில்லை.

ஞானநெறியாகிய மோனத்தில் நிற்பதற்கோ பரிபாகம் முற்றவில்லை.

"தமியனேற்கு அருள்தாகமோ சற்றுமில்லை"-எங்குநிறை 6.

"ஆணிலே பெண்ணிலே யென்போல
ஒருபேதை அகிலத்தின் மிசையுள்ளதோ"
—சித்தர்கணம் 7.

"ஆனாலும் என்கொடுமை அநியாயம்அநியாயம்
ஆர் பாலெடுத்து மொழிவேன்"
—ஆனந்தமானபரம் 7.

என்னுங் கருத்துக்களால், தம்மை அடிகள் இகழ்தலாலும்,

"பதினாயிரஞ் சொன்னாலு நின்னருள்
இரங்கவில்லையே இனிச்சுகம் வருவதெப்படி"
—சுகவாரி 12.

என்று கூறுதலாலும் அறிக.

இனித் திருவருளை உரிமையுடன் வேண்டுவார்,

"நாடகம் நடித்ததோ குறைவில்லை
அகிலமும் சிறித றியுமேல்
தண்ணாரும் நின்னதரு ளறியாத தல்லவே"
—எங்கு நிறை 5.

"ஒருமை மனதாகிய அல்லலற நின்னருளில்
ஒருவன்நான் வந்திருக்கின்
உலகம் பொறாததோ?" —எங்கு நிறை 7.

"அன்பர்எல்லாம் இன்பம் அருந்திடவும் யான்ஒருவன்
துன்புறுதல் நன்றோ" —பராபரம் 254.

என்றித்தகைய பல இயம்பி யருளினர்.

எங்கு நிறைந்துள்ள பரம்பொருளின் வடிவமாகவே எப்பொருளையுங் காணவல்ல அடிகள் காற்றினையுங் கடலினையும் பிறவற்றையுநோக்கி, அவற்றின் கட் கலந்துள்ள முதல்வனை எத்தகையன் என்று அடிகள் வினவுவது உள்ளத்தை உருக்கும் பான்மையது.

'வியந்தாங் கலறித் தேடிற்றிலேன்' 'சிவன் எவ்விடத் தான்? எவர் கண்டனர் என்று ஓடிற்றிலேன்' என்ற மணி வாசகத்திற்கு அடிகள் சிறந்த இலக்காயினர். அடிகள் அருண்மொழிகளின் கருத்து வருமாறு:—

வானத்திலே மதியையும் கதிரோனையும் நோக்கி, நேரே இரவு பகல் கோடாவண்ணம், நித்தம்வர உங்களை இந்நிலையில் வைத்தார் ஆரோ? அவர் பெருமை இருந்தவாறு என்னே? என்பேன். வீசுகின்ற காற்றே நீ யாராலே உன் போக்குத் தவறாது சுழல்கின்றாய் என்பேன். மழை பொழிகின்ற முகில்களே! உங்களைப்போல, எம்பெருமான் தாராளமாகக் கருணை பொழியச் செய்தற்கு உபாயம் யாதோ? சொல்லுவீர் என்பேன். கருத்திலடங்காத வானே! நீ எங்குங் கலந்துள்ளாயே, உனக்கப்பாற் புக்குப் பார்க்குங்கால் ஆங்குள்ள பரம்பொருள் எப்படியிருக்கும்? சொல்லாயோ என்பேன். மண்ணே! நீ ஒடுங்கிய விடத்து எப்பொருள் விளங்கி நிற்கும்? உன்னைச் சுமக்கும் நல்லறிவுடைய ஆதிசேடன் முடிந்த உண்மை சொல்வானோ? என்பேன். அருள் நூல்களே! எல்லார்க்குந் தெளிவாக உங்கள் முடிவினை உரைக்க என்பேன். சொல்லிற்கடங்காப் பெருமையுடன், அலையாய கைகளை அசைத்து ஒலிக்கின்ற கடலே! இவ்வுலகத்தைச் சூழ்ந்து கரையின்றி நிற்கும்படி உன்னை வைத்தவர் யார் என்பேன். காட்டுப் பசுங்கிளிகளே! கமலங்கடோறுஞ் சென்றாதும் வண்டினங்களே! அன்னங்களே! தூதுபோந் தன்மையுடைய நீங்கள் இதுவரை பெரிய பரிபூரணமாம் பொருளைக் கண்டு பேசியதுண்டோ? உண்டெனின், என் பொருட்டு ஒருமுறை அவர்பாற் சென்று பேசுமின் என்பேன். [ஆகாரபுவனம் 25, 26, 27.]

இங்ஙனம் அருட்குரவன் வரவை உள்நாடி அடிகள் அரசாங்க வேலை பார்த்துத் திரிசிரபுரத்தே வதியுங் காலத்திலே தருமபுர ஆதீனத்தில் உபதேசம் பெற்ற மௌனகுரு தேசிகரென்னுஞ் சிவயோகியார் சிதம்பரத்தி னின்றுபுறப்பட்டு, பல கோயில்களையும் வணங்கிக் கொண்டு திரிசிராப்பள்ளியிலே சாரமா முனிவர் மடம் என்ற இடத் திலே சின்னாட்டங்கி இருந்தார். அவர் அவண் பலமாண வர்க்கு மெய்ந்நூ லறிவுறுத்தினமையால், அவ்விடத்திற்கு மௌனகுரு மடமென்ற பெயர் வழங்கலாயிற்று.

மௌனகுரு அங்கிருக்கு நாளிலே ஒருநாள் அடி கள் தமது வழக்கப்படி சிராமலை நாதரைக் கும்பிட்டபின், சாரமாமுனிவர் மடத்தருகேயுள்ள குமாரக்கடவுளை வணங்கி மீளும்போது மௌனதேசிகரைக்கண்டனர். கண் டவுடன் உள்ளங்கவரப் பெற்றுத் தேசிகர் திருவடிகளில் வீழ்ந்திறைஞ்சினர். அடிகளது உயர்ந்த பக்குவநிலையை அறிந்த மௌனகுரு அவருக்கு யோக ஞானமுறைகளை அருளினர். குருவானவர் தமதுகையிலே சிவஞானசித்தி யார் வைத்திருந்தனரெனவும், அதன் எட்டாஞ்சூத்திரம் முப்பதாம்பாட்டின் முதற் பாதியையோதி அடிகட்கு மெய்ந்நூற் றெளிவினை அறிவுறுத்தினரெனவுங் கூறுப. அடிகள் அன்று முதல் சித்தாந்த நூல்களைக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல் என்னும் நான்கினையு மேற்கொண்டு கல்லாலடிக்கீழ் வைகும் முதல்வன் றிருமுன்பு ஒன்று படுதலாகிய நிட்டைப்பயிற்சி செய்து வந் தனர். அக்காலத்திலே திருவருள் விலாசப் பரசிவ வணக்க மும், பொருள் வணக்கமும், பரிபூரணானந்தமும் பாடினர். 'சின்மயானந்த குரு' என்பது கல்லாலநீழற் கடவுள்மீது

பாடப் பெற்றது. தமது ஆசிரியர் பெருமையை 'மௌன குரு' என்னும் திருப்பதிகத்திலே வியந்தனர். இப்பாடல்களை எல்லாம் அடிகளது சிறிய தாயார் புதல்வரான அருளைய பிள்ளை என்பவர் எழுதிப் பாதுகாத்துப் பிறருக்கு முரைத்தனர்.

தாயுமானவர்பாற் பல திருவருட் புதுமைகள் கண்ட மன்னன் அச்சமுற்று ஒரு நாள் அவரை வணங்கி, இதுவரை தங்கள் பெருமையை உணர்ந்திலேன்; அடியேனால் வேண்டுவனவற்றைச் செய்வித்துக்கொண்டு தங்கள் நிட்டைநிலைக்கு இடையூறின்றி யினிது வைகி யருள்க என்றனன். அடிகளும் அவ்வாறே ஞானநெறியில் ஒழுகி வந்தனர். திருவானைக்கா அகிலாண்டநாயகி பதிகம் இக்காலத்திலே அடிகளாற் பாடப்பெற்றதென்ப. திரிசிரபுர அரசன் 1625-ல் உலகு நீத்தனனாக. அரசு, அரசியின் ஆட்சியிலிருந்தது. அரசன் மனைவி தாயுமான சுவாமிகளை அழைத்துப் பெரிய கணக்கு வேலையைப் பார்க்க வேண்டுமென்று குறையிரந்தனள். அடிகள் ஒருவாறிணக்க முற்றனர். பின்னர் அரசியானவள் அவரது கட்டழகினாற் பிணிப்பிற்றுத் தகாத செய்கையைக் கருதித் தெரிவிக்க, தெரிவித்த அந்நாளிரவே, அடிகள் அருளையரோடு, திரிசிரபுரம் நீத்துத் தென்றிசை நோக்கிச் சென்றனர். வழியிலே நல்லூர் என்னுஞ் சிற்றூரினை யடைந்தபோது, தமது சிவபூசைப் பெட்டியை எடுத்துவரத் தவறினமையை யுணர்ந்து, அருளையரை அதனை எடுத்து வருமாறு அனுப்பிவிட்டு, அடிகள் அவண் அயர்வுற்றிருந்த காலை, அவ்வூரினர் அவரைப் பாலுணவு கொள்ள வேண்டினர். அப்போது தாம் பாடிக்கொண்டிருந்த "கருணாகரக் கடவுள்" என்னும் பதி

கத்திலே ஐந்து பாடல் முடிந்திருப்ப, ஆறுவது பாட்டாகப் "பண்ணே னுனக்கான பூசை" யென்பதைப் பாடியருளித் தமது பசியை ஒரு சிறிது தீர்த்துக்கொண்டா ரென்ப.

திரிசிராப்பள்ளியில் அடிகளைக் காணாமையால், அரசி மிகவுஞ் சினந்து மந்திரத்தொழில் வல்லானொருவனை அவரைத் தேடிக்கண்டு வசியஞ் செய்யுமாறு ஏவினள். அவன் நல்லூரையடைந்து, நிட்டையிலிருந்த அடிகட்குப் பின்னிருந்து வசியமறை செப்பிய காலை, அடிகள் திரும்பி அவனைப் பார்த்தவுடன், மனநிலை கலங்கி, அவரடியில் வீழ்ந்து வணங்கி மன்னிப்புக் கேட்டுக்கொண்டு மீண்டுபோயினன். பின்னர் அடிகள் இராமேசுரஞ் செல்வான் அருளையரோடு புறப்பட்டார்.

இருவரும் வழியிலே விராலி மலையை அடைந்தனர். அங்கே வசித்த ஒரு சைவ வேளாள வள்ளலுக்குக் கனவிலே ஒரு துறவி தோன்றி, "என் பிள்ளைகள் இருவர் பட்டினியா யிவண் வந்திருக்கின்றார்கள்; அவர்கட்கு அன்னம் அளிக்க" என்றேவிய அளவில் அவன் இவர்கள் இருவரையு மறிந்து உணவு நல்கினன். அதன் சிறந்த பயனாக அவனுக்கு ஒரு மைந்தன் பிறந்தமையால், அம்மகவிற்குத் தாயுமானவர் என்ற பெயரிட்டனன். அவ்வேளாள குடும்பத்தார் தங்கள் பெயர்க்குமுன் 'தாயுமான' என்ற அடைமொழியை இன்னும் வழங்கி வருகின்றார்கள்.

விராலிமலையில் அடிகள் தங்கிய காலத்தே, ஒரு சித்தர் அடிகளின் உயர்ந்த மனநிலையை யறிந்து அவரைச் சித்தர் பலரிருக்குமோ ரிடத்திற்கு அழைத்துச் சென்றார். அன்னாரோடு அடிகள் சின்னாட்கள் அளவளாவி யிருந்தனர்.

அக்காலத்திற் ‘ சித்தர்கணம் ’ என்பது பாடப் பெற்றதுபோலும். உடற்சித்தியும் உயிர் முத்தியும் ஒருங்கெய்த வேண்டுமென்ற கருத்து அடிகட்கு அப்போது உதித்திருத்தல் கூடும். ஆனந்தமானபரம் முதலிய திருப்பாடல்களும் விராலிமலையில் பாடப் பெற்றன. அங்கிருந்து புறப்பட்டுப் புதுக்கோட்டைக் கருகிலுள்ள ‘ கபிலை ’ யென்னும் பெயருடன் விளங்குந் திருப்பதியை அடைந்து, அங்கு வீற்றிருக்கும் பெரிய நாயகியார்மீது ‘ காற்றைப் பிடித்து ’ என்ற பாடலருளிச் செய்தார்.

பின் இராமேசுரஞ் சென்று இராமநாதரை வணங்கினர்.

“ மாதுகாதலி பங்கனை யபங்கனை மாடமாளிகை சூழுஞ்
சேதுமேவிய ராமநாயகன்றனைச் சிந்தைசெய் மடநெஞ்சே ”
—ஆசையெனும் 11.

என்றது காண்க.

இராமேசுரத்திலே பாடிய பாடல், ‘மலைவளர் காதலி’ என்பது. அது அந்தவூர் இறைவி திருப்பெயரானமைந்தது. (பருவதர்த்தினியம்மை என்பது வடமொழிப்பெயர்) இத்திருப்பதிகத்தே செல்வர்க்குக் குற்றேவல் செய்யும் வாழ்க்கையை வெறுத்துக்கூறிய பகுதி வருமாறு:—

“மிடியிட்ட வாழ்க்கையா லுப்பிட்ட கலமெனவு
மெய்யெலா முள்ளுடைந்து
வீறிட்ட செல்வர்தந் தலைவாயில் வாசமாய்
வேதனைகள்உற வேதனும்
துடியிட்ட வெவ்வினையை யேவினன் பாவிநான்
தொடரிட்ட தொழில்களெல்லாந்
துண்டிட்ட சாண்கும்பி யின்பொருட் டாயதுன்
தொண்டர்பணி செய்வதென்றோ ”—மலைவளர்காதலி 4.

சிலகாலம் அவண் தங்கிய பின்னர், அடிகளும் தம்பியாரும் வடதிசை நோக்கிப் போயபோது, தம்மைத்தேடி வரும் தமையனாருடைய ஆட்களைச் சந்தித்தனர். தமயனார் கருத்திற்கிணங்க, இருவரும், திரிசிராப்பள்ளி சென்று வீட்டுப்பொருள்களை எடுப்பித்துக்கொண்டு தாயாரையும் அழைத்துப்போய்த் திருமறைக்காடடைந்தனர். அடிகள் அங்கு வைகியபோது அவரது தமையனாரும் தாயாரும் அவருக்குத் திருமணம் நிகழ்த்தவேண்டும் என்று வற்புறுத்தினர். பலவாறு மறுத்தும் அவர்கள் உடன்படாமையால் அடிகள் திருமணத்திற்கிசைந்தனர். தாம் மௌனகுருவின்பால் அறிவுரை பெற்றபின்னும் இல்லறத்தி லிறைவன் தம்மைச் செலுத்தியது, தமக்கு வெறுப்பும் விருப்பும் ஈவதென்பார்,

"பாரு பாரென நடத்த வந்ததென்?
பாரதத்தினு முள்ளதோ? * * *
சித்த மிப்படி மயங்குமோ?
அருளை நம்பினோர்கள் புறம்பேறிதோ?"

சிற்சுகோதயம் 9.

என்றார்.

திருமணம் நிகழ்ந்து ஒரு பிள்ளை பிறந்தபின் மனைவி சிவபதம் உற்றாள். பிள்ளைக்குக் கனகசபாபதி என்ற பெயரிடப்பட்டது. இல்லறத்தில் வீற்றிருந்த காலத்தில், அடிகள் கண்ணிகள் பலவும் பாடினரென்ப. தமது தாயார் காலஞ்சென்ற பின்னர், தமது செல்வத்தையும் செல்வக் குமாரனையும், தமையனாரிடம் ஒப்புவித்துத் தாம் கடுந்துறவு பூண்டு கோவணவாடையொடு அடிகள் புறம்போந்தனர். அருளையபிள்ளையும் பின் தொடர்ந்தனர். அடிகள் இறை

வன் தமக்குச் செய்த நன்றியை அழகாக ஒரு செய்யுளில் விதக்கின்றார். அதன் கருத்து:—

"அலைகடல் போன்ற பெருஞ்செல்வம் அல்லல் விளைக்குமாதலின் அதனை நல்காது ஒருவர்பின் சென்று வருந்தாமலும் கேட்பார்க்கில்லை யென்னுமலும் பகுத்துண்டு பல்லுயிரோம்புதற்கு வேண்டுஞ் செல்வமுதவி நோயற்ற சுகவாழ்க்கை யளித்து யோகஞானநெறி நிற்கு நிலையும் உண்ணின் றுணர்த்தியதோடு மோனகுருவாக நில மிசைத் தோன்றி யருள் புரிந்த உன் சிறந்த கருணையை, ஐய! என்னென்று சொல்லுவேன். இவன் சிறியன். அறிவிலியாயினும் நமது அடிமை யென்ற கருத்து நின் திருவுள்ளத்திலிருந்தது போலும்" என்றனர்.

திருவருள் தமக்குப் பல நலங்கள் தந்தது போலவே இடைவிடா மோன நிட்டையும் நல்க வேண்டு மென்பார், "வருவன வருக வாராதன போக" வென்று பற்றுவிடுத்து மனச்சான்றிற்கு மாறின்றி யொழுகும் நிலை தந்ததும், வேதாந்த சித்தாந்த உண்மைக் கருத்தொருமையை முற்றிலுமுணர அறிவு உதவியதும், உடல் நிலையாமை யுணர்ந்து ஞானநெறி நிற்றலை யளித்ததும் என்றும் நிலைத்த பேரின்ப நுகர்ச்சியே வீடென்று தெளிந்து புனல்போல உள்ள முருக அன்பு தந்ததும் நின்னுடைய அருளே. இன்னும் நின்னையே துணையென்ற என்னையே காக்க ஒரு எண்ணம் உனக்கு உண்டெனின், உலக முதலிய அசத்துத் தோன்றாது சிவசத்தே தோன்றும் மோன நிலையே பற்றாக நிற்க வருள்வாய்" என்றனர்.

—[பரிபூரணனந்தம் 8.]

அடிகள் இறைவனுக்கே தம்மைக் கொடுத்து விட்டாராதலின் 'தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னை என்று மணிவாசகனார் கூறியபடியே,

"தன்னைத்தந் தென்னைத் தடுத்தாண்ட நின்கருணைக்கு
என்னைக்கொண் டென்னபலன் எந்தாய்"-பராபரம் 127.

என்றும்,

"சிந்தை மயக்கமறச் சின்மயமாய் நின்றஉன்னைத்
தந்தஉனக் கென்னையுநான் தந்தேன்"—பராபரம் 329.

என்று மருளிச் செய்தனர்.

"தன்ன தென்றுரை சாற்று வனவெலாம்
நின்ன தென்றனை நின்னிடத்தே தந்தேன்"
—பொன்னைமாதரை 2.

என்றது மது.

மெய்யுணர்ந்தும், இடையிடையே தோன்றும் வாசனா மலத்தை அறவே ஒழிக்க விரும்பும் அடிகள்,

"இந்நிலையி லேசற் றிருக்க வென்றால் மடமை
இதசத் துருவாக வந்து
சிந்தைகுடி கொள்ளுதே மலமாயை கன்மம்
திரும்புமோ தொடுவழக்காய்ச் சென்மம் வருமோ"

எனவும்,

"......மனது யோசிக்குதே
சிரத்தையெ னும்வாளும் உதவிப்
பந்தம்அற மெய்ஞ்ஞான தீரமுந் தந்து எனைப்
பாதுகாத் தருள்செய்குவாய்"

என்று இறைவனை வேண்டினரென்க.

"வைத்த தேகம் வருந்த வருந்திடும்
பித்தன் நான்அருள் பெற்றுந் திடமிலேன்"
—பொன்னைமாதரை 10.

என்றது மது.

அடிகள் முடிந்த மோன நிலையை எய்துமுன் தன்னிலைமையைக் கூறுவான்,

"ஒன்றைப் பெற்றவனு மல்லேன் பெறுதவனு மல்லேன்
பெருக்கத் தவித்து ளறியே
பெண்ணீர்மை யென்ன இரு கண்ணீர் இறைத்துநான்
பேய்போ லிருக்க உலகஞ்
சுற்றிநகை செய்யவே உலையவிட் டாயெனிற்
சொல்லவினி வாயுமுண்டோ" —சுகவாரி 6.

என்றனர்.

"கருத்தினுட் கருத்தா யிருந்துநீ யுணர்த்துங்
காரணங் கண்டு சும்மாதான்
வருத்த மற்றிருந்து சுகம்பெறு வண்ணம்
வருந்தினேன்" —ஆரணம் 6.

என்றது மது.

இறைவன் மெய்யன்பையும் இன்ப நிட்டையையுந் தராவிடின் உயிர் துறப்பே னென்பார்,

"நீராயுருக உள்ளன்பு தந்தேசுக நிட்டையைநீ
தாராவிடின் என்பெரு மூச்சுத்தானந் தனஞ்சயனே"
—பாயப்புலி 20.

என்றார்.

தனஞ்செயன் என்னும் வாயுவானது உயிர் உடலை நீத்தபின் உடலின்கண் நின்று புறம்போவது.

மோனநிட்டை சிறிது கைவந்தபோது அடிகள், "இன்பக்கால் சற்றல்லாத் தடையற்றவானந்தவெள்ளம் பொங்கி வந்த நாளில்லை" என்றார்.

மோன நிட்டையிற் பழகியபின் அடிகள் தன்னிலையுணர்த்துவார்,

"நடக்கினு மோடினு நிற்கினும் வேறொரு நாட்டமின்றிக்
கிடக்கினும் செவ்வி திருக்கினும் நல்லருட் கேள்வியிலே
தொடக்கும் என்னெஞ்சம் மனமற்ற பூரணத் தொட்டிக்குள்ளே
முடக்குவன் யான்பர மானந்த நித்திரை மூடிடுமே"

—பாயப்புலி 12.

என்றார்.

இறைவனது பூரணம் தன்னை விழுங்கியவிடத்து ஒன்றுங்கூற வொண்ணாதென்பார்,

"நானென் றொருமுதல்உண்டு என்றநான் தலைநாண் என்னுள்
தானென் றொருமுதல் பூரணமாகத் தலைப்பட்டு ஒப்பில்
ஆனந்தந் தந்துஎன் அறிவை யெல்லாம் உண்டு அவசம் நல்கி
மோனம் தனைவிளைத் தாலினி யாது மொழிகுவதே"

—பாயப்புலி 14.

என்றார்.

"வாரிக் கொண்டெனை வாய்மடுத் தின்பமாய்ப்
பாரிற் கண்டவை யாவும் பருகினை
ஓரிற் கண்டிடும் ஊமன் கனவென
யாருக் குஞ்சொல வாயிலை ஐயனே"

—பொன்னைமாதரை 30.

என்றது மது.

அடிகள் துறவடைந்த பின் திரிசிராப்பள்ளி மௌன குரு மடத்தை யடைந்து தமது குருமூர்த்தியை வணங்கிச்

சிலகாலம் அவண் தங்கினர். தமது குருவிற்குப்பின் கி. பி. 1644-ம் ஆண்டு தொடங்கிச் சின்னாள் அவரது திருமடத்துத் தலைவராய்த் திகழ்ந்தனர். அப்பால் தமது இளவலோடு தென்றிசை சென்று இராமநாதபுரத்தின் கீழ்பாற் காட்டூரணியென்ற தனியிடத்தில், புளியமரமொன்றின் நீழலில் வதிந்தனர். அதுவே தனது நிட்டைக்குத் தக்க இடமென்று கருதினர்போலும். பின்பு அவ்விடத்தில் அடிகட்கு வசதிசெய்யக் கருதிய ஓர் அன்னை குளமொன்று தொட்டுப் பூங்காவொன்று வளர்த்து அவ்விடத்தில் அடிகளை வைகும்படி வேண்டினள். அவ்வாறிருந்து அடிகள் பேரானந்த சமாதி நிலையுற்றனர்.

அடிகள் நிட்டைகூடியகாலை அவர் திருமேனி பன்னாள் உயிர்நீத்த உடல்போற் றோன்றினமையால், யாரோ அதற்கு நெருப்பிட்டனரெனவும் இடையில் விழித்துப் பார்த்துப் பின்னும் நிட்டையிலமர்ந்து இறைவனோ டிரண்டறக் கலந்தன ரெனவுங் கூறுப. அதன் உண்மை நன்கு விளங்கவில்லை. எவ்வாறாயினும் கி. பி. 1662-க்கு ஒத்த சாலிவாகன சகாப்தம் 1584-ல் தைமீ 28உ விசாகத்தன்று மாலை அடிகள் கடவுள் திருவடியிற் கலந்தனர்.

அருளையரென்பவர், அடிகளது குமாரர் கனக சபாபதிப் பிள்ளைக்கு மெய்ஞ்ஞான முணர்த்தினர். அவர் தஞ்சைக்குக் கீழ்பாலுள்ள அன்னப்பன்பேட்டையிற் றங்கியிருந்தார். அவருக்குப் பின் அவர் செல்வர் அட்சயலிங்க பிள்ளை என்பவர் ஆண்டுள்ள மடத்தலைவராய் வீற்றிருந்தனர். அவருக்குப் பின் வழி வழியாகப் பல துறவிகள் ஆசிரிய பரம்பரையைப் பாதுகாத்து வந்துள்ளார். அருளையர், கோடிக்கரை ஞானியார் முதலியோர் அடிகளிடம்

ஞானோபதேசம் பெற்றவர்கள். சமாதியான இடத்தில் ஒரு திருக்கோயிலும் அதன்கண் அடிகள் பரமுத்தி யடைந்த நாளைக் குறிக்குஞ் சிலாசாசனமு முள்ளன.

துகளறுசாலி வருடமாயிரத் தைஞ்னூற்றொன்
றொடென்பத்து மூன்றுதொடரு
மிகுசுபகிருதாம் வருடம் தைமாதம்
வெண்மதி வாரநாள்விசாக
மகிமைசேர் பூரணத் திதியினிலருத்த
மண்டலசமயத் திற்கங்கை
திகழ்கரை யதனிற் றாயுமானவனார்
சிவத்தினிற்கலந்த நற்றினமே.

—கோடிக்கரைஞானிகள்.

அருளையர் அடிகள்மீது பாடிய அகவல் மிகவும் சொல்லழகும் பொருணயமும் வாய்ந்தது.

இரக்க மிருப்பின் இறையருள் வெளிப்படும்
அருளுனக் குண்டேல் அருளும் வெளிப்படும்
வல்லவன் றானே மகாயோகி யென்றோன்
துறவறத் திருந்துஞ் சூழ்மனக் குரங்கொன்
றறவகை யறியா னஞ்ஞானி யென்றோன்.

என்பன அருளையர் வாக்குகளிற் சில.

## வரலாற்றாராய்ச்சி

தாயுமானவர் காலத்திலே திரிசிரபுரத்திலே நாயக்கர் பரம்பரையார் அரசாட்சி புரிந்தனர். அவர் தென்னாட்டிற்கு வந்த வரலாறு யாதெனிற் கூறுதும்: கி. பி. பதினாறும் நூற்றாண்டின் தொடக்கத்திலே தஞ்சையில் வீரசேகரச் சோழன் என்பவனும் மதுரையிலே பாண்டியன் சந்திரகுமாரனும் ஆண்டனர். சோழன், பாண்டியனை

மதுரையினின்றுந் துரத்திவிட்டான். இப்பாண்டியன் சோழனை வெல்வதற்கு வடக்கே தெலுங்க நாட்டிலுள்ள விசயநகர மன்னனாகிய கிருட்டிண தேவராயன் உதவியை நாடினன். அவன் நாகம நாயக்கன் என்னும் படைத்தலைவனைப் பாண்டியனுக்குத் துணைபுரிய விடுத்தான். அந்நாயக்கன் பாண்டியனைச் சிறைப்படுத்தி மதுரையைத் தான் கைக்கொண்டமையைக் கிருட்டிண தேவன் தெரிந்து அவன் மகன் விசுவநாத நாயக்கனை விடுத்தான். நடுவுநிலைமையிற் றலை சிறந்த இவன், தனது தகப்பனைச் சிறைப்படுத்தி விசய நகர மன்னன்பால் ஒப்புவித்தான்.

சந்திர குமாரன் மீண்டும் அரசாண்டும் மக்கட்பேறில்லாது இறந்தனன். உடனே விசுவநாத நாயக்கனையே விசய நகர மன்னன் மதுரைக்குத் தலைவனாக்கினான். விசுவநாத நாயக்கன் அப்பொழுது மதுரை யரசைச் சார்ந்த வல்லம் என்னுமிடத்தைத் தஞ்சை மன்னனுக்கு விடுத்து, திரிசிராப் பள்ளியைத் தான் கைப்பற்றினன். சீரங்கத்திற் பெருமாள் சேவை நாயக்கர்கட்கு முக்கியமா யிருந்தமையால் அவர்கள் நாளடைவிலே திரிசிரபுரத்திலேயே தங்குவாராயினர்.

பதினாறும் நூற்றாண்டினிறுதியிலே ஆட்சி புரிந்த முத்துக்கிருட்டிண நாயக்கன், தாயுமான சுவாமிகள் தந்தையைத் தமது கணக்கராக்கினன்.

வரணி யென்பது யாழ்ப்பாணத்தி லுள்ளது. ஆண்டுள்ள ஆதினத்தார்க்கு மறைசையிலும் மடமுண்டு. அம் மடத்தி லிருந்தோர் அந்நாளில் மறைசைக் கோயில் மேற்பார்வையாளரா யிருந்தார்கள் என்று தெரிகிறது.

அக்காலத்திலே, வேளாளர்க்குப் பிள்ளை என்ற பட்டம் பெருவழக்கா யிருந்ததென்பது கருதப்படும். கேடிலி

யப்பன் என்ற பெயர் தனித் தமிழாயிருப்பமந்து, இக்காலத்தில் அத்தகைய பெயர்கள் அரியனவாயிருப்பதும் உற்று நோக்கத்தக்கன.

1608-1625-வரை அரசாண்ட முத்து வீரப்ப நாயக்கன் காலத்திலே அடிகள் உலகத்திலே தோன்றினதாக அறிகின்றோம். 1625 முதல் 1627 வரை திரிசிரபுரத்திலே அரசியின் ஆட்சி நிலவிற்றென்ப 1627-1654 வரை விசயரெங்க சொக்கநாத நாயக்கர் என்பவர் ஆண்டனரெனவுங் கூறுப.

அடிகள் சிவத்திற் கலந்தது கி. பி. 1662 என்பது முற்கூறப்பட்டது. 1608 முதல் 1662 வரை அடிகள் காலம் என்று கூறலாம். அவர் இளமையிலேயே சிவயோக முற்றமையால், எப்போதுந் துறவறத்தாராகவே கருதப்பட்டனராதலின் பிள்ளை என்ற பட்டம் அவருக்கு என்றைக்கும் அமையவில்லை. தாயுமானவர் என்பது திரிசிராப்பள்ளி இறைவர் திருப்பெயர். அக்காலத்திற் கடவுளை வேண்டி மகப்பெறுவோர் தாம் பெற்ற பிள்ளைக்கு வழிபட்ட கடவுட் பெயரையிடும் வழக்கத்தை மேற்கொண்டன ரென்பது அறிக. கடவுளை ஆண்பாலாகக் கருதி இறைவனென்னும் வழக்குண்மையால் அவனைத் தந்தையென்ற லியல்பே. அவன் தாயாகவும் உதவி புரிந்தவிடத்து, அவன் தாயும் ஆனவன் என்ற திருப்பெயர் பெற்றான். அது ஒரு கதையால் இனிது விளங்கும்.

திரிசிரபுரத்திற்கு வடக்கே காவிரிக்கப்பாலுள்ள ஓர் ஊரிலே ஒரு நங்கை தனக்குப் பேறுகாலம் வந்தபோது திரிசிரபுரத்திலிருந்து தன் தாய் மருந்து முதலியவற்றோடு வருவதை எதிர் பார்த்திருந்தாள். தாய் புறப்பட்டுக்

காவிரிக் கரையை யடைந்து, அதனைக் கடக்க முயலுங்காலை பெருவெள்ளம் திடீரென வந்தமையால், ஆற்றைக் கடக்க முடியாது திகைத்துக் கலங்கிச் சிராப்பள்ளிப் பெருமானைத் தனது மகளுக்கு உதவ வேண்டுமென்று நினைந்து தொழுதனள். திரிசிரபுர முதல்வர், தாயின் வடிவத்துடன் மகள் பாற் சென்று அவளுக்கு மருந்து முதலியன உதவினமையால் தாயுமானவர் என்று பெயர் பெற்றாரென்ப.

அடிகள் எவ்வுயிருக்கும் இரக்கம் வைத்தல் வேண்டுமென்பதைத் தமது சொல்லாலுஞ் செய்கையாலும் உலகிற்குணர்த்தினராதலின் அவர் யாவர்க்குந் தாய் போன்றவரே. நமக்கு மெய்யறிவுச் சுடர் கொளுத்தலாற் றந்தையும் அருளொழுக்க முடைமையாற் றாயும் ஆதலின் பெயராலன்றிச் செயலாலும், அடிகளுக்குத் தாயுமானவர் என்ற பெயர் பெரிதும் பொருத்தமாதல் காண்க.

அடிகள் காலத்தே வடமொழிப் பயிற்சி மிக்கிருந்ததென்பது, அவரது பாடல்களில் வழங்கிய வடசொன் மிகுதிப் பாட்டால் இனிது விளங்கும். அடிகள் வடமொழியில் உபநிடதங்களையே நன்கு பயின்றனரென்று தெளிக. தார்க்கிகர் கூறுமுறையில் 'சுத்தாத்துவிதம்' என்பதற்குப் பொருள் கொள்ளாது நேராக அதனைத் தமிழிலே மொழிபெயர்த்துப் 'புனிதமெனு மத்துவிதம்' என்றார். தமது நூலிலும் உபநிடதத்துட் போந்த சைவக் கருத்துக்களையே வேதாந்தக் கருத்தாகவும், வேதக்கருத்தாகவுங் கூறினர். அவர் யோக பூமிகளையும், அஞ்ஞான பூமிகளையும் பற்றிப் பேசுவதாலும், ஏகான்மவாதியர் கூறும் உபநிடத வாக்கியங்களை எடுத்தோதி அவற்றிற்குச் சித்தாந்தப் பொருள் கோடலானும் சிற்சுகோதய விலாசத்

திலே காதிகதை முதலியவற்றைக் குறித்தலானும், அடிகள் ஞான வாசிட்ட முதலிய ஏகான்ம வாதநூல்களையும் நன்கு கற்றவரென்பது கருதப்படும். அடிகள் சித்தாந்த நூல் வல்லாரென்பது வெள்ளிடை மலை. காதிகதையென்பது உலகம் என்பது மனத்தின் கற்பனையன்றி உண்மையில் இல்லையென்பதற்கு ஞானவாசிட்டங் கூறுங்கதை.

அது வருமாறு:—காதியென்னு மந்தணன் திருமாலினை நோக்கித் தவங்கிடந்து மாயையின் வடிவு காண வேண்டு மென்றனன். அப்படியே ஆகுக என்று விண்டு மொழிந்து மறைந்தார். ஆயகாலை நீருண் மூழ்கியிருந்த காதி, தன்னுடைய கல்வியெல்லா மறந்து, தன்னுடைய இல்லத்திலே தான் நோய்வாய்ப்பட்டிறந்ததாகவும் சுற்றத்தார் அழவும் தன் உடம்பு மயானத்திலெரியவுங் கண்டான். மறுபிறவியில், ஒரு புலையன் மகனாய்ப் பிறந்து, அக்குலப் பெண் ஒன்றை மணந்து புதல்வரைப் பெற்றுப் பின் மனைவிமக்கள் முதலியோர் இறந்தொழியவும் தான் துயரக்கடலிலாழ்ந்து, யாதொரு ஆசையுமில்லாதவனாய், ஒரு பட்டணத்தின் நடுவிற் சென்ற காலை, அவ்வூரரசன் குழந்தை இல்லாது இறந்தமையால் பட்டத்து யானை தன்னை எடுத்துக்கொண்டு போய் அரியணைமீது வைத்ததாகவும், மாதர்கள் தன்னை யலங்கரிக்கவும், அமைச்சர், படைத்தலைவர் முதலியோர் தன்னைப் பணிந்து இட்டகட்டளையை நிறைவேற்றுவ தாகவுங் கண்டான். பின்னர் ஒருநாள் தம்மினத்தவர் சிலர், தன்னைத் தம்மவர் என்று பாராட்டுவது கண்ட அரண்மனை மாதர் முதலியோர் வாயிலாக எல்லாரும் உண்மையுணர்ந்து தன்னை வெறுத்தமையும் நகரவாசிகளிற் றக்கோரனைவரும் அழற்புகுவதுங் கண்டு, தானும் உயிர்

வெறுத்துத் தீப்பாயவே தன்னுடல் எரியக் கண்டவளவிற் பழைய நினைவு வந்து தடாகத்தினின்று கரையேறி இஃதென்ன வியப்பு என்று திகைத்தனன்.

அடிகள் திருப்பாடல்களிலே வடமொழிகள் மிகப் பயின்றுவரினும் அவைகள் செந்தமிழ்ச் சுவையிற் குறைவு பட்டில. திருக்குறள், திருமந்திரம் முதலிய பன்னூற் கருத்துக்களுஞ் சொற்களும் அவைகளிற் செவ்விதினமைந் துள்ளன. தட்டுத்தடையின்றிச் செல்லும் ஆற்றொழுக்குப் போல அப்பாடல்களின் செலவு நயம்பெற வாய்ந்துள்ளது.

அடிகளது தெளிபளிங்கன்ன தூய உள்ளமும், தாழ் வெனுந் தன்மையும், வீடு பேற்றின் கண்ணுள்ள பேரவாப் பெருக்கும், பதார்த்தங்கள் பாராது பரமே பார்க்கும் பெருநோக்கும், புனிதப்புனற் பெருவெள்ளம்போன்ற சொல்லாற்றலும், அவர் திருப்பாடல்களிலே தெள்ளிதின் மிளிர்கின்றன. அடிகள் அறவொழுக்கத்திலும், அருளொழுக்கத்திலும் தலைநின்று அருளாசான் வரவையே குறிக்கொண்டு எதிர்நோக்குந் திருவருட்பதிவுநிலை எய்தின ரென்பது, அதன் சார்பிய பாடல்களாற் செவ்விதின் விளங்கும்.

இணையற்ற கட்டழகினரா யிருந்தும் செல்வநலமும் அதிகாரச் சிறப்பு முடையராய்த் திகழ்ந்தும் உலக நடையை வெறுத்துநின்ற அடிகள் பெருந்துறவினை யார் தான் வியவாதிருத்தல் கூடும்! அன்னோர்க்கே, பெரியோரை அதிட்டித்து இறைவன் ஆசாறு யருள்புரிவானாதலின் அவன் மௌனகுரு வாயிலாக, அடிகட்கு உயர்ந்த ஞானத்தை நல்கினன். அக்காலத்திலே தருமபுர ஆதீனத் திலே, யோகப் பயிற்சி சிறப்புற்று விளங்கியதென்பது,

அவ்விடத்திலே யோகம் செய்வார்க்கு வகுத்திருந்த பதினாறு அறைகளின் அமைப்பாற் றெளிக.

கி. பி. 1685-முதல் சாரமாமுனிவர் மடம் தருமபுரத்தைச் சார்ந்த தென்பது தெளிவு. ஆதி மௌன குருவுக்குச் சிதம்பரநாத தம்பிரா னென்ற பெயர் அமைந்திருந்த தென்பது, அம்மடத்து ஆதிப் பட்டயங்களால் விளங்குகிறது. இப்போதும், அங்கே வதியும் தருமபுரத் தம்பிரான்மார்கள் 'மௌனம்' என்ற அடைமொழியோடு தங்கள் திருப்பெயரைச் சேர்த்தே கையெழுத்திடுகிறார்கள். 'மூலன் மரபு' என்பது, சாரமாமுனிவர் திருமூலர் மரபில் வந்தவ ரென்றுவது, எவற்றிற்கும் மூலமாகிய தென்முகத் தெய்வப் பரமாசாரியர் மரபென்றுவது குறிப்பதாகக் கொள்க.

அடிகள் எந்நாட்கண்ணி குருவணக்கத்துள், கயிலாய பரம்பரை மெய்கண்டார் சந்தானத்தை விதந்தோதிக் குறித்த பதிகத்தின் பிற்பகுதியிலே மௌன குரு வணக்கங் கூறினமையும், திருமூலரைக் குருமரபுட் கூறுமையுங் காண்க. 'மூலன்' என்ற சொல் இறைவனைக் குறிப்பதற்குத் திருமூலரால் வழங்கப் பட்டுள்ளது. 'மூலனை நாடினேம்' என்றமை காண்க.

அடிகள் அரசிவலையிற் சிக்காதிருந்தமை, அவரது மெய்த்துறவினை யாவர்க்கும் எடுத்துக்காட்டுவதொன்று. இல்லற நெறியைப் பிழைபட்டதாக அடிகள் கருதாமையாலும், வைதிகநெறி சைவநெறி என்ற இரண்டையும் உலகினர்க்குணர்த்துவான் தோன்றிய பெருமானுதலாலும் திருமணஞ்செய்து ஒரு புதல்வரைத் தந்தவுடனேயே, மனைவி யிறக்கப்பெற்று, அடிகள் துறவறம் புக்கனர். துற

வறமடைந்த பின் தமக்கு இயற்கையாயுள்ள ஞானப்பெரு நெறியிலே மிகுவிரைவுடன் சென்று நிட்டை நிலையுற்றனர்.

அடிகள் திருமேனி, உயிர்நீத்த உடல்போலவே காணப்பட்டதெனின் மலமற்ற தூய உணர்வின்கண்வருஞ் சிவபோகப் பெரும்பயன் துய்த்தமையே அதற்கேதுவா மென்க. திருமேனி எரிவாய்ப்பட்ட கதை மெய்யாயின் ஒரு வீட்டினிற் றூங்குகின்றவன், அவ்வீடு தீப்பற்றியெரியக் கண்டவுடன், தன்பாலிருந்த வானவூர்தியிலேறி, விண்ணிற் செல்வதுபோல, அடிகளும், தமது உடல் வேவக் கண்டவுடன் அதனைத் தமது சித்தநூலறிவாற் பாதுகாக்கத் தலைப்படாது, சமாதியிற்பொருந்திச் சிவத்திற்கலப்பதையே விழைந்தனரென்பது தெளிவாகலின், அவரது விழுமிய உயர்ஞானத் தகுதியை நாமோ அளந்தறிதல் கூடும். 'சுடச்சுட மிக வொளிரும்பொன்' போல இடுக்கண் வரப்பெற்ற பெரியோர் அதனைப் பேரின்பத்திற்கோர் துணையாகவே கொள்வரென்பது அடிகள் முடிவு நிலையால் நன்கு புலனாதல் காண்க.

அடிகளது பாடற்பகுதிகள், முடிபினை வைத்தும், தொடக்கத்தை வைத்தும் பெயர்பெற்றுள்ளன. அப்பெயர்கள் பெரும்பான்மையும் பொருள் விளங்குவனவே. ஆகார புவனமென்பது, இறைவனுருவாகிய புவனம் என்று பொருள்படும். ஆகாரம்-வடிவம். 'பராபரம்' என்பது, பரம், அபரம் என்ற இரு சொற்களாலாய சொற்றொடர். மேலானதுங் கீழானதுமாய எவற்றினுங் கலந்துள்ள முதல்வனை அடிகளார் 'பராபரம்' என்றார். பிற பெயர்ப் பொருள் வெளிப்படை.

---

# நூலாராய்ச்சி

## சமயம்

அடிகள் சமயங்களின் பொது நோக்கத்தையும் வேறுபட்ட கொள்கையினையும் சமய வாதத்தால் வரும் இழுக்கினையும் பல இடங்களிற் குறித்ததனோடமையாது அறுவகைச் சமயத்தி னியல்பினையும் சைவத்தின் சிறப்பினையும் சித்தாந்தத்தின் பெருமையினையும் செவ்விதின் விளக்கிப் போந்தனர். சமயங்களெல்லாம் மக்கள், அறம் பொருள் இன்பம் வீடென்னும் நால்வகை உறுதிப் பொருளையும் எய்துவதற்குரிய பல வழிகளாக அமைந்தவை. ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு நிலையிலுள்ளவர்கட்குப் பயன்படும் வண்ணம், இறைவன் அவ்வச்சமயத் தலைவர்கட்கு அவ ரவர் தகுதிக் கேற்ப உண்மை யுணர்த்துவன். தத்தஞ் சமய நலனை மாத்திரம் நன்குணர்ந்தவர்கள் அவ்வச்சமயத்தை நிலை நாட்டுதற்குரிய நூல்களையும் வழக்குகளையும் மேற்கொண்டு மிளிர்வதற்கு இறைவனே காரணனாவான் என்பார், அகவலுள்

“ அமையாக் காதலிற் சமயகோடி
அறம் பொருளாதி திறம்படநிலையிற்
குருவா யுணர்த்தி, ஒருவர்போலனைவரும்
தத்த நிலையே முத்திமுடிவென
வாத தர்க்கமும் போதநூல்களும் [றனை”
நிறைவிற் காட்டியே குறைவின்றி வயங்க அங்கங்கு நின்
என்றார்.

‘அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய்’ என்ற சிவஞான சித்தியாருங் காண்க. ஒரு கடவுள்

உண்டென்று கூறுஞ் சமயத்தினர் எல்லாரும் நால்வகைப் பொருளேயும் பெற முயல்வர். தத்தம் கடவுளுக்கு உவப் பான நன்னெறியிலே நடப்பதே அறமென்றும், இம்மை நன்மையின் பொருட்டு அறநெறியிற் பொருளீட்டி அப் பொருளால் இன்பந் துய்த்து மறுமையிற் கடவுளே அடைய முயல்வதே வீட்டு நெறி என்றுங் கொள்வர். மறுமையில் நம்பிக்கை வையாது இம்மையில் நலமுற வாழ் தலேயே முடிந்த நோக்கமாகக் கொள்ளும் உலோகாயத மதத்தாரும் சமுதாய வாழ்க்கை சிறத்தற் பொருட்டுப் பொய்யாமை, நடுவுநிலேமை பிறர்க்குதவுதல் முதலிய அறங் களேப் பேண விரும்புதலால் அறம் பொருளின்பமென்னும் மூன்றையும் அன்னோர் ஒருவாறு பேணக் கருதினராவர். இன்பத்தை விரும்பாது பொருளேயே விரும்பினோரும் அப் பொருளினே யீட்டு தற்பொருட்டு வாய்மை ஒற்றுமை முத லிய அறங்களேப்பேண விரும்புவர். இதனுனும் யாதானும் ஒரு நெறியில் நிற்பவர்கள் நால்வகைப் பொருள்களேயு மாதல் அவற்றுள் ஒன்றையாதல் அதன் ஒருபகுதியை யாதல் திறம்படுத்த முயல்வோராவர். நெறியினின்று வழுவினோரே உறுதிப்பொருளேக் கைவிடுவர். இக்கருத்துப் பற்றியே, 'அறம் பொருளாதி திறம்படு நிலேயில்' என்றார்.

ஒவ்வொரு சமயமும் முடிவான ஒரு நிலேயை அடை வதற்குக் கருதுவதால் அதற்குத் தக்க கொள்கையும் நோக்கமும் உள்ளதாய் விளங்கும். உலகியலறிவிலே ஈடு பட்டு உலக வாழ்க்கை ஒன்றே சிறக்க வேண்டுமென்னும் விருப்ப முடையவர்கட்கு அவ்விருப்பம் நிறைவேறுதற் குரிய நெறி உலகாயதம் என்னுஞ் சமயமாம். அச்சமயத் தில் நின்று அது கூறும் முடிவான நெறியைப் பெறமுயல்

வார்க்கு அச்சமயக் கொள்கையே சிறப்பாகவும் ஏனைச் சமயக் கொள்கைகள் சிறப்பிலவாகவுந் தோன்றும். ஆதலால். அச்சமயக் கொள்கையை நிலைநிறுத்த அவர் முயல்வர். அச்சமயத்தின் முடிந்த நிலையை அடைந்து அதன் அளவினைக் கண்டபின் அதற்கு மேற்பட்ட பிறிதொரு சமயத்தை நாடுதல் கூடும். ஒவ்வொரு சமயத்திலும் நின்று ஒழுகுங்காலை அதன் கண் உறுதியான ஊக்கம் உண்டாதற் பொருட்டுத் தம் மதம் நிறுவுதலும் பிறர் மதம் மறுத்தலும் ஆகிய சமயவாதம் ஏற்படுதலால் 'ஒருவர்போலனை வரும் தத்த நிலையே முத்தி முடிவென வாததர்க்கமும் போத நூல்களும் நிறைவிற்காட்டியே', என்றார் அடிகள்.

ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு நோக்கத்தை நிறைவேற்றப் பயன்படும். ஓர் அரசன் உலக நிலையாமையை உணர்ந்து அரசு புரிவதை ஒழித்துக் காட்டிற்குச் சென்று அருந்தவமியற்ற முயன்றகாலை, ஆள்வாரில்லாது நாடு வருந்துவதைக் கண்ட ஆசிரியன் ஒருவன், அவ்வரசனுக்கு நாத்திகத்தைப் போதித்து உலக இன்பமே பெறத்தக்கதென்று வற்புறுத்தி அவனை நாட்டிற்கு மீண்டு அரசாளும்படி செய்தனன்.

அவ்வாசிரியன் கட்டிய மதமே உலோகாயதமாயிற்று. அதுவே சாருவாகம் என்றும் கூறப்படும். அந்நெறியிலே உலக நிலையாமையை உணரும்வரை உயிர்கள் ஈடுபட்டு நிற்கும். அதனைக்கடந்த உயிர்கள் உலக இன்பத்தில் உவர்ப்பெய்தி அதனின் உயர்ந்த நெறிக்குச் செல்லமுயலும். ஆதலால் அந்நெறி ஒருவகையான மக்கட்குப் பயன்படுதற்குரியதே. இவ்வாறே பிறவுங் கண்டு கொள்க. வேத நூலில் விதித்த கருமங்களைச் செய்வதில் ஊக்கமுண்டாதற்

பொருட்டு அதனையே வற்புறுத்திப் பிறவற்றைக் கண்டித் தொதுக்கிய மதம் மீமாஞ்சகம் என்பது. வைதிக கருமத்தையே போற்றுகின்றவன் இம்மதத்தைத் தழுவி நிற்பன். அத்தகைய கருமத்தையும் அதன் பயனையும் உணர்ந்து அளவு கண்டவுடன் இம்மதத்தைக் கைவிட்டு மேலான ஞானநெறியை அடைய முயல்வன்.

உயிர்களுக்கு இரங்குதலொன்றே போதுமானதென்ற கருத்தை உட்கொண்டு பிற சமயங்களை மறுப்பான் எழுந்த சமயங்கள் புத்தமும் சமணமுமாகும். புத்த மதத்தினர் புத்தியையே ஆன்மா என்றனர். சமணமதத்தினர் உயிர்களுள் தலைசிறந்த உயிரையே கடவுள் என்றனர். அருளொழுக்கத்தில் நின்று அதற்கு அடிப்படையான காரணத்தை அறிகின்றவர்களும் உயிரின் உண்மைத் தன்மையை உணர்கின்றவர்களும் இம்மதங்களைக் கைவிட்டுக் கடவுளுண்டென்று கூறும் ஆத்திகமதத்தைக் கைக்கொள்வர். கடவுளொருவரை ஒப்புக்கொண்டு பிறப்பிறப்பின் தன்மையை உணர்த்தாத கிறிஸ்துவ மகமதிய சமயங்களில் நிற்கின்றவர்கள் உயிர்களைப் பற்றிய வினையின் தன்மையை உணர்வார்களாயின், மறுபிறப்பினை ஒப்புக்கொள்ளும் ஆத்திக மதத்தினைக் கைக்கொள்வர். உயிருக்கும் கடவுளுக்கும் உள்ள வேறுபாடறியாத ஏகான்ம வாதம், வைணவம் முதலிய சமயங்களில் நிற்பவர்கள் கடவுளின் உயர்ந்த தன்மையையும் கடவுளுக்குப் பிறப்பிறப்பு இல்லாமையையும் உணர்வாராயின் அச்சமயங்களைக் கைவிட்டு அவற்றிற்கு மேலான கடவுள் நெறியை அடைவர். இவ்வாறே பல சமயங்களும் படிப்படியாக முடிவிலே உயர்ந்த கடவுள் நெறியில் உயிர்களைச் செலுத்துதலால்,

"பலவாஞ் சமயப் பகுதியுநீ" —சொல்லற்கரிய 9

என்றார்.

"வேறுபடு சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்
விளங்கு பரம்பொருளே நின் விளையாட் டல்லால்
மாறுபடுங் கருத்தில்லை முடிவில் மோன
வாரிதியி னதித்திரள்போல் வயங்கிற்றம்மா"

—கல்லாலின் 25.

என்றதுமது.

ஒரு சமயத்தில் நிற்கும் உயிர் அதன் கொள்கையைத் தழுவி நிற்குங்காலை அதனைப் போற்றிப் பிறசமயத்தை இகழ்வதற்கும் அச்சமயத்தை விட்டுப் பிறிதொரு சமயஞ் சென்றகாலை, கைவிட்ட சமயத்தை இகழ்ந்து கைக்கொண்ட சமயத்தைப் போற்றுவதற்கும் இறைவனே காரணமாதலால், "நின் விளையாட்டல்லால்" என்றார்.

"சமயகோடிக ளெலாந் தந்தெய்வ மெந்தெய்வ மென்று
எங்குந் தொடர்ந்து எதிர்வழக்கிடவு நின்றதெது"

என்றதுமது.

மலையில் உண்டாகும் சிற்றாறுகளுள் சில ஒன்றாய்க் கூடி, பின் ஒவ்வொன்றாய் யாவும் பெரு நதியுட்கலந்து அந்நதிக்கூட்ட மனைத்தும் கடலில் விழுவது போல பல பல மதமும் ஈற்றில் ஒருவழிப்பட்டு முழுமுதற் கடவுளைச் சென்றடைதலால் வாரிதியில் நதித்திரள்போல் வயங்கிற்றம்மா' என்றார்.

இக்கருத்துப் பற்றியே,

"நதியுண்ட கடலெனச் சமயத்தை யுண்டபர
ஞானவா னந்த வெளியே" —மலைவளர்காதலி 1

என்றதும்,

"ஆறொத்திலங்கு சமயங்க ளாறுக்கு மாழ்கடலாய்"

—பாயப்புலி 11.

என்றதும் அக் கருத்துப்பற்றி எழுந்தனவாம்.

யானைகண்ட குருடர்போல உண்மையின் ஒவ்வொரு பகுதியையே முழுவுண்மை எனக்கொண்டு வாதிக்கின்ற சமயங்களால் முழுமுதற் கடவுளின் பெருமை யறியப் படாதென்பார்,

"வாதமிடு பரசமயம் யாவுக்கு முணர்வரிய
மகிமைபெறு பெரிய பொருளே"

—மலைவளர்காதலி 8.

"வாதமிடும் சமயநெறிக் கரியதாகி"

—பொருள்வணக்கம் 11.

"சமயம் அளவிடா வானந்த வடிவே" —ஆரணம் 9.

"மதமாறுங் காணுத வானந்த சாகரத்தை"

—மண்டலத்தின் 3.

என்றருளிச் செய்தனர்.

சமயவாதம் மாத்திரம் செய்யும் பன்னெறியினரும் உண்மை இஃதாம் இஃது அன்று என்று தம்முள் கூக்குரலிட்டுக் கொண்டிருப்பவராகலின் அவர்கட்குக் கடவுள் வெளிப்படாது மெய்யன்பர்கட்கு நேர்படுவாரென்னுங் கருத்தை,

"அன்றே வாமோ வெனவுஞ் சமய கோடி
யத்தனையும் வெவ்வேறு யரற்ற, நேரே நின்றாயே"

—கல்லாலின் 2.

என்ற அடிகளிற் றெரிவித்தார்.

இச்செய்யுட் பகுதிக்கு அன்றென்றும் ஆமென்றும் கூறும் இருவகையாருக்கும் அவரவர் கூறும் பொருளாய்

நின்ற கடவுளே என்று பொருள் கொள்ளுவதும் பொருத்தமே.

'பொய்யர்தம் பொய்யை மெய்யர் மெய்யை' என்ற திருவாசகமுங் காண்க. பல்வகைச் சமயத்தாருங் காணாத பரம்பொருளைப் பற்றி வெவ்வேறு கொள்கைகளை வற்புறுத்துங்காலை அவற்றை ஆராய்வான் புகுந்த உயிரானது உண்மையை எளிதின் உணராது மனக் கலக்க முற்றபோது திருவருள் வாயிலாகத்தான் அது உண்மை யுணர்தல் கூடுமாதலின்,

"நின்னருள் கொண்டறிவதல்லால் நெறிவேறுண்டோ" என்றார்.

"புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயம் தத்தம் [மதங்களில்
தட்டுழுப்புப் பட்டுநிற்கச்
சித்தஞ் சிவமாக்கி செய்தனவே தவமாக்கும்
அத்தன் கருணை"

என்ற திருவாசகமுங் காண்க.

சமயங்கள் பிணக்குறும் பிணக்கிற்கு அளவில்லை என்றும் அதனல் தெளிவு பிறவாதென்றும் பலவிடங்களில் ஆசிரியர் குறிக்கின்றார்.

"நெறிக டாம்பல பலவுமா யந்தந்த நெறிக்காஞ்
செறியுந் தெய்வமும் பலபல வாகவுஞ் செறிந்தால்
அறியுந் தன்மை யிங்காருளே." —எனக்கேனச்செயல் 6.

"தலைபலவாஞ் சமயமென்றுந் தெய்வமென்றுஞ்
சாதகரென்றும் மதற்குச் சாட்சியாகக்
கலைபலவா நெறியென்றுந் தர்க்கமென்னுங்
கடலூ'றுநுண் மணலெண்ணிக் காணும்போதும்."

"சீரனந்தஞ் சொர்க்க நரகமு மனந்தநற்
றெய்வமு மனந்த பேதந்
திகழ்கின்ற சமயமு மனந்த மதனுன் ஞான
சிற்சத்தி யாலு ணர்ந்து"

—பரசிவவணக்கம் 2.

"பேதித்த சமயமோ வொன்றுசொன படியொன்று
பேசாது துறவாகியே." —சுகவாரி 9.

என்றும் வருவன காண்க.

பலவகைப்பட்ட சமய வாதங்களால் உண்மையுணராது பரிதபிக்கும்படி தம்மைக் கடவுள் விட்டுவிடக்கூடாதென்பார்,

"பன்னெறியாம் பாலை வனத்தில் விட்ட பாவ மென்னே"

—பைங்கிளிக்கண்ணி 46.

என்றார்.

பல சமயக் குழப்பம் உள்ளக் கொதிப்பை உண்டாக்குதலால் பன்னெறியைப் பாலைவனத்துக்கு உவமித்தார்.

புறச்சமய ஆராய்ச்சியினல் தாம் உண்மையுணராது தவிப்பதாகவும் ஓரிடத்தில் கூறியுள்ளார்.

"சாவிபோம் சமயத்தாழ்ந்து சகத்திடை தவிக்கின்றேனே"

—சிவன் செயல் 2.

என்றது காண்க.

புறச்சமயக் கொள்கை வேறுபாடுகளைச் சில உதாரணங்களால் இரண்டு திருப்பாடல்களில் அடிகள் விளக்குகின்றார். அவற்றுள் ஒன்றாகிய பரிபூரணானந்தம் ஆறுவது பாட்டின் கருத்து வருமாறு:—பூதங்களெல்லாம் ஒடுங்குகின்ற மூலப்பிரகிருதியே முடிவான முதற் பொருளென்று

சிலர் கூறுகின்றனர். (இவர்கள் கடவுள் இல்லை என்று கூறும் நிரீச்சுர சாங்கியர் ஆவர். இவர்கள் ஐம்பூதங்களும் அவற்றின் நுட்பங்களாகிய தன் மாத்திரையில் அடங்கு மென்றும், மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐம் புலன்களும் மனமும் சாத்துவிக அகங்காரத்திலொடுங்கு மென்றும், தன்மாத்திரைகள் தாமத அகங்காரத்திலடங்கு மென்றும், சொல்லுதல் செல்லுதல் இருத்தல் கழித்தல் நுகர்தல் என்னும் தொழிற்கேதுவாகிய பொறிகள் இராசத அகங்காரத்தி லடங்குமென்றும், அகங்காரம் புத்தியி லொடுங்குமென்றும், புத்தி குணத்தி லொடுங்குமென்றும், குணம் பிரகிருதியாகிய மாயையி லொடுங்குமென்றும், ஒடுங்கிய முறையே தத்துவங்கள் மாயையின்று இயற்கை யாகவே முதல்வனுதவியின்றித் தோன்றுமென்றுங் கூறு வர்.)

இன்னுஞ் சிலர் ஐம்பொறிகளும்அவற்றிற்குரிய புலன் களோடு சம்பந்தப்படாமல் அடங்கிக் கிடக்கும் நிலையே முடிவான நிலை என்பார்கள். இவர்கள் பாடாணவாதிகள் எனப்படுவார்கள்.)

மற்றொரு சாரார் அந்தக்கரணங்கள் ஒடுங்கிய இடமே முடிவான நிலை என்பர். (இவர்கள் சங்கிராந்த வாதிகள் எனப்படுவர்.) பிறிதொரு சாரார் முக்குணங்களும் ஒடுங் கிய இடமே முத்தி என்பர். (இக்கொள்கை சமணருள் ஒரு சாராராகிய நிகண்டவாதியராலும் சாங்கியராலும் தழுவப்பட்டது.) இன்னுமொரு சாரார் ஒலியே கடவுள் வடிவமென்றும் சித்தும் சடமுமாகிய உலகமனைத்தும் அவ் வொலி வடிவமே என்றும் வாதிப்பர். இவர்கள் சத்தப் பிரமவாதிகள் எனப்படுவர்.

இன்னுஞ் சிலர் சுட்டறிவிற்குக் காரணமாகிய விந்து தத்துவமே முதற் பொருளென்பர். (இவர்கள் ஞானான்ம வாதிகளெனப் படுவர். போதாந்திகளும் இக்கருத்தைத் தழுவினவர்களே. புத்தர்களும் ஞானமே ஆன்மா என்ற கொள்கையுடையவர்களே.)

மற்றொரு பெருங் கூட்டத்தார் உயிர்களாகிய நாமே கடவுளென்பர். (இவர்கள் ஏகான்ம வாதிகளெனப் படுவர். இக்கொள்கையே சங்கராசாரியாருடைய கொள்கையாகும்.)

" சொல்லுக் கடங்காச் சுகப்பொருளை நாமெனவே
அல்லும் பகலும் அரற்றுவதென்—நல்லசிவ
ஞானமயம் பெற்றோர்கள் நாமல்ல என்பர்"

என்றதுமோர்க. —உடற்பொய்யுறவு 2.

இன்னுமொரு சாரார் கடவுளுக்கு உருவமாத்திரம் உண்டென்பர். (வைணவர்கள், கடவுள் பரமபதமென்கின்ற வைகுண்ட லோகத்திலே என்று மழியாத உருவத் திருமேனிகொண்டு வீற்றிருக்கின்றார் என்பதால் அவர்கள் உருவமே பொருள் என்பவராவர்.)

இன்னுமொரு சாரார், உருவமெல்லாம் பொய் ஆதலின் அருவமாகிய பிரமமே, பொருளென்பர். (கடவுளுக்கு உருவமில்லை என்று கூறும் மதத்தார் இவ்வகையாருளடங்குவர். மாயாவாதிகள் இக்கொள்கையினரே.)

இன்னுமொரு சாரார் ஆன்மாவாகிய அருள், முதல் வனுகிய அருளுடன் கலந்து விடுவதே முத்தி என்பர். பேசில் அருளென்பர் சில பேர்' என்ற அடிகள் கூற்று இவர்களைக் குறிக்கும். ஐக்கியவாத சைவர்கள் இக்கொள்கையுடையவர்கள்.

இத்தகைய கொள்கைகள் பலப்பல உள்ளன. இவைகளால் மனமானது ஒரு நிலையில் நில்லாது பாதரசம் போலச் சஞ்சலப்படுவதன்றிப் பேரின்ப ஒருமையை அடைதல் கூடுமோ? என்று அடிகள் கேட்கின்றார்.

இக்கொள்கைகள் யாவும் அடிகளாற் குறிப்பாக மறுக்கப்பட்டன. மாயையே முதலென்று கூறுங் கொள்கை கடவுளை மறுத்ததால் அது கொள்ளத் தக்கதன்று. பொறி புலனடங்கு மிடமே பொருளென்னும் பாடாண வாதிகள் உயிருக்குப் பேரின்ப நுகர்ச்சியே இல்லை என்பதாலும், கரணமுடி வென்பார் அந்தக் கரணங்களுக்கு வேறாய உயிரின் தன்மையறியாதவராதலாலும், நாதத்தையும் விந்துவையும் முடிவாகக் கொள்வோர் சடத்திற்கும் சித்திற்குமுள்ள வேற்றுமை யறியாராதலாலும், நாமே கடவுளென்போர் உயிருக்கும் சிவத்துக்கு முள்ள வேறு பாடறியாமையினாலும், கடவுட்கு உருவ மாத்திரமே கூறுபவர் தோன்றும் பொருள்கள் யாவும் அழிவன என்னும் உண்மை யறியாதவராதலானும், கடவுட்கு அருவமே கூறுபவர் அருவாகி நின்றானை யார் அறிவார் என்பதை ஆராய்ச்சி செய்யாமையானும், உயிரும் சிவமுமாகிய இரண்டுமே அருளென்பார் அருளின் தன்மையறியாராதலானும், முத்தியில் உயிர் கெட்டுப்போமென்பாரும், சூனிய வாதிகளும் உள்ளது இல்லாமற் போகாது என்னும் சற்காரிய வாதம் உணராமையானும் அவர்கள் கொள்கைள் யாவும் மறுக்கத் தக்கன வென்பதறிக.

கடவுட் தன்மையின் ஒவ்வொரு பகுதியுமே வெவ்வேறு சமயங்கள் வற்புறுத்துவதை எங்கு நிறைகின்ற பொருள் இரண்டாம் பாட்டில் அடிகள் இனிது விளக்கு

கின்றார். சில சமயங்கள் கடவுளை அன்னை என்றும் சில சமயங்கள் அப்பனென்றும் கூறும். சிலர் இந்திரன் பிரமன் முதலியவர்களோடு சுடலை மாடன் மதுரைவீரன் முதலிய சிறு தெய்வங்களோடு பிற நாட்டினர் கூறுந் தெய்வங்களும் ஆகிய எல்லாங் கடவுளே என்பர். இவர்களுடைய சமயத்தையே, "பேய் போல வலறியே ஒன்று மில வாய்ப் பின்னேது மறியாமல் ஒன்றைவிட் டொன்றைப் பிதற்றிடும்'' என்றார். சிலர் கடவுளை ஒளி என்பர். (நெருப்புப் பகலவன் நிலவு முதலிய ஒளிப் பிழம்புகடெல்லாம் தெய்வமென்பாரும் இவர்களிலடங்குவர்) சிலர் கடவுளை வெளியென்பர். சிலர் நாத முதலிய தத்துவங்களே கடவுள் நிலைய மென்பர். சிலர் காலமே கடவுளென்பர். இவர்கள் கூறும் எல்லாமாய் வேறாகி என்றும் ஒரு படித்தாய் அறிவின் முழுமுதலாய் விளங்கும் இறைவனது திருவருள் விளையாட்டிருந்த வாறு எம்மனோரால் புகல எளிதாகுமோ என்றனர். வாம மதத்தார் சத்தி வழிபாட்டைச் சிறப்பாகக் கொள்ளுதலால் கடவுளை அன்னை யென்பர், மகமதிய மதத்திலும் கிறித்து மத்திலும் கடவுளைத் தாயென்று வழங்குவதில்லை. வைணவ மதத்தினர் திருமாலைக் கடவுளென்று வழிபடுமிடத்துத் திருமகளைக் கடவுட்சத்தியாகக் கருதாது ஆன்மா வென்றே கருதுவதால் கடவுளைத் தந்தை யென்றே அவர்கள் வழிபடுவதாகக் கூறவேண்டும். அக்கினியையே தெய்வ மென்றும் சூரியனையே தெய்வமென்றும் வழி படுவோர் கடவுளை ஒளி யென்வர். பாரசீக நாட்டினர் நெருப்பு வழி பாட்டினர். சோராஸ்ட்ர சமயத்தில் கடவுள் ஒளிவடிவின ரென்றும், கடவுட்கு எதிரி இருள் வடிவினதென்றும் கேட்கப்படுகின்றது.

இந்நாட்டிலும் எகிப்து முதலிய நாடுகளிலும் சூரிய வணக்கம் சிறந்திருந்தது. பிராமணர் வழங்கும் காயத்திரி சூரியனுக்குரிய மந்திரப் பாட்டென்ப. சிலர் அது சிவபெருமானுக் குரியதென்பர். முப்பத்தாறு தத்துவங்களில் இருபத்து நான்கு தத்துவங்களையே உலகமென ஒப்புக்கொண்ட சாங்கியர், வைணவர் முதலியோர் கடவுள் இருபத்தைந்தாம் தத்துவத்தை இடமாக வுடையவ ரென்பர். முப்பது தத்துவங்களை உணர்ந்தோர் கடவுட் கிடம் முப்பத்தொன்றும் தத்துவமென்பர். இவ்வாறே முப்பத்தாறு தத்துவத்தையு முணர்ந்தோர் முப்பத்தாறும் தத்துவமாகிய நாத தத்துவமே கடவுள் நிலையமென்பர். சைவசித்தாந்திகள் முப்பத்தாறு தத்துவத்திற்கும் அப்பாற்பட்ட சுத்தசிவமே கடவுளென்பர்.

சிவஞானசித்தியார் இரண்டாஞ் சூத்திரம் எழுபத்து மூன்றும் பாட்டு உரையில் பலசமயங்களின் தத்துவ முடிபுகள் விளக்கப்பட்டிருக்கின்றன. உலோகாயத மதத்தார் நான்கு பூதங்களையே ஒப்புக்கொள்ளுதலால் நான்காம் பூதமாகிய வாயு தத்துவத்தையே முடிவாக வுடையவர்கள். சோதிடர்கள் ஐம்பூதங்களை ஒப்புக்கொண்டு நட்சத்திர பதத்தை யடைவதே வீடென்பர். தாழ்ந்த சத்திமதத்தார் ஐந்து பூதங்களையே ஆன்மாவெனக் கருதுவதாலும் இழிந்த வழிபாட்டு முறைகளைப் பேணுவதாலும் ஐந்தாம் தத்துவமாகிய வானிற் பைசாச பதத்தை அடைவர். அக்கினி சூரியன் இந்திரன் முதலானோர் பதத்தைப்பெற விரும்பினவர்களும் பூததத்துவ வாசிகளே யாவர்.

ஸ்மிருதி சமயத்தாரும் புராணங்களைப் பொதுவாகத் தழுவும் ஸ்மார்த்தரும் மீமாஞ்சகரும் ஐம்பூதங்களின்

நுட்பமான தத்துவங்களாகிய தன் மாத்திரைகளைப் பிரமம் எனக் கொள்வாராதலின் அவர்கள் அத்தன்மாத்திரையிலுள்ள புவனங்களை அடைவர். ஞானேந்திரியமே ஆன்மாவென்னும் இந்திரிய ஆன்மவாதிகள் தன் மாத்திரைகளிலுள்ள புவனங்களை அடைவர். தர்க்க மதத்தினராகிய நியாயவாதிகள் மனத் தத்துவத்தின் சார்பால் உயிருக்கு அறிவுண்டென்பவராகையால் மனத்தத்துவ பதவியே அவர்கட்கு முடிந்த நிலையாகும். வைசேடிகர் அகங்கார தத்துவத்தையே முடிவாகக் கொண்டவர்கள். பௌத்தரும் ஆருகதரும் முறையே புத்தி தத்துவத்தையுங் குண தத்துவத்தையும் பொருந்துதற் குரியர்.

பாஞ்சராத்திரம், பாதஞ்சலயோகம், சாங்கியம், பிரமவாதமாகிய ஏகான்மவாதம் முதலிய மதத்தைச் சேர்ந்தவர் பிரகிருதிக்கு மேலேயுள்ள புருடதத்துவத்தை முடிவாக வுடையவர்கள். பௌராணிக சைவ மதத்தைச் சார்ந்தோர் அராகதத்துவத்தை அடைவர். பாசுபதம் காபாலம் என்னும் மதத்தைச் சார்ந்தோர் அசுத்தமாயா தத்துவத்தை முடிவாக வுடையவர்கள். மாவிரத சைவர், வித்தியா தத்துவ புவனத்தை யடைவர். சுத்தவாம மதத்தினரும், வயிரவ மதத்தினரும், ஐக்கியவாத சைவ மதத்தினரும் அசுத்தமாயா தத்துவங்கட் குரியவரே.

முப்பத்தாறு தத்துவங்களையு முட்கொண்ட சிவசங்கிராந்தவாதி, சிவாத்துவிதி, சிவசமவாதி, பேதவாத சைவர், பாடாணவாத சைவர் முதலியோர் சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம், சத்தி, சிவம் என்னும் தத்துவங்களிலுள்ள புவனங்களை யடைவர். சித்தாந்த சைவர் இத்தத்துவங்கட்கு அதீதரான சுத்த சிவத்தொடு கலப்பர்.

சுத்த சிவத்தைத் தாயுமான அடிகள் சதாஞான ஆனந்தமாய பரம்பொருளென்றார்.

சிவபெருமான் அம்மையப்பராய்க் குணங்குறியற்ற பரம்பொருளாய் எல்லாத் தத்துவங்களிலுமுள்ள உயிர்களுடன் கலந்தும் அவற்றின் வேறாகியுமிருத்தலால் 'இவையாகி வேறதாய்' என்றார்.

இனிச் சில சமயங்களைப் பெயர் கூறி அடிகள் மறுத்துள்ளார்.

" தரணிமிசை உலோகாயதன் சமயநடை சாராமல் ...
சிவாநு பூதிமன்ன" —மௌனகுரு 4.

" யாங்களே கடவுளென்றிடும் பாதகத்தவரும்"
—சிற்சுகோதய விலாசம் 10.

என்ற இடங்களிலே நாத்திகத்தையும் அகம்பிரம வாதத்தையும் அடிகள் கண்டித்தவராவர்.

தேன் முகமென்னும் பாடற் பகுதியில் 2-ம் பாட்டினுள் நான்முகத் தேவை நோக்கி, 'வேண்டுவன வெல்லாம் நீ படைத்தாய்; நின் தந்தை முறைப்படி காத்தான்; யாவரும் ஒடுங்கும்படி முக்கட் கடவுள் அழித்தான். இதனால் யார் கடவுளென்று நீ எம்மனோர்க்குக் கூறுக என்ற அடிகள், அப்பதிக மூன்றும் பாட்டில் படைப்புங் காப்பும் மாயையோ டொழிந்தன வென்றுரைத்து அயன் தலையைத் தன் கையிலும் அரிகண்ணினைத் தன் காலிலும் உடையவன் யாரென்று வினவினர்.

தேன்முகம் 5-ம் பாட்டில் நடனஞ் செய்வானை 'இறையவன் எனலாம் யார்க்கும் இதய சம்மதம் ஈது என்றமையால் அடிகள் சிவபரத்துவம் நாட்டினவராவர்

(6-ம் பாட்டில்) அடிக்கடி உருவெடுத்து ஞாலங்காக்க வருகின்றவர் கடவுளென்றால் பிறவி நீங்காது அஞ்ஞானம் நீங்காது மாயை நான்தான் கடவுளென்று வந்து நிற்கும் என்று கூறினமையால் வைணவத்தை மறுத்தவராவர். (7-ம் பாட்டில்) கடவுள் நானென்று நிற்கும் ஞானம், ஞானம் அன்று. ஏனென்றால் அந்த ஞானம் சும்மாவிருக்க வொட்டாது சும்மா விருப்பதாகிய மோனம். (8-ம் பாட்டு) இல்லையெனில் பேரின்பக் கடல் நம்மைச் சூழாது, சூழாதாகவே முத்தியென்பது சூனியமாய் முடியும். அப்போது நன்மை, தீமை, உணர்ச்சி யில்லாமல் அறியாமையே நிலைபெறும். அப்போது கல்லுணர்ச்சியும், (9-ம் பாட்டு) ஆசிரியன் மாணவனென்னும் முறையும் இல்லையாகும். உலகத்திலிருந்தபடி முத்தியை நாடா திருப்போமெனின் நாத்திக சமயத்தானாகிய சாருவாகன் தன்னுடைய நெறிக்கு வரும்படி நம்மை யழைத்து உறவு செய்வான் என்றமையால் ஏகான்ம வாதம் உலோகாயதத்தில் வந்து முடியுமென்பதை அடிகள் முடிவு கட்டினவராவர்.

பல சமயங்களுள்ளும் ஆறு சமயங்களைச் சில விடங்களில் அடிகள் விதந்தோதியுள்ளார்.

பொன்னை மாதரை 27-வது பாட்டில் "ஆனமான சமயங்களாறுக்கும் தானமாய் நின்று தன்மயங் காட்டிய" என்ற விடத்து பெருமை பொருந்திய ஆறு சமயங்கள் குறிக்கப்பட்டமையால் அவை சித்தாந்த நூல்களுட் கூறப்படும் அகச் சமயம் ஆறுமே யென்ப. அவ்வறுவகைச் சமயங்கள் யாவையெனில், பாடாணவாத சைவம், பேதவாத சைவம், சிவ சமவாத சைவம், சிவ சங்கிராந்த வாத சைவம், ஈசுர அவிகார வாத சைவம், சிவாத்து வித சைவம் என்பன

இவ்வாறு சமயங்களும் சித்தாந்த சைவம் போலப் பதிபசு பாச மென்னும் முப்பொருள்களையும் ஒப்புக்கொள்வன வாயினும் முத்தி இலக்கணத்தில் சிறிது வேறுபாடுடையன. பாடாண வாதிகள் உயிர்முத்தியில் ஆணவமலம் நீங்காது கல்லுப்போலக் கிடக்கும் என்பர். பேதவாதிகள் உயிர் மெய்யறிவடைதலே முத்தி என்பர். சிவசமவாதிகள் ஆன்மா கடவுளுக்கு ஒத்த நிலையை யடைந்து ஐந்தொழி லியற்று மென்பர். சங்கிராந்த வாதிகள் ஆன்மாவின் கருவிகள் சிவ கரணமாய்ச் சிவத்தையறியு மென்பர். அவி கார வாதிகள் ஆன்மாவே தனக்குப் பக்குவம் வந்தபோது விகாரப்படாத கடவுளைத் தானே சென்றடையும் என்பர். கடவுள் குருவாய் வந்து உணர்த்துவதை இவர் ஒப்புக் கொண்டிலர் போலும். சிவாத்துவிதவாதிகள், சிவோகம் பாவனையால் உயிர் கடவுளேயாகி விடுகின்றது தென்பர். இச்சமயத்தார் சிவ சாரூப மடைவரென்று சித்தாந்தநூல் கூறும். இவ்வாறு சமயங்களும் தம்முட் கொள்கை வேறுபாடுடைமையின் கொள்கையில் யாதும் வேறுபாடில வாய அறுசமயம் வேறுள்ளன. 'சண்மத ஸ்தாபனமும்' என்றவிடத்து அடிகள் அவற்றையே சுட்டினர்.

அவையாவன:—காணபத்தியம், கௌமாரம், சௌரம், வைணவம், சாக்தேயம், சைவம் என்பன.

கடவுளை ஓங்கார வடிவினனாக வழிபடும்நெறி காண பத்தியம் எனப்படும்.

கடவுளைப் பேரின்ப வடிவினனாக வழிபடும்நெறி கௌமாரம்.

கடவுளைப் பேரொளிவடிவினனாக வழிபடும்நெறி சௌரம்.

கடவுளை எங்கும் நிறைந்தவனாக வழிபடும்நெறி வைணவம்.

கடவுளைத் தாயாக வழிபடும் நெறி சாக்தேயம்.

கடவுளைத் தந்தையாக வழிபடும் நெறி சைவம்.

இவ்வாறும் சைவசமயத்தின் உட்பகுதிகளே.

முற்கூறிய ஆறினையாவது, இவ்வாறினையாவது உட் சமயமென்று கொள்ள வேண்டும். இவற்றைக் குறித்தே திருமூல மாமுனிவர் 'ஒன்றது பேரூர் வழி ஆறு அதற் குள்' என்றார்.

"குன்றாத மூவுருவா யருவாய் ஞானக்
கொழுந்தாகி யறுசமயக் கூத்துமாடி
நின்றாயே"
—பன்மாலை 8.

"ஆறுசமயத்து மதுவதுவாய் நின்றிலங்கும் வீறுபரை"
—எந்நாட்கண்ணி தெய்வவணக்கம் 6.

"ஆறு ளொன்றை நாடினதற் காறு முண்டா மென்றெமக்கு..."
—குருமரபுவணக்கம் 10.

என்றும் புகன்ற இடங்களி லுட்சமயமே குறிக்கப்பட்டன வெனக் கொள்க. இவ்வாறு உட்சமயங்கட்கு வேறாய்ப் புறமதங்கள் ஆறுள்ளன. அவை மீமாஞ்சகம், ஏகான்ம வாதம், நியாயம், வைசேடியம், தருக்கம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம் என்பன.

இவற்றைத் திருமூலர் கண்டித் தொதுக்குகிறார்.

" அவமல்ல தில்லை அறுசமயங்கள்"

" ஆறு சமயப் பொருளும் அவனல்லன்"
—மண்டலத்தின் 3.

என்றது இவற்றையே.

தாயுமான சுவாமிகளும் "மதமாறுங் காணாத வானந்த சாகரத்தை" என்றவிடத்து இவற்றையே குறித்தனர் போலும்.

எல்லாச் சமயங்களிலும் சைவ சமயமே சிறந்ததென் பதை,

"சைவ சமயமே சமயஞ் சமயாதீதப் பழம் பொருளைக்
கைவந்திடவே மன்றுள் வெளிகாட்டு மிந்தக் கருத்தை விட்டுப்
பொய்வந் துழலுஞ் சமயநெறி புகுத வேண்டா முத்திதருந்
தெய்வ சபையைக் காண்பதற்குச் சேர வாருஞ் சகத்தீரே"

என்றமையாற் காண்க. —காடுங்கரையும் 2.

"சைவ முதலா மளவில் சமயமும் வகுத்து"

—சின்மயானந்தகுரு 4.

என்றமையால் சமயங்க ளெல்லாவற்றிற்குஞ் சைவம் முதலாமென்பது அடிகள் கருத்து.

சைவத்தைப்போல் முற்றுண்மையை யுணர்த்தாத பிற சமயங்களை இச்செய்யுளுட் கடிந்ததுபோலப் பிறிதோரிடத்திலும் அடிகள் கூறுதல் காண்க.

"மற்றும் வேறுள மார்க்கமெலா மெடுத் தெற்றுவாய்"

என்றனர். —பொன்னைமாதரை 78.

வேதத்தின் முடிவாகிய உபநிடதங்களின் சிறந்த கருத்தும் சிவாகமத்தின் முடிவாகிய சைவ சித்தாந்தக் கருத்தும் ஒரு தன்மையன வென்பது அடிகள் கருத்தாதலின் அக் கருத் தொற்றுமையே வேதாந்த சித்தாந்த சமரச மென்றும் அக்கருத்தினை உட்கொண்ட நெறியினையே வைதிக சைவமென்றும் அடிகள் தமது திருப்பாட்டுகளில் வழங்குகின்றார். —ஆகாரபுவனம் சிதம்பரரகசியம்.

வைதிக சமயத்தின் பெருமை அடிகள் கருத்தின்படி வருமாறு :—

"இந்திரன் முதலிய விண்ணவர்களும் நாரதர் முதலிய தீவத்தினரும் ஏழு முனிவர்களும் இசைவல்ல தேவர்களும் எண்ணிலாத சித்தர்களும் மனு முதலிய வேந்தர்களும் மறையின் மெய்வழி நின்றோரும் உலகம் மதிக்கும்படி உள்ளங்கை நெல்லிபோலக் கலங்காத நல்ல அறிவினால் இச்சமயத்திலல்லவா உயர்ந்த சித்தி முத்திகளைப் பெற்றார்கள்.

அளவற்ற பிறசமயங்களெல்லாம் தத்தம் தெய்வமே மெய்த் தெய்வமென்று தத்தமக்கேற்ற காரணங்களுடன் சாதிக்குங் காலை தம்முள் முரண்படுவன. அவற்றின் பொருளை எல்லாம் தக்க முறையில் ஒப்புக்கொண்டு அவை படிப்படியாக நிற்கு நிலையை யுணர்த்தி மேற்பட்ட பொருளை விளக்குவதால் எச்சமயமும் வணங்கு மியல்பையுடையதாய், தன் நிலை மாறுததாய், இயம நியம முதலிய எண்வகை யோகத்தையும் தன்னகத்துட் கொண்டு மந்திரம், சோதிடம், ஆறங்கமென்பதன் தொடர்பாய நூல்கள் வணங்கும் நிலையிலமர்ந்து விரும்பிய பயனைக் கொடுக்கும் நெறிகளைப் பரிவாரமாகக் கொண்டு ஞானத்தின் எல்லை யெனப்படும் மோனமாகிய முடியைத் தலையிற் சூட்டிக்கொண்டு அரசாங்க உயர்வுடன் வீற்றிருக்கும் வைதிக சமயத்தின் பெருமை மிகவும் வியக்கற்பாலது. இந்தச் சமயம்போல எண்சித்தி விரும்பினவர்கட்கும் உயர்ந்த பரமுத்தி விழைந்தோர்க்கும் இந்திரன் முதலிய விண்ணவர் பதவியை நாடினோர்க்கும் தாயகம் வேறில்லை இல்லை. விரும்பியதை விரும்பிய வண்ணமே கொடுக்கும் கற்பக மரம்போல அருள்

நலங்களைக் காட்டவல்ல நற்சமயம் இச்சமயமே யாம். இது நடுவு நிலைமையாற் பார்ப்பவருக்கு நன்கு விளங்கும்'' என்றது காண்க. —ஆகாரபுவனம் 8, 9, 10, 11.

சைவ சித்தாந்தத்தின் பெருமையைப் பலவிடங்களில் அடிகள் விதந்தோதி யுள்ளார்.

சின்மயானந்த குரு என்னும் பதிகத்தில் ஒவ்வொரு பாட்டிலும் 'சித்தாந்த முதலே' என்று இறைவனை விளிக்கின்றார்.

"முத்தாந்த வீதி முளரிதொழு மன்பருக்கே
சித்தாந்த வீதிவருந் தேவே பராபரமே."

—பராபரக்கண்ணி 19.

என்ற விடத்தே, முடிந்த முத்தி நிலையில் உள்ள பேரன்பர்கள் தமது திருவடியைத் தொழும்பொருட்டு இறைவன் எழுந்தருளுகின்ற வீதி சைவ சித்தாந்தமென்று மொழிந்து அதன் பெருமையை அடிகள் வற்புறுத்தினர்.

"முத்தாந்த வித்தே முளைக்கு நிலமா யெழுந்த
சித்தாந்த மார்க்கச் சிறப்பே பராபரமே."

—பராபரக்கண்ணி 365.

என்றமையாலும் அது தெளிவு.

தாயுமான அடிகள் ஒப்புக்கொண்ட வேதாந்தமென்பது சித்தாந்தக் கருத்துடைய உபநிடதங்களையே,

"வேதாகமத் துணிபு இரண்டில்லை
ஒன்றெனவே வந்த குருவே." —மௌனகுரு 2.

"வேதாந்த சித்தாந்த சமரச சிவானுபூதி மன்ன"

—மௌனகுரு 4.

"இருக்காதி மறை முடிவும் சிவாகமாதி
இதயமுங்கை காட்டெனவே"

—நின்றநிலை 2.

"ஆரண மாகம மெல்லா முரைத்த அருண்மவுன
காரணமூலங் கல்லா லடிக்கேஉண்டு"

—பாயப்புலி 25.

"சுருதியே சிவாகமங்களே உங்களாற்
சொல்லும் ஒரு தனிப்பொருள்"

—ஆசையெனும் 18.

என்றும் வருமிடங்களில் வேதாந்த சித்தாந்தக் கருத் தொருமையை அடிகள் காட்டியுள்ளார்.

வேதக் கருத்தையும் சிவாகமக் கருத்தையும் தெளிவு படுத்துவார் :

"அப்பொருளு மான்மாவு மாரணநூல் சொன்னபடி
தப்பிலாச் சித்தொன்றுஞ் சாதியினு—லெப்படியுந்
தேரிற் றுவிதஞ் சிவாகமமே சொல்லுநிட்டை
யாருமிடத் தத்துவித மாம்" —உடல்பொய்யுறவு 16.

என்றார்.

இதனுள் கடவுளும் உயிரும் ஒன்றென்று உபநிடதங் கூறுமெனின், அவ்விரண்டும் அறிவுடைப் பொருளென்னும் ஒரு வகையின என்னுங் கருத்துப் பற்றி யென்க. எவ்வாறு ஆராய்ந்து பார்த்தாலும் பொருட் டன்மையால் இரண்டும் வேறே யாதலின் அவை துவிதமாம். சிவாகமங் கூறும் ஞான நிட்டையால் உயிர் கடவுளோடு இரண்டறக் கலக் குங்கால் இரண்டும் அத்துவிதமாம் என்றினிது விளக்கினர்.

இக்கருத்தையே எங்கு நிறைகின்ற பொருள் 3-ம் பாட்டில் அடிகள் விதந்தனர். அதனுள்,

"வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய எல்லா நூல்களும்பெரும்பான்மையும் அத்துவிதம், துவிதம் என்னும் இரண்டு வழிகளையே விரிவாய் எடுத்து விளம்பும். துவிதமே அத்துவித உணர்ச்சியை உண்டுபண்ணும் அறிவர் கும். இதன்கண் இருதிறத்தாரும் இணங்கற்பாலர்'' என்றனர். துவிதத்தையும் அத்துவிதத்தையும் ஞானம் என்றமையால், கேட்டல் சிந்தித்தல் என்னும் இரண்டுந் துவிதமென்றும் மெய்ப்பொருளைக் கேட்டு மனதினல் ஆராய்ந்தபின் அதன்கண் உள்ளம்பற்றி ஒருமையுற்ற விடத்து அதனோடிரண்டறக் கலந்த நிலை ஏற்படுதலால் துவித ஞானம் அத்துவித ஞானத்தை உண்டுபண்ணுமென்றுங் கூறினரென்ப. அறிதலும் ஆராய்ச்சியுமில்லாத விடத்துப் பற்றுதலும் ஒன்றுதலும் இல்லையாதலால் துவிதமில்லாவிடத்து அத்துவிதம் உண்டாதலில்லை என்பார் துவிதமே என்று தேற்றேகாரங் கொடுத்தோதினர். கேட்டல் சரியை, சிந்தித்தல் கிரியை, தெளிதல் யோகம், நிட்டைகூடல் ஞானம் என்பது ஒருமுறை. பரிபூரணனந்தம் 5-வது செய்யுளில்,

"சந்ததமும் எனது செயல் நினதுசெயல் யானெனுந்
தன்மை நினையன்றி யில்லாத்
தன்மையால் வேறலேன் வேதாந்த சித்தாந்த
சமரச சுபாவ மிதுவே"

என்ற விடத்து உயிரின் செயலும் அறிவும் இறைவன் உயிருக்குயிராய் நின்று செய்வித்தலாலும் அறிவித்தலாலும் நிகழ்கின்றன வாதலால் உயிருக்குக் கடவுளின் தொடர்பு எப்போதும் இன்றியமையாது வேண்டப்படும். வேண்டப்படவே, உயிர், கலப்பால் கடவுளுக்கு வேறில்லை என்பதே முடிந்த கருத்தென்று அடிகள் வற்புறுத்தினர்.

“ என்செயலென்பது யாதொன்று மில்லை இனித்தெய்வமே
உன்செயலே யென்று ணரப் பெற்றேன் ”

என்ற பட்டினத்தடிகள் திருவாக்கும், “அறிதருஞ் சிவனே எல்லாம் அறிந்து அறிவித்து நிற்பன்” என்னும் சிவஞான சித்தித் திருவாக்கும் இக்கருத்தினை வற்புறுத்தும். உயிருக்கும் கடவுளுக்குமுள்ள வேறுபாட்டை ஆகாரபுவனம் 18-ம் பாட்டில் தமது குரு தமக்கு விளக்கியபடி தெளிவு படுத்தினமை காண்க.

“ யாதொன்று பற்றினத னியல்பாய் நின்று
பந்தமறும் பளிங்கனைய சித்துநீ உன்
பக்குவங்கண் டறிவிக்கும் பான்மையேம் யாம் ”

என்றமையால், உயிர் எதையும் சார்ந்து நின்று சாரப்பட்ட பொருளின் தன்மையை உடையது. உலகத்தைச் சார்ந்தபோது உலகத்தின் மயமாய் நின்ற உயிர், கடவுளைச் சார்ந்தபோது கடவுள் மயமாய் நிற்குந் தன்மையுடைய அறிவுடைப் பொருளாதலின் உலகப்பற்று நீங்குதற்குரிய உயிரின் தகுதி கண்டு அதற்கு உண்மையை அறிவிப்பது கடவுளென்பது போதரும். ஆதலின் தானே யாவற்றையும் அறியும் முதல்வனும் அவன் அறிவித்தாலன்றி ஒன்றினையு முணராத உயிரும் வேறென்பதும் அறிவிக்குங் கடவுளின் தலைமையும் உயிரின் அடிமையும் நன்கு தெளியப்படும்.

“ என்றுநீ அன்றுநான் உன்னடிமை யல்லவோ ”

என்றது காண்க. —சுகவாரி 7.

இதுகாறுங் கூறியவாற்றால் தாயுமான அடிகள் எச்சமயத்தையும் உரிய முறையில் தழுவிக்கொள்ளும் சைவ சித்தாந்த சமயத்தவரென்பதும் சித்தாந்தக் கருத்தே உபநிடதத்தின் சிறந்த கருத்தாமென்று கொள்ளுதலால்

உண்மை வேதாந்தமும் சித்தாந்தமும் சமரசநிலை உடையன என்னும் கொள்கையுடையவர் என்பதும் நன்கு விளங்கும்.

பொதுவாகிய வேத நெறியினும் சிறப்பாகிய சிவாகம நெறியே விரைவில் வீடு சேர்க்குமென்பார் வேதமாகிய வழியிலே ஆகமமாகிய குதிரை அற்புதமாய் நடக்கும் என்றார்.

"ஆரணமார்க்கத் தாகம வாசி—யற்புதமாய் நடந்தருளும்"

---

# அதிகாரம் 2.

---

## கடவுள்

புராணங்களிற் கூறும் கடவுளின் அருட்செயல்களை மிகுதியாகக் கூறாது அவரது பொதுவாகிய பெருந்தன்மைகளை எடுத்து விளக்குவதில் தாயுமான அடிகள் இணையற்றவர். அவர் திருப்பாடல்களிற் புலனாகும் இறைவனியல்பினை ஆராய்வாம். உயிர்கள் ஐம்பொறிகட்கும் மனதிற்கும் புலனாகின்ற உலகத்தையே அறியும். காணப்படும் உலகமெல்லாம் சடமாகிய தத்துவங்களாலாயது. தோன்றுகின்ற பொருள்யாவும் அழிவன. ஆதலால் அறிவுடைப் பொருளாகியும் அழியாப் பொருளாயுமுள்ள கடவுளை உயிர்கள் தம்முடைய மனம், வாக்குக் காயங்களால் அறிய முடியாது. மனம் ஒன்றை உணருங்கால் இடத்தையும் காரணத்தையும் காலத்தையும் பற்றியல்லது அதனை அறிவதில்லை. காலமு மிடமுமாகிய அளவுப் பொருள்களுக் கப்பாற் பட்டவராயும் தாம் எல்லாவற்றிற்கும் காரணராய்த் தமக்கொரு காரணமுமில்லாதவராயும் உள்ள கடவுளை மனம் அறிய முடியாது.

"மனம் வாக்கினில் தட்டாமல் நின்றது எது"

—பரசிவ வணக்கம் 1.

"சிந்தனை யிறந்த தெது" —வண்ணம் 4.

"அறியுந் தரமு மன்று"

"தெரிவதற் கரிய பிரமமே"

"எவராலும் நிச்சயிக்கக் கூடா தொன்றே"

—மண்டலத்தின் 1.

"யாது மனநினையும் அந்தநினைவிற்கு நினைவாகி"

— பொருள்வணக்கம் 2.

"தெரிவரிய பூரணமாய்க் காரணங்
கற்பனைகடந்த செல்வமாகி"

—பொருள்வணக்கம் 8.

என்னுந் திருவாக்குகளால் மனதிற்கு அப்பாற்பட்டவன் கடவுள் என்பதை அடிகள் விளக்கினார்.

சுட்டியறியும் அறிவு சுத்த தத்துவங்களின் தொடர்பால் உண்டாவது. அவ்வறிவிற்கு மூலமே சொல்லிற்கு மூலமாம். சுட்டியறியப்படாத கடவுளைச் சொல்லினால் உணர்த்த முடியாது.

சமய நூல்களெல்லாம் மக்களுக்கு விளங்கும் அளவில் இறைவனது தன்மையை ஒருவாறு இயம்புவனவாதலாலும் நூலறிவு சொல்லாற் பெறப்படுவதாதலாலும், சொல் கடவுளை யுணர்த்துவதற்குத் தக்க கருவி அன்றாகலானும் பின் வரும் வாக்குகள் எழுந்தன.

"சமயாதீதத் தன்மையாகி" —அகவல் 33.

"சமயம் அளவிடா ஆனந்தவடிவே" —ஆரணம் 9.

"சமயகோடிக ளெலாம்........தொடர்ந்தெதிர்
வழக்கிடவு நின்றதெது" —பரசிவம் 1.

" சொல்லரிய பான்மை யாகி "

—பொருள்வணக்கம் 12.

" சொல்லற்கரிய பரம் பொருளே
சொல்லாலே சொலப்படுமோ சொல்லின் தன்மை
துரும்புபற்றிக் கடல்கடக்குந் துணிபேயன்றோ "

" வேதத்திலே தர்க்க வாதத்திலே விளங்காது விந்து
நாதத்திலே யடங்காதந்த வான்பொருள் நாடிக் கொள்ளே"

—பாயப்புலி 51.

கடவுள் புலன்களாலுணரப்படாதவ னென்பார்,

" அருவென் பனவுமன்றி உருவென் பனவுமன்றி
அகமும் புறமுமன்றி......குறியுங் குணமுமன்றி
நிறையுங் குறையு மன்றி "

—வண்ணம் 1.

" அவனென்பதூஉ மன்றி அவளென்பதூஉ மன்றி
அதுவென்பதூஉ மன்றி......ஆருமிநிலை யறியாதபடியே"

—வண்ணம் 2.

" சாதிகுலம் பிறப்பிறப்பு பந்தமுத்தி
அருவுருவத்தன்மை நாமம் ஏதுமின்றி "

—பொருள்வணக்கம் 5.

என்றனர். "நங்குல் பகலற நின்ற எல்லையுளதேது" என்றமையால் கடவுள் காலங்கடந்தவரென்பது உணர்த்தப்பட்டது. பரமசிவனது இயல்பு கூறுவார்,

" குலமிலான் குணங் குறியிலான் குறைவிலான் கொடிதாம்
புலமிலான்றனக் கென்னவோர் பற்றிலான் பொருந்து
மலமிலான் மைந்தர் மனைவியிலா னெவனவன்சஞ்
சலமிலான் முத்திதரும் பரசிவனெனத் தகுமே "

—ஆசையெனும் 30.

"ஊருமிலார் பேருமிலார் உற்றூர் பெற்றூருடனே
யாருமிலார் என்னை யறிவாரோ பைங்கிளியே"

—பைங்கிளிக்கண்ணி 8.

"ஆரறிவா ரென்ன அனந்தமறை யோலமிடும் பேரறிவே"

—பராபரம் 5.

கடவுளின் தன்மை நமதறிவிற்கு அப்பாற்பட்டதெனினும் அவருடைய திருவருளினால் ஆட்கொள்ளப் பட்ட பெரியோர் கூறிய அருள்மொழிகளை ஆயுமிடத்து அவர் ஒப்பற்ற ஒரு பொருளென்பது தெளியப்படும். கடவுள் பலராகவிருத்தல் முடியாது. பல பொருள்களுள் ஒன்று சிறப்புடையதாயிருக்கும். உலகத்தை ஒழுங்காகப் படைப்பதற்கும் காப்பதற்கும் அழிப்பதற்கும் ஒரு தலைவனே இருத்தல் வேண்டும். பலர் இருப்பின், அவருள் வேறுபாடு விளைந்து நடைபெறுந் தொழில்களும் முரண்படும். எவ்வகையான வேறுபாடும் இல்லை யெனின் பன்மைக்கருத்திற்கு இடமில்லை. எனவே அறிவுடைப் பரம்பொருள் ஒன்றே என்பது தெளியப்படும்.

"எண்தருநல் லகிலாண்ட கோடியைத்தன் அருள் வெளியில்
இலக வைத்துக்கொண்டு நின்ற ஒன்றை"

—மண்டலத்தின் 1.

"மறை ஒன்றெ‌ன விளம்ப" —வண்ணம் 1.

"எவையுந் தன்னுளடங்க வொருமுதலாகும்."

—வண்ணம் 3.

"அறிவொன் றெ‌ன விளங்கும்" —வண்ணம் 4.

"நின்ற ஒன்றே" —அகவல் 3.

"என்னை யாளும் ஒருவா" —பன்மாலை 2.

"வெளியாக வந்த ஒன்றே" —ஆகாரபுவனம் 4.

"நிற்குணமாய் நின்ற ஒன்றே" —ஆகாரபுவனம் 5.

"என் உள்ளத் தொருவா" —பாயப்புலி 32.

என்ற திருவாக்குகளால் அது வற்புறுத்தப்பட்டமை காண்க.

"தன் அருள் வெளிக்குளே அகிலாண்ட கோடி யெலாம் தங்கும்படிக் கிச்சை வைத்து" என்றபடி உலகமனைத்தையும் இறைவன் படைத்துக் காப்பவ னெனினும் அத்தொழிலைத் தன்பொருட்டுச் செய்பவனல்லன். தன் பொருட்டுச் செய்வானெனின் அவன் உலகப் பற்றுடையவனாவன். அது அவனுடைய முழுமுதற் றன்மைக்குப் பேரிழுக்கமாதலின், அவன் ஐந்தொழிலையு மியற்றுவது உயிர்களின் பொருட்டே என்பது தெளியப்படும்.

ஆதலால் கடவுள் இயல்பாகவே பாசங்களினின்று நீங்கினவ ரென்பார்,

"ஆக்கி யளித்துத் துடைக்குந் தொழி
லத்தனை வைத்து மெள்ளத்தனை யேனுந்
தாக்கற நிற்குஞ் சமர்த்தன்"

—ஆனந்தக்களிப்பு 19.

"நித்த நின்மலசகித நிஷ்ப்ரபஞ்சப் பொருளை
நிர்விஷய சுத்தமான நிர்விகாரத்தை"

—பரசிவ வணக்கம் 3.

"நித்தியமாய் நின்மலமாய் நிட்களமாய் நிராமயமாய்"

—பொருள்வணக்கம் 1.

"கோதிலமு தூற்றரும்பி தீதில்பரா பரமான"

—பொருள்வணக்கம் 2

"மாத்தூவெளியை......திதில்பரமாம் பொருளே"

—பொருள்வணக்கம் 5.

"நிர்க்குண நிராமய நிரஞ்சன நிராலம்ப
நிர்விஷய கைவல்ய மா"

"நிஷ்கள வசங்க சஞ்சலரகித நிர்வசன
நிர்த்தொந்த நித்தமுகத" —கருணாகரக்கடவுள் 1.

"புனிதவாழ்வே"

" ஆகிய சற்காரிய வூகத்துக்கேற்ற வமலமாம்"

—ஆகாரபுவனம் 7, 14.

" சுத்த நிர்க்குணமான பரதெய்வமே "

—சுகவாரி 1, 10.

என்னும் இவைபோன்ற செய்யுட் பகுதிகள் இறைவன் இயல்பாகவே பற்றற்றவன் என்பதை விளக்கும். இறைவனுடைய நிறைவிற்குக் குறைவு எந்நாளுங் கிடையாதாகலின்,

" குறைவிலா நிறைவே குன்றாப் பொருளே "

—அகவல் 2, 4.

என்றார்.

ஒன்றை நாடிப் போதலும் மீளுதலு மில்லாமையால் இறைவன் போக்கு வரவற்றவன்.

"போக்கு வரவற்ற பொருளணைவ தெந்நாளோ"

"போக்கு வரவல்லாது இன்பமாய்நின்ற நின்பூரணம்"

என்றும் வருவன காண்க. பிறப்பில்லாதவன் என்றதுமது.

மற்றக் கேடுகளில்லாமையால் கடவுளைச் சத்து என்பர் சித்தாந்த நூலோர். தாயுமான அடிகள் இறைவனை இயற்கை என்றனர்.

"என்றுமுள்ள இயற்கையாகி"

—ஆகாரபுவனம் 21.

"சாந்தபத இயற்கைதன்னை"

—மண்டலத்தின் 2.

"என்றுமாம் இயற்கைதன்னை"

—மண்டலத்தின் 4.

"அவிகாரம் நிர் விகாரம்"

என்ற கருத்துமதுவே.

பொய் என்பது நிலையாத பொருளாதலின் நிலைத்த பரம்பொருளாகிய கடவுளே மெய்ப்பொருள்.

"உம்பரும் இம்பரும் பரவும் புனிதமெய்யை"

—மண்டலத்தின் 5.

"மெய்ஞ் ஞானத் தாணு" —எந்நாட்கண்ணி.

என்றமை காண்க.

யாதொன்றிலும் பற்றிலனுகையால் யாவற்றிற்கும் நடுநிலையாய் உள்ளவன் என்பார்;

"யாதின் பாலும் பேதமற நின்று"—பொருள்வணக்கம் 2.

"நிராலம்ப சாட்சியதாய்" —மண்டலத்தின் 3.

என்றார்.

கடவுள் தானே பரிபூரணமாகிய ஒரு பொருளாதலின் அவரே தம் வயமுடையவர். கடவுளின் பூரணத் தன்மையைப்பற்றி அடிகள் பல இடங்களில் இனிது பேசியுள்ளார்.

"பார்க்கு மிடமெங்கு மொரு நீக்கமற
நிறைகின்ற பரிபூரணு னந்தம்"

"அண்ட பகிரண்டமு மடங்கவொரு
நிறைவாகி யானந்த மானபரம்"

"எங்கு நிறைகின்ற பொருள்"

"சர்வ பரிபூரண அகண்ட தத்துவமான
சச்சிதா னந்த சிவம்"

"வாக்கு மன மணுகாத பூரணப் பொருள்"

—சின்மயானந்தகுரு 2.

"பெரிய பரிபூ ரணமான பொருளே"

—ஆகாரபுவனம் 28.

"எவ்விடம் பூரணமாம் எந்தைபிரான் தண்ணருளே"

—ஏசற்றஅந்நிலை 10.

என்று வருவனவும் பிறவுங் காண்க.

கடவுளின் பூரணத்தை உயிர் அறியாமையால் தீய இயல்புடையதாயிற் றென்பார்,

"பொருமை, நானென்னும் அகந்தை,
லோபம், இரக்கமின்மை"

—சின்மயானந்தகுரு 3.

என்னும் கொடிய குணங்கள் யாவுமில்லாத மெய்ப் பொருளாகிய நீயும் என் அறிவின் கண்ணே வீற்றிருக்க விதியில்லை என்றால் பூரணன் என்கின்ற நினது பெயர்ப் பொருளை விரித்துக் கூறத்தொடங்கினுல் அது யாதாகும்? என்று வினவினர். இக்கேள்வி மற்றோரிடத்திலும் வந்துள்ளது.

"—உள்ளத்தில்
இல்லனென்ரு லன்னவன் ருனெங்கும் வியாபகத்தான்
அல்லனென்றுஞ் சொல்ல வழக்காம்"

—உடல் பொய்யுறவு 28.

இவ்வினுவிற்கு விடை சிவதருமோத்திரத்திற் கூறப் பட்டது. அதாவது பக்குவம்வராத உயிர்களிடத்துப் பசு

மரத்தின் உள்ளீடாயுள்ள சூடு போலவும் பக்குவமுற்ற உயிர்களிடத்து உலர்ந்த மரத்தில் நெருப்புப் போலவும் திருவருட்சத்தி வியாபித்து நிற்கும் என்பதே.

இறைவனது முழுத்தன்மையை உயிர் உணர்ந்த காலத்தானென்ற உணர்ச்சி யிலதாய்ப்போமென்பார்,

"யானெனல் காணேன் பூரண நிறைவில்
யாதினும் மிகுந்த பேரொளிநீ
தானென நிற்குஞ் சமத்துற வென்னைத்
தன்னவ னாக்கவுந் தகுங்காண்"

—சிவன்செயல் 10.

என்றார்.

முதல்வனது பேரறிவாகிய ஒளியில் உயிரினறிவு அடங்கி நின்ற காலை, உயிர் முதல்வனுடைய உடைமையா முணர்ச்சி பெறுமாதலின், 'தன்னவனாக்கவுந் தகுங்காண்' என்றார். இதனாலே சிவமாந்தன்மையினியல்பு குறிக்கப் பட்டது.

இறைவனது நிறைவில், உயிர் எந்நிலையிலிருப்பதென் பதை விரித்துரைக்குஞ் செய்யுள் வருமாறு:—

"பொருளே நின்பூரண மேலிட்டகாலம்
போக்கு வரவுண்டோ தற்போதமுண்டோ
இருள்தானுண்டோ வல்லால் வெளிதானுண்டோ
இன்பமுண்டோ துன்பமுண்டோ, யாம் அங்குண்டோ"

—கல்லாலின் 12.

கதிரவனது ஒளி வெள்ளத்தில் கண் கலந்து நின்ற காலை உலகம் தோன்றாமை போலச் சிவத்தின் முழுத்தன் மையை யுணரும் உயிரின் அறிவிற்கு உலக நுகர்ச்சிகள்

ஒன்றுந் தோன்று வென்றவாறு. அது பதிபசுபாச விளக்கச் செய்யுளொன்றிலே இனிது கூறப்பட்டது.

"ஆதவன் றன்னைப் பார்த்திட்டு அகிலத்தைப் பார்த்தபோது
ஆதவ னொளி மேலிட்டே அகிலந் தோன்றாத வாபோல்
சேதனச் சிவத்தை நோக்கிச் செகத்தினை நோக்குங்காலைச்
சேதனச் சிவ மேலிட்டுச் செகமெலா மறைந்து போமே"

இறைவனது பேரறிவாகிய பூரணத்தின் முன் சிற்றறிவு அடங்குதல், கதிரவனொளிமுன் மதியொளி அடங்குதல் போலுமென்பார்,

"செங்கதிரின் முன் மதியந் தேசடங்கி நின்றிடல் போல்
அங்கணனார் தாளில் அடங்குநாள் எந்நாளோ"

என்றார்.

இறைவன் சடப்பொருளி லழுந்தாத தனிப் பேரறிவினனாகலின் அத்தகைய அறிவினாற்றான் அவன் உணரப்படுவன்.

"எனதென்பதை யிகழ்ந்து அறிவின்றிர ளினின்றும்
அறிவொன்றென விளங்கும்" —வண்ணம் 4.

என்றமையால் பற்றற்ற உயிர்களின் அறிவின்கண்ணே விளங்கும் ஒரு பேரறிவுப் பொருள் இறைவன் என்பது அடிகள் கருத்து.

"தத்துவமெல்லா மகன்ற தன்மையர்க்குச் சின்மயமாய்
நித்தமுத்த சுத்த நிறைவே பராபரமே"

—பராபரக்கண்ணி 314.

என்றதுமது. கடவுளும் உயிரும் அறிவுடைப் பொருளாகிய ஓரினத்தனவாதலால் கடவுளைப் பேருயிர் என்பாருமுளர்.

"ஞான வெளியிடை மேவு முயிராய்" —வண்ணம் 1.

என்ற விடத்துக் கடவுளை அடிகள் உயிரென்றனர். 'சோதி' என்னுஞ் சொல் கடவுள் இயற்கைப் பேரறிவினனென்பதை விளக்கும். கடவுள் அறிவு வடிவினனென்பார்,

"சித்துருவாய் நின்றார் தெளிவறிவ தெந்நாளோ"

—எந்நாட்கண்ணி.

"சித்துருவாய் நின்ற வொன்றை" —பொருள் வணக்கம் 1.

"சித்தாந்தப் பேரொளியை" ,, 2.

"சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே"

—தேசோமயானந்தம் 1.

"சின்மயானந்த குருவே"

"சிற்சுகோதய விலாசமே"

"யாதினும் வல்லவொரு சித்தாகி" —பரசிவவணக்கம் 1.

என்றார்.

இறைவனது முற்றறிவின் கண்ணே எல்லாம் எப்போதும் விளக்குதலின் நினைப்பு மறப்பென்பது அவனுக்கில்லை; அவன் வேண்டுதல் வேண்டாமையிலானாகலின், அவனுக்குச் சங்கற்ப விகற்பங்களில்லை; காய்தல், உவத்தல் கலவாத அறிவு இறைவனறிவென்று தெளிக.

"நினைப்பு மறப்புமற நின்ற பரஞ்சோதி
தனைப்புலமா வென்னறிவிற் சந்திப்ப தெந்நாளோ"

—எந்நாட்கண்ணி பொருளியல்பு.

"உன்னு வெளியா யுறங்காத பேருணர்வாய்"

—பராபரக்கண்ணி 366.

"துகளறு சங்கற்ப விகற்பங்க ளெல்லாந்
தோயாத அறிவாகி" —பொருள்வணக்கம் 12.

என்ற திருவாக்குகள் இக்கருத்தை வலியுறுத்தும்.

இறைவன் உயிர்கள்போல ஒன்றைச் சுட்டியறிய வேண்டாதவ னென்பார்,

"போதபரிபூரண அகண்டிதா காரமாய்"

—சின்மயானந்த குரு 4.

என்றார்.

இறைவன் இயற்கை யறிவுடையவன் அவன் உயிர்க ளெல்லாவற்றினுடையவும் அறிவிற் கலந்து நின்று அவை களை யறிவிப்பன். உயிர்களின் உடம்பிற்குப் பூதங்கள் ஆதாரமாதல்போல அவைகளின் அறிவிற்கு இறைவன் அறிவு தாரகமாயுள்ளது.

"அறிவிற் கறிவு தாரக மென்றறிந்தே" —சொல்லற்கரிய 2.

"என்னுவிக் குள்ளே யிருந்தாய் பராபரமே"

—பராபரக்கண்ணி 366.

"அறிவூ டறிவாய் வந்த பொருளே"

—எந்நாட்கண்ணி பொருளியல்பு 16.

"இருள்தீர விளங்கு பொருள்" —பொருள்வணக்கம் 7.

"அறிவினுக் கறிவாகி" —பரசிவ வணக்கம் 3.

என்றமை காண்க.

உயிரின் அறிவு, விளக்கெரியும் அகல்போலவும், இறைவன் அறிவு எரியுஞ் சுடர் போலவும் இருப்பினும், சுடர்க்குரிய விளக்கு என்னும் பெயரை அகலிற்கு இட்டு வழங்குவது போலச் சீவனைச் சிவனென்பர் சிலர். இக் கருத்திற்குரிய பாட்டு,

"விளக்குந் தகழியையும் வேறென்னார் நின்னைத்
துளக்கமறச் சீவனென்று சொல்வார் பராபரமே"

—பராபரக்கண்ணி 103.

இருளிற் கைவிளக்கின் பின்னே போய்ப் பொருளை யறிவது போல ஆணவ விருளிற் கிடக்கும் உயிர்கள் தமது

தவத்தால் விளங்கும் இறையருளறிவின்பின் சென்று மெய்மையுரை வேண்டுமென்பார்,

" கைவிளக்கின் பின்னேபோய்க் காண்பார்போல் மெய்ஞ்ஞான
மெய்விளக்கின் பின்னேபோய் மெய்காண்ப தெந்நாளோ "

—எந்நாட்கண்ணி பொருளியல்பு 1.

என்றார். உயிரானது, தன்னுடைய சுட்டறிவினை இறைவனது அகண்டமான பேரறிவோடு இரண்டறக் கலந்ததாகக் கருதும் அத்துவித பாவனையால் முத்திக்குரியதாகும்.

"கண்ட அறிவு அகண்டா காரமென மெய்யறிவிற்
கொண்டவர்க்கே முத்தி கொடுப்பாய் பராபரமே"

—பராபரக்கண்ணி 374.

என்றார். இறைவனது பேரறிவில் உயிர் கலந்து நிற்பதையே விரும்பும் அடிகள்,

"என்னறிவிற் குள்ளே யிருந்ததுபோல் ஐயாவே
நின்னறிவுள் நின்னுடன்யான் நிற்கவைத்தால் ஆகாதோ"

—ஆகாதோஎன்கண்ணி 10.

என்றார்.

இறைவன் அறிவுக்கறிவா யிருந்து உயிரின் நினைப்பனைத்தையும் தெரிகின்றா னாதலால்,

" உள்ளத்தி னுள்ளே யொளித்திருந் தென்கள்ள மெல்லாம்
வள்ளலறிந் தா லெனக்கு வாயுமுண்டோ பைங்கிளியே"

—பைங்கிளி 55.

என்றார்.

இறைவன் யாதொன்றினும் பற்றிலனாய்த் தனக்கென ஒன்றை வேண்டாதவனாயினும் தான் உயிர்மாட்டு வைத்த

பேருளினாலே, எப்பொருளினுங் கலந்து எவற்றிற்கும் ஆதாரமாய் நிற்கின்றான்.

எல்லாவற்றிற்கும் தான் முதலாய்த் தனக்கொரு முதல்வனில்லாதவ னென்பார்,

"ஆதியை யநாதி யேக"

"நிராலம்ப வாலம்ப சாந்தபத வியோம நிலையை"

—பரசிவவணக்கம் 3.

"நிராலம்ப கோசரத்தை" —பொருள்வணக்கம் 4.

'பொருளாகக் கண்ட பொருளெவைக்கு முதற் பொருளாகி"

—பொருள்வணக்கம் 7.

"விண்ணாதி பூதமெல்லாந் தன்னகத்தி லடக்கி
வெறுவெளியாய்" —பொருள்வணக்கம் 9.

"ஆதியந்தங் காட்டாத முதலாய்" ,, 11.

"தன்னை அன்றி யொரு பொருளிலதா வெப்பொருட்குந்
தான் முதலா யசலமாகி" —மண்டலத்தின் 2.

"தானே யகண்டா காரமயந் தன்னி லெழுந்து
பொது நடஞ்செய்வானே" —சொல்லற்கரிய 6.

"ஆதி யனாதியுமாகி - யெனக்
கானந்தமாய் அறிவாய் நின்றிலங்கும்"

ஆனந்தக்களிப்பு 1.

"தானான தன்மயமே யல்லா லொன்றைத்
தலையெடுக்க வொட்டாது" —ஆகாரபுவனம் 22.

"ஆதியு மந்தமு மானந்த மயமாஞ்
சோதியே சத்தே தொலைவிலா முதலே" —அகவல்.

"ஆதியந்த மில்லாத வாதி யனாதியெனுஞ்
சோதி யின்பத் தூடே துளையுநா ளெந்நாளோ"

—எந்நாட்கண்ணி ஆனந்தவியல் 46.

*"அவ்வுயிர்போ லெவ்வுயிரு மானபிரான் றன்னடிமை*
*எவ்வுயிரு மென்றுபணி யாஞ்செய்வ தென்னாளோ"*

**—எந்நாட்கண்ணி நிலைபிரிந்தோர் 14.**

*"எப்பொருட்கும் எவ்விடத்தும் பிரிவற*
*நின்று இயக்கஞ் செய்யும்"* **—பொருள்வணக்கம் 5.**

*" கருதரிய மலரின்மணம் எள்ளில் எண்ணெய் உடலுயிர்போல்"*

**—பொருள்வணக்கம் 8.**

*"அகரவுயி ரெழுத்தனைத்து மாகி வேறு*
*யமர்ந்ததென அகிலாண்ட மனைத்து மாகி"*

**—பொருள்வணக்கம் 12.**

*" ஒன்றாகிப் பலவாகிப் பலவாக் கண்ட*
*வொளியாகி வெளியாகி யுருவமாகி*
*நன்றாகித் தீதாகி மற்றுமாகி*
*நாசமுட னுற்பத்தி நண்ணுதாகி*
*இன்றாகி நாளையுமாய் மேலுமான*
*எந்தையே"* **—ஆகாரபுவனம் 6.**

*"அண்டமு மாய்ப் பிண்டமுமாய் அளவிலாத*
*ஆருயிர்கட் கோருயிராய் அமர்ந்தா யானல்"*

**—ஆசையெனும் 12.**

*" கண்டார் கண்ட காட்சியுநீ*
*காணார் காணுக் கள்வனுநீ*
*பண்டாருயிர்நீ யாக்கையுநீ*
*பலவாஞ் சமயப் பகுதியுநீ"* **—சொல்லற்கரிய 9.**

*"ஒன்றாய்ப் பலவா யுலக மெங்குந் தானேயாய்*
*நின்றாயை யாவெனை நீ நீங்கற் கெளிதாமோ"*

**—பலவகைக்கண்ணி 14.**

*"அவனே பரமு மவனே குருவும்*
*அவனே யகில மனைத்தும்"* **—உடல்பொய்யுறவு 63.**

"ஒன்றதா யென்றுமுள்ளதா யெவற்றினு மிசைய
நின்றதாய் நிலைநின்றிடு மறிஞு" —எனக்கெனச்செயல் 12.

"ஆனமை யாயமகில நிகில பேதமனைத்தி னுள்ளுந் தானுகி"
—பன்மாலை 5.

என்றூர்.

இறைவன் எல்லாமாயிருந்தாலும் தன்மையால் வேறு வனென்பார்,

"பகர்வன வெல்லாமாகி யல்லதாகி"
—பொருள் வணக்கம் 12.

"வடிவனைத்துந் தந்த வடிவில்லாச் சுத்த வான்பொருளே"
—பன்மாலை 3.

"ஆதியாய் நடுவா யந்தமாய்ப் பந்தம் யாவும்
அற்று அகம்புறம் நிறைந்த சோதியாய்" —சிவன்செயல் 4.

"ஒன்றி யொன்றி நின்று நின்று மென்னை யென்னை
யுன்னி யுன்னும் பொருளலைநீ" —பன்மாலை 6.

என்றூர்.

இறைவனுலே படைப்பு முதலிய ஐந்தொழில்கள் நிகழ்கின்றனவென்று பல செய்யுட்களிற் குறிக்கப்பட்டுள்ளன.

"பெருவெளியா யைம்பூதப் பிறப்பிடமாய்"
—பொருள் வணக்கம் 3.

"ஐவகை யெனும்பூத மாதியை வகுத்து அதனுள்
அசரசர பேதமான
யாவையும் வகுத்து நல்லறிவையும் வகுத்து மறை
யாதி நூலையும் வகுத்துச்
சைவ முதலாமளவில் சமயமும் வகுத்துமேற்
சமயங் கடந்தமோன
சமரசம் வகுத்த நீ" —சின்மயானந்த குரு 4.

"வானே முதலாம் பெரும்பூதம் வகுத்துப்
புரந்து மாற்றவல்ல கோனே" —சொல்லற்கரிய 8.

"பெரிய அண்டங்கள் எத்தனை யமைத்து அதிற் பிறங்கும்
உரிய பல்லுயி ரெத்தனை யமைத்ததற்குறுதி
வருவதெத்தனை யமைத்தனை அமைத்தருள் வளர்க்கும்
அரியதத்துவ வெனக்கிந்த வண்ணமே னமைத்தாய்"
—எனக்கெனச்செயல் 7.

"பொருளனைத்துந் தரும் பொருளே"

"காலமுந் தேசமும் வகுத்துக் கருவியாதி
விரிவினையுங்கூட்டியுயிர்த்திரளையாட்டும் விழுப்பொருளே"
—ஆகாரபுவனம் 7.

என்ற திருவாக்குகள் இறைவன் முத்தொழிலியற்றுவதை விளக்குவன.

இறைவனே மாதொரு பாகனாய்ப் போகத்தையும், கல்லாலி னீழற்கண் குருவாய் வீட்டிற்கேதுவாய யோகத்தையும் நல்குவான் என்பார்,

"யோகினுக்கு மிவனே யென்னக் கல்லாலின்
கீழிருந்த செக்கர் மேனிக் கற்பகமே"
—ஆசையெனும் 24.

"உலகமாயையிலே யெளியேன் றனையுழல விட்டனை"
—ஷ 7.

"அன்றாலின் கீழிருந்து மோன ஞான
மமைத்தசின் முத்திரைக் கடலே யமரரேறே"

என்றார்.

இதனால் மறைத்தலும் அருளலும் இறைவன் தொழிலென்பதைக் குறித்தவாறாயிற்று.

"என்னைப் பொருளாப் பண்ணி
இகல்விளைக்கு மலமாயை கன்மத்தூடே
யிடருறவுஞ் செய்தனையே யிரக்கமீதோ"—**கல்லாலின் 29.**

"எதுந்தெரியா தென மறைத்த வல்லிருளை
நாதநீ நீக்கவொரு ஞான விளக்கில்லையோ"
—**இல்லையோவென்கண்ணி 1.**

என்றதுமது.

எப்பொருளும் இறைவன் இயக்கவே யியங்கும் என்ற கருத்தை அடிகள் மிகுதியும் வற்புறுத்துவது யாவர்க்கும் வெளிப்படை.

"உளவறிந் தெலாம் நின்செயலாமென வுணர்ந்தோர்க்
களவிலா னந்த மளித்தனை" —**எனக்கெனச்செயல் 2.**

"சிவன் செயலாலே யாதும் வருமெனத் தேறேன்"
—**சிவன்செயல் 1.**

"எல்லாம் உன்னுடைய செயலே" —**கருணாகரக் கடவுள் 3.**

என்பன காண்க.

"அவனன்றி யோரணுவும் அசையாது"
—**எங்குநிறைகின்ற பொருள் 1.**

என்ற பேரன்பர் திருவாக்கொன்றின் மெய்ம்மையையுணர்ந்தால் இம்மையிலும் அம்மையிலும் உயிருக்குயிராய்த் திகழும் இறைவனை மாந்தருட்சிலர் அறிந்தவரென்றும், வேறு சிலர் அறியாதவர்களென்றுஞ் சொல்வதின் பொருள் யாது? பேசாதிருந்த பெரியர் யார்? உடம் பெல்லாம் வாயாயிருந்தாற் போலப் பேசுபவர் யார்? மனம் என்னும் ஒரு மாயா தத்துவம் எங்கிருந்து தோன்றும்? வன்மை யுடைய மனம் என்பது யாது?

இரக்கமுடைய உள்ளம் எது? உலகங்களைப் படைப்பதுயாது? எவ்விடத்தினின்று அஃது உண்டாம்? ஐம்பூத வேறுபாடு எவ்விடத்தில் உண்டாவது? பொய், மெய், இன்பம், துன்பம், நன்மை, தீமை, பொறை, பொறாமை என்னும் முரண்படு குணங்கள் யாண்டு எழுவன? எவர் சிறியர்? எவர் பெரியர்? எவர் நண்பர்? எவர் பகைவர்? யாதும் உன்னையல்லாமல் உலகத்திலுளதாகுமா? எல்லாம் உன்னால் உண்டாவன என்பதன்றோ முடியும்? என்றது காண்க.

"ஆட்டுவித்தா லாரொருவ ராடாதாரே"

என்ற தேவாரத் திருப்பாட்டே, ஈண்டுக் குறித்த ஆப்த மொழி என்ப. சிவஞான சித்தியாருள்,

"உலகினில் நின்செயல் எல்லாம் உன்விதியே நீயே
உள்நின்றுஞ் செய்வித்துஞ் செய்கின்றாய்"

என்றும்,

"நிலவுவதோர் செயல்எனக்கு இன்று உன்செயலே"

என்றும்,

"நினைவார்க்கு வினைகளெல்லாம் நீங்கும் தானே"

என்ற திருப்பாட்டிற் குறித்த ஞானச் செய்கையே, ஆப்தர் மொழியை யாய்ந்தார் செயற்பாலதென்பது வற்புறுத்தப் பட்டது.

"மாயை முதலாம் வினைநீ மன்னுயிர்நீ மன்னுயிர்தேர்ந்
தாயுமறிவா னதுநீ யன்றோ பராபரமே"

—பராபரக்கண்ணி 111.

"என்னறிவும் யானுமென தென்பதுமா மிவைகள்
நின்னவையே அன்றோ நிகழ்த்தாய் பராபரமே" ,, 112.

என்றவிடத்தும் இக்கருத்தே மிளிர்கின்றது.

" அறிவா யறிகின்றான் றானே " —காரைக்காலம்மை.

என்றதுபோல, ஆட்டுவித்தலும் ஆடலுமாகிய இரண்டும் இறைவன் செயலென்பார் "ஆடல் கண்டவனுநீ, ஆடுகின்றவனுநீ" என்றார். அது, ஓர் ஊர்க்கு வழியை நன்றாகக் காட்டுவார் செல்வார் கூடத் தாமுஞ் சென்று காட்டுதல் போலும்.

உயிர்கள் தமது திறமையால் நடைபெறுகின்ற செயல்களென்று எண்ணுகின்றன வெல்லாம், முடிவிலே பார்த்தாற் பரம்பொருளின் செயல்களே யென்பதைப் பரிபூரணானந்தம் மூன்றாம் பாட்டிலே அடிகள் மிக அழகாக வற்புறுத்துகின்றனர்.

கருவியின் செயல் அக்கருவி யுடையானது செயலாமென்று ஆய்ந்தறிதல் போல, உலகிலே நிகழுஞ் செயல்களை யாய்ந்து பார்ப்பின், அயன் முதலிய தேவர்களுடைய செயல்களும் சிவன் செயலே. அவர்களுக்குரிய செயலாக வொன்றுமில்லை.

" அருள்வடி வேழுமூர்த்தம் அவைகள் சோபான மென்றே
சுருதி சொல்லியவாற்றாலே தொழுந்தெய்வ மெல்லாமொன்றே"
—ஆசையெனும் 36.

என்று அடிகள் கூறியவாறே, சிவன், சதாசிவன், மகேசுரன், அனந்தர், ஸ்ரீகண்டர், பிரமா, விஷ்ணு என்னும் ஏழுமூர்த்திகளாயும் இறைவனொருவனே எல்லாமியற்றுதலால் உயிர்களாகிய, அயன், அரி, அரன், அநந்தர், என்பார்க்குத் தந்தொழில் யாதுமில்லை. இறைவன் தானே சுத்தபுவனங்களிலே சிவன், சதாசிவன், மகேசனாய் மூவுருவங் கொள்ளுதலின், அடிகள்.

"குன்றாத மூவுருவா யருவாய் ஞானக் கொழுந்தாகி"
—பன்மாலை 8.

என்றனர்.

"மூன்றுகண்ணு முத்தொழிலா மும்முதலா மூவுலகுந்
தோன்றக் கருணை பொழி தோன்றலே,"
—உடல்பொய்யுறவு 31.

என்றமையால் இறைவனே பிரகிருதித் தலைவராய் அயன், அரி, அரனென்னும் மூவரையும் அதிட்டித்து நடத்துகிறானென்பது பெறப்படும்.

மும்மூர்த்திகளும் தம் வயமிலாராக ஏனை விண்ணவரும் அத்தகைய ரென்பது சொல்ல வேண்டிய தில்லை.

ஆதலின், "ஆராயும் வேளையிற் பிரமாதியாலு லுமைய வொரு செயலுமில்லை" என்றார். மக்களுள் செவ்விய ஆன்றமைந்த கேள்வி அறிவுடையாரென்று சொல்லத் தக்கவர்களும்,

"குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது"

"அதிமதி நுட்ப மோடு அதிகலை கற்பினும்
விதியது வசத்தால் விதிவிலக் கயர்ப்பார்"

என்பனவற்றிற் கிணங்க ஒருபொழுது மிகுந்த சினம் வரப் பெற்று, மனச் செம்மையும் நடுவுங் கெட்டுப் பெருமூச் செறிந்து வெஞ்சொற்கள் பகர்வர். சொல்லின் திறமறிந்து தேர்ந்த சொல்லினையே பயன் படுத்தும் உரைவல்லாரும் சமயத்திற்குப் பொருத்தமில்லாத தொன்றைப் புகலுவர். துயிலை முற்றிலு மொழித்து இறை வழிபாடு செய்தற்கே யமைந்த சிவராத்திரியின்கண், யாம் துயிலோ

மென்று உறுதிகொண்ட விரதத்தினரும் நின்ற இடத்தி லும், இருந்த இடத்திலும் ஏதோ ஒன்றை அசைவற நோக்குவார் போன்று மெய்யாகத் தூங்குவர். ஆதலின் இஞ்ஞால முதல் எல்லா உலகங்களிலுமுள்ள செயல்க ளெல்லாம் முடிவிலே கடவுளாய நின் செயல்களா மல் லவா ?

ஏனெனின் நீ பார்க்குமிட மெங்குமொரு நீக்கம் அற நிறைகின்ற பரிபூரணானந்தமாக இருக்கிறாய்.

"பார்க்கின் அண்ட பிண்டப் பரப்பனைத்தும் நின்செயலே
யார்க்குஞ் செயலிலையே யையா பராபரமே"

என்றதுமது.

இறைவன் படைப்பு முதலிய செயல்களெல்லாம் உயிர் கள் மேல்வைத்த பேரருளா லியற்றுகின்றானென்பார்.

"திருவருள் ஞானச் சிறந்தருள் கொழிக்குங்
குருவடிவான குறைவிலா நிறைவே
* * *
சீர்மலி தெய்வத் திருவரு ளதனாற்
பார்முத லண்டப் பரப்பெலா நிறுவி
அண்டச முதலாம் எண்டரு நால்வகை
எழு பிறவியிற் றாழா தோங்கும்
அனந்த யோனியி னினம்பெற மல்க
அணுமுத லசல மான வாக்கையுங்
கணமுத லளவிற் கற்ப காலமுங்
கன்மப் பகுதித் தொன்மைக் கீடா
இமைப் பொழுதேனுந் தமக்கென வறிவிலா
ஏழையுயிர்த் திரள் வாழ அமைத்தனை" —அகவல்.

என்றார்.

இறைவனது திருவருளே உயிர்களையு முலகத்தையும் (அவனோடு) இயைத்து நிற்பது. அவனது அருள் வெளிக்குள்ளே அகிலாண்டகோடி யெல்லாம் தங்குகின்றன. அவனது அருளினை 'வெளி' என்றது உருவகம். ஐம்பூதங்களுள் மேலாகிய 'வான்' என்பது 'வெளி' எனப்படும்.

அவ்வெளி நாற்பூதங்களுக்கும், அவற்றாலாய எல்லாப் பொருள்களுக்கும் தங்குதற் கிடங்கொடுத்து நிற்கின்றது. ஆகாசம் என்ற வடசொல்லும் இக்கருத்தையே பொருளாக வுடையது. எவையும் அடங்க ஒரு முதலாகும் என்றபடி, யாவும் தன்னுளடங்கும்படி மேற்பட்டு நிற்பது திருவருள் ஆதலால், அது 'வெளி' யெனப்பட்டது. உலகங்களும், புவனங்களும் தத்துவமென்பதனு ளடங்கும். தத்துவமெல்லாம் சுத்தமாயையின் விரிவாகிய ஐந்துகலைகளு ளடங்கும். ஐந்து கலைகளும் சிவனது திருவருட்சத்தி வியாபகத்து ளடங்கும். ஆதலால், திருவருள் எல்லாவற்றையும் அடக்கி நிற்கும் என்பது பெறப்பட்டது.

"பாரகமும் விண்ணகமும் பற்றாக நிற்பதருட்
டாரகத்தைப் பற்றியன்றோ சாற்றாய் பராபரமே"

—பராபரம் 102

"பூராயமாக அருட் பூரணத்தி லண்டமுதற்
பாராதி வைத்த பதியே பராபரமே" —தீடமுறவே 2.

என்றமையால் அருளே எவற்றிற்கும் தாரகமென்பது தெளிக.

திருவருளானது சுத்தமாயையின் வடிவான சொல்லிற்கு அப்பாற்பட்டதாகலின், சொல்லாலுணர்த்தப் படாத வெளியென்பார் 'மோன வெளி' என்றார். இறை

வனை அவனது திருவருள் வாயிலாகவேதான் உயிர்காண முடியும். பூதங்கள் முதலிய தத்துவங்கள் வாயிலாக அவனை யறிய முடியாது. இறைவனைத் தோற்றுவிக்குந் திருவருளை அவனுக்கு வடிவமென்றும் உயிருக்குக் கண்ணென்றும் கூறுவது மரபு.

"காட்டுந் திருவருளேகண்ணாகக் கண்டபெர
வீட்டின்ப மெய்ப்பொருளை மேவுநா ளெந்நாளோ"
—எந்நாட்கண்ணி பொருளியல்பு 6.

"மண்ணோடு விண்காட்டி மறைந்து மறையா வருளைக்
கண்ணொடு கண்ணாக வென்று காண்பேன் பராபரமே"
—பராபரம் 82.

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்றபடி எல்லாப் பொருளையும் பார்க்குங்கால் அவற்றிற்கு உள்ளீடாய் அவற்றிற் காதாரமான அடிப்படையாய திருவருள் வெளியை இறைவன் திருவடிவாக நினைத்து வழிபடவேண்டு மென்பார். 'கண்டனவெலா மோன உருவெளிய தாகவுங் கருதியஞ்சலி செய்குவாம்' என்றார்.

திருவருளென்பது இறைவனது அறிவாற்றலாகலின், அது சடமாய மாயையின் வேறாயுள்ள தெனினும், அதனை உருவகிக்குங்காற் சடப்பொருட்குரிய மொழிகளை வழங்குவது நுண்மரபாகும்.

"நின்னருளாஞ் சித்தின்றி யாங்களுண்டோ" —பராபரம் 73.
என்றமையால், அருள் சித்தென்பது தெளிவு.

தத்துவமெல்லாங் கடந்த முதல்வனைச் சார்ந்து நிற்கும் பேரறிவாளர்க்கு ஆதாரமாய் நிற்பது திருவருளாதலின் அதனை ஒரு நிலமாக உருவகிப்பார்,

"சீராருந் தெய்வத் திருவருளாம் பூமிமுதற்
பாராதி யாண்ட பதியே" —பராபரம் 1.

என்றார்.

நிலையாத தோற்றமுடைய மாயா உலகத்தை நீங்கி அருளென்னு மெய்ஞ்ஞான உலகத்தை அடைய விழைவார்,

"பொய்க்காட்சி யான புவனத்தை விட்டருளா
மெய்க்காட்சி யாம்புவன மேவுநா ளெந்நாளோ"
—எந்நாட்கண்ணி அருளியல்பு 2.

என்றார்.

திருவருளை மழையாகப் பலவிடங்களில் உருவகித்தமை பாராட்டற்பாலது.

"வெந்து வெடிக்கின்ற சிந்தை வெப்பகலத் தண்ணருளாய்
வந்து பொழிகின்ற மழைகாண்ப தெந்நாளோ"
—எந்நாட்கண்ணி அருளியல்பு 6.

"சிந்தித்த வெல்லா மென்சிந்தை யறிந்தேயுதவ
வந்த கருணை மழையே பராபரமே" —பராபரம் 3.

"தெவிட்டாத அருளைப் பொழியுங் குணமுகிலே"
— தன்னை யொருவர் 8.

என்றது காண்க.

"பெருகிய கருணை வாரிதியே" —சிவன் செயல் 8.

என்றவிடத்து அருள் கடலாயிற்று.

"நீதி யருட்கடலைச் சேருநா ளெந்நாளோ"
—எந்நாட்கண்ணி அருளியல்பு 3.

என்றதுமது.

" வான்கருணை வெள்ள மாகி " —ஆனந்தமானபரம் 7.

" அடியார் நினைவி னிடை
ஆறாய்ப் பெருகும் பெருங் கருணையரசே"

சொல்லற்கரிய 7.

என்ற விடத்து, அருள் ஆற்றிற் குவமிக்கப்பட்டது.

" வெப்பிலாத் தண்ணருள் விளக்கே" —ஆரணம் 4.

" அருட் செம்பொற் சோதியே" —பொன்னைமாதரை 21.

" ஆதியந்த நடுவேது மின்றியருளாய் நிறைந்திலகு சோதியே"

சிற்சுகோதய விலாசம் 3.

என்ற விடத்து, அருள் ஒளி யெனப்பட்டது.

அருட்கதிரவன் முன் உள்ளத் தாமரை விரியுமென்பார்,

" தக்க ரவிகண்ட சரோருகம்போ லென்னிதயம்
மிக்க வருள்கண்டு விகசிப்ப தெந்நாளோ"

—எந்நாட்கண்ணி அன்புநிலை 1.

என்றார்.

" கன்றுமன வெப்பக் கலக்கமெலாந் தீரவருட்
டென்றல்வந்து வீசுவெளி சேருநா ளெந்நாளோ"

எந்நாட்கண்ணி அருளியல்பு 8.

என்ற விடத்து, அருள் காற்றாயிற்று.

" கண்ணாரக் கண்டோர் கருப்பொருள் காணமலருள்
விண்ணா டிருந்த வின்ப வெற்பே" —பராபரம் 2.

என்ற விடத்து, அருள் விண்ணிற்கு ஒப்பிடப்பட்டது.

" வெளியென்றது மஃதே உன்னருட்டு வெளி"

" அருளே யோ ராலயம்" —ஆகாரபுவனம் 2.

" அருளே கடவுளாகிய கற்பகத்தின் கனி"

பரிபூரணானந்தம் 1.

"அருளே உயிரைப் பக்குவ காலத்திற்
தூய்மை செய்யுங் குளிகை" —ஆரணம் 5.

"பேரன்பாகிய வெள்ளமீது இறைவன்
அருள்வெளியி லுலவுகின்ற கப்பல்"
—கருணாகரக்கடவுள் 10.

அருளே இறைவனுக்குத் திருமேனி யாதலால், அருளினைச் சார்தல் இறைவனது ஆகத்துள் உதித்தலா மென்பார்.

"இவ்வுடம்பு நீங்குமுனே யெந்தாய்கேள் நின்னருளாம்
அவ்வுடம்பிற் குள்ளே யவதரிக்கக் காண்பேனோ"
—காண்பேனோக்கண்ணி 27.

என்றார்.

உலக வாழ்வாகிய வெம்மையைப் பார்த்துக்கொண்டிருந்த துன்பம் நீங்கும்படியாகத் திருவருளின் கண்ணே தூங்க விழைவார்,

"வெய்யபுவி பார்த்து விழித்திருந்த அல்லல்அறத்
துய்யவருளிற் றுயிலு நாள் எந்நாளோ" —அருளியல்பு 12.

என்றார்.

இறைவனைத் தந்தையாகவும் திருவளைத் தாயாகவுங் கூறுவது மரபாகலின்,

"நற்றுணையே அருள் தாயே" —பன்மாலை 7.

"எந்த நாளைக்கும் ஈன்றருள் தாயென
வந்தசீரருள் வாழ்கவென் றுன்னுவேன்"
—பொன்னைமாதரை 55.

"தாயான தண்ணருளை நிரம்பவைத்துத் தமியேனைப்
புரவாமற் றள்ளித்தள்ளிப் போயான தென்கொலையா"
—கல்லாலின் 28.

என்றார்.

உயிரானது உண்மையை உணரவேண்டுமாயின் திருவருளின் உதவி அதற்கு இன்றியமையாததென்பார்,

"பொய்யைப் பொய்யென் றறியும் போதத்துக் காதரவுன்
மெய்யருளே யன்றோ விளம்பாய் பராபரமே"

—பராபரம் 105.

"நின்னருள் கொண்டறிவ தல்லால் நெறிவே றுண்டோ"

—கல்லாலின் 2.

என்றார்,

"ஆங்கவ னருளாற் பத்தி நன்குண்டாம்
பத்தியால் அவன் அருளுண்டாம்"

என்றவாறே, உலக நிலையாமையை யுணர்வதற்குத் திருவருள் வேண்டும். திருவருள் விளங்குவதற்கு நிலையாமை யுணர்ச்சி வேண்டும்.

"இகமுழுதும் பொய்யெனவே யேய்ந் துணர்ந்தா லாங்கே
மிகவளர வந்த அருள் மெய்யே" —உடல்பொய்யுறவு 10.

என்றமை காண்க.

இறைவனுண்மையை உயிரின் பக்குவத்திற் கேற்றவாறு அவனே யுணர்த்தி யாளுதற்குரியனென்பார்,

"திடமுறவே நின்னருளைச் சேர்த்தென்னைக்
காத்தருளக் கடனுனக்கு" —திடமுறவே 1.

என்றார்.

உயிர் தானே முதல்வன் றிருவருளை யறியவியலாதென்பார்.

"உள்ளத்தினுள்ளே யொளித்தென்னை யாட்டுகின்ற
கள்ளக்கருணையையான்காணுந் தரமாமோ" —திடமுறவே 4.

என்றார்.

திருவருளால் நிலையாமை யுணர்ந்தார், உலகவாசனையை யொழித்துத் திருவருளையே நாடி நிற்றற்குரியராதலின்,

"வாதனை விட்டுன் னருளின் மன்னினலல்லால் வேறொரு
சாதனை தானுண்டோநீ சாற்றாய் பராபரமே"--பராபரம் 101.

"நோக்கு நின்னருட் காட்சியல்லாலொரு போக்குமில்லை"
—பொன்னைமாதரை 57.

என்றார்.

கடவுள் இகபர மிரண்டினு முயிரினுக்குயிராகி யெங்கு நிறைகின்ற பொருளாதலின் எல்லாம் இறைவன் வடிவமே யென்பார்,

"எவ்வடிவும் பூரணமா மெந்தை யுருவென் றிசைந்த
அவ்வடிவுக் குள்ளே யடங்குநா ளெந்நாளோ"
—எந்நாட்கண்ணி நிலைபிரிந்தோர் 9.

என்றார்.

இறைவன் உயிர்கள் மாட்டு வைத்த பேரருளினாலே எங்குங் கலந்திருப்பதால், அவனுக்கு யாவும் அருள் வடிவமே.

"மண்ணொ டைந்தும் வழங்குயிர் யாவுமே
அண்ணலே நின் னருள்வடி வாகுமே"
—பொன்னைமாதரை 33.

திருவருளே யாண்டும் நின்று எவற்றையும் நடத்துதலால்,

"பின்னு முன்னுமாய் நடுவுமா யாவினும் பெரிய
தென்னுந் தன்மையா யெவ்வுயிர்த் திரளையு மியக்கி
மன்னுந் தண்ணருள் வடிவமே"
—எனக்கெனச் செயல் 15.

"அருளெலாந் திரண்டோர் வடிவாகிய
பொருளெலாம் வல்ல பொற்பொதுநாத"

—பொன்னைமாதரை 68.

"யாதின்பாலும் பிரியாமற் றண்ணருளே
கோயிலான பெரிய பரம்பதி" —ஆகாரபுவனம் 19.

"அண்டரண்டம் யாவு நீ - கொண்டு நின்ற கோலமே"

—பாடுகின்றபனுவல் 4.

உயிர்கள் போல எழுவகைத் தாதுவாலாகிய மாயா வுடம்பினை இறைவன் வேண்டாமையின்,

"துய்யன் தண்ணருள் வடிவினன்"

—எனக்கெனச்செயல் 11.

"தன்மயம் சுபாவஞ் சுத்தந் தண்ணருள் வடிவம்"

—ஆசையெனும் 33.

என்னும் திருவாக்குகள் எழுந்தன.

கண்டனவெல்லாம் இறைவன் திருவடிவமே யென்று வழிபடுவதே அகண்டாகார பூசை.

"ஆசன மூர்த்தங்களற அகண்டாகார சிவ
பூசை செயவாசை பெருந்துநா ளெந்நாளோ"

—எந்நாட்கண்ணி நிலைபிரிந்தோர் 12.

அடிகள் அத்தகைய வழிபாட்டின ரென்பது,

"கண்ட வடிவெலா நின்காட்சி யென்றே கைகுவித்துப்
பண்டும் இன்றும் நின்ற என்னைப் பார்த்திரங்க வேண்டாவோ"

—வேண்டாவோகண்ணி 1.

என்பதாற் றெளிக.

நிலமுதல் நாதமுடிவாகவுள்ள எல்லாவற்றிற்கு மப்பாற்பட்ட திருவருளொளியே இறைவன் திருவுரு.

"இருநில மாதிநாத மீறதாமிவைகடந்த
பெருநில மாயதூய பேரொளிப் பிழம்பாய்நின்று
கருதரு மகண்டானந்தக் கடவுள்" —வம்பனேன் 3.

இங்கே பெருநிலமென்றது திருவருளை. பேரொளியை என்றது இறைஞானத்தை. போத பரிபூரண அகண்டி தாகாரமாகிய பரம்பொருள் உயிர்கட்கு விளங்குந் திரு மேனியுடன் றோன்றி யருள் செய்யாதவிடத்து, உயிர்கள் அதனை அறிய மாட்டாமையின் இறைவனது உருவத் திரு மேனிகளை அடிகள் பல பாடல்களிலே விதந்து போற்றி யுள்ளார்.

"ஏகமான உருவானநீ யருளிறை லனேக உருவாகியே"
—சிற்சுகோதய விலாசம் 5.

என்றமையால், இறைவன் பல அருட்டிருமேனிகள் கொண் டருள்வனென்பது தெளிவு.

பாயுப்புலி 10-ல் சிவனது நவவடிவங்களுங் குறிக்கப் பட்டன.

"சிவமாதி நான்முகக்கோ வந்தமாமறை செப்புகின்ற
நவமாயிலங்கிய வொன்றே" —பாயப்புலி 10.

என்றது காண்க.

இந்நிலவுலகத்தின் கண்ணே, இறைவன் கல்லால மர நிழலின்கண் வீற்றிருந்து நால்வர்க்கு உண்மைப் பொருள் விளக்குவான் கொண்ட திருவடிவத்தை அடிகள் பெரிதும் விதக்கின்றார்.

"பன்முத்திரைச் சமயம் பாழ்படக் கல்லாலடிவாழ்
சின்முத்திரை அரசைச் சேர்வேனோ பைங்கிளியே"
—பைங்கிளிக்கண்ணி 36.

"கல்லாலின் கீழிருந்து கற்பித்தானோர்வசனம்
எல்லாரு மீடேறவே" —உடல் பொய்யுறவு **45.**

"நீதியாயக் கல்லாலின் கீழேயிருந்து
போதியா உண்மை யெல்லாம் போதித்தான்"

—ஷை **50.**

என்றது காண்க.

சிற்சுகோதய விலாசம் 10-வது செய்யுளில் 'மெய்ந் நெறியின் வேறாகிய பலவகைப்பட்ட சமய நெறி' களை உண்டாக்கினவர்களும், யாங்களே கடவுளென்றிடும் குற்ற வாளிகளும், நடுவு நிலையாக உண்மை யாராயாது சமய வாதஞ் செய்யும் ஒருபாற் கொடியவரும், தலை வணங்கும் படியாகவும், தன்பாலுயிர்களை வரவழைக்கும் அறத்தலைவனாகிய நமன் எருமை மேய்ப்போனைத் தனியே யிருக்கவும், கல்லால நிழலின்கீழ் சனகன் முதலிய முனிவர்களுக்கு அவர்களுடைய நூலாராய்ச்சியால் வந்த மயக்கந் தீரும் படியாகவும் அழகிய கைக்காட்டாகிய முத்திரையினால் கடவுளறிவினை உணர்த்தித் தூய திண்ணிய அருட்டன்மை யுடன் திங்கள் சூடிய அருளாளனைத் தென்திசை நோக்கி யமர்ந்த இறைவன் திருக்கோலத்தை எத்திசையிலுந் தொழுவேன் என்றமையால் உயிர்களுக்குப் பிறப்பிறப் பறுத்து எமதண்டனை வாராது காக்கவும் மெய்யுணர்ச்சி நல்கவும் இறைவன் அருட்குருவாய் வருவனென்பதை அடிகள் அறிவுறுத்தினர்.

"அந்தணர் நால்வர்காண அருட்குருவாகிவந்த எந்தையே"

—தேன்முகம் 10.

என்றதுமது.

கடவுள் நல்கும் ஞானமானது நூலறிவிற் கெட்டாத சுட்டிறந்த பேரறிவென்பார்,

"பார்த்தன வெல்லா மழியுமதனுற் சுட்டிப்
பாராதே பார்த்திருக்கப் பரமே மோன
மூர்த்திவடி வாயுணர்த்துங் கைக்காட் டுண்மை
முற்றியென தல்லல் வினைமுடிவ தென்றே"

—கல்லாலின் 16.

என்றார்.

'சின்மயானந்த குரு' என்னும் பதிக முழுவதும் தென்முகக் கடவுளைப்பற்றிய வாழ்த்தாகவே யமைந்துள்ளது. அதனுள் உயிர்களை இறைவன் பக்குவப்படுத்துகின்ற முறை இரண்டு செய்யுட்களிலே தொகுத்துரைக்கப்பட்டது.

இப்பதிக ஆறுஞ் செய்யுளிலே, உயிரின் அறிவையும் மறைத்துத் தன்னையும் மறைக்கும் ஆணவமலத்தாற் பிணிக்கப்பட்ட தனி நிலை என்னும் இருள் நிறைந்த சிறுவீட்டில் அறிவில்லாத குருட்டுக் குழந்தைபோலக் கட்டுப்பட்டிருந்த உயிர்களாகிய நம்மை வெளியில் வரச்செய்து, துன்பத்திற் கிடமாகிய உட்கருவிகளும் புறக்கருவிகளுமாகிய உடம்பினைப் பாதுகாப்பாக வமைத்து, தொடர்புற்ற தத்துவங்கட்கேற்ற பெயரையுமமைத்து, மெய்யென்று பேசுகின்ற பொய்யுடல் நிலைத்து வளரும் வண்ணம் நுகர்பொருள்கள் பலவுமைமத்து, பெரிய உலகத்திலே மேலுங்கீழும் அங்குமிங்கும் போக்குவரவு செய்தலாகிய பிறப்பிறப்பென்னும் பெரிய விளையாட்டையுமைமத்து, அழகியதாய்த் தான் வகுத்த கட்டளைப்படி நில்லாது நெறி தப்பினோர்களை எமன் வாயிலாகத் துன்புறுவித்து, நெறிநின்ற காலை எவ்

வகைத் துன்பத்தையுமொழித்து மெய்யுணர்வு நல்கிக் காலங்கடந்த பேரின்ப வீட்டினை நன்கு பொருந்தித் தூங் குங்களென்று சிறப்பு நிலைதந்த உலகன்னை வடிவான எந் தையே! சித்தாந்த முத்தி முதலே என்றார்.

—சின்மயானந்தகுரு 6, 7.

இதனால் உயிர்கள் ஆணவத்தோடுமட்டும் பிணிக்கப் பட்டிருந்த தனிநிலையும், மாயையாலாகிய தத்துவங்களோடு கலப்புற்றுச் செய்யும் இருவினைக் கேதுவாக உடம்பெடுத் துழலும் கலப்பு நிலையும் பிறப்பிறப்பற்றுச் சிவப்பேறெய் திய பின்னுள்ள தூயநிலையும் விளக்கப்பட்டன.

"கேவல சகல மின்றிக் கீழொடு மேலா யெங்கு
மேவிய வருளின் கண்ணாய் மேவிட"

என்றதுமது.

சின்மயானந்தகுரு 7-ம் பாட்டினுள், 'கருக்கட்டி வைத்து, உலோகங்களைப் புடம் போடுதற்கு அமைத்த மூசையென்னுஞ் சிறு கலம்போன்ற உடம்பினிடையே களிம்புடைய செம்புபோன்ற யான் ஆணவமலத்தோடி ருக்க, நீ ஞானத் தீயைமூட்டி, செம்பைப் பக்குவமாக உருக்குவதுபோல என்னை மலபரிபாகம் எய்துவித்து உரிய நேரத்தில் பொன்னாக்குங் குளிகையை உருகுஞ் செம் போடியைத்து அதைப் பொன்னாக்குவதுபோல நின் திரு வருளாகிய குளிகையால் என்னைத்தொட்டு மாசுபோக்கிப் பத்து மாற்றுப் பசும்பொன்னாக்கி எனது பணிகொண்ட உன் பேரருளை என்னென்று சொல்லுவேன்' என்றனர்.

இறைவனது குருவடிவத்தை அடிகள் வியப்பதுபோல அவனது கூத்த வடிவத்தையும் மிகுந்த ஆர்வத்துடன் துதிக்கின்றார் என்பது அவர் நூலுணர்ந்தார் யாவருக்கும்

நன்கு விளங்கும். 'கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு கருணாகரக் கடவுளே' என்ற அடியில் இறைவன் ஞான மயமாகிய பேரவையின்கண் உயிர்கட்குப் பேரின்பம் உண்டாதற் பொருட்டுக் கூத்தியற்றுதல் அவன் கருணைக் கடலாதலினாலென்பதை இனிது விளக்கினார். எந்நாட் கண்ணியுள் கடவுள் வாழ்த்துக் கூறுஞ் செய்யுள் மன்றினிலாடும் பெருமானையே குறித்ததாகும்.

தில்லை மன்றினுள், எச்சமயத்தாரும் தஞ்சமயக் கருத்து ஆங்கு உண்டென்று கருதி வணங்குதற்குரிய அருள்நிலை யுளதென்றுரைத்தனர்.

"பகர்வரிய தில்லைமன் றுள் பார்த்த போதங்
கென்மார்க்க மிருக்கு தெல்லாம்
வெளியே யென்ன வெச்சம யத்தவர்களும்
வந்தி றைஞ்சா நிற்பர்"

—ஆகாரபுவனம் 12.

தில்லை மன்றிற்குப் பொதுவென்ற பெயர் இருப்பதும் இக்கருத்தினை வற்புறுத்தும். தில்லையிலே இறைவனுக்கு அருவ வழிபாடு நிகழ்தலின், அதனை மாத்திரம் விரும்புகின்ற சமயத்தாருக்கும் அங்கே இடமுண்டு. அழகிய திருச்சிற்றம்பல முடையார் அருஉருவ வடிவமாய்ப் பூசனை யேற்கின்றாராதலின் அருஉருவ வழிபாடுடையார்க்கும் அங்கே பொருத்தமான வணக்கத்திற் கிடமுண்டு. உருவ வழிபாட்டிற்குக் கூத்தப்பெருமான் திருவுருவே சிறந்ததாகும். உயிருக்குயிராய் ஐந்தொழில் புரியும் இறைவன் இயல்பினையே கூத்தப்பெருமான் வடிவம் குறிக்கின்றது. இறைவனைப் படைப்போனாக வழிபடுவோருக்கும் நாத வடிவமாக வழிபடுவோருக்கும் அங்கே இடமுண்டென்பது

கூத்தப்பெருமான் திருக்கர மொன்றில் உடுக்கு வைத்திருப் பதால் தெளியப்படும். கூத்தப் பெருமான் உயிர்களை நோக்கி அஞ்சேலென்று அபயங்காட்டும் திருக்கரமுடை மையால் அவர் காத்தற் கடவுளென்பது நன்கு விளங்கும் இறைவன் ஒரு திருக்கரத்தில் நெருப்பு வைத்திருப்பதால் எல்லாவற்றையும் ஒடுக்கும் கடவுளும் அவனே என்பது தெளியப்படும். ஊன்றிய திருவடி உணர்த்துவது யாதெ னில் இருவினைப்பயனை நுகரும்படி உயிர்களைப் போகத்திற் பிணிப்பதாய மறைத்தற் றொழிலே. இறைவனது தூக்கிய திருவடி பிறப்பிறப்பற்று முடிவாகப் பெறுதற்குரிய வீட் டின்பைக் குறிப்பதாகும். கடவுளே உயிர்களுக்கு நல் வினைக்கு நன்மையும், தீவினைக்குத் தீமையும் விதிப்பரென்ற கருத்துடையார்க்கும், அவருடைய திருவடி யடைதலே முத்தி என்று கருதுவார்க்கும் கூத்தப்பெருமான் திரு வுருவே வழிபடற்குரியதாகும். இறைவனை ஞானமயமாகக் கருதுவார் சிதம்பரமென்ற சொல்லின் பொருளை நாடின் தில்லை மன்றே தாம் வழிபடு மிடமென்று கொள்வர். அறி வின் நிறைவாய் எப்பொருளும் தன்னுள் அடங்கப் பெறும் அருள்வெளி என்று அது பொருள்படும். சித், அறிவு, அம் பரம், ஆகாசம் அல்லது வெளி. இனி இறைவனை எல்லா வற்றையும் ஆட்டுவிக்கின்ற முதல்வனைக் கருதுவார்க்குக் கூத்த வடிவமே அவ்வருட் செயலை நினைவுறுத்தும். எல் லார்க்கும் பொதுவாக நடுநிலையில் உள்ள இறைவன் பொது வில் நடனமாடுகின்றான். ஆதலின் நீதித் தலைவனை இறை வனைக் கருதுவார்க்கும் தில்லை மன்று பொருத்தமானதே. போகத்தையும் வீட்டையும் இறைவன் அருளுதலால் இறைவனைப் பெருங்கருணை யாளனைக் கருதுவார்க்கும்

சிற்றம்பலம் சிறந்த தோரிடமே. இக்கருத்துப் பற்றியே 'முத்தி தரும் தெய்வசபையைக் காண்பதற்குச் சேர வாரும் செகத்தீரே' என்றார்.

" மாது காதலி பங்கனே " —ஆசையெனும் 11.
" இல்லாளியா யுலகோ யிரை யீன்று " " 24
" பச்சை நிறமாய்ச் சிவந்த பாகங் கலந்துலகை
இச்சையுடன் ஈன்றானே "
—எந்நாட்கண்ணி தெய்வவணக்கம் 7.

என்றும் வரும் பகுதிகளிலே மாதொரு பாகனாய் விளங்கும் இறைவன் திருவடிவு போற்றப்பட்டது.

ஆனைமுகன் வாழ்த்தும் ஆறுமுகன் வாழ்த்தும் எந்நாட் கண்ணியுள் தெய்வ வணக்கத்தில் காண்க.

இறைவனது பிற திருவடிவங்கள் மிகுதியாக விதந்தோதப்படவில்லை.

" குருலிங்க சங்கமமாக் கொண்ட திருமேனி
அருள்மய மென்றன் புற்றருள் பெறுவ தெந்நாளோ "
—எந்நாட்கண்ணி நிலைபிரிந்தோர்நிலை 16.
" குருலிங்க சங்கமமாக் கொண்ட திருமேனி "
—உடல்பொய்யுறவு 23.

என்றமையால் குருலிங்க சங்கமங்களும் இறைவன் திருமேனிகளே என்பது அடிகள் கருத்து.

அன்பர் விரும்பிய வடிவமாய் இறைவன்தோன்றி யருள் புரிவானென்பார்,

" ஏது பாவித்திடினு மதுவாகி வந்தருள்செய் எந்தைநீ "
—எங்கு நிறைகின்ற பொருள் 3.

என்றார். இறைவனது பேரருட்டிறம் இதுகாறும் இயம்பப்பட்டது. இனி இறைவன் வீடுபேறெய்து முயிர்கட்கு

எல்லையில்லாத பேரின்பமளிக்கின்றனென்பது அடிகளால் யாண்டும் நிறுவப்படுவதை ஆய்ந்தறிவாம்.

உயிர் ஐம்புல நுகர்ச்சியினை லெய்து மின்பத்தையே பெரிதும் நாடி நிற்பது. அவ்வின்பம் நிலையாததாகலானும், சடமாகிய மாயையின் தொடர்பால் வருவதாகலானும், அதனைச் சிற்றின்பமென்பர் பெரியோர். அறிவுடைப் பொருளாகிய உயிர்க்கு அறிவில்லாத பொருள் வாயிலாக வரும் இன்பத்தினும் அறிவுடைப் பொருளின் இயைபால் வருமின்பம் சிறந்ததாகும். ஆதல் பற்றியே புறப்பற்றினும் அகப்பற்றை வலி மிக்கதென்பர். புறப்பற்று-பொன், மண் முதலிய பொருள்களின்பாலுள்ள அவா; அகப்பற்று மனைவி, மக்கள், உற்றார், நண்பர் முதலியவர்மாட்டு வைக்கும் விருப்பம். இவர்களும் பிறவிதொறும் வேறு வேறாகவே, என்றும் உயிர்க்குயிரா யிலங்கும் இறைவனது தொடர்பால் வருமின்பமே சாலச்சிறந்ததாகும். இவ்வின்பப் பேற்றின் பொருட்டே உயிர்கள் தவஞ் செய்து வீடு பெறக் கருதும்.

உயிரினது அறிவும் விருப்புஞ் செயலும் இறைவனது அறிவு விருப்புச் செயல்களுக்கடங்கி அவற்றின் வயமாய் நிலைப்பட்ட காலை இறைவனது வரம்பிலின்பம் உயிர்களால் எஞ்ஞான்றும் நுகரப்படும். அஃதே சிவானுபவ மெனப்படும். இறைவன்பாற் பேரின்பமுண்டென்று உயிர்கள் அறியாதவிடத்து அதனைப் பெறுதற்குரிய முயற்சியில் அவைகள் தலைப்படமாட்டா. ஆதலின் இறைவன் இன்ப வடிவினனென்பதை அடிகள் பன்முறை தமது திருப்பாடல்களிலே வற்புறுத்துவாராயினர்.

இறைவனது பேரின்பத்தைப் பெற்றவர்கள் பிறி தொரு இன்பத்தையும் நாடாதவண்ணம் நிறைவான தன்மையுடையவர்களாதலின்,

" ஆனந்த பூர்த்தியாய் " —பரசிவவணக்கம் 1.
" ஆனந்த மயமான ஆதியை " ,, 3.
" ஆனந்த மயமாகி " —பொருள்வணக்கம் 1.
" அகம்புற மென்றன்றத பூரண வானந்தமாகி "
—பொருள்வணக்கம் 7.
" சதா னந்தமான பெருந்தகையை " ,,
—பொருள்வணக்கம் 10.
" மன்னு பரிபூரணச் சுகவாரி " —சின்மயானந்தகுரு 8.
" போக்குவரவில்லாத இன்பமாய் நின்ற "
—சின்மயானந்தகுரு 10.
" முடிவிலா வின்பமே செய்யுந் தானமே "
—சிவன்செயல் 6.
" பூரணா னந்த வாழ்வே " —கற்புருசிந்தை 1.

என்னுந் திருவாக்குகள் எழுந்தன.

இறைவனது பேரானந்தம் அறிவுமயமாய் அறிவின் கண்ணேயே நிலைத்ததாகலின் அடிகள்.

" ஞான ஆனந்தமாம் பெரிய பொருளே "
—பரசிவவணக்கம் 2.
" ஞானக் கண்ணாரக்கண்ட அன்பர் கண்ணூடே
ஆனந்தக் கடலாய் " பொருள்வணக்கம் 9.
" அறிவிலூறும் ஆனந்த வெள்ளமே " —சுகவாரி 7.
" அறிவா னந்தத் தேனாகி " —பன்மாலை 5.
" மதியுள் நின்றின்ப வாரி வழங்குமே "
—பொன்னைமாதரை 29.

"உரையுணர் விறந்து தம்மை யுணர்பவர் உணர்வினூடே
கரையிலா இன்ப வெள்ளங் காட்டிடும் முகிலே"

—ஆசையெனும் 14.

என்றார்.

இறைவனது பேரின்பம் எத்துணைக்காலம் நுகர்ந்தாலும் விருப்பின்மை விளைக்காது ஆதலின்,

"உவட்டாத பேரின்பமான சுகவாரியினை"

—சின்மயானந்தகுரு 2.

"ஆனந்த வெள்ளம் சோராது பொழியவே" —சுகவாரி 8.

"என்றும் ஆனந்த நிலையாகி" —ஆகாரபுவனம் 2.

"பூரண மெய்யதாம் இன்பம் என்றும் விளைவதே"

—பொன்னைமாதரை 8.

"அகண்டா னந்தனே" —பொன்னைமாதரை 35.

"கரையிலின் பக்கடலமுதே" —பொன்னைமாதரை 39.

"உலப்பிலா வானந்த மான வெள்ளமே" —ஆரணம் 4.

"தெவிட்டா வமுதே" —காண்பேனேகண்ணி 1.

"மாறாத தேனென ருசித்து" —சிவன்செயல் 10.

என்னுந் திருவாக்குகள் எழுந்தன.

கடவுளானந்தம் மனம் காலம் முதலிய தத்துவங்கட்கு அப்பாற்பட்டதாய் மாசற்றதாயுள தென்பார்,

"மனமாதிக் கெட்டாத பேரின்ப மயமாய்"

—பொருள்வணக்கம் 3.

"மனதவிழ நிறைவான துரிய வாழ்வை"

—பொருள்வணக்கம் 5.

"இரவு பகலில்லாத பேரின்ப வீட்டினில்"

—சின்மயானந்தகுரு 6.

"தூவெளிய தாய் அகண்டா னந்த சுகவாரி"

—கருணாகரக்கடவுள் 2.

" ஆனந்தத் தூவெளி வெள்ளமே"

—பொன்னைமாதரை 42.

" கருதரு மகண்டானந்தக் கடவுள் " —வம்பனேன் 3.

" இன்பாதீதத்தனியிடை"

" மாசற்ற வானந்த வாரி " —ஏசற்ற அந்நிலை 1.

என்றார்.

அருளினை ஐம்பூதத்திற்கொப்பிட்டது போலவே ஆனந்தத்தையும் ஐம்பூதத்திற்கு ஒப்பிட்டுள்ளார்.

" ஆனந்தமயத் தெய்வக்குன்றே " —ஆகாரபுவனம் 1.

" ஆனந்தவெற்பே " —உடல்பொய்யுறவு 44.

" இன்பவெற்பே " —பராபரக்கண்ணி 2.

என்றவிடத்து ஆனந்தம் மலையாயிற்று.

" ஆனந்த மழைபொழியும் முகிலை "

—பரசிவவணக்கம் 2.

" வானேயவ் வானிலின்ப மழையே "

—கருணாகரக் கடவுள் 9.

" வானமாய் நின்றின்ப மழையூா யிரங்கியெனை
வாழ்விப்ப துன்பரங்காண் " —சுகவாரி 3.

" பகமான இன்பவெள்ளம் மூழ்கவேண்டும் "

—சிற்சுகோதய விலாசம் 5

" ஆனந்தமாகடல் வளைவதின்றே " —தேன்முகம் 7.

" ஆனந்த சாகரத்தை " —மண்டலத்தின் 3.

" ஆனந்த வெள்ளப்பேராறே " —பராபரக்கண்ணி 4.

என்றவிடத்து ஆனந்தம் முகிலாகவும், மழையாகவும், ஆறாகவும், கடலாகவும், புனைந்துரைக்கப் பட்டமை காண்க.

" சொரூபானந்தச் சுடர்க்கொழுந்தே" —சோலற்கரிய 4.

" பரமஞான ஆனந்த வொளியே"

—மலைவளர் காதலி 1.

என்றவிடத்து ஆனந்தம் ஒளியாயிற்று.

" அன்பினால் மூர்ச்சித்த அன்பருக்கு அங்ஙனே
அமிர்த சஞ்சீவிபோல் வந்து" —சுகவாரி 4.

என்றவிடத்து ஆனந்தம் சஞ்சீவிக் காற்றிற் கொப்பிடப் பட்டது.

" என்னைப் பூரண வின்ப வெளிக்குளே
துன்னவைத்த சுடரெனத் தக்கதே"

—பொன்னைமாதரை 25.

" சுகவான் பொருளே" —பாயப்புலி 43.

" சுகாரம்பப் பெருவெளியை"

—பொருள்வணக்கம் 1.

என்றும் வருமிடங்களில் ஆனந்தம், ஐந்தாம் பூதத்திற் கொப்பிடப்பட்டது. இன்பத்திற்கு உவமையாக இனிய பொருள்களையே அமைத்துள்ளார்.

" அன்பர் மிடிதீரப் பருகவந்த செழுந்தேனாகி"

—பொருள்வணக்கம் 7.

" அகமகிழ வருந்தேனை முக்கனியை கற்கண்டை
அமிர்தை" —பொருள்வணக்கம் 4.

" தெள்ளிமறை வடியிட்ட அமுதப் பிழம்பே
தெளிந்த தேனே சீனியே
திவ்வியரசம் யாவும் திரண்டொழுகு பாகே"

—கருணாகரக் கடவுள் 8.

" இன்னமுது கனிபாகு கற்கண்டு சீனி தேன் எனருசித்திட"

—சுகவாரி 1.

"தேனாகிப் பாலாகிக் கனியாய்க் கன்னற்
செழும்பாகாய்க் கற்கண்டாய்த் திகழ்ந்த வொன்றே"

—பன்மாலை 5.

"அருள்பழுத்த பழச்சுவையே கரும்பே தேனே ஆரமுதே"

—ஆகாரபுவனம் 7.

"கரும்போ தேனோ முக்கனியோ வென்ன வென்னுட்
கலந்து நலந்தரும் பேரின்பப் பொருளே"

—தன்னை யொருவர் 3.

என்றது காண்க.

இறைவனோடு அத்துவித முறுதலால் ஆனந்த முண்டாமாதலின்,

"அத்துவித வானந்த சித்து முண்டாம்"

—நினைவொன்று 7.

"அத்துவித அனுபவத்தை" —மண்டலத்தின் 7.

என்றும் பகர்ந்தனர்.

"பேரின்பமதாய்ச் செறியும் பொருள் நீ"

—தன்னையொருவர் 4.

"ஆனந்தரூப மயிலே" —மலைவளர்காதலி 5.

என்றமையால் ஆனந்த மென்றது சிவசத்தி என்றவாறாயிற்று. மலைவளர் காதலி என்னும் திருப்பதிகத்திலே உமையம்மையின் பெருமையை அடிகள் அழகுறப் பகர்ந்தனர். இறைவன் கோலத்தை,

"கொண்டாடினோர் முனங்கூத்தாடு மத்தன்றன் கோலமெல்லாம்
விண்டாலம்ம வொன்றுங் காணாது வெட்ட வெறுவெளியே"

—பாயப்புலி 5.

என்ற விடத்து வெட்டவெளி யென்று புகன்றதுபோல இறைவியைக் கூறுமிடத்து,

"நாதாந்த வெட்டவெளியே" —மலைவளர்காதலி 8.

என்றனர்.

சிவசத்தி சுத்தமாயையிலே தொடர்புடைமையாலும், மந்திரங்களின் மூலம், சுத்தமாயை யாதலாலும், நாதவடிவாகிய மகாமந்திர ரூபியே என்றனர். சிவசத்தி மாயையொடு உயிர்களின் பொருட்டுத் தொடர்புற்றாலும் அதன்கண் மயக்கமுற்றுத் துவக்குறாது, தன்னியல்பு மாறாது நிற்றலின்,

"அகிலாண்ட கோடியீன்ற அன்னையே
பின்னையுங் கன்னியென மறைபேசு மானந்தரூபமயிலே"
—மலைவளர்காதலி 5.

என்றார்.

இறைவன் எங்கு நிறை பொருளாயிருப்பினும், சிலவிடங்களிலே தயிரில் நெய்போல் விளங்கியருள் புரிவானாதலின், அடிகள் அவற்றைச் செய்யுளிலே விதந்தோதுகின்றார்.

"கடவுளாகிய நீ வீற்றிருப்பது, அண்டத்தின் முடிவிலுள்ள சிவலோகத்திலோ, அண்டத்திற்கு வெளியேயுள்ள உருத்திர புவனங்களிலோ, பகலவன் மண்டல நடுவிலோ, ஓமத்தீ நடுவிலோ, தண்ணமுதம் பொழியுந் திங்கள் மண்டலத்திலோ, அன்பர்கள் உள்ள முருகி மலர்கள் தூவி வணங்கி வழிபடுந் திருவடிவங்களிலோ, திசைகளிலோ, திசைகளின் முடிவுகளிலோ, வானிலோ, விந்து தத்துவத்திலோ, நாத தத்துவத்திலோ, வேதாந்த நிலையிலோ, சித்தாந்த நிலையிலோ, காணப்படும் பொருள்கள் பலவற்றினுமோ, காணப்படாத சூனிய நிலையிலோ, முக்காலத்திலோ, படைப்பிடந் தன்னிலோ, ஐம்பொறி யடக்கமும்

உள்ள அடக்கமு முடைய தொண்டர்களிடத்திலோ இவைகளிலே யாண்டென்று அடியேற்கு உண்மை பகர்ந் தருள் வாயாக" என்றார்.

—சுகவாரி 10.

இதன் நுட்பம் :—சிவலோக மெனப்படும் உருத்திர லோகமானது அண்டத்தின் முடிவிலுள்ளது. அவ்வுலக முதல்வன் சிவபெருமானோடு இரண்டறக் கலந்த ஞான மூர்த்தியாய்க் கீழுள்ள அயன், அரி முதலிய எல்லாத் தேவர்களுக்குந் தலைவன். அண்டத்திலே இறைவன் திரு வருள் செவ்வியின் விளங்குமிடம் அஃதொன்றே. அண்டத் திற்கு வெளியே பத்துத் திசையிலும் நூறு புவனங்களிருக் கின்றன. அவற்றின் ஒவ்வொன்றிலும் ஞானம் பெற்ற ஒவ்வொரு உருத்திரர் தலைவராக வீற்றிருப்பர் என்று சிவாகமங்கள் செப்புகின்றன. ஆதலால் அவ்விடங்களில் சிவ விளக்கம் சிறந்திருக்கும்.

கதிரவன் மண்டலம் அதனைச் சூழ்ந்துள்ள உலகங் கட்கு ஒளி கொடுத்து அவைகள் தத்தம் நிலையில் இயங்கு வதற்கு ஏதுவா யிருத்தலால் அம்மண்டிலத்தின் நடுவே சிவபெருமானை வழிபடுதல் நமது முன்னோர் வழக்கு. அனல் வளர்த்து அதன் நடுவிலே சிவபெருமானை வழிபடு தல் யாவரும் அறிந்ததே. கதிரவனைச் சிவபெருமானது இருக்கையாகவும் சிவத்தின் பகுதியாகவும், தண்மை மிக்க திங்களைச் சத்தியின் பகுதியாகவும் கருதுதல் மரபு. அன் பர்கள் மலர் தூவி இறைவனை வழிபடும் வடிவங்களிலே கடவுள் சிறப்பாக விளங்கி அருள் புரிவாரென்பது,

"தாபரசங்க மங்க ளென்றிரண் டுருவினின்று
மாபரன் பூசைகொண்டு மன்னுயிர்க்கருளை வைப்பன்"

என்பதாற் றெளியப்படும். திக்குகள் என்பது, வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்ற நாற்றிசைகளையும் திக்கின் முடிவுகளென்பது, வடகிழக்கு, தென்கிழக்கு தென்மேற்கு, வடமேற்கு என்னுந் திசைகளையும் குறிக்கு மெனக் கொண்டு எட்டுத்திக்குப் பாலகர்க்கதிபதியாய், உருத்திரர்கள் உள்ளார் என்னுங் கருத்திற்கிணங்க இறைவன் "திக்குத் திகந்தத்திலோ'' இருப்பதென்றா ரென்றலு முண்டு. பிற பூதங்களுக்கு இடங்கொடுத்து நிற்கும் ஐந்தாம் பூதமாகிய ஆகாசத்திற்குச் சதாசிவமூர்த்தி தலைவராதலானும், காணாத அருவினுக்கும் காணுமுருவினுக்கும் நடுவாயுள்ள சதாசிவ வடிவம் சிவாகமங்களாற் சிறப்பித்துக் கொண்டாடப்படுவதானும் 'வெளியிலோ நீ வீற்றிருப்ப' தென்றார்.

எல்லாத் தத்துவங்கட்கு முடிவாகிய தத்துவங்கள், சிவம், சத்தி யெனப்படும். அவை நாதவிந்து தத்துவங்களாதலின் அவற்றை அடிகள் சிறப்பாக இறைவனிலயமென்றார். வேதாந்தமாகிய உபநிடதங்கள் நூற்றெட்டினுஞ் சிறந்த சைவ உபநிடதங்களிலே முடிவாகக் கூறப்படும் வீடும், சிவாகமமாகிய சித்தாந்தத்திற் கூறப்படும் சிவப்பேறும் ஒன்றுமாதலின் வேதாந்த சித்தாந்த நிலை தன்னிலோ இறைவன் வீற்றிருப்பதென்று அடிகள் வினவினர். எல்லாப் பொருளையும் இறைவன் வடிவென்று பார்க்கும் பெரியோர்க்கு அவர்கள் கண்ட பல பொருளும் இறைவன் வைகும் கோயில்களேயாம். 'எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும் இலங்குமுயி ருடலனைத்து மீசன் கோயில்' என்றனர் பிறரும். எல்லாச் சடப்பொருள்களும் ஒடுங்கிய இடத்து இறைவன் திருவருளேயன்றி

வேறொன்றும் புலனாகாமையின், அவ்விடத்தைப் பாழென்றும் சூனியமென்றுங் கூறுவர். சுடுகாடு என்பதும் அதுவே. மணிவாசகப் பெருமான், 'கோயில் சுடுகாடு' என்றதும் உற்றுநோக்குக. காலதத்துவமானது செயல்களையெல்லாம் வரை யறைப்படுத்துமிடத்து, முதல்வனை நினைவூட்டுவதாய், அவனது ஞானசத்தியால் தொழிற்பட்டு நிற்றலின் அதனையும், எல்லாந் தோற்றுவித்தற்கு மாயை மாமாயையின் கண்ணே இறைவன் ஐந்தொழிலியற்றுதலால் அவற்றையும் இறைவனது பீடங்களாகப் பேசினர். சித்தாகிய உயிர்களுட் சிறந்த பேரன்பினராய் தொண்டர்களுடைய உள்ளத்தை இறைவன் கோயிலாகக் கொண்டமை அருள் நூல்களாற் பெரிதும் வற்புறுத்தப்படுதலின் அந் நடமாடுங் கோயிலையே இறுதியிலமைத்து அடிகள் செய்யுளியம்பினமை பாராட்டத்தக்கதே.

"பெரிது பெரிது புவனம்பெரிது"

என்ற பிறர் தனிச் செய்யுளில்,

"இறைவரோ தொண்டரு ளடக்கம் தொண்டர்தம்
பெருமை சொல்லவும் பெரிதே"

என்றதுமது.

"மாசற்ற அன்பர் நெஞ்சே மாறாத பெட்டகமாத்
தேசற்ற மாமணி நின்றேசினையுங் காண்பேனோ"

—காண்பேனேகண்ணி 4.

இதுகாறும் கூறிய வாற்றால் கடவுள் இயல்பாகவே கட்டினீங்கினமை, தம் வயமுடைமை, இயற்கை யறிவுடைமை, முற்றறிவுடைமை, தூயஉடம்புடைமை, வரம்பிலாற்றலுடைமை, பேரருளுடைமை, வரம்பிலின்பமுடைமை, யென்னு மெண்குணங்களுடையராய், உலகத்தி

னோடு முயிரோடும் தாக்கற்ற நிலையில் இரண்டறக் கலந்து, உயிர்களின் பொருட்டு ஐந்தொழிலையு நடத்துபவராய் உயிர்க்கட்குத் தகுதி வந்த காலத்தே அவர்கட்கு அருளு தற் பொருட்டு அவை நினைந்த திருவடிவங் கொள்ளுங் கருணைக்கடலாய் அருவம், அருவுருவம், உருவமென்னும் முத்திறத்தும், குருலிங்கசங்கமென்னும் வாயிலாகவும் வழிபடற் குரியராய்த் தொண்டர்களுள்ளத்தைத் திருக் கோயிலாக் கொண்டவரென்பது தெளியப்படும்.

---

# அதிகாரம் 3.

---

## உயிரியல்பு

“என்றுநீ யன்றுநா னுன்னடிமை யல்லவோ”

—சுகவாரி 7.

என்றபடி, அக்கடவுளுக்கு மீளா அடிமையாய்ச் சிற்றறி வுஞ் சிறு தொழிலுமுடைய உயிர்களினியல்பினை யாராய் வாம்.

“என்றுளை நீ அன்றுளம் யாம்” —கல்லாலின் 17.

என்றமையால் என்று கடவுள் இருக்கின்றாரோ, அன்றே உயிர்களும் உள்ளனவாதலால், உயிர்கள் கடவுளாற் படைக்கப் பட்டனவல்ல என்பது தெளிவு. உயிர்க்குரிய உடம்பையும் உலகத்தையும் உண்பொருளையும் கடவுள் படைத்தாரென்பதே உயிரைப் படைத்தாரென்று வழங்க லாயிற்று.

" அருளுடைபரம் என்றே அன்றுதானே
யான்உளனென்றும் எனக்கே ஆணவாதி
பெருகு வினைக்கட்டென்றும் என்னுற் கட்டிப்
பேசிய தன்றே அருள்நூல் பேசிற்றன்றே''

—ஆகாரபுவனம் 29.

என்றமையால் பரம்பொருளாகிய கடவுள் கைம்மாறு கருதாத கருணை யொன்றினல் உலகத்தோடு மயலற்ற தொடர்புடையவரே யன்றி, ஆணவம், கன்மம், மாயை முதலிய கட்டுகளில்லாதவ ரென்றும், அக்கட்டுகளெல்லாம் உயிருக்கே யுள்ளனவென்றும் அருணூலாகிய சைவப் பனுவல்கள் புகல்வதை அடிகள் தமது துணிபாகக் கொண்டவரென்பது தெளியப்படும். மௌனகுருவாகிய தமது ஆசிரியர் தம்மை நோக்கி,

"பாராதிபூத நீயல்லை உன்னிப்
பாரிந் திரியங் காணநீ யல்லை
ஆராயுணர்வு நீயென்றான்''

—ஆனந்தக்களிப்பு 9.

என்றும்,

"ஐந்துபுல னைம்பூதங் கரணமாதி
அடுத்தகுண மத்தனையு மல்லை யல்லை
இந்தவுடல் அறிவறியா மையுநீ யல்லை
யாதொன்று பற்றினத னியல்பாய் நின்று
பந்தமறும் பளிங்கனைய சித்துநீயுன்
பக்குவங்கண் டறிவிக்கும் பான்மையேம் யாம்''

—ஆகாரபுவனம் 18.

என்று மியம்பியருளின ரென்றார். இதனல் தெரிந்து கொள்ளவேண்டியதாவது உயிரானது, பூதம், மனம், குணம் முதலிய தத்துவங்களி லொன்றுகாது; அது அறி

வுடைய பொருளே யன்றி, அறிவென்றல் முற்றுண்மை யாகாது. அறியாமையாற் பிணிக்கப்படுவதன்றி அறியாமை அதன் குணமென்று சொல்லுதல் தவறாகும். உயிர் அறிவுடைப் பொருளாயிருப்பினும் எதைப்பற்றி நிற்குமோ அதன் அதன் இயல்பாய் நிற்குமியல்புடையது.

> " அறியாமை சாரி னதுவாய் அறிவாம்
> நெறியான போது அதுவாய் நிற்கும் "

உடல்பொய்யுறவு 22.

என்றது காண்க.

சார்ந்ததன் வண்ணமாகிய தன்மை உயிருக்கிருத்தலால், அறிவில்லாத பொருளோடு சார்ந்து அதன் மயமாயிருந்தாலும், அந்தச் சார்பினின்று விடுதலை யடையத்தக்க இயல்பு உயிர்க்குண்டு. இதனாற்றான் அது 'ஸ்படிகவர்ண சித்து' என்றார். பளிங்கு எப்பொருளைச் சார்ந்ததோ, அப்பொருளைத் தன்னகத்தே காட்டும். ஆனால் பளிங்கு அறிவில்லாப் பொருள்; உயிர் அறிவுள்ள பொருள். உயிருக்குச் சார்புபற்றிய இயல்பு இல்லையாயின், அதனை அறியாமையான ஆணவக்கட்டில் நின்று விடுவித்தல் ஒருவர்க்குமியலாது. அங்ஙனமாயின் உலகப்பற்றே அதன் இயல்பாகக்கொள்ள வேண்டியதிருக்கும். என்னுான்றும் சடப்பற்றே உயிர்க்குளதாயின் அது சடத்தை விட்டுக் கடவுளைப் பற்றுவதெப்படி? கடவுள் அதன் இயற்கையை எவ்வாறு மாற்றமுடியும்? மாற்ற முடியாதாயின் கடவுள் செய்யும் ஐந்தொழிற்குப் பயன் யாதுமிலதாம். ஆதலால், உயிரினியல்பு ஆணவத்தோடு எக்காலத்தும் அத்துவிதமாயிருப்பதன்று. ஆணவத்தை யொழிக்கப்பெறுமியல்பு அதற்கிருத்தலினாற்றான் அடிகள் பந்தமறும் சித்துநீ யென்றும்,

" ஆணவத்தோ டத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினோ டத்துவிதஞ் சாருநா ளெந்நாளோ "
—எந்நாட்கண்ணி நிற்குநிலை 28.

என்றும் பகர்வாராயினர்.

கடவுளைப் போல அறிவுடைய பொருளாயின் ஆணவ முதலிய கட்டுட்படாது. மாயைபோல அறிவில்லாப் பொருளாயின் அது அறிவுடைய கடவுளை ஒரு காலத்தும் அறிய மாட்டாது. ஆதலின்,

" அறிவறி யாமையும் நீயல்லை " —ஆகாரபுவனம் 18.

என்றார். கடவுள் எக்காலத்தும் ஆணவ முதலிய கட்டிலாதவராதலால் உயிர்களை ஆணவத்தோடு பிணித்தவர் கடவுளல்லர் என்பது தெளிவு.

இறைவன் உயிருக்குயிரா யிருக்கின்றாரென்பது,

" உயிருக்குயிராய் எந்நாளும் ஓங்கா நிற்பர் "
—ஆகாரபுவனம் 14.

என்னுந் திருவாக்கால் தெளியப்படும்.

உயிர்களுடைய எண்ணிற்கு அளவில்லை யாதலாலும், எண்ணிறந்த உயிர்க்குந் தலைவன் இறைவன் ஒருவனே யாதலாலும்,

" அளவிலாத ஆருயிர்கட் கோருயிரா யமர்ந்தாயானால் "
—ஆசையெனும் 12.

" எண்ணில் பலகோடி உயிர் எத்தனையோ அத்தனைக்கும்
கண்ணிற் கலந்த அருட்கண்ணே பராபரமே "
பராபரக்கண்ணி 277.

என்று அடிகள் அருளிச் செய்தனரென்க.

இறைவனைத் தனக்கு உயிராகப் பெற்ற உயிரானது தானே நன்மையும் தீமையும் அறியவல்லதாயின் அறியா

மையாகிய ஆணவக் கட்டுக்குள் அகப்படாது அறிவுடைப் பொருளாகிய முதல்வனையே பற்றி நிற்கும். அவ்வாறு நில்லாது ஆணவக் கட்டுடையதா யிருத்தலின் அது அறிவிக்க அறியும் இயல்புடைய தென்பது தெளிவு. இக்கருத்துப் பற்றியே,

"சதசத் தருளுணர்த்தத் தானுணரா நின்ற
விதமுற் றறிவெனும் பேர்மெய்" —உடல்பொய்யுறவு 22.

என்றருளிச் செய்தனர்.

இதன் கருத்தாவது:—இயற்கை அறிவுடைமையால் என்றும் மாறுத பொருள் சத்து எனப்படும். அறிவில்லாது தொழிற்படும் உலகம் அசத்தெனப்படும். அசத்தோடு சேர்ந்தபோது அசத்தாயும் சத்தோடு சேர்ந்தபோது சத்தாயும் இருக்குந் தன்மையதாகலின் உயிருக்குச் சதசத்து என்று பெயர். திருவருள் அவ்வுயிருக்கு உணர்த்த அது உணருமாதலின் அறிவுடைய தென்ற பெயர் உயிருக்கும் உண்டு என்பதே.

"நீயுணர்த்த நானுணரும் நேசத்தாலோ
வறிவென்றே யெனக்கோர் நாமமிட்டதே"
—உடல்பொய்யுறவு 4.

ஆணவம் அற்ற நிலையில் உள்ள உயிர் தனக்குயிராகிய முதல்வனைப் பற்றி நிற்குமாதலினாலும், முதல்வன்பால் அறியாமை யாதுமில்லை யாதலாலும் அத்தகைய உயர் நிலையிலிருந்து தனக்கு முரணான ஆணவக் கட்டிலே உயிர் போய் விழுதற்கிடமில்லை.

"தீதிலா விளக்கெடுத்து இருள்தேடவும் சிக்காது
ஆதலா லறிவாய் நின்றவிடத் தறியாமை ஏதுமில்லை"
—ஆசையெனும் 17.

என்றனர்.

ஆதலின் உயிரானது முதல்வனையடைவதற்கு முன்னர்த் தான் ஆணவக் கட்டிலே கிடப்பதென்றுணர்க. அது எப்பொழுதெக்கட்டிற் குள்ளாயதென்று கூறவொண்ணாதாதலின் அது அனாதியே ஆணவத் தொடர்புடையதென்பதே கருதத்தக்கது. உடல் முதலியவற்றை உயிருக்கு இறைவன் கொடுத்தலாலும் ஆணவத்தை இறைவன் உயிருக்குக் கெடுக்கவல்லனாதலும் உயிர் உடலின் பகுதியாகிய ஐம்பொறிகள் வாயிலாகப் பொருள்களை யறிதலாலும் உடம்பெடுக்குமுன் உயிர் நின்ற நிலை ஆணவத்தொடு அத்துவிதமாய் அறிவின்றி விளங்கப்பெறாத இருள் நிலையாம். அவ்விருள் நிலையில் அடிகள் தம்மை,

"அறிவின்றி நிற்குங் குறியேன்" —உடல்பொய்யுறவு 4.

என்றார்.

"காரிட்ட ஆணவக் கருவறை"

என்றதுமது.

இந்நிலையைக் கேவலமாகிய மறப்பு நிலை என்பர் சித்தாந்த நூலோர். இந்நிலையிற் கிடக்கும் உயிரை அறிவுடைய தென்றல் சாலாதென்பார்,

"அறிவென்ற கோலம் வறிதே"

—உடல்பொய்யுறவு 4.

யாமென்றார்.

உலகப் பற்றுமில்லாது கடவுட் பற்றுமில்லாதவிடத்து மனம் கேவல நிலையில் வழுவிவிடு மென்பார்,

"பற்றினதைப் பற்றுமெந்தாய் பற்றுவிட்டாற் கேவலத்தில்
உற்றுவிடு நெஞ்சமுனை யொன்றிநிற்ப தெப்படியோ"

—பலவகைக்கண்ணி 18.

என்றார்.

இதனால் உயிரானது ஏதாவதொன்றைப் பற்றி நிற்கும் இயல்புடையதென்பது தெளியப்படும். உலகத்தையாதல் கடவுளையாதல் உயிர் பற்றாதவிடத்து அது அறியாமையைப்பற்றி நிற்கும். அறிவுடைய உயிருக்கு அறியாமை இன்பந் தராதாதலின் உயிருக்குத் தன்னிற்றானே ஓர் இன்பம் உண்டென்பாரது கொள்கை பொருத்தமில்லாததாகும்.

ஆத்மாவே பிரமமென்றும் ஆத்மா தன்னையறிந்தால் தன்னிற்றானே ஆனந்தமுடையதாய் விளங்குமென்றும் கூறுவதடாதென்பதே அடிகள் கருத்து. உயிர் தன்னிலே இன்பமுடையதன்று என்றும், உயிர் தன்னையறிந்தால் திருவருளின் உண்மை யுணர்ந்து தலைவனையே பற்றி நிற்குமல்லது பிறிதொன்றினையும் பற்றாதென்றும் தெள்ளிதின் அடிகள் பின்வரும் செய்யுட்களிலே வற்புறுத்துகின்றார்.

“ எத்தனையோ தேர்ந்தாலும் என்னாலே இன்பமுண்டோ
சித்துருவே இன்பச் சிவமே பராபரமே ”

—பராபரக்கண்ணி 18.

“ தன்னை யறிந்து அருளே தாரகமாய் நிற்பதுவே
உன்னை யறிதற் குபாயம் பராபரமே ”

—பராபரக்கண்ணி 96.

“ தன்னை யறிந்தாற் றலைவன்மேற் பற்றலது
பின்னையொரு பற்றுமுண்டோ பேசாய் பராபரமே ”

—பராபரக்கண்ணி 94

உயிரின் கேவல நிலையையும் சகல நிலையையும் சிற்சுகோதய விலாசம் இரண்டாஞ் செய்யுளில் அழகாக விரித்துரைத்தனர்.

நெருப்பிற் காய்ச்சின இரும்பு நெருப்பேயாகாமலும், நெருப்பினைப்போல் அழல்வதால் அதற்கு வேறாகாமல் அதன் மயமாயும் நிற்றல்போல குணங் குறி யாதும் விளங்காமல் ஆணவத்தி லழுந்தி அதன் மயமாய் அறியுந்தன்மை யாதுமின்றி அறிவின்மை வடிவாயிருந்த எனக்கு நீ உன் பேரருளினாலே புறக் கருவிகள் அகக்கருவிகளோடு கூடிய எண்ணற்ற உடம்பு முதலியவற்றையெல்லாம் நல்கிய போது, அங்ஙனம் அவற்றை அளித்த உன்னை யறிந்து உன்னோடு பிரியாத வண்ணம் நின்றிடாமல் பல நிறங்களையும் தன்பால் கவர்ந்துகொள்ளு மியல்புடைய பளிங்குக் கல்லைப்போலப் பல் பொருள்களிலும் பற்றுவைத்து மாயையென்னும் பெரிய கடலிலே ஆழ்ந்து நீ கொடுத்தருளுஞ் சிறந்த அருளை மறந்து விடுகின்ற சிறியேனாகிய யான் உன்னை வந்தணைந்து இன்பாயிருப்பது எக்காலம்? என்றார்.

கேவலம், சகலம், சுத்தம் என்ற மூன்று நிலையும் சின்மயானந்தகுரு 6, 7-ம் பாட்டுகளிலும் விளக்கப்பட்டன. இனிச் சகல நிலையில் உடம்பெடுத்த உயிர்கட்கு ஐந்து வகையான உணர்ச்சி நிலைகள் உள்ளன. அவை ஆசையெனும் 25, 26-ம் பாட்டுகளிலே நன்கு விளக்கப்பட்டன.

அச்செய்யுட்களின் கருத்து வருமாறு:—சாக்கிர அவத்தை நிகழ்தற்குரிய நெற்றியில் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்திற் கேதுவாய்தத்துவங்களும் சொல்லுதல், செல்லுதல், இருத்தல், கழிதல், இன்புறுதல் என்னும் ஐந்திற்கும் ஏதுவாகிய தத்துவங்களும் தொழிற்படும். முன்னைந்திற்குப் புலனும் பொருள்களும், பின்னைந்தின் தொழில்களும், பத்துவாயுக்களும் மனம், புத்தி, சித்தம், அகங்கார மென்னும் நான்கு உட்கருவிகளும்,

போகப் பொது நோக்குடைய உயிராகிய புருடனுடன் பொருந்திநிற்கும். சொப்பனத்திற் கிடமாகிய கழுத்தினில் அறிவுக் கருவிகளாகிய ஐந்தும் தொழிற்கருவிகளாகிய ஐந் தும் ஆகிய பத்து இந்திரியங்களும் நீங்க முன்சொன்ன வற்றில் ஏனைய பொருந்திநிற்கும். சாக்கிரத்திற் றொழிற் படும் கருவிகள் முப்பத்தைந்தென்றும், சொப்பனத்தில் தொழிற்படுங் கருவிகள் இருபத்தைந் தென்றும் நுண்ணறி வாளர் நுவல்வர். சுழுத்தி நிலையில் இதயத்தில் பிராண வாயுவும் சித்தமும் புருடதத்துவமும் பொருந்தி நிற்கும். துரியத்தில் உந்தியில் பிராணனும் புருடனும் மாத்திரம் தொழிற்படும். துரியாதீதத்திற்கிடமாகிய மூலாதாரத் தில் புருடதத்துவ மாத்திரம் நிலைபெறுமென்று ஐந்தவத் தையிலும் கருவிகள் நிற்கும் வகையினை அறிஞர் செப்பி னர். இங்கே கூறிய சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் ஐந்தினையும், தமிழ்நூலோர் நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்குதல் என்னும் ஐந்தாகக் கூறுவர். நனவிலேயே நினைப்பு மறப்பு முதலியன நிகழ்தலால் இங்ஙனம் கூறிய ஐந்து உணர்ச்சி வகைகளும் ஒவ்வொரு அவத்தையிலும் நிகழுமென்று பெரியோர் கூறுவர். நனவிலே அடிகள் கூறிய முப்பத் தைந்து கருவிகளோடு இருவகைப் பூதங்களும் தொழில் செய்ய எல்லாப் பொருள்களையும் நுகரும்நிலை நனவில் நன வெனப்படும். நனவிற் கனவு யாதெனில் எல்லாப் பொருள் களையும் அனுபவிக்கிற நிலையில் மனம் துன்புறுதற் கேது வாகிய ஒன்றைக் கேள்விப்பட்டு வெளிச் செய்திகள் புலனா காமல் துன்பத்திற்குக் காரணத்தை ஆய்ந்து கொண்டிருக்கு நிலையாகும். மனத்துன்பத்தை மாத்திரம் உணர்ந்து

கொண்டிருக்குநிலை நனவில் துயிலாகும். துக்கத்திலாழ்ந்து பெருமூச்செறியு நிலை நனவில் மிகு துயிலாகும். மூர்ச்சித்துக் கிடக்குநிலை நனவில் உயிர்ப்படங்கல் என்னும் அதீத நிலையாகும்.

சிவஞானம் பெற்ற உயிருக்கும் கூறப்படும் ஐந்தவத்தைகளின் இலக்கணம் வருமாறு:—காணும் பொருளனைத்தையும் சிவ வடிவமாகவும், நுகர்வன வெல்லாம் சிவானந்த மயமாகவும், உணரும்நிலை நின் மலசாக்கிரம் அல்லது மாசில் நனவு எனப்படும். இதற்கிடம் நெஞ்சு. கழுத்தில் சிவோகம்பாவனை செய்வது மாசில் கனவாகும். சிவத்தோடு இரண்டறக் கலந்ததாகத் தன்னைப் பாவித்தல் சிவோகம் பாவனையாகும். மூலாதாரத்திலே அறியப்படுங் கடவுளையும் அறிவையும் தன்னையும் உயிர் உணர்ந்து நிற்பது, மாசில் துயில் எனப்படும். புருவ நடுவில் சிவத்தை யறிதல் மாத்திரையா யிருப்பது மாசில் பெருந்துயில் ஆகும். பிரம ரந்திரத்திலே எல்லையற்ற சிவத்தை இரண்டறப் பெற்று நுகர்ந்திருப்பது நின்மல துரியாதீத மெனப்படும் மாசில் ஒடுக்கமாம்.

ஈண்டுக்கூறிய ஐந்து உணர்ச்சி வகைகளுடைய முப்பகுதி முறையே கலப்பிற் றனிநிலை, கலப்பிற் கலப்புநிலை, கலப்பிற் றாயநிலை எனப்படும். இவற்றின் விரிவுகளைச் சித்தாந்த நூலுட் காண்க.

உயிர்கள் மலம், மாயை, கன்மம் என்னும் மூன்று கட்டுகளினாற் பிணிப்புற் றிருக்கின்றன.

“ மலமாயை கன்மம் திரும்புமோ ” —பரிபூரணானந்தம் 5.

என்றது காண்க.

மும்மலங்களின் வேருக மறைப்புச் சத்தியாகிய திரோதான சத்தியையும் மாயையினுலாகிய உலகத்தையும் மேலிரண்டு பாசங்களாகக் கருதும் முறைக்கேற்ப அவற்றை வேறு வேறு கூறியுள்ளார்.

"உயிராகிய நம்மையும், நம்மைப்பற்றியுள்ள வினையையும், இறைவனையும், நமக்குத்தோன்ருதபடி மறைக்கின்ற இறைவனது மறைப்பாற்றலை விட்டு நீங்கும் நாள் எந்த நாளோ ?"

—எந்நாட்கண்ணி தத்துவமுறைமை 24.

"சன்னல் பின்னலான தத்துவக் கூட்டமாகிய குப்பையை ஞானத் தீயால் இறைவன் எரித்தொழிப்பது எந்நாளோ ?"

—எந்நாட்கண்ணி தத்துவமுறைமை 26.

என்றமையால் அடிகள் ஐவகைக் கட்டையும் உயிர் நீங்கப் பெற வேண்டுமென்பதை வற்புறுத்திய வாருயிற்று. எல்லாத் தத்துவங்கட்கும் வேருக நிற்கும் நமது உயிரினை நாமறியவேண்டு மென்பார்,

"தத்துவமாம் பாழ்த்த சடவுருவைத் தான் சுமந்த
சித்துருவாம் எம்மைத் தெரிசிப்ப தெந்நாளோ?"

—எந்நாட்கண்ணி தன்னுண்மை 3.

என்ருர்.

தத்துவங்கள்யாவும் சடமென்பதும் உயிர் அவற்றின் வேருகிய அறிவுப்பொருள் என்பதுந் தெளிக. இதனைப் பன்முறையுந் தெளிவுறுத்துவான், 'தன்னுண்மை' என்னும் பகுதியுள், தேக முதலியவற்றிற்கு வேருக உயிரைக் காண்பதெப்போது ? ஐம்பொறியை உயிரென்னும் சிறுமை

எப்போது ஒழியும்? அந்தக்கரணம் உயிரென்ற தப்பெண்ணம் ஒழிய நம்மைத் தனியே காண்பதெப்போது முக்குணத்தைச் சிவனென்னும் மூடக்கொள்கையை விட்டுத் திருவருளின் உதவிகொண்டு நம்மை யறிந்து கொள்வதெப்போது என்றிவ்வாறு இயம்பி மெய்யறிவை யூட்டினர்.

உயிரின் வேறான தத்துவங்களனைத்தையும், எந்நாட் கண்ணியுள் 'தத்துவ முறைமை' என்னும் பகுதியில் அடிகள் அழகாக வகுத்துரைத்தனர். ஐம்பூதத்தாலே அலக் கழிதல், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐம்புலன்களிலே திரியும் ஐம்பொறிகளாகிய ஆசைக் கள்வரால் உயிர் துன்புறுதல், சொல்லுதல், செல்லுதல் முதலிய ஐவினைப் பொறிகளால் உளதாகிய மாயா காரியங்களிலே வீண்காலம் போக்குதல், ஆகிய இத்துன்பங்களை உயிர் ஒழித்த விடத்தேதான் உயிருக்குத் திருவருள் சுரக்குமென்று அடிகள் உறுதி கூறுகின்றனர்.

---

# அதிகாரம் 4.

---

## மனவியல்பு

ஐம்பூதங்களின் நுட்பம் தன்மாத்திரைகளெனப்படும். அவைகளை யறியும் ஐயறிவிற்கும் ஐம்புலனென்ற பெயருண்டு. ஐயறிவாகிய ஐம்புலன்கள் வழியாக மனம் செல்லுங்காலே அது உலகப்பற்றி லீடுபடும். மனமே உயிர் உலகத்தை ஆராய்வதற்குக் கருவியாக வுள்ளது. எல்லாவிதமான நினைவிற்கும் மனம் இடமாக விருத்தலாலும் உலகிற் கண்டவற்றை மனம் தன்னிற் பதிவு செய்து மீண்டும் உயிர் அவற்றை நினைப்பதற்குக் காரணமாயிருத்தலாலும் மன

தினைப் பெரியதோர் மாயா தத்துவமாகக் கருதி அதன் இயல்புகளை அடிகள் விரிவாகப் பல செய்யுள்களில் விளம்பினர்.

—ஆசையெனும் 28.

வாசனையாகிய முன் தொடர்ச்சி வயத்தால் மனம் உலகைப் பற்றும். அந்த மனதால் சொல் உண்டாகும், சொல்லின்படி தொழில் உண்டாகும், தொழிலாகிய வினையால் பிறப்பிறப்பு உண்டாகும். ஆதலின் அம்மனதைப் பற்றுமல் அது தன்னின் வேருகிய மாயை என்னுஞ் சடப் பொருள் என்று உயிர் கழித்து விடுமாயின் கண்ட வெல்லாம் நிலையாத பொய்ப்பொருளென்பது நன்கு விளங்கும். மனதை ஒடுக்காது உலகத்திற் செல்ல விட்டால் மனம் குரங்குபோல எங்குந் தாவிச்சென்று அறிவுடைப் பொருளாகிய உயிருக்குப் பல்வகையாகிய இன்னல்களை விளைத்து அதனைச் சீர்குலைக்கு மாதலின்,

"மனமான வானரக்கைம் மாலையா காமல்
எனையா ளடிகளடி யெய்துநா ளெந்நாளோ"

—எந்நாட்கண்ணி தத்துவமுறைமை 5.

என்ருர்.

இச்செய்யுளில் மனமென்னுங் குரங்கின் கையி லகப் பட்ட மாலையாகத் தன்னை உவமித்தார்.

"கொள்ளித் தேள்கொட்டிக் குதிக்கின்ற பேய்க்குரங்காய்
கள்ளமனந் துள்ளுவதென் கண்டாய் பராபரமே"

—பராபரக்கண்ணி 172.

"காடுங் கரையும் மனக்குரங்கு கால்விட்டோட அதன்பிறகே
ஓடுந் தொழிலாற் பயனுளதோ" —காடுங்கரையும் 1.

என்றதுங் காண்க.

" குணமிலா மனமெனும் பேய்க்குரங்கின் பின்னே
மாருத கவலையுடன் சுழலஎன்னை வைத்தனையே "
—கல்லாலின் 4.

என்றதுமது.

மனமானது ஐம்புலன்களின் வழிச் செல்லாது உலகோடு கலந்துள்ள முதல்வன்பாற் சென்ருல் திருத்தமடையுமாதலின்,

" வேட்டைப் புலையர் மேவாத வண்ணமனக்
காட்டைத் திருத்திக் கரைகாண்ப தென்னாளோ"

என்ருர்.

மனமானது திருந்தி அதன் கண் திருவருளாகிய மரம் முளைத்து வளருமாயின் அம் மரத்தினடியில் கடவுள் குருவாயிருந்து அருள்புரிவாராகலின்,

" மனதேகல் லாலெனக் கன்ருே தெய்வ
மௌன குருவாகி வந்து கைகாட்டி
எனதாம் பணியற மாற்றி
இன்னருள் வெள்ளத் திருத்தி வைத்தாண்டி"
—ஆனந்தக்களிப்பு 12.

என்ருர்.

சடமாகிய உலகத்தைப் படைத்துக் காக்கும் முதல்வன் ஒருவன் உளனென்றும், உலகம் ஒடுங்கியபின் அறிவென்னும் பெரு வெளியில் அவ்விறைவனே நிற்பனென்றும், அது நம்மால் எத்தன்மைத் தென்று அறிய இயலாமையின் திருவருள் வழி நிற்கும் பேசாப் பெருநிலையே நன்றென்றும் உன்மனமே உனக்கு உணர்த்து மாயின் அது திருவருளின் வயப்பட்டு நின்று உணர்த்துதலால்

அங்ஙனம் உணர்த்தும் மனம் சடமென்று எண்ணி மயங்காதே. உண்மை உணர்த்தின இடமே குருவாகலின் அருள் சேர்ந்த மனமே குருவாம், அருளில்லாமல் ஒரு பொருளு மில்லை என்று அடிகள் நினைவொன்றின் ஒன்பதாம் பாட்டிற் கூறியது திருந்திய மனதை நோக்கி என்றுணர்க.

"ஆனாலு மனஞ் சடமென் றழுங்காதே யுண்மை
யறிவித்த விடங் குருவா மருளில தொன்றிலையே"

என்றது காண்க.

திருந்தா மனதின் தன்மையை அடிகள் பல விடங்களிலும் பகர்கின்றார்.

எங்கு நிறைகின்ற பொருள் 4-ம் பாட்டின் கருத்து வருமாறு:—சொன்னபடி இணங்கி வராத பிள்ளையைத் தாயானவள் தொட்டிலில் வைத்து ஆட்டி யாட்டித் தொடையைக் கிள்ளுதல் போல மனமானது ஏதாவது ஒரு பொருளிலே நினைப்பை யுண்டாக்கும். அந்நினைப்பினை மறைக்கும் அறியாமை நிலங்களாகிய ஏழு இடங்களிலும் தலைசுற்றி யாடும். கணவனுக் கடங்காத பெண்போல தானே வெளிச்சென்று அலையும், கல்லினும் இரும்பினும் மிகுதிப் பட்ட வன்மையைக் காட்டும், காணாமற் கேட்டவற்றை எல்லாம் தான் கண்டனவாகக் காட்டி உயிரினின்று அறிவினை அணுவாகச் சுருக்கிவிடும். எல்லா வகையான வஞ்சனைக் கூத்தின் வித்தைகளனைத்தும் மனமென்னும் மாயா தத்துவம் செய்யவல்லது. அது இயற்கை நல்லறிவில்லாத என் வயப்பட்டு அடங்குமோ என்றார்.

ஆணவமலத் தொடர்புடைய உயிர் மாயையாகிய உலகத்தில் நன்கு அழுந்தாதபொழுது, உடம்பாகிய

8

தொட்டிலில் அங்குமிங்கும் ஊசலாட உலகப்பொருள் களிலே உயிரின் அறிவு அழுந்த நேருமாதலின், அதனைத் தொடையினைக் கிள்ளுவதற்கு உவமித்தார். மனம் ஒரு பொருளைப் பற்றுவதனாலேதான், உயிர் அதனில் அழுந்து வதாகிய துன்பத்தை யடைகிறது. மனம் ஒரு பொருளை விட்டு மற்றொரு பொருளைப் பற்றுங்கால் முன்பற்றிய பொருளை மறத்தலால் 'தொடுத்தழிக்கும்' என்றார். பற்றிய பொருளின் தாக்கினாலேயே பலவகையான வேட்கை களில் ஈடுபட்டுத் திரிந்து தலைசுற்றி ஆடும் என்றார்.

ஏழு பூமியென்றது ஏழு வகையான மோகவிகாரங் களை. அறநெறியில் மனம் அடங்கி நில்லாது தான் விரும் பிய வண்ணம் வரம்பு கடந்து செல்லுதலால் அதனைக் கணவனுக் கடங்காத மனைவிக்கு உவமித்தார்.

விருப்பாவது வெறுப்பாவது மிகுந்த விடத்து அதனைப் பெறவோ அல்லது அழிக்கவோ முயல்கின்ற மனம் தந் நோக்கத்தை நிறைவேற்றுவதில் உறுதி கொண்டவிடத்து இரக்க மின்றிச் செல்லுந் தன்மையதாதலின் கல்லினும் இரும்பினும், அது மிக வலியதென்றார். தான் அனுபவத் தில் உணராத ஒன்றைப் பிறர் நுகர்ந்ததாகக் கேட்ட மாத் திரத்திலேயே அதன் தன்மையெல்லாம் தானறிந்ததுபோல நினைத்து அதனையடைய முயலுதலால், "கேட்டதைக் கண்டதாகக் காட்டி" என்றார்.

சடமாகிய உலகப் பொருள் யாதாவதொன்றிலே உயிரின் அறிவு அழுந்திய விடத்து அது விரிவடையாது அப்பொருளின் கண் ஒடுங்கிப் போதலின், "அணுவாய்ச் சுருக்கிடும்" என்றார்.

எத்தனையோ வகையான உலகப் பற்றுகளிலே உயிரினைத் தந்திரமாக மனம் அழுத்துதலால் அதனை வெல்லுதலரிதென்றார். மனதின் பொய்ப்பாவனைகளைச் சில எடுத்துக் காட்டுகளால் அடிகள் இனிது விளக்குமுறை வருமாறு:—"கண்ணிணைமூடி விழித்தற்குரிய கணப்பொழுதை உலகம் தோன்றி ஒடுங்கும் வரையுள்ள கற்ப நேடூழி காலமாகத் தோற்றுவிக்கும்; நிலை யில்லாத இவ்வுலகத்தை எவ்வளவோ சிறந்த உலகமாக எண்ணும்படி செய்விக்கும்; மகளிர்பாற் பெறக்கூடிய சிறிய அளவுடைய இன்பத்தைப் பெரிய மேருவின் அளவினதாகக் காட்டிக் குடும்பச் சுமையை எடுங்களென்று நம்மைத் தூண்டித் தன்னையே சும்மாடாக வைத்து நம்மைச் சுமையாளாகவுஞ் செய்து நாள்தோறுங் கெடுமதியை அளித்து நல்லறிவனைத்தையுங் கொள்ளையிட்டுச் சூழ்ச்சிகள் மிக்க ஒரு வாழ்க்கை நாடகத்தை நடிக்கும். இம்மனதின் வியத்தகும் இயல்பினை என்னென்று சொல்வாம் இதனை வெல்லுதல் எளிதாகுமோ? கடவுளே நின் திருவருளைப் பெற்ற பேர்க்கெல்லாம் ஒளியோடு விளங்குகின்ற இந்த மனம் அருள் தன்மையுடையதோ, அல்லது மருள்தன்மை யுடையதோ? இந்த நுட்பத்தை நீ எனக்குச் சொல்லவேண்டு" மென்றார். மனத்தினை வெல்லுதல் அருமை என்பதைத் தேசோமயானந்தம் எட்டாவது செய்யுளில் ஒப்புமை நயம் விளங்க அடிகள் உரைத்தார். கட்டுத் தறிகளை முறிக்கும் மதயானைகளை வசப்படுத்தி நடத்தலாம்; கரடியையும் கொடிய புலியின் வாயையும் கட்டலாம்; ஒப்பற்ற சிங்கத்தின் முதுகில் ஏறியிருக்கலாம்; நச்சுப் பாம்புகளை எடுத்து ஆட்டுதல் கூடும்; வெய்ய நெருப்பிலே ஐந்து லோகங்களையும் இரதகுளிகை

யிட்டுப் பொன்னாக்கிப் பொன்னை விற்றுப்பொருள் பெற்று நுகரலாம்; மற்றொருவர் காணாதபடி இவ்வுலகத்திலே உலவலாம்; தேவர்களை ஏவல் கேட்கச் செய்யலாம்; வாழ்நாள் முழுதும் இளமையுடனிருக்கலாம்; பிறிதொரு உடம்பினும் புகுதல் கூடும்; நீர் மேல் நடக்கலாம்; நெருப்பின் மேலிருக்கலாம்; ஒப்பற்ற எண்சித்திகளையும் பெறலாம். உள்ளத்தை யடக்கிச் சும்மாயிருக்கின்ற நிலை இவை யாவற்றினும் அரிதாகுமென்றார்.

இங்கே கூறிய சித்திகளெல்லாம் மனம் ஈடுபட்டமூந்திய உலகத்தின் கண்ணுள்ள பொருள்களாதலின், அவை மணி மந்திரம் மருந்து முதலியவற்றைச் செம்மைப்படுத்தி வைத்துக் கொள்வதாற் கைவருவன. உலகப் பற்றினை ஒழியாமலே இவற்றை முடிப்பதைப் பார்க்கினும், உலகப் பற்றை ஒழித்தல் அரியதாதலின் அவ்வாறு கூறினார். எத்தகைய சித்தியைப் பெற்றாலும், சினமடங்கப் பெற்றாலும், மனதையடக்கப் பெறாதவர்க்கு வாய்ப்பேச்சினால் என்ன பயன் என்ற கருத்தினைப் பராபரக்கண்ணி நூற்றறுபத்தொன்பதாம் பாட்டினில்,

"சினமிறக்கக் கற்றாலுஞ் சித்தியெல்லாம் பெற்றாலும்
மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே"

என்று விளக்கியுள்ளார்.

மனமானது நெடுநாட் பழகிய பழக்கத்தால், நாம் அது போனபோக்கில் செல்லாது நல்லதொன்றை நாடும்போது நம்மை மல்வீரரைப்போல வந்தெதிர்க்கு மென்பார்,

"வாதுக்கு வந்தெதிர்த்த மல்லரைப்போற் பாழ்த்தமன
மேதுக்குக் கூத்தாடு தெந்தாய் பராபரமே"

—பராபரக்கண்ணி 170.

"எதுக்குச் சும்மா விருமனமே யென்றுனக்குப்
போதித்த உண்மை எங்கே போகவிட்டாய்—வாதுக்கு
வந்தெதிர்த்த மல்லரைப்போல் வாதாடி னையேயுன்
புத்தியென்ன போதமென்ன போ"

—உடல்பொய்யுறவு 5.

என்றார்.

மனமானது அடக்கம் உற்றாற்போலத் தோன்றினும் பழய தீச்செயலின் கண்ணே மீண்டு மீண்டுஞ் செல்லும்; அங்ஙனஞ் செல்லின் அதனாற் பயனில்லை.

"சூதாடு வார்போற் றுவண்டு துவண்டு மனம்
வாதாடி லென்னபலன் வாய்க்கும் பராபரமே"

—பராபரக்கண்ணி 171.

மனத்தினை அடிகள் வண்ணானுக்கு ஒப்பிடுகின்றார். கற்றநற் கல்விக்கிசைய ஞான ஒழுக்கத்திலே செல்ல இடங் கொடாது, படித்த படிப்புக்கள் சிதறிப் பயனில்லாமற் போகும்படி, உடைகள் அடியுண்டு நூல் பிரிந்து போமாறு அவற்றை அடித்து ஒலிக்கும் வண்ணானைப்போல என்னை அங்குமிங்கும் இழுத்திழுத்து அடித்தாய் என்பார்.

"இழுக்கடித்தாய் நெஞ்சே நீ யென்கலைகள் சோர
அழுக்கடிக்கும் வண்ணார் போலாய்"

—உடல்பொய்யுறவு 65.

என்றார்.

மனமானது ஆசையெனும் பெருங்காற்றில் அகப்பட்டுக் கொண்டால்,

"காற்றிலகப்பட்ட இலவம் பஞ்சுபோலப் பறந்து திரிந்து
மோசம் வருவிக்கும்"

என்றார். —ஆசையெனும் 1.

"பஞ்சாய்ப் பறக்கு நெஞ்சப் பாவியைக் கூவி ஐயா
அஞ்சாதேஎன் றின்னருள் செயவுங் காண்பேனோ"
—காண்பேனோ என்கண்ணி 21.

என்றதுங் காண்க.

மனதினை வானத்திற் பறக்கும் காற்றாடிக்கு உவமை கூறிய பாட்டுகளும் உள்ளன.

"ஆடுகெறங்காகி அலமந் துழன்று மனம்
வாடுமெனை ஐயாநீ வாவெனவுங் காண்பேனோ"
ஷை 22.

காற்றாடிக்கு வாலற்றுப் போனால் கீழே விழுந்து சும்மா கிடப்பதுபோல மனம் வலியற்று அடங்குபடி இறைவன் அருள்புரிய வேண்டுமென்பார்,

"வாலற்ற பட்டமென மாயா மனப்படலங்
காலற்று வீழவும் முக்கண்ணுடையாய் காண்பேனோ"
ஷை 7.

என்றார்.

மனம் எண்ணும் எண்ணங்கட்கு ஓர் அளவில்லையாதலின்,

"எண்ணாத எண்ணமெலாம் எண்ணியெண்ணி யேழைநெஞ்சம்
புண்ணாகச் செய்ததெலாம் போதும் பராபரமே"
—பராபரக்கண்ணி 35.

மனமாகிய கல் கரைவதற்கு, கங்கையைத் தலையில் வைத்த பெருமானைக் கூவி நாவினாற் கரைய வேண்டுமென்பார்,

"திரையுந் திறையு நதிச் சென்னியனை நாவாற்
கரையும் கரையு மனக்கல்"

என்றார்.

இனி அடிகள் தமது மனத்தின் இயல்பினைப்பற்றி இழித்துக் கூறின பகுதிகளை ஆராய்வோம் :

"கல்லேனு மைய ஒருகாலத்தி லுருகும்என்
கல்நெஞ்ச முருக விலையே"
—சுகவாரி 3.

என்றவிடத்துத் தமது நெஞ்சினைக் கல்லினும் வலியதென்றார். சூரிய காந்தக்கல், சந்திரகாந்தக்கல் என்பவைகள் முறையே, ஞாயிறு, திங்களின் கதிர்கள் பட்டவுடனே உருகுமென்பார் ஒரு சிலர். திங்களும் ஞாயிறும் கூடுகிற அமாவாசை யன்று கருங்கல் உருகுமென்பர் வேறு சிலர். ஆதலால் ஒருகாலும் உருகாத நெஞ்சை கல்லினும் வலியதென்றார்.

தனது ஆசிரியன் கூறிய ஒரு மொழியின் பொருளை யுன்னி உருகாமைக்காகத் தனது நெஞ்சினைக் கடிவார்,

" வன்னெஞ்சோ இரங்காத மரநெஞ்சோ
இருப்பு நெஞ்சோ வயிரமான
கல்நெஞ்சோ அலது மண்ணாங்கட்டி
நெஞ்சோ எனதுநெஞ்சம் கருதிற்றானே"
—ஆசையெனும் 4.

என்றார்.

இதன்கண் 'மரநெஞ்சோ' என்றது எதனாலெனின், மரம் ஒரு நாளும் உருகாதாதலின். அதுபோல ஒருகாலும் மனம் உருகாதிருந்து விடுமோ என்ற ஐயத்தைக் குறிப்பதற்கு, 'இருப்பு நெஞ்சோ' வென்றது, செயற்கை முயற்சியால் உருக்கப்படும் இரும்புபோல மிகவும் கடுமையான தவத்தால் மனம் உருகுதல் கூடும் என்ற கருத்தை விளக்குதற்கு, கல்லானது காலத்தினியைபுபற்றி ஒரு பொழுதில்

உருகுதலால் பக்குவகாலம் ஏற்படும்போது மனம் தானே உருகுதல் கூடுமோ என்பார், ' கல் நெஞ்சமோ ' என்றார்.

கல்லினும் வலி குறைந்த மண்ணாங் கட்டியானது உறுதியாகத் தாக்கியவுடனே உதிர்ந்து போவது போலத் திருவருட் பதிவின் உறைப்பால் மனம் வலியற்றொழியு மாதலின் 'மண்ணாங்கட்டி நெஞ்சமோ'வென இறுதியிற் கூறினார்.

இறப்பும் பிறப்பும், மறப்பு நினைப்பாகிய மனத்தின் செய்கையால் மிகுவதென்பார்,

"இறப்பும் பிறப்பும் பொருந்த—எனக்
கெவ்வண்ணம் வந்ததென் றெண்ணியான் பார்க்கின்
மறப்பு நினைப்பு மாய்நின்ற—வஞ்ச
மாயா மனத்தால் வளர்ந்தது" —ஆனந்தக்களிப்பு 1.

என்றார்.

இறைவனை நோக்கி எனது மனத்தைக் குவியச் செய்தல் எல்லாம்வல்ல உனக்கு அரியதோ வென்பார், 'ஆழ்ந்த கடலானது, செயற்கையாகக் கட்டிய கரையில்லாமல் ஒரு வரம்பில் நிற்கவில்லையா? கொடிய நஞ்சு அமுதமாக வில்லையா? கடலின் நடுவே வடவையனல் நிலை பெற வில்லையா? வானிலே பல கோடி உலகங்கள் கீழே விழாமல் தத்தம் நிலையில் நிலவ வில்லையா? மேரு மலையானது வில்லாக வளைய வில்லையா? ஏழு வகையான வியக்கத்தக்க முகில்களும் விண்ணவர் தலைவன் கட்டளைப்படி செல்கின்றனவல்லவா? இராமன் பாதம் பட்டபோது கல்லாயிருந்த அகலிகை பெண்ணாகவில்லையா? மணி மந்திரம், மருந்து முதலியவைகளால் விரும்பிய சித்திகளைப் பெறுவதற்கு

வழி வகுக்க வில்லையா ? எத்தகைய அருஞ் செயல்களையும் நிகழ்த்தவல்ல உனக்குப் பாழான என் மனமானது உலகின் கண் விரிந்து செல்லாது அகமுகமாய் ஒடுங்கும்படி ஒரு சூழ்ச்சி செய்வது முடியாத தொன்று ?' என்றார்.

—பரிபூரணானந்தம் 9.

இச்செய்யுளின் விளக்கக் குறிப்பாவது:—வடவனலென்பது பெட்டைக் குதிரை முகவடிவமாய் இருப்பதென்று புராணங் கூறும். இதனை ஊழித்தீ என்றுங் கூறுப. அது கடலின் நீர் மிகாமற் செய்வதென்றும், ஊழிக் காலத்தில் வெளிப்பட்டு உலக ஒடுக்கத்திற்குக் காரணமாவதென்றும் நூலோர் கூறுவர். அதனை மின் சத்திபோன்ற ஒரு வெம்மைச் சத்தியென்று கருதுவாருமுளர். வானிலே உலகங்கள் நிலைத்திருப்பதற்குக் காரணம் ஒன்றையொன்று தன்பால் ஈர்க்கும் கவர்ச்சியை அமைத்து அவற்றிற் கெல்லாம் ஆதரவாயிருக்குஞ் சிவசத்தியே இதனை ஆதார சத்தி என்ப. மேரு என்பது நிலவுலகிற்கு நடுவில் இருப்பதாய் அதற்கு அச்சாணிபோல் விளங்கும் பொன்மலை என்ப. நிலத் தத்துவத்திற்கு இயற்கை நிறம் பொன் என்பதாலே மேரு வென்பது மிகவும் நுட்பமாகிய முதல் தத்துவத்தினுலாயதாய் மக்கள் கண்ணுக்குப் புலப்படாமல் இருப்பதென்று கருத வேண்டும்.

மேருவின் கண்ணே விண்ணவர்க்கு இருப்பிடங் கூறப்படுதலால் அது நுட்பமாயிருக்குந் தன்மையதென்பது இனிது விளங்கும். மேருவை வில்லாக வளைத்ததென்பது இயற்கை மாற்றங்களைக் குறிப்பதேயன்றிச் செயற்கையாக நேரில் நிகழ்ந்ததில்லை என்பாருமுளர். இந்திரன் ஆணையிற்

செல்லும் அதிசயமான ஏழு மேகங்கள், நீர், பூ, பொன், மணி, மண், கல், தீ என்பவைகளை முறையே பொழிவன. இராமாயணத்திலும் அகலிகை கதை யாருமறிந்ததே. மணி மந்திர முதலியவற்றாற் சித்தியடைதல் சித்தர்கணம் என்பதனுள்ளும் பிற இடங்களிலும் நன்கு கூறப்பட்டது. மனம் உலகிற் செல்வதால் பயன் யாதுமில்லை யாதலின் 'பாழான என் மனம்' என்றார். குவிதல் ஒடுக்கத்தைக் குறிக்கும்.

மனத்தினை ஒருவாறு வென்றும், அவ்வெற்றியை நிலைபெற வொட்டாதபடி அது போராடுந் திறத்தை அடிகள் சுகவாரி 12-ல் அழகாகச் செப்பினர். மனமானது உயிரைப் பார்த்து யாது சொல்கின்றதென்றால், எக்காலத்திலும் உயிராகிய உன்னைப்போல நானும் என் நண்பனாகிய பிராணனும் உன்னோடு ஒருங்கிருக்கவில்லையா? அப்படி யிருக்க எங்களை அறிவில்லாத சடமென்றும், உன்னை அறிவுடைய சித்தென்றும், அந்தநாளில் எவனோ பிரித்து வைத்தான். அங்ஙனம் பிரித்து வைத்தது முதல் இன்றுவரைக்கும், அநியாயமாய் எங்களை ஒடுக்கி இடையிலே வீழ்ந்து நெருக்கி அரசாட்சி செய்து எங்களுக்கெதிரில் என்ன கோட்டையை நீ பிடித்துக் கொண்டாய்? என்பதே.

இவ்வாறு பிதற்றி மூட மனமானது என்னை மிகுதியும் வைய, அதனால் மூண்டெரியும் தீயிடைப்பட்ட மெழுகு போல யான் கருகுதல் நீதி முறையாகுமோ? பதினாயிர முறை சொன்னாலும் நின்னுடைய திருவருள் இரங்குவதில்லையே? இனி எப்படி இன்பம் உண்டாகும்? நீயே சொல்! என்றார். இதனுள் மன அடக்கம் ஏற்பட்டாலும்

திருவருள் பதியப்பெருவிடில் நிலைத்த இன்பம் இல்லை என்பது குறிப்பாலுணர்த்தப்பட்டது.

"ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு"

என்ற திருக்குறட் கருத்துமது. 'ஏசற்ற அந்நிலை' என்னும் பதிகத்துள் ஒவ்வொரு பாட்டிலும் நெஞ்சறி வுறுத்த லென்பது காணப்படுகின்றது.

"நெஞ்சமே ஊசற்கயிறு போல உலகநெறியின் கண்ணே சென்று சென்று பற்றெனுங் கட்டினுள் அகப் படாதிருப்பாயாயின் குற்றமற்ற நிலை அமையும். அப்போது குற்றமற்ற சிவானந்தப் பெருக்கு முழுதையும் எந்தை தந்தருளுவன்"

—ஏசற்ற அந்நிலை 1.

வீணாக உலகப் பரப்பு அனைத்தையும் உட்கொண்டா லும் என்பயன்? ஆனந்தக்கடலில் மூழ்க நீ படிக்கமாட் டாயா? திருவருளாகிய திருவடியின் கண் தாழ்ந்து வணங் காயா? அங்ஙனம் வணங்குவாயாயின் நீயும் என்போல அழியாதிருப்பாய்.

—ஏசற்ற அந்நிலை 2.

உலகமெல்லாம் உய்வதற்கு அன்புநிலை வேண்டுமென் பார்கள். அதுவும் உன்னையன்றி உண்டோ?

—ஏசற்ற அந்நிலை 8.

"உன்னுடைய அறிவை ஆராய்ந்தால் நீ திருவருளுக் கொப்பாவாய்: நீ அன்பு செய்ய உதவாயாயின் நீ இறந்து தென்புலத்தாரோடிருந்து நான் செய்கின்ற பூசையை ஒப்புக்கொள்" என்றார். மனம் அன்பு செலுத்தின், அது

உயிரைக் கடவுள்பாற்சேர்ப்பித்தலால் அது திருவருளுக்கு ஒப்பாகு மென்றார்.

"மனமே யுன் புரைகள் தீர்ந்தா யென்னிலோ [இல்லை,
யான் பிழைப்பேன் எனக்கினியாருன்போல் வாரில்லை
உன்னிலோ திருவருளுக் கொப்பாவாய்"

—மண்டலம் 8.

என்றது காண்க.

திருந்தாத தன்மனதைக் கடியு முறை வருமாறு:—"நெஞ்சமே உன்னுடைய கெடு வழிகளை எல்லாங் கட்டி ஒருபுறம் வைத்து விட்டு உண்மையை ஆராய்ச்சி செய், அடிக்கடி உலக மெங்கும் சுழல்கின்றாய், உனக்கு அறிவுரை கூறினும் நீ ஓர்வதில்லை. அங்ஙனமாயின் நீ கெட்டுப் போவாய் பார்! திருவருளாகிய ஆயுதத்தைக் கொண்டு உன்னை வெல்லுவேன்" என்றார்.

—பாயப்புலி 50.

தான் முதல்வனோடு ஒருமைப்பட்ட காலத்தே மனதை வென்றதைக் கூறுவார், "அருளேகோயிலாய்ப் பேரின்ப மயமாயிருந்த பரம்பொருளோடு யான் உடனிருந்தகாலை ஓடிப்போய் ஒளித்த நெஞ்சே நீ முயற்கொம்போ? ஆகாயப் பூவோ? கானலோ? நீ விளங்க இருந்தவிடம் எந்த விடம்? எந்தவிடம்? எனக்குத் தெரியவில்லையே" என்றார்.

—ஏசற்ற அந்நிலை 9, 10.

முயற் கொம்பு முதலிய மூன்று பொருளும் இல்லாத பொருளுக் குவமையாகக் கூறப்படுவன. அடிகள் வென்ற மனதை வினைத்தேவதைகட்குப் பலிகொடுத்து விட்டதாகக் கருணாகரக் கடவுள் எட்டாம் பாட்டிற் கூறியது காண்க.

"துள்ளு மறியா மன துபலி கொடுத்தேன் கர்ம
துட்ட தேவதைக ளில்லை
துரிய நிறை சாந்ததே வதையா முனக்கே
தொழும்ப னன்ப பி ஷேகநீ
ருள்ளுறையி லென்னுவி நைவேத்தியம் பிராண
னோங்கு மதிதூப தீப
மொருகால மன்றிது சதா கால பூசையா
வொப்பு வித்தேன்" —கருணாகரக்கடவுள் 8.

இதனுள் மனதினைத் துள்ளுகின்ற ஆட்டிற்கு உவமித்தார். மனமானது சில வேளைகளில் சும்மாவிருப்பதுபோலத் தோன்றி உலகப் பொருள்களில் இடை யிடையே சென்று பற்றுகின்றது. பற்றியவுடன் பற்றுக் காரணமாகச் செயல்களேற்படுகின்றன. அவற்றால் பிறப்பிறப்புத் துன்பங்கள் விளைகின்றன. அவைகளே கர்மதுஷ்ட தேவதைகளாகையால் மனதை அவற்றிற்குப் பலியாக்கினார். சிறு தெய்வங்கட்குப் பலியிடும் உலக வழக்கை வைத்து இவ்வாறு கூறினார். சிறு தெய்வங்கட்கும் பலியிடுதல் கூடாதென்பதே பெரியோர் கருத்து. அக்கருத்துப் பற்றியே 'தூய்மையும் பொறையுமுடைய உனக்கே அடியேன்' என்றார்.

அன்பென்பது மன உருக்கத்தால் உண்டாவதாதலின் அதனை நீருக்கு உவமித்தார். நீர் பயன்படுவது திருமுழுக்கிற்கே யாதலால் 'அன்பு அபிஷேக நீர்' என்றார். கண்ணப்ப நாயனார் காளத்தியப்பர்மீது பொழிந்த வாய் நீரை விளைந்த அன்பிற்குச் சேக்கிழார் நாயனார் உவமித்தமை காண்க.

இறைவனோடு இரண்டறக் கலப்பது உயிராதலின் அதனை நைவேத்திய மென்றார்.

நறும்புகையானது காற்றினாலேயே நன்மணம் வீசுவ தாதலின் உடம்பிற் காதாரமாகிய பிராணனைத் தூபமாக்கினார், அறிவு, பொருளை விளக்குதலின் அதனைத் தீபமென்றார். இங்குக் குறித்த அகப்பூசையினை ஒரு காலஞ் செய்து ஒரு காலஞ் செய்யாதிருந்தால் மனம் ஒடுக்கம் அடையாதாதலின்,

"சதாகால பூசையா யொப்பு வித்தேன்"

என்றார்.

இனிப் புத்தியினியல்பைப்பற்றி அடிகள் கூறுவதை யாய்வாம். "படத்திலே புள்ளிகள் வாய்ந்த பாம்பாகிய புத்திதத்துவத்தின் வாயிலே தேரையைப்போல-அகப்பட்டு வருந்தாது சிவபெருமானுடைய திருவருள் விளங்குநாள் எந்த நாளோ" என்றார்.

—தத்துவ முறை 8.

புத்தி என்பது ஒரு பொருள் இத்தன்மைத்து என்று துணிதற் கேதுவாகிய தத்துவம். துணியப்பட்ட பொருளின் வடிவமாய்ப் புத்தி நிற்குங்காலை அது பாவகம் எனப்படும். பலவகைப்பட்ட பாவகத்திற்குப் புத்தி காரணமாதலாலும் அப்பாவகங்களின் வழியே நின்று உயிர் கடவுளை யறியாது உலக பாசங்களிற் சுழன்று வருந்துதலாலும் புத்தி தத்துவத்தைப் பல புள்ளிகளுடைய பாம்பிற்கு உவமித்தார். புத்தியால் அறிவுண்டாக, அறிவினால் நிலையாதவற்றில் வெறுப்புண்டாகி, அறநெறிச் சென்று செல்வம்பெற்ற காலைச் செல்வத்தினாற் செருக்குண்டாகிச் செருக்கினாற் பாவச்செயல் ஏற்பட்டு, பாவச் செயலினால் அறியாமை மிகுந்து, அறியாமையால் ஆசை மிகுதிப்பட்டு, அதனால் வறுமையுந் துன்பமுமேற்படவே, மீட்டும் அறத்

திலும் நல்லறிவிலும் கருத்துச் செல்லும். இங்ஙனமாகப் புத்திதத்துவமாகிய சக்கரத்தில் மீண்டு மீண்டுஞ் சுழன்று சுழன்று கடவுளைநோக்கி மேற்செல்லாது உயிர் வருந்தும். பாம்பின் வாய்ப்பட்ட தேரை தப்பிப் பிழையாமை போல, புத்தியின் சுழலிலே அகப்பட்ட உயிர் உய்தல் அரிதென்பது சுட்டப்பட்டது.

"அளவிலாப் பாவகத்தால் அழுக்குண்டு இங்கு அறிவின்றி
விளைவொன்று மறியாதே வெறுவியனாய்க் கிடப்பேனுக்கு"

என்ற திருவாசகமுங் காண்க.

புத்தியில் நின்று அகங்காரமென்னும் தத்துவம் உண்டாகும். அது யான் இது செய்வேனென்ற உணர்ச்சியை எழுப்புவது. அது யான் எனதென்னும் செருக்கினை விளைப்பதால் அதனை மதயானையாகவும் உயிர் அதன்வாயிற் கரும்பாகவுங் கருதி,

"ஆங்காரமென்னு மதயானை வாயிற் கரும்பா
யேங்காம லெந்தை யருளெய்துநா ளெந்நாளோ"

என்றார்.

மௌனகுரு 9-ம் பாட்டில் ஆங்காரத்தினியல்பைத் தெளிவாக அடிகள் விளக்கி யிருக்கின்றார். "பரம்பரை வேடரைப் போன்ற ஆங்காரமாகிய கொடிய பேயானது பாழாகிய ஆணவப் பேயினும் வலிமைமிக்கது. அது நல்லறிவினை மயக்கிவிடும். முறையறிய வொட்டாது. எப்பொருளை எதுபற்றினாலும் அதன் மயமாய்த் தான் நின்று பொறுமையில்லாமல் தனக்குத் தோன்றியதைப் பிதற்றும். இறைவனருள் மிக்க அயன், அரி, அரனென்னும் மூவருக்கீடாகத் தன்னை மதிக்கும். தடையில்லாமற் செல்கின்ற

தேருக்கு அச்சாணி போல அசைவில்லாதிருக்கும். எனக் கொப்பார் யாவரென்று பெருமிதம்பேசி இராவண வடிவங் கொண்டு உள்ள விளாசமெங்கும் உலாவித் தனி அரசாட்சி செய்யும். இதனின் நின்று விலகினில்லாமல் இதனோடு எப்போதும் நின்று போராட முடியுமோ,'' என்றார்.

இதன் நுட்பம்:—ஆங்கார தத்துவமானது புத்தி தத்துவத்தினின்று இராசதகுண மிகுதியால் உண்டாவதாகலானும், பொருள் வழிச்சென்று தனக்கென்று அதனைப் பற்றுவதாலும், வேட்டையாடிப் பழக்கம் மிகுந்த விரைவு மிக்க குலவேடனுக்கும், விரைவிற் பெரிய வெம்பேய்க்கும் அதனை ஒப்பிட்டார். உயிரின் அறிவை மயக்கும் ஆணவ மலமானது யாதொரு செயலையுஞ் செய்வியாது ஆன்மாவையுங் காட்டாதிருத்தலின், பாழ்த்த ஆணவமென்றார். ஆங்காரமானது செயலுக்குக் காரணமாய் யானென்ற உணர்ச்சியை எழுப்புதலால் ஆணவத்திலும் வலிது காணென்றார். தன்பற்று மிகுதிப்பட்ட காலை, பொருள்களின் உண்மை இயல்பு விளங்காதாகலானும் நடுவு நிலைமையாக விருத்தல் இயலாதாகலானும் 'அறிவினை மயக்கிடும், நடுவறிய வொட்டாது' என்றார். அவாவிய எப்பொருளையும் பிறர் கொள்ள இடங்கொடாது, தானே கவரக்கருதி அதற்குத் தக்க வழக்குத் தொடுக்கும். இங்ஙனம் பொறாமை விளைதற்கு இடமாயிருத்தலின், 'தாங்காது மொழிபேசு' மென்றார். அவாவுடைமை யானும் மும்மூர்த்திகளுக்கும் தன்னுணர்ச்சி ஓரளவில் உண்டென்று கேட்கப்படுதலானும் 'அரிகரப் பிரமாதி தம்மொடு சமானமென்னும்' என்றார். உடம்பாகிய தேரில் நின்ற உயிரானது எங்குஞ் சென்று எல்லாம் பற்றுவதற்குத் தன் தற்போதமே அடிப்படையாயிருத்தலின்,

'அஞ்சுருவாணி' என்றார். பிற பொருள்களிற் பற்று வைத்தற் பொருட்டே மனம் வெளிச்செல்ல வேண்டுமே யொழிய, தன்கட் பற்றுவைத்தற்கு அங்ஙனஞ் செல்ல வேண்டியதில்லை. ஆதலின், 'தன்னிலசையாது நிற்கு' மென்றார்.

இராவணன் இறைவனிருந்த திருமலையையும் எடுக்கத் துணிந்த பேரகந்தை உடையானாதலின், 'இராவணாகார' மென்றார்.

பற்றுதற்கிடம் இதயமாதலின் 'இதயவெளி எங்கணும் தன்னரசு நாடு செய்திருக்கு' மென்றார். ஆங்கார தத்துவத்திற்கு வேறாகவுள்ளது உயிரென்றறிந்து அதனின் விலகுதலே முறையென்பார்,

"வாங்கா நிலாதடிமை போராட முடியுமோ"

என்றார்.

நான் என்னும் அகந்தையால் எல்லாம் விளைவதென் பதை,

"நானென்னு மோரகந்தை யெவர்க்கும் வந்து நலிந்தவுடன்
சகமாயை நானாவாகித்
தான்வந்து தொடருமித்தால் வளருந் துன்ப சாகரத்தின்
பெருமை யெவர் சாற்றவல்லார்"

என்றவிடத்து இனிது விளக்கினார்.

சித்தமென்பது ஒரு தத்துவமாகக் கூறப்பட்டாலும் ஒரு பொருளில் ஊன்றி இது யாது என்று சிந்திப்பதற்குக் கருவியாயிருக்கும் மனப்பான்மையே அஃதென்று நூலோர் முடிவு கட்டியிருக்கின்றார். மனதால் ஆராய்தற்குரிய எப் பொருளிலும் சித்தம் செல்லுதலால் அதன் வியாபகத்தைக்

கடலுக்கும், அதன் செயலைக் கடலின் அலைக்கும் ஒப்பிட்டார். சித்தத்தின் வழிச்செல்லும் உயிர் கடற்றிரையால் தாக்குதலுறும் துரும்பிற்கு ஒப்பிடப்பட்டது.

" சித்தமெனும் பௌவத் திரைக்கடலில் வாழ்துரும்பாய்
சித்த மலையாதருளி நிற்கு நாளெந்நாளோ"

—எந்நாட்கண்ணி தத்துவமுறை 10.

பராபரக்கண்ணி முப்பத்தாறுவது பாட்டினும், இக் கருத்தே வருதல் காண்க.

" ஆழித் துரும்பெனவே யங்கு மிங்கு முன்னடியை
பாழிற் றிரிவ தென்ன பாவம் பராபரமே."

ஆங்காரத்தோடு இசைத்து ஆணவ மலத்தைக் கூறுதல் சில இடங்களில் காணப்படும். ஆணவத்தையும் ஆங்காரத்தைப்போலப் பேயெனவே அடிகள் கூறினர்.

" கெட்ட வழி ஆணவப்பேய் கீழாக மேலான
சிட்டர் உனைப் பூசை செய்வார் பராபரமே."

—பராபரக்கண்ணி 152.

பற்றினதையே பற்றும் செயலுக்கு ஆணவம் காரணமென்பார்,

" சொன்னதைச் சொல்லித் துடிக்கின்ற வாணவப்பேய்க்
கின்னல் வருவ தெந்நாள் ? எந்தாய் பராபரமே"

—பராபரக்கண்ணி 159.

" பிடித்ததையே தாபிக்கும் பேரா ணவத்தை
அடித்துத் துரத்த வல்லா ரார்காண் பராபரமே"

—பராபரக்கண்ணி 306.

என்றார்.

ஆனந்தமானபரம் 6-ம் பாட்டில், 'ஆணவமாகிய கரிய காட்டை வேரறக் களைந்து வெளியாக்கி அகங்காரமென்னுங் கல்லினைப் பிளந்தெறிந்து, நெஞ்சமாகிய நிலத்தினைத் திருத்தி ஞான முடிவாகிய மோனமென்னும் விதையை விதைத்து, அன்பென்னும் நீரைப் பாய்ச்சி அது பயிராகும் வரை மயக்கத்தைத் தரும் மாயா காரியங்களாகிய வலிய பறவைகள் அணுகாத வண்ணம் நேர்மையுடன் பாதுகாத்து விளைந்த சிவபோகத்தை உண்டு பிழைத்த உனது அன்பரிணக்கம், எனக்கும் கிடைக்கும்படி முன்னின்றுதவுவது நின்னருட் கடமையாகு' மென்றார்.

---

# அதிகாரம் 5.

---

## வினையியல்பு

இனி வினையின் தன்மையை ஆராய்வாம். ஆணவத்தால் பிணிக்கப்பட்ட உயிர் உலகத்தோடு தொடர்புற்ற காலை அதன்கண் பற்று வைக்கின்ற செயலுக்குக் காரணமாயுள்ளதே மூலவினை எனப்படும். உலகின்பாற் செல்லும் உள்ளச் செயலுள்ளவரை பன்முறை உண்மை நூல் கற்றாலும், மனக்கலக்கந் தீராமையால்,

" கண்டு கண்டுந் தேறாக் கலக்கமெல்லாந் தீர்வண்ணம்
பண்டைவினை வேரைப் பறிக்குநா ளெந்நாளோ "

—எந்நாட்கண்ணி தத்துவமுறை 18.

என்றார்.

" இன்றோ விருவினை வந்தேறியது ? நானென்றோ
வன்றே விளைந்த தன்றோ ? ஆற்றேன் பராபரமே "

—பராபரக்கண்ணி 160.

என்றவிடத்து இருவினை என்பதைப் பெருவினையாகிய மூல வினை என்று கொள்ளுதல் பொருத்தமானதே. நான் எப் போது உள்ளேனோ அப்போதே வினையும் ஏற்பட்டதென்று கூறினது காண்க. "நான்" என்றோ அன்றே என்பதற்கு அகங்காரம் எப்பொழு துண்டாயிற்றோ அப்பொழுதே வினை விளைந்ததென்று கூறுவாருமுளர். வினைக்குக் காரண மாய் எண்ணத்தை நீ நினைப்பித்தாலன்றி எனக்கு உண் டாவதில்லை. அவ்வாறிருக்க, நான் அவ்வெண்ண முதிப்ப தற்கு முன் செயக்கடந்த வினையேது? என்ற கருத்தினை அடிகள் பல இடங்களிற் குறிக்கின்றார்.

—பராபரக் கண்ணி 161.

" என்னை யின்னதென்றறியா ஏழைக்கு மாகெடுவேன்
முன்னை வினை கூடன் முறையோ" —ஷை 162.

" அறியா நான் செய்வினையை ஐயாநீ கூட்டுங்
குறியே தெனக் குளவு கூறாய்" —ஷை 163.

" என்னே நான் மறந்துழல வந்தவாறு இங்கு
எனக்கென வோர் செயலில்லையே யேழை யென்பால்
முன்னே செய்வினை யெனவும் பின்னே வந்து
மூளும் வினையெனவும் வரமுறையே னெந்தாய்"

—கல்லாலின் 27.

" ஆதரவு வையாம லறிவினை மறைப்பது
நினருள் பின்னு மறிவின்மை தீர்த்
தறிவிப்பது நினருளாகி லெளிய னேற்
கறிவாவதேது அறிவிலா ஏதம் வரும்
வகையேது வினையேது வினைதனக்கீடான காயமேது"

—சின்மயானந்தகுரு 10.

என்ற திருவாக்குகளானே உயிரினை அறிவிப்பதும் செய் விப்பதும் இறைவனுதலினுல், தானே அறிந்து செய்ய இயலாத உயிர் வினையைச்செய்து அதன் பயனை நுகர்தல் யாங்ஙனம் என்பது வினுவாகின்றது. உயிர் சடப்பொருளாகாது. சித்துப்பொருளாய் ஆணவத்தான் மறைக்கப்பட்ட செயலும் அறிவுமுடைமையால் செயற் பயன் நுகர்தற்குரியது. தன் உணர்ச்சி கெட்டுச் சிவ வுணர்ச்சி முனைத்தபோது வினைப்பயனை உயிர் நுகர்ந்து துன்புறுவதில்லை. அடிகள் எல்லாம் சிவன் செயலென்று கருதுமியல்பினராதலின் மேற் சுட்டிய வினுவினை யெழுப்பு முகத்தான், அங்ஙனங் கருதுங் கடமையை எம்மனோர்க்கு வற்புறுத்தின ரென்க.

இருவினையாகிய நோய் என்னைக் கெடுக்க வந்தது, என்னிடம் பேரருளுடைய நீ அவ்விரு வினையைக் கெடுப் பது முறையன்றோவென வினவுவார்,

"என்னைக் கெடுக்க விசைந்த விருவினைநோய்
தன்னைக் கெடுக்கத் தகாதோ பராபரமே"

—பராபரம் 164.

என்ருர்.

மூல வினையானது உயிர் எடுத்த பிறவியிலே நல்வினை, தீவினை என்னும் இருவகைச் செயலுக்கும் ஆதாரமா யிருப்பது, பிறர்க்கும் தனக்கும் நன்மை செய்தல், தீங்கு செய்தல் என்பன முறையே நல்வினையுந் தீவினையுமாம்.

அவற்றின் பயனை நுகர்தற் கேதுவாகிய புண்ணிய பாவங்கள் புத்தி தத்துவத்திற் பொருந்திக் கிடக்குங்கால் சஞ்சிதமெனப்படும். நல்வினையும் தீவினையும் பயிர் போல வும், புண்ணிய பாவங்கள் நெற்போலவும், புத்தி தத்துவ

மும் அதற்காதாரமான மாயையும் நெல் வைத்த களஞ்சியம் போலவுமிருப்பன. பயிரானது வெய்யிலின் வெம்மையால் வாடியொழிவதுபோல இறைவனது அருட்கதிரின் சூடு தாக்க இருவினையாகிய பயிர் மாயுமென்பார்,

"பைங்கூழ் வினைதான் படுசாவி யாகவெமக்
கெங்கோன் கிரண வெயிலெய்துநா ளெந்நாளோ"

—எந்நாட்கண்ணி தத்துவமுறை 19.

என்றார்.

நான் என்னும் முனைப்பால் (வெளிப்படையாகச்) செய்யப்படும்வினை ஆகாமியம் எனப்படும். இது முன் வினைப்பயனை நுகருங்கால் செய்யப்படுவது, வினைப்பயன் நுகர்தற்குரியதாய் வருங்காலை அது பிராரத்தமெனப்படும். முன்வினை, மூள்வினை, செய்வினை யென்னு மூன்றும் முறையே சஞ்சிதம், பிராரத்தம் ஆகாமிய மெனப்பெயர் பெறும். இம்மூன்றுமொழிய வேண்டுமென்பார்,

"சஞ்சிதமே யாதி சரக்கான முச்சேரும்
வெந்த பொரியாக அருள்மேவுநா ளெந்நாளோ"

—எந்நாட்கண்ணி தத்துவமுறை 21.

என்றார்.

சஞ்சிதமானது, புசித்த பின்னும் மேலை வினைக்கு வித்தாகத் தொகுத்து வைக்கப்பட்ட சரக்காதலின், அந்த வித்தினை அருட்கதிரால் வறுத்த வித்தாக்கினால் மேல் முளைத்தற் கிடமில்லையாதலின்,

"குறித்தவித மாதியாற் கூடும்வினை யெல்லாம்
வறுத்த வித்தாம் வண்ணம் அருள்வந்திடுநா ளெந்நாளோ"

—எந்நாட்கண்ணி தத்துவமுறை 20.

என்றது காண்க.

"உணக்கிலாததோர் வித்துமேல் விளையாமலென்வினையொத்
கணக்கிலாத் திருக்கோலநீ வந்து காட்டினாய்" [தபின்
என்ற மணிவாசகமும் இக்கருத்துப் பற்றி யெழுந்ததே.

தன்னுணர்ச்சியால் வினையியற்றாது, திருவருள் நெறி நின்று எதனையு மியற்றுவார்க்கு வினைப்பற்றறும். வினையை வெல்லுதல் கூடும்.

"சிவாய நமவென்று சிந்தித் திருப்பார்க்கு
அபாயம் ஒருநாளு மில்லை"

என்றதுமது.

"காகமானது கோடி கூடமென்றாலு மொரு
கல்லின்முன் னெதிர் நிற்குமோ
கர்மமானது கோடி முன்னே செய்தாலும்
நின்கருணை ப்ரவாக வருளைத்
தாகமாய் நாடினரை வாதிக்க வல்லதோ"

—எங்குநிறைகின்ற பொருள் 6.

என்றவிடத்து, அடிகள் தீவினைக்குக் காகத்தையும், திருவருளுக்குக் கல்லினையு முவமித்தனர். காகங்கோடி யென்றது புத்தி தத்துவத்தைப் பற்றுக்கோடாகவுள்ள சஞ்சித கன்மங்களைப் பலபல வென்றறிவித்தற்கு. அவைகள் புசிக்கப்படுங் காலை, ஆகாமியங்களை விளையாதிருத்தற்குத் திருவருளே பேருதவி புரிவதாதலின் அதனைக் கல்லென்றார். கல்லைக் கண்டவுடன் காகங்கள் விலகுதல்போலத் திருவருளை நாடுமுள்ளத்திலே தீயனவியற்றுங் கருத்துக்கள் செல்லாவென்றுணர்க. திருவருளின்கண் அழுத்தமான நாட்டமில்லாதவர்கள் தவறுதல் கூடுமாதலின்,

"தாகமாய் நாடினரை வாதிக்க வல்லதோ"

என்றார்.

காகக் கூட்டம்போல, வினைகளும் கூட்டமாய் ஒருங் கேவந்து உயிர்களை வருத்துதல் காண்க.

"வினையெலாஞ் சங்கேதமாய்க் கூடியே
தேகமானதை மிகவும் வாட்டுதே"

என்றதுமது.

காகங் கருநிறமுடைமைபோல, வினைகளும் மயக்கம் விளைத்துப் பந்தத்தைப் பயத்தல் தெளிவு. ஆணவக் காரிருளான் மூடப்பெற்றுக் காகம் போன்றுள்ள யாமும் அகண்டாகார சிவத்தை நாடவேண்டுமென்ற விடத்துக் காகத்தின் கூட்ட ஒற்றுமையை அடிகள் குறித்ததும் உணர்க.

"காகமுறவு கலந்துண்ணக் கண்டீ
ரகண்டாகார சிவ
போகமெனும் பேரின்ப வெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏகவுருவாய்க் கிடக்குதையோ
இன்புற்றிட நாமினி யெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச்
சேரவாருஞ் செகத்தீரே" —காடுங்கரையும் 3.

கன்மங்களின் வலி அஞ்சத்தக்கது. எந்த நற்செயலை முயலுங்காலத்தும், முயல்கின்றவனது வினைப் பயன் அதற்கோ ரிடையூறாக வந்து இடுக்கண் விளைக்கும்.

"கருவி கரணங்க ளோயக் கண்மூடி யொருகணம்
இருக்கவென்றாற் பாழ்த்த கன்மங்கள் போராடுதே"
—பரிபூரணானந்தம் 4.

என்றது காண்க.

வினையை நாம் வெல்லமுயலாது அதற்கு வெற்றி கொடுத்துவிட விசைதல் நலமில்லை யென்பார்,

"பண்டையுள கர்மமே கர்த்தா வெனும்பெயர்ப்
பக்ஷம் நான் இச்சிப்பனோ" —பரிபூரணானந்தம் 4.

என்றருளிச்செய்தார்.

அதற்கு இறைவனை வேண்டுவார்,

"எனைப் பாழாக்குந்
திண்ணிய வினையைக் கொன்று சிறியனை யுய்யக்கொண்டால்
புண்ணிய நினக்கே யன்றோ பூரணா னந்த வாழ்வே"
—கற்புறுசிந்தை 5.

என்று குறையிரந்தார்.

மதியினால் விதியை வெல்லலாகாதோ வெனின், மதியானது திருவருள் பதியப்பெற்றால், வெல்லுமாற்றலுடையதாகும். மதியானது மாயையிற் பதிந்து கிடந்தால் விதி வழியே மதிசெல்லுமாதலின்,

"விதியையும் விதித் தென்னை விதித்திட்ட
மதியையும் விதித்தம் மதிமா யையிற்
பதிய வைத்த பசுபதி நின்னருட்
கதியை யெப்படிக் கண்டு களிப்பதே"
—பொன்னைமாதரை 63.

என்றார்.

"எண்ணிய எண்ணமெல்லா மிறப்புமேற்
பிறப்புக் காசை பண்ணி" —கற்புறுசிந்தை 5.

என்றபடி உலகத் தொடர்பான நினைவுகளெல்லாம், வரும் பிறப்புக்களுக்கு வித்தாகுமெனின், நினைவுகள் அளவில்லா திருத்தல்போலப் பிறப்புகளும் அளப்பில.

"கடலெத்தனை மலையெத்தனை தன்ம மதற்
குடலெத்தனை யத்தனைகடலுன் மணலொக்கு மிந்தச்
சடலத்தை நான்விடுமுன்னே யுனைவந்து சாரவிருட்
படலத்தை மாற்றப்படாதோ நிறைந்த பராபரமே"

—பாயப்புலி 38.

என்ற திருப்பாட்டு இதனைத் தெரித்தல் காண்க.

இருட் படலமாகிய ஆணவமறைப்பால், உயிர் கடவுளை நோக்காது, உலகத்தை நோக்கிச் செல்ல அவாவிய போது விரும்பிய பொருளின்கண் வேட்கையும் வேண்டாப் பொருளின்கண் வெறுப்புக் காரணமாய சினமும் விளைகின்றன. விருப்பு வெறுப்பிற்கு அடிப்படையாயுள்ள அறியாமையை மயக்க மென்ப. அதனையுமுடன் சேர்த்துக் காம வெகுளி மயக்கம் என்ற மூன்றையும் முக்குற்றமென ஆசிரியர் திருவள்ளுவர் கூறுவாராயினர். திருமூலமாமுனிவரும் அவ்வாறே யுரைத்தனர். இவற்றை அடிகள் பின்வரும் செய்யுளில் அமைத்தமை காண்க.

"செய்யுஞ் செய்கையுஞ் சிந்திக்குஞ் சிந்தையும்
ஐய நின்ன தென்றெண்ணு மறிவின்றி
வெய்ய காம வெகுளி மயக்கமாம்
பொய்யிலே சுழன்றே னென்ன புன்மையே"

—பொன்னைமாதரை 12.

காமமானது, மோகம், மதம், லோபம் மாச்சரியமென்னுந் தீக்குணங்களை விளக்கும். இவை பைந்தினையும் வெகுளியாய குரோதத்தோடு சேர்த்து உட்பகையாறெனக் கோடலு மரபே.

" மோகமோ மதமோ குரோதமோ லோபமோ
மூற்று மாற்சரிய மோதான் "—மலைவளர்காதலி 6.

என்றவிடத்துக் காமத்தினையுஞ் சேர்ப்பிக்கக் குற்றம் ஆறு தல் காண்க. மோக மென்பது—தீயதென்று ஒன்றை யறிந் தும் அதன்கட் பற்று வைத்தற்கேது வாய் விருப்பம். மத மென்பது—பற்று வைத்த பொருளைப் பெரிதாக மதிக்கும் குணம். உலோப மென்பது—பற்றிய பொருளைப் பிறர்க் கீயாமை. மாற்சரிய மென்பது—விரும்பிய பொருள் பிற ருக்குக் கிடைத்துத் தனக்குக் கிடையாமையால் உண்டா கும் பொறாமை. இவைகள் எல்லா வகையான பாவச் செயல்கட்கும் வித்தாயுள்ளன.

காமமென்ற சொல் பொதுவாக ஆசையை யுணர்த் தும். மண், பெண், பொன் என்ற மூன்று பொருளின்கண் வைத்த மூவகைப் பற்றுள் நடுநின்ற பெண் பற்றினையே காமமென்று கோடல் சிறப்பு வழக்கு. ஆசையின் எல்லை யில்லாத் தன்மையை அடிகள் பரிபூரணானந்தம் பத்தாவது செய்யுளில் அழகாக விளக்கினர். அதன் கருத்து வரு மாறு:—மக்களுடைய ஆசைக்கு ஓர் எல்லை இல்லை. நிலவுலக மனைத்தையும் ஒருவர் தன் கீழ் அடக்கியாளப் பெற்றாலும் அதனைச் சுற்றியுள்ள கடல் முழுவதையும் தனது ஆட்சிக் குள்ளாக்க விரும்புவர். நிதிக்கிழவன்போல மிகுந்த பொன் சேர்த்து வைத்தவர்களும் இழிந்த உலோகங்களைப் பொன் னாக்கும் இரசவாத வித்தை கற்பதற்கு அது தெரிந்தாரைத் தேடி யலைவார்கள். நெடுங்காலம் நிலவுலகத்திலே வாழ்ந்து வயது சென்றவர்களும், இன்னும் நிலவரமாக உலகத்திலே வாழ்ந்திருத்தற் பொருட்டு உடலை வலிதாக்கும் கற்ப முதலிய உயர்ந்த மருந்துகளைச் செய்ய முயன்று அவை கைவ ராமற் போயின் மனம் வருந்துவர். இங்ஙனம் ஆசைப்படுவ தெல்லாம் எதற்காக வென்று நினைத்துப் பார்க்கும்போது,

பசிதீர உண்ணுவதும் உறங்குவதுமாக முடியும். இதற்காக நான், என்று புலம்பி ஒன்றை விட்டு ஒன்றைத் தொட்டு ஆசைக்கடலில் விழாமல் உள்ளதே போதுமென்ற மனத்தோடு கூடிய சஞ்சலமற்ற தூய நிலையை யெனக்கு அருள்வாயாக''

மூவாசை யினைப்பற்றி வருஞ் செய்யுட் பகுதிகளாவன :—

"பொன்னை மாதரைப் பூமியை நாடினேன்''

—பொன்னைமாதரை 1.

"பொருளைப் பூவைப் பூவையவரைப்
பொருளென் றெண்ணு மொருபாவி''

—தன்னையோருவர் 8.

பொன்னினால் முனிவரு மன்னரு முன்னியது முடித்தலானும், பசிநீக்குதற்குரிய உணவு முதலியவற்றைக் கைக்கோடற்குக் கருவியா யிருத்தலானும், அது யாவரானும் விரும்பப்படுவதே. ஆனால், அதன் பொருட்டு அறநெறிக்குப் புறம்பாய வழிகளிலே செல்லுதல் தவறு எனினும் பல மக்கள் வயிற்றுப் பிழைப்பின் பொருட்டு எத்தனையோ சூழ்ச்சிகளைக் கைக்கொள்ளுவர். இதனை ஆனந்தமான பரம் மூன்றும் பாட்டிலே அடிகள் இனிது செப்பினர். அதன் கருத்து வருமாறு:—'ஒரு சாண் அளவுள்ள வயிற்றின் நிமித்தமாக, மாறுபாடுள்ள தர்க்க விவகாரங்களைத் தொடுக்கக் கற்றிருப்பர். மண்ணுலகும் விண்ணுலகும் ஒன்றாயிருப்பது போலப் பாவித்து மனது நிலையில்லாமல் உழலப் பேராசை கொண்டு நிற்கத் தெரிந்திருப்பார். வெவ்வேறு விதமான வேடங்கள் கொள்ளப்படித்திருப்

பார்கள். ஏதாவதொரு மந்திரத்தை முண முண வென்று உச்சரித்துக்கொண்டு உள்ளம் வேறாயிருக்கும் வித்தையை அறிவார்கள். சந்தையிற் பல பொருள்களைப் பரப்பி வைப்ப தொப்ப எம்மைப்போல சாத்திரங்களைப் பரப்பிக்காட்ட அறிவார்கள். சினங்கொண்ட புலியைப்போலச் சீறி மூச் சடக்கிக் கண்களை மிகச் சிவக்கவைக்க அறிவர். தங்கள் தங்கள் கொள்கைகளே உறுதியானவையென்று செருக்கு, சார்பு முதலிய தீக்குணங்களை மேற்கொண்டு சாதித் துரைக்க அறிவார்கள்.' (எ-று.)

மாதர். மயலே மனைவிமக்கள் பொருள் முதலிய வற்றின்கட் பற்றுவைத்தற்குக் காரணமாய் உடற்பற்றுக் குங் குடும்பக்கவலைக்கும் இடமாவதாலும் அதனை அடிகள் நன்கு கடிந்துள்ளார். மலைவளர்காதலி 2-ம் பாட்டில், மாதர்களின் வெளிமயக்கால் ஏமாந்துபோதல் கூடாதென் பார், அம்மயக்கத்திற் கேதுவாகிய வனப்பு வகைகளை அடுக்கியுரைத்தார்.

"மாதர். காமுகரை மயக்கும் எத்திலும், அன்பின் மிகுதியாற் கடிந்து பேசுவதுபோலப் பேசும் வாய் வெட்டி லும், சிற்றிடையிலும், நடையிலும், சேல்மீன் போன்ற கண்களிலும், பாலனைய இன்சொல்லிலும், பிறைபோன்ற நெற்றிவகிரிலும், நெற்றியிலிருக்கும் பொட்டிலும் அவர் கட்டும் பட்டினும், பூசும் வாசனைப் பொடியிலும், அழகிய பாதத்திலும், பூரித்த மார்பிலும், நிற்கின்ற நிலையிலும், புத் தியைப் போகவிட்டு மனம்போன போக்கிலே அலையாமல், அறிவிலும் பொறுமையிலும், அடியர் கூட்டத்திலும், நிலைத்த அன்பிலும், மயக்கமற்ற உண்மையினை அறியும் நாட்டத்திலும், உன்னுடைய இரண்டு திருவடிகளிலும் மனது செல்லும்படி நீ அருள் தருவையோ" என்றனர்.

எங்கு நிறைகின்ற பொருள் பத்தாம் பாட்டிலே 'பொன்னாட்டிலும் சிற்றின்பம் அமைந்திருப்பது நற்கதிய டைதற்கு இடையூறுமென்பதை அடிகள் குறித்தனர். முத்துப்போன்ற பற்களும் பவளத்தினை யொத்த வாயினாற் பேசும் இனிய சொற்களும் ஆகிய பல அழகுகளாலே எம்மை மயக்கிக் கண்களாகிய வலையை வீசி மாயையின் விளையாட்டாகிய மோகக் கடலில் அழுந்தச் செய்யும் பாழும் பெண்டிரது சிற்றின்பமானது விண்ணவர் உலகின் கண்ணும் அமைவதானால் அது பெரிய போராட்டமாகு மல்லவா? இவ்வுலகிலிருந்து பேரின்ப முத்தியை நாடி யடைதற்கு எத்தனையோ தடைகளுள்ளன வென்று சுக முனிவர் சென்ற நெறியினை இவ்வுலகம் அறியாததோ" என்றார்.

வண்ண மென்னும் பகுதியினும் மாதர் வனப்பு விரித்துரைக்கப்பட்டது. மாதர்மயல் உடம்பிலே யம வாதையாகிய நெருப்பினை வளர்த்தல் கூடுமென்று கருதி மன்மதனும் தன் உடம்பினைத் துறந்தானென்று ஆனந்தக் களிப்பு 27-வது பாட்டில் அடிகள் கற்பித் துரைத்தார். உடம்பை ஒரு தேசமாகவும் வேட்கையைத் தீயாகவும் உருவகித்து அதனிற்சிக்கிய தன்னை, அதன்கண் நின்று விடு விப்பார் யாருமில்லையோ வென்று வினவுமுகத்தால்அடிகள் கூறிய செய்யுள் வருமாறு:—

"அறிவாரு மில்லை யோவையோ என்னை
யாரென் றறியாத வங்க தேசத்தில்
வறிதே காமத் தீயிற்சிக்கி உள்ள
வான்பொரு டோற்கவோ வந்தேனன் றோழி
சங்கர சங்கர சம்பு"

—ஆனந்தக்களிப்பு 25.

உடல் உயிரின் றன்மையை யறியாதாகலின், 'யார் என்று அறியாதவங்கதேசத்தில்' என்றார். 'வான்பொருள்' என்றது ஞானத்தினை.

மாதரைப் பழித்தல் என்பதனுள் உடலின் இழிவினை நினைவில் வைத்து மாதர்பால் மயல் கொள்ளுதலைத் தவிர்க்க வென்பார்,

"மெய்வீசு நாற்ற மெல்லா மிக்க மஞ்சளான் மறைத்துப்
பொய்வீசும் வாயார் புலையொழிவ தென்னாளோ"

—எந்நாட்கண்ணி 1.

என்றார்.

யாக்கையைப் பழித்த லென்னும் பகுதியுள், உடம்பின் புனிதமின்மையையும் நிலையாமையையும் வற்புறுத் தினமை காண்க. உடலானது சிவந்தபுழு முதலியவற்றிற் குப் பிறப்பிடமென்றும் நாற்றமுடைய அழுக்குகட்கு நிலையமென்றும், மலக்கேணியென்றும், நீர்க்குமிழிபோல நிலையில்லாததாய்க் காக்கை, நரி, செந்நாய், கழுகு முதலிய வைகள் ஒருங்கு கூடி ஒரு நாள் விருந்தருந்துதற் குரிய தென்றும் அடிகள் பகர்ந்தனர். உடம்பின் அமைப்பினை அடிகள் கூறுமுறை வருமாறு:—மேற்கு, கிழக்கு முதலிய திசைகளை ஒரு உழக்கினிடத்திலே வைத்தாற்போன்ற அமைவுடைய ஐம்பூதங்கள் கூடிய சிறு வீட்டினை, வெள்ளிய நரம்பாகிய வடக்கயிற்றினாலே, மன்மதன் திருவிழா நடத் துவான், இழுக்கப்படும், எலும்புதசை முதலிய வற்றாலாய சிறுதேரினை, வெண்ணீர், செந்நீர், கண்ணீர், மலநீர், சிறங்கு நீர் என்னு மிவற்றை வெளியே யெறியும் ஊன் துருத்தி யைக் கருவாகிய மருந்து வைக்குங் கூட்டினை, வெட்ட

வெட்டத் தளிர்க்கின்ற ஆசைமரங்கள் நிறைந்த வெய்ய காட்டை, மெய்போலிருந்து திடீரெனப் பொப்யாய் விழுகின்ற உடம்பைப் பொய்யென்றொழித்து, ஞானவடிவான பரம்பொருளே மெய்யென்று அதன் சார்பாய் நிற்பது எக்காலம் ? என்று வினவுவது காண்க.

—சச்சிதானந்தசிவம் 2.

'அண்டத்திலுள்ளது பிண்டத்திலும்' என்பதற்கிணங்க, திசைகளை உடல் உள்ளடக்கி நின்றகாலை, அது அளவால் மிகச் சிறியதாகலின் அதனை உழக்குப் போல்வதென்றார். கண் இரண்டு, காதிரண்டு, நாசியிரண்டு, வாய், குதம், குறி, என்னும் ஒன்பது வாயில்களையே ஒன்பது பலகணி யென்றார். வெண்ணீர், கோழை முதலியன. செந்நீர் என்பது இரத்தம். கருமருந்து என்பது, மருந்து போற் போற்றப் படுங்கரு.

சிற்சுகோதய விலாசம், முதற் செய்யுளினும் யாக்கையினிழிவு கூறப்பட்டது. அதனுள் அயன் குயவனாகவும் எமன் தடிகாரனாகவு முவமிக்கப்பட்டமை காண்க. நிலையில்லாத பொய்யுடம்பை மெய் மெய் என்பதாற் பயன் என் ? பொய்யை மெய் என்றாலும், பொய் பொய்யாயிருக்குமே யொழிய மெய்யாவதில்லை யென்பார்,

"பொய்யெல்லா மொன்றாய்ப் பொருத்தி வைத்த பொய்யுடலை
மெய்யென்றால் மெய்யாய் விடுமோ பராபரமே"

—பராபரக்கண்ணி 178.

என்றார்.

"மின்னனைய பொய்யுடலை" —ஷை 179.

என்றதுமது.

“ நாற்றச் சடலத்தை யொன்பது வாசல்நடை மனையைச்
சோற்றுப் பசையினை மும்மல பாண்டத்தைத் தொடக்கறையை
ஆற்றுப் பெருக்கன்ன கன்மப் பெருக்கை யடர்கிருமிச்
சேற்றைத் துணையென்ற நாய்க்குமுண்டோ கதிசேர்வதுவே ”

—பாயப்புலி 18.

இன்னும் உடலைத் தோலினாற் செய்த பாவை, அது கீழே விழுந்தால் நான்கு ஆட்களாற் சுமக்கப்படுவதென்பார்,

“ தோற்பாவை நாலாட் சுமையாகுஞ் சீவ னென்றிங்
கார்ப்பா லெடுத்த தெவராலே பராபரமே ”

—பராபரக்கண்ணி 183

என்றார்.

உயிரானது இழிவு மிக்க எந்த உடலை எடுத்தும் பிறப்பினும் அந்த உடலை நன்றென்றெண்ணும் மயக்க முண்மையை அடிகள் சுட்டினமை பாராட்டத் தக்கது.

“ எந்த உடலேனு மெடுத்தவுட னல்லதென்று
சிந்தை செயவந்த திறஞ்செப்பாய் பராபரமே ”

—பராபரக்கண்ணி 177.

மனிதனாய்ப் பிறந்த உயிர் பன்றியுடலை யிகழ்ந்தாலும் பன்றியாய்ப் பிறந்துவிடின் அதற்கு அது இனிதாத லொரு தலை. உடல் நிலையாதபோது, உடலின் சார்பாகவரும் பெற்றோரும், உற்றாரும் நிலைப்பட்ட தொடர்புடையாரல்லர். ஆதலின்,

“ தந்தை தாய் தமர்தார மகவென்னுமிவை யெலாஞ்
சந்தையிற் கூட்டம் இதிலோ சந்தேகமில்லை ”

—தேசோமயானந்தம் 3.

"இடம் பெறுவீடு மின்னார்சேய் சகமு மிருநிதியும்
உடம்பை விட்டாருயிர் போம்போது கூடியுடன் வருமோ"

—பாயப்புலி 17.

"மாடுமக்கள் சிற்றிடையர் செம்பொனுடை வைத்த
கனதனமேடை மாடகூடம் வீடுமென்பாற் றொடர்ச்சியோ"

—பெற்றவட்கே 9.

நல்ல வுடலை ஒருவன் உடையனு யிருந்தாலும் நற் பொருள் கேட்கக் காதில்லையாயின், அது காதில்லாத எழுத் தோலைக்குச் சமானமென்றார்.

"காதற்றுப் போன முறிகட்டி வைத்தா லாவதுண்டோ
தீதற்ற காயமுமச் செய்கையே"

—உடல்பொய்யுறவு 27.

என்றது காண்க. இது பட்டினத்தடிகள் கருத்தென்ப. மாயையைக் கடலுக்கு உவமிப்பார்,

"அடைவு கெட்ட பாழ்மாயை யாழி" —திடமுறவே 1.

என்றார்.

உடல் தங்குதற்குரிய உலகமானது மாயையாலாய தாகலின்,

"அண்ட பகிரண்டமு மாயா விகாரமே"

—பரிபூரணனந்தம் 1.

என்றார்.

"மாயையின் சார்பாலே உயிர் மயக்கமுறுவதை அடி கள் மௌனகுரு 3-ம் பாட்டில் தெள்ளிதினியம்பினார். அது வருமாறு:—இந்த மாயைக்கு முதன்மை கொடுத்தார் யார்? இதற்கு என் அறிவில்லாமல் வேறிட மில்லையோ? ஆகாயத் தாமரையும் கானல்நீரும் ஒரு அவசரத்திற்கு

உபயோகப்படுமோ? எனக்குப் போதித்த நிலையில் நான் நில்லாவண்ணம் என்னை மயக்குகின்றதே! நான் அடைக்கலம் புகுந்த திருவருள் எனக்குத் தோன்றாமல் நிற்கும்படி பொய்யான உலகத்தை மெய்யென்று காட்டி என் அறிவினிடத்தில் இந்திரசால விளையாட்டுக் காட்டுகின்றதே! கடவுளே, இதனை வெல்லுதற்குரிய உபாயத்தை எப்போதெனக்குக் கொடுத்தருள்வாய்?'' என்றனர்.

நிலையாமைபற்றி மாயையின் காரியமாகிய உலகினை ஆகாயப் பூவெனவும் கானல் நீரெனவுங் கூறினர்.

''அகில மாயை கான்முயற் கொம்பே யென்கோ
கானலம் புனலே என்கோ வான்முக முளரி என்கோ''

—தேன்முகம் 1.

என்றது காண்க.

மாயையை அருங்கோடை என்றுங் கூறினர்.

''செகமாயை யானவருங் கோடைநீங்குந் திறமிலையே''

—பாயப்புலி 8

இவ்வுவமைகளை ஏகான்மவாதியார் உலகம் இல்பொருள் என்பதற்கு உவமையாகக் கூறுவர். அது அடிகள் கருத்தன்று. தோன்றும் தோற்றங்கள் யாவும் உள்ளனவே. அவை நிலைத்தல் அரிதாகலின் அவை நிலையாமைக்கு உவமைகள் என்பதே பொருத்தம். அவைகள் இல்பொருளைக் குறிப்பதாகக் கருதப்படுதல் கூடாதென்பதை வலியுறுத்தவே அடிகள் இவற்றை உவமைப் பொருளாகக் கொண்டார்.

''அகில வாழ்வத்தனையுஞ் சொப்பனங் கண்டாய்''

—உடல்பொய்யுறவு 13.

என்றதுமது.

சகத்தை இல்பொருளாகக் கூறக்காரணம்:—

"வருவான் வந்தே னெனல்போல் மன்னியழி யுஞ்சகத்தைத்
தெரிவாக வில்லையென்ற நீரம் பராபரமே"

—பராபரக்கண்ணி 106.

உள்ளபடி உலகம் இல்லையாயின் நமக்குப் பற்றேது? பற்றில்லை யாகவே நானே கடவுள் என்னலாம் என்பார்,

"மாயா சகமில்லையேன் மற்றெனக்கோர் பற்றுமில்லை
நீயே நானென்று வந்து நிற்பேன் பராபரமே"

—பராபரக்கண்ணி 107.

"மாயையெனுந் திரையைநீக்கி நின்னை
யாறறிய வல்லார்" —பன்மாணி 8.

என்றமையால் மாயையோர் பொருளாயுள்ளது என்பது தெளியப்படும்.

மாயையைச் சேறென்றும் வெய்ய காடென்றும் அடிகள் கூறினர்.

சேற்றிலகப்பட்டால் வெளியே வருதல் அரிதாகலானும், காட்டில் அலைதல் கவலையையுந் துன்பத்தையுங் கொடுத்தலானும் இவ்வுவமைகள் பொருத்தமாதல் காண்க.

"அளவின் மாயைச் சேற்றிலே
யின்னம் வீழ்ந்து திளைக்கவே"
"வெம்மாயைக் காட்டில லைந்தே
னந்தோ வென்விதி வசமே"

என்பன காண்க.

# அதிகாரம் 6.

---

## தத்துவவியல்பு

கருணாகரக் கடவுள் இரண்டாம் பாட்டிலே மண் முதலிய ஐம்பூதமும் புறக்கருவிகளும் ஐம்பொறிகளும் தன்மாத்திரைகளும், முக்கரணங்களும், அசுத்த மாயாதத்துவங்களும், சுத்ததத்துவங்களும் ஆகிய தொண்ணூற்றாறு தத்துவங்கள் மாயையில் நின்று வந்தன என்று குறிப்பாக வுணர்த்தினர். புறக்கருவிகள் அறுபது என்பார்,

"ஆன புறக்கருவி யறுபத்து மற்றுளவும்
போன வழியுங்கூடப் புன்முளைப்ப தென்னாளோ"

—எந்நாட்கண்ணி தத்துவமுறை 15.

என்றார்.

வாக்கு நான்கும், குணங்கள் மூன்றும், அகங்காரம் மூன்றும், பூதகாரியம் இருபத்தைந்தும், வாயுக்கள் பத்தும், நாடிகள் பத்தும், கன்மேந்திரியங்களின் விடயங்கள் ஐந்தும் ஆக அறுபதாதல் காண்க.

வாக்குகள் என்பவை சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்பன. இவற்றுள் ஒன்றைப் பார்க்கிலும், மற்றொன்று வெளிப்படையாயுள்ளது. சூக்குமை என்பது மிகவும் நுட்பமானதாய் அழியாத் தன்மையுடையது. உயிர்கட்குச் சுட்டறி வுண்டாவதற்கு மூலகாரணமாயுள்ளது. பைசந்தி என்பது சூக்குமையிற்றோன்றியதாய் அறிவுக்குக் கருவியாகிய எழுத்தின் கருவாயிருப்பது. மத்திமை என்பது புத்தியிலே தோன்றும் எழுத்தொலியாய்ப் பிறர்க்குப் புலப்படாதிருப்பது. வைகரி கேட்கத்தக்க எழுத்

தொலிகளாலாயது. இவை நான்கும் சுத்ததத்துவங்களில் உண்டாவன.

குணங்கள் மூன்றென்ப. அவை சாத்துவிகம், இராசதம், தாமதம் என்பன. அடக்கம், அருள், வாய்மை என்பனவும், அவைபோன்ற பிறவும் சாத்துவிகக் குணங்கள். கல்வி, கேள்வி, ஊக்கம் முதலியனவும் விரைந்து செய்யுமியல்பும் இராசத குணங்கள். சோம்பல், துயில், மறதி முதலியனவும், காமம், கோபம் முதலியனவும் தாமதகுணங்கள். அகங்காரமென்பது இராசத மிகுதிப்பட்டால் புத்தியினின்றுந் தோன்றுந் தத்துவம். இதுவும் முக்குணச் சார்புடைமையால் மூவகைப்பட்டது.

பூதகாரியம் ஐந்து வகைப்படும். முதற்பூதத்தின் கூறு மயிர், எலும்பு, தோல், நரம்பு, சதை; இரண்டாம் பூதத்தின் கூறு ஓடுநீர், உதிரம், சுக்கிலம், மூளை, மச்சை; மூன்றும் பூதத்தின் கூறு ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம், சோம்பல்; நான்காம் பூதத்தின் கூறு ஓடல், நடத்தல், நிற்றல், இருத்தல், கிடத்தல்; ஐந்தாம் பூதத்தின் கூறு, காமம், குரோதம், உலோபம், மதம், மாற்சரியம் என்பவை நிகழ்தற்கேதுவாவன. நாடிகள் பத்தும், முதற்றத்துவத்தின் காரியமாயுள்ளன. நாடிகள் பத்திற் சிறந்த சுழுமுனை நேரே உடலின் நடுவே நிற்பது, இடைகலை இடது மூக்கிலே நிற்பது, பிங்கலை வலது மூக்கிலே நிற்பது, காந்தாரி கண்ணிலே நிற்கும், அலம்புடை செவியிலே நிற்கும், சிங்குவை நாவிலே நிற்கும், சங்கினி கழுத்திலே நிற்கும், குரு மார்பிலே நிற்கும், புருடன் பாதத்திலே நிற்கும், அத்தி உடலெங்கும் நிற்கும்.

நோய் நாடியாகிய, வளி, பித்தம், கபம் என்பனவற்றை அகங்கார மூன்றிற்குப் பதிலாகக் கூறுவது முண்டு.

அவை, கால், அனல், புனல் என்று மூன்றின் கூறாயுள்ளன. குண மூன்றிற்கும் பதிலாக மண்டலங்களைக் கொள்வர் திருமூலர். கீழ் நோக்கி யிருக்கும் நெருப்பு மண்டலம், மூலாதாரத்திற்கு இருவிரற்கிடைக்கு மேலுள்ளது. ஆதித்த மண்டலம், உந்திக்கு நாலுவிரற் கிடைக்கு மேலுள்ளது. சந்திர மண்டலம் தலை நடுவில் உள்ளது. அதன்கண் அமுத மேலநோக்கி யிருக்கும்.வாயுபத்தும் வாயுபூதத்தின்கூறாயுள் ளன :—பிராணன் மூச்சிற் காதாரமாயுள்ளது. அபானன் மலக்கழிவினைச் செய்வது, வியானன் தோலிலே நின்று தொடுதலை அறிவிப்பது, உதானன் அன்ன சாரத்தை நாடி களிற் சேர்ப்பது, சமானன் எல்லா வாயுவையும், மிகுதல், குறைதல் செய்ய இடங் கொடாது சமன் செய்வது. நாகன், விக்கலும், கக்கலும் உண்டாக்குவது ; கூர்மன், கண்ணை இமைக்கச் செய்வது; கிரிகரன் தும்மல், அழல் என்பவற்றிற்குக் காரணமாயுள்ளது. தேவதத்தன், ஓடுவித் தல் உலாவுவித்தல் முதலியவற்றைச் செய்வது; தனஞ்சயன் பிராணன் உடலை விட்டுப்போனபின் உடலை வீங்கவும், விரியவுஞ் செய்து மூன்று நாளைக்குப் பின் கபாலத்தைப் பிளந்து செல்வது. கன்மேந்திரியத்தின் தொழில் நிகழ்தற் கேதுவாய விடயங்களையே வசனாதியைந்துமெனக் கொள்க. ஐம்பொறிக்கு விடயமாய பொருள்கள் போல, வினைப் பொறிக்கு விடயமான காரியங்களே, வசனம், கமனம், தானம், விளக்கம், ஆனந்த மெனப்பட்டன.

இங்கே கூறிய அறுபதும், தத்துவங்களினாலே உண் டாகிய தாத்துவிகம் எனப்படும். இவை முப்பத்தாறு தத்துவங்களுடன் சேர்ந்து தொண்ணூற்றாறுதல் காண்க. தத்துவங்களைக் கூறுமிட மெல்லாம் அடிகள்,

"பூத முதலாகவே நாத பரியந்தமும்"

—மலைவளர்காதலி 3.

"இருநில மாதிநாத மீறதா மிவை கடந்த"

—வம்பனேன் 3.

என்பதால் முப்பத்தாறு தத்துவமுந் தொகுத்துச் சுட்டப் பட்டன. பிரகிருதி, குணதத்துவத்தின் நுட்ப மாதலால்,

"முக்குணத்தா லெல்லா முளைக்கப் பிரகிருதிக்
கிக்குணத்தை நல்கியதா ரெந்தாய் பராபரமே"

—பராபரக்கண்ணி 166.

என்றனர்.

அதனுற் பிரகிருதிக்குக் கீழுள்ள தத்துவங்கள் சுட்டப்பட்டன. அஃதெங்ஙன மெனின், பிரகிருதியினின்று குணதத்துவமும், அதன்கணின்று சாத்துவிக மிகுதியால் புத்தியும், அதன்கணின்று இராசத மிகுதியால் ஆங்காரமும், ஆங்காரத்தின், சத்துவப் பகுதியினின்று, மனமும் ஐம்பொறியும், இராசதப் பகுதியினின்று, வினைப்பொறியைந்தும், தாமதப் பகுதியினின்று தன்மாத்திரையைந்தும், தன் மாத்திரையினின்று ஐம்பூதமும் உண்டாதலின் என்க.

பிரகிருதிக்கு மேற்பட்ட ' தத்துவங்களை, வித்தியா தத்துவமேழாகவும், சுத்த தத்துவம் ஐந்தாகவும் பகுத்தோதுகின்றார்,

"வித்தியா தத்துவங்க ளேழும் வெருண் டோடச்
சுத்தபர போகத்தைத் துய்க்குநா ளெந்நாளோ"

—எந்நாட்கண்ணி தத்துவமுறை 11.

"சுத்த வித்தையே முதலாத் தோன்றுமோ ரைந்துவகைத்
தத்துவத்தை நீக்கியருள் சாருநா ளெந்நாளோ?"

—ஷை 12.

வித்தியா தத்துவமென்றது, கலை, நியதி, காலம். அராகம், வித்தை, அசுத்தமாயை, புருடன் என்பவைகளே. புருட தத்துவமென்ற தனித்தத்துவம் இல்லை. கலை முதலிய ஐந்துடன் கூடிய உயிர் பிரகிருதி மாயைப்போக நோக்குடையனாய் நிலையாதவற்றை நிலையாக வுணரும் அறியாமை, அவா, வேட்கை, ஆசை, வெகுளி முதலியவற்றாற் பீடிக்கப்பட்ட நிலையே அஃதாம்.

அசுத்த மாயாதத்துவமானது நிலமுதற் கலை வரையுள்ள தத்துவங்களுக்கு முதற்காரணமாய் மயக்கஞ் செய்வதாயுள்ளது. அசுத்த மாயாதத்துவத்தினின்றும் காலம், நியதி, கலை என்னும் தத்துவங்கள் உண்டாகும். உயிர் நுகர்வதை வரையறைப்படுத்துவதே கால தத்துவம், இன்ன இன்ன வினைப்பயன்கள் உயிரால் நுகர்தற்குரியன வென்று வரையறைப் படுத்துவது நியதி தத்துவமெனப் படும். கலை என்னுந் தத்துவம் உயிரினுடைய ஆணவமல மறைப்பைச் சிறிது நீக்கி, அதன் தொழிலாற்றலை விளக்குவது. அறிவுப்பொறி (ஞானேந்திரியம்) ஐந்தும், தொழிற் பொறி ஐந்தும் (கன்மேந்திரியம்) பூதமுதலைந்தும் அவற்றின் முதலைந்தும் இருபது தத்துவங்களாகும். மனம், புத்தி, அகங்காரமென்னும் மூன்றும் சேர்க்கத் தத்துவங்கள் இருபத்து மூன்றாகும். சிலர் சித்தத்தையும் ஒரு தத்துவமாக வைத்துத் தத்துவம் இருபத்து நான்கென்பர். சித்தம் மனதுளடங்குதலின் அதனை வேறாக வைத்து எண்ண வேண்டியதில்லை. குணதத்துவமும், பிரகிருதி தத்துவமும் வெவ்வேறென்பது சைவக்கொள்கை. சிலர் இரண்டையும் ஒன்றாகக் கொள்வர். அவர்கள் புருடதத்துவமென்பதை ஒரு தத்துவமாக வைத்துத் தத்துவம்

இருபத்தைந் தென்பர். அங்ஙனங் கொள்ளுதல் தவறு. குணத்தையும் பிரகிருதியையும் வெவ்வேறாகக்கொண்டு பிரகிருதி முதலாகிய கீழ்த்தத்துவங்கள் இருபத்தைந்து என்றலே பொருத்த முடைத்து. பிரகிருதியை அசுத்த மாயா தத்துவங்களோடு வைத்து எண்ணுமிடத்து நிலம் முதல் குணம்வரை கீழுள்ள தத்துவங்கள் இருபத்து நான்காதல் காண்க. இவை ஆன்ம தத்துவமெனப்படும்.

பிரகிருதி தத்துவம் கலையினின்று உண்டாவது. கலை, நியதி, காலம், வித்தை, அராகம், அசுத்தமாயை என்னும் ஆறோடு முற்கூறிய இருபத்தைந்தையும் உடன் சேர்க்கத் தத்துவங்கள் முப்பத்தொன்றாகும். இவற்றிற்கு வேறாகவுள்ள சிவம், சத்தி, சதாசிவம், ஈசுரம், சுத்தவித்தை என்னுஞ் சுத்த தத்துவங்களைந்துஞ் சேரவே, தத்துவங்கள் யாவும் முப்பத்தாறாதல் காண்க. உயிர்களுக்குச் சுட்டறிவு விளங்குதற்கேதுவாகிய அதிசூக்குமை, சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்னும் ஐந்து வாக்குகளும் உண்டாவதற்கிடம் இத்தத்துவங்களே. இவை ஐந்தும் சுத்தமாயை என்பதன் பிரிவுகளே. இத்தத்துவங்களிலே கடவுள் நேரே ஐந்தொழிலையு மியற்றுவர்.

சிவதத்துவத்தில் இறைவனுடைய ஞானசத்தி மாத்திரம் விளங்கும். சத்திதத்துவத்தில் முதல்வனது கிரியா சத்தி விளங்கும். சதாசிவ தத்துவத்தில் இறைவனது ஞானசத்தியும் கிரியாசத்தியும் ஒத்து விளங்கும். ஈசுர தத்துவத்தில் இறைவனது கிரியாசத்தி சிறப்பாக மிக்கு விளங்கும். சுத்த வித்தையில் ஞானசக்தி மிக்கு நிற்றற்குக் காரணம் ஞான நூல்கள், மந்திரங்கள் முதலியன வெளிப்படுதற்கும் கீழ்த்தத்துவங்களிலுள்ளவர்களை இயக்கும் மூர்த்தி

கட்கு ஞானம் உதிப்பித்தற்கு மென்க. இதுகாறுங் கூறிய வாற்றால் கடவுள், உயிர், மலம், கன்மம், மாயை என்பவற்றின் இலக்கணங்கள் அடிகள் திருப்பாடல்களினாலே புலனாகும் அளவு ஒருவாறு விளக்கப்பட்டன.

இனி வீடடையக் கருதும் உயிர் செல்லுதற்குரிய வழிகளை அடிகள் அறிவுறுத்திய வண்ணம் ஆய்ந்து தெரிவாம்.

---

# அதிகாரம் 7.

---

## வழிபாட்டியல்பு

இப்பிறவியின் தன்மையைப்பற்றித் தேசோமயானந்தம் இரண்டாவது செய்யுளில் அடிகள் கூறுவது வருமாறு:—“இந்தப் பிறவி என்னும் ஓர் இருட்கடலிலே மூழ்கி நானென்னும் சுறாமீனின் வாயிற்பட்டு இருவினைகளென்கின்ற அலைகளாலே மொத்துண்டு நீர்க்குமிழி போலும் மார்புகளையும் பவழம்போன்ற இதழ்களையும் காட்டும் பெண்டிரது மயக்கமாகிய பெரும் புயற்காற்று பலகாலும் வந்து வந்து தாக்கக் குறையாத ஆசையாகிய காட்டாறு வானத்தினின்றிழியுங் கங்கைபோல மேலுமேலும் வந்து மோதக் கைத்தோணிக்காரர்போல ஞானமாகிய மரக்கலத்தையுங் கைவிட்டு அறிவு கலங்கித் திருட்டுக் கப்பற்காரரைப் போன்ற நமன் தூதர் வருவார்களென்று அஞ்சிக் கண்ணீரருவி பொழியும் எளியேன், சொல்லுதற்கரிய முத்தியாகிய கரையினை அடையும் பொருட்டு நீ அருள் புரிவையோ” என்றனர். இக்கருத்துப் பின்வரும் திருவாசகச் செய்யுளின் கருத்தை ஒத்திருக்கின்றது.

" தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
 தடந்திரையா லெற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயா ரென்னுங் காலாற்
 கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்
டினியென்னே யுய்யு மாறென்றென் றெண்ணி
 யஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதலந்தமில்லா மல்லற் கரைகாட்டி
 யாட்கொண்டாய் மூர்க்க னேற்கே"

பிறவி பலவற்றுள்ளும் மனிதப் பிறவி சிறந்தது. எதனு லெனின்? அது ஐம்பொறி யறிவோடு பகுத்தறிவாகிய மன அறிவு வாய்க்கப்பெற்ற பிறவி யாகலினென்க. மேலும் இன்பமே நுகரும் விண்ணுலகத்திலே கடவுள் நினைவு வருதல் அரிது. துன்பமே நுகரும் கீழுலகத்திலே கடவுளின் அருட்டன்மை இனிது விளங்காது. ஆதலால், இரண்டு முடைய நிலவுலகிற் பகுத்தறிவோடு பிறத்தல் கடவுளை வழி படுதற் கேதுவாயிருத்தலின்,

" எண்ணரிய பிறவிதனின் மானுடப்
 பிறவிதான் யாதினு மரிதரிதுகாண் "

—சித்தர்கணம் 4.

என்றார்.

உயிர் ஒருமுறை மனிதப் பிறப்பெடுத்தால் அதன் அடுத்த பிறவியும் மனிதப் பிறவியாயிருக்க வேண்டுமெனல் கட்டாயமில்லை யாதலின்,

" இப்பிறவி தப்பினுல் எப்பிறவி வாய்க்குமோ "

—சித்தர்கணம் 4.

என்றார்.

அரிய மனிதப் பிறவி பெற்றபின் உலக நடையிற் செல் வது துன்பமென்பார்,

" துன்பமா யலையவோ உலகநடை யைய் வொரு
சொப்பனத்திலும் வேண்டிலேன் " —சுகவாரி 4.

என்றார்.

உலகநடையி னியல்பினைச் சித்தர்கணம் 5-ம் பாட்டிலே அடிகள் தெளிவாகப் பேசுகின்றார்:

"பொய்மிகுந்து விளங்கும் உலக நடையைப்பற்றி யாது சொல்வேன்? உலகினர் காலங்கழித்தல் எப்படி யெனில், நிலையற்ற வுடலினைப் பாதுகாத்தற்பொருட்டு உணவுக்காகத் திரிதல், உண்டபின் தூங்குதல் என்னும் அவ்வளவினதே. இந்த இரண்டும் வஞ்சகத்திற்கிடந் தருவதேயன்றி உயிர்க்குறுதி பயக்கும் நற்றவமாமோ? இது கண்ணிலாத குருடர்க்கும் வெளியாய்த் தெரிந்ததே. இவ்வொழுக்கத்தைக் கண்டித் தொழித்து அதனின் விலகி நிற்றல் எந்தக் காலத்திலோ எனக்குத் தெரியவில்லை" யென்றது காண்க.

அடிகள் ஐம்பெரும் பாதகமில்லாத நல்லொழுக்கம் வேண்டுமென்பார்,

" கொலை களவு கட்காமம் கோபம் விட்டாலன்றோ
மலையிலக்கா நின்னருள்தான் வாய்க்கும் பராபரமே "

—பராபரக்கண்ணி 288.

என்றார்.

கொல்லாமையை அடிகள் மிகவும் உறுதியுடன் வற்புறுத்துகின்றார். கொல்லா விரதத்தை உலகத்தார்க் கெல்லா முரைக்கும் இச்சையுடையார் அடிகளாதலின்,

"கொல்லா விரதங் குவலயமெல் லாமோங்க
எல்லார்க்குஞ் சொல்லுவதெ னிச்சை பராபரமே"

—பராபரக்கண்ணி 54.

என்றார்.

ஆனந்தமானபரம் 1ல் "கொல்லாமையாகிய குணம் எத்தனை தீக்குணங்களைப் போக்கும், அஃது இல்லாத விடத்துக் கொடிய நடக்கைகளெத்தனை? ஓரமான செய்கைகளெத்தனை? முரணான குணங்களெத்தனை, அறியாமையால் வரும் வீணான கொடுமைகளெத்தனை? செருக்கான செய்கைகளெத்தனை? கரவான செயல்கள் எத்தனை? உயர்ந்த நல்ல காரியங்கள் சொன்னாலும் தெரியாதிருக்கும் வகைகள் எத்தனை? நற்கதிக்கென்று அமைத்த அருள் நெறியிற் செல்லாது தவறிழைப்பதெத்தனை? வீண் கூட்டங்களெத்தனை? பயனில் முயற்சிகள் எத்தனை? பயனற்ற நினைவுகள் எத்தனை? சஞ்சலங்கள் எத்தனை? நிலையற்ற உடலில் வைத்த விருப்பத்தாற் செய்யுஞ் செயல்களெத்தனை? இவை யொழிந்த பிற குற்றச் செயல்களெத்தனை? உனக்கடிமையாகிய நான் இவற்றிற்கெல்லாம் ஆளாவேனே" என்றது காண்க.

கொல்லாமை யென்பது, எவ்வுயிரையும் அதன் உடலில் நின்று பிரிக்காமையென்பது மாத்திரமன்று. பிறவுயிர்க் கெவ்வகையான தீங்கு மியற்றாதிருத்தலும் அதன் கணடங்கும். எல்லா உயிரையுந் தன்னுயிர்போற் கருதி அவற்றிற்கு நன்மை செய்தலே கொல்லாமையாகும்.

"எவ்வுயிர்த் திரளு முலகி னென்னுயி
ரெனக்குழைந் துருகி நன்மையாம்"

—சிற்சுகோதயம் 8.

'என்னுயிரெனக் குழைந்துருகின் நன்மையாம் இதமுரைப்ப' என்றதுமது.

அஞ்சத்தக்க கொடிய செய்கைகள் கொலை செய்வாரிற் காணப்படுதல் யார்க்குந் தெளிவு. பிறருக்குப் பசி

வந்தகாலை உணவு கொடுத்தல் ஆசாரக்குறை, தாகந்தவிர்ப்பத் தண்ணீருதவுதல் ஆசாரக்குறை யென்ற கொள்கையுடையார் இரக்கமின்மையால் ஓரமுடையவர்களாகின்றார்கள். ஒருவனுக்கு இருமனைவிகளும் குழந்தைகளு மிருக்குங்காலை, ஒரு மனைவி தன் குழந்தைகளைப் பார்ப்பதுபோல மற்றொரு மனைவியின் பிள்ளைகளைக் கவனியாதிருத்தல் ஓரமான செயலுக்கு உரிய எடுத்துக் காட்டாகும். இஃதும் தன்னைப்போலப் பிற உயிரைக் கருதாமையால் வருவதே. கொன்றுண்பார்க்கு வன்குணமமையுமென்று நூலோர் கூறுகின்றார்கள்.

"படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்கா—தொன்றன்
உடல் சுவையுண்டார் மனம்"

என்றார் ஆசிரியர் திருவள்ளுவனார். அறியாமையாற் சிறு தெய்வங்கட்குச் சூற்பன்றி, எருமை, மாடு, ஆடு முதலியவைகளைப் பலியிடுதல் நிகழ்தலால், "பாழ்ங் கல்லாமை எத்தனை" என்றார். புதையல் ஒன்றைப் பூதமொன்று காப்பதாகக் கேள்வியுற்று அதற்கு நரபலிகூடச் செய்தற்கு அஞ்சாமை உலகத்திற் காணப்படுகின்றது. அகந்தை காரணமாக, அரசரும் செல்வரும் தொழிலாளரும் பிறரும் தங்கள் எதிரிகளைத் துன்புறுத்துவதுங் கொலை செய்வதும் எத்துணை முறை உலகில் நிகழ்கின்றன!

காமங்காரணமாக ஒரு பெண்ணை விழைவார் பலருட் கலாம் விளைத்து கொலை நிகழ்தல் யாவரும் அறிந்ததே. ஊனுண்பார்க்கு எவ்வளவு போதித்தாலும் தங்கள் பழக்கத்தை விடுதல் கடினமென்று சொல்வதோடமையாது ஊனுண்டலே நல்லதென்று வாதித்தலுங் காணப்படுதலின், 'சற்காரியஞ் சொல்லிடினுமறியாமை யெத்தனை' யென்றார்.

தனக்குத் தீங்கிழைத்த பிறவுயிர்க்குந் தீங்கிழையாமையாகிய அருள்நெறி வீடு சேர்க்குமாதலின், 'கதிக்கென் றமைத்தவருள்' என்றார். வீண் பொழுது போக்குவார் கூடுங் கூட்டங்களிலே வேடிக்கை விளையாட்டாகச் சாவற் போர் முதலிய கொடுமைகள் நிகழ்தலின் அடிகள் அவற்றைக் குறித்துரைத்தார். ஊன் வேள்வி முதலியன வியற்றினாற் பலன் உண்டென்று கருதி அவற்றைச் செய்ய முபலுதலும் அவற்றைச் சைவர்கள் செய்யலாமோ செய்யலாகாதோ வென்ற ஐயுறவுகளும் பிறவும் ஏற்படுதலாற் 'சிந்தை எத்தனை சலனம்' என்றார். நில்லாத தேகத்தை நோயினின்று காத்தற்கு ஊன் கலந்த மருந்து முதலியன உட்கோடல் கொலைச் சார்புடையதாகலின், இந்திர சாலம் போன்ற தேகத்தில் வாஞ்சை முதலா அல்லாமை யெத்தனை' என்றார்.

எவ்வாற்றானுங் கொலையை யொழித்தவரே நல்லவரென்பது அடிகள் கருத்து.

"கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர்மற்
றல்லாதார் யாரோ அறியேன் பராபரமே"

—பராபரக்கண்ணி 192

இறைவனது திருவருளை நாடி நிற்பதொன்றே அடிகள் யாண்டும் விரும்புவது. இரக்கமும் ஒருவருக்குத் திருவருளுதவியால் உண்டாவதென்பார்,

"எவ்வுயிரு மென்னுயிர்போ லெண்ணி யிரங்கவுநின்
தெய்வவருட் கருணை செய்யாய் பராபரமே"

—பராபரக்கண்ணி 65.

என்றார்.

அன்பர் பெருமை கூறுமிடத்தும், கொல்லாமை அன்பரது சிறப்பிலக்கண மென்பார்,

"எவ்வுயிருந் தன்னுயிர்போ லெண்ணுந் தபோதனர்கள்
செவ்வறிவை நாடிமிகச் சிந்தைவைப்ப தெந்நாளோ"

—எந்நாட்கண்ணி அன்பர் நெறி 12.

என்றார்.

"கொல்லா விரதியர் நேர்நின்ற முக்கட் குருமணியே"

—பாயல்புலி 22.

என்றமது.

இல்லறம் துறவறம் என்ற இருநெறியுந் திருவருள் வழி நிற்போர்க்கு மேன்மை தருவனவே என்பது அடிகள் கருத்து.

"சாட்டையிற் பம்பர சாலம்போ லெலாம்
ஆட்டுவான் இறையென அறிந்து நெஞ்சமே
தேட்டம் ஒன்றுஅற அருட்செயலின் நிற்றியேல்
வீட்டறந் துறவற மிரண்டு மேன்மையே',

ஆசையெனும் 3.

தேட்டம் ஒன்றுஅற அருட்செயலின் நிற்றியேல்
வீட்டறந் துறவற மிரண்டு மேன்மையே"

— ஆசையெனும் 3.

என்றது காண்க.

ஒரு கயிற்றிற் கட்டிய பம்பரத் தொகுதிகள்போல எல்லா உலகங்களையும் ஆட்டுவிக்கின்றவன் கடவுளென்றறிந்து எதையும் ஆசைப்பட்டுப் பெறமுயலாமல் திருவருட் செய்கைக்குட்பட்டு நிற்பையாகில் இல்லறம் துறவறமாகிய இரண்டும் மேன்மை தருவனவே என்றார். உல

கங்களெல்லாம் பம்பரம் போன்ற வடிவுடையனவாய், கடவுட் சக்தியை ஆதாரமாகக் கொண்டு சுழல்கின்றமை இக்காலத்துப் பூத நூல் வல்லாரும் நன்கறிந்ததே.

உயிர்கட் கிரக்கமுடைய அன்பருக்கே தான் ஏவல் செய்ய விரும்புவதாக அடிகள் குறித்தனர்.

"தம்முயிர்போ லெவ்வுயிருந் தானென்று தண்ணருள்கூர்
செம்மையருக் கேவலென்று செய்வேன் பராபரமே"

—பராபரக்கண்ணி 149.

"அளவின் மகமெலாம் புரிந்தோரை வாழ்வித்தனை"

—எனக்கெனச்செயல் 24.

என்றவிடத்து மகமென்றது ஊன் பயிலாத சிவவேள்வியை என்று கருதுக.

திருவருளை நாடி நிற்பார்க்குக் கல்வியினும் ஒழுக்கமே வேண்டற்பாலது என்பதே அடிகள் கருத்து. அடிகள் எக்குறையினையும் தன்மேலேற்றிப் பேசுமுகத்தால் பிறருக்கு அறிவுறுத்து மியல்புடையார்,

சித்தர்கணம் 10-ம் பாட்டில் "கல்லாத பேர்களே நல்லவர்கள், நல்லவர்கள், கற்றும் (நல்வழியில் நடத்தற்குரிய) அறிவில்லாத என் விதியை என்னென்று சொல்வேன். ஒப்பற்ற ஞானமுறையை நல்லோர் எடுத்து மொழிந்தால் கிரியை முக்கியமென்று அவருக்கு எதிரிடை கூறுவேன். கிரியை முக்கியமென்று ஒருவன் சொன்னால் அவனை எதிர்த்து நின்று ஞானம் முக்கியமென்று சொல்லுவேன். வடமொழி வல்லவன் ஒருவன் வந்தால் தென்மொழியிலே எல்லாம் நன்கமைந்ததாகப் பேசி வழக்காடுவேன். தக்க தமிழறிஞர் வந்தால் வடமொழியில் மேற்கோள்கள்

சிலவற்றைக் கூறுவேன். ஒரு நிலையில் நின்று உண்மை பேசி வெல்லாமல் எவரையும் மயக்கஞ் செய்யப் படித்த கல்வி எம்முத்தி தரும்'' என்றனர்.

மௌனகுரு 6-ம் பாட்டில் ஒழுக்கக் குறைகளைத் தம் மேல் வைத்து அடிகள் கூறுகின்றார். மேலாகிய அறிவு நூல்களைக் கல்லாமல் உலக நூல்களைக் கற்றுப் பெற்ற அறிவும் உயர்ந்த நூல்களைக் கேளாத கேள்வியும், இரக்க மற்ற பார்வையும், கொலை, களவு, கள், பிறன்மனை விழை தல் என்பவற்றை விரும்பும் நெஞ்சமும், பிறரை வஞ்சிக் கும் பொய் மொழியும் ஆகிய இவையன்றி நன்மைகள் பொருந்துங் குணம் எதனையும் நானறியேன். புருஷ வடி வம் பெற்றதே யல்லாமல் கனவிலும் புருஷார்த்தமாகிய அறம், பொருள், இன்பம், வீடென்னும் நான்கினுள் எதையும் நாடமாட்டேன். எனக்கு உய்யும் வழி எவ் வழியோ தெரியவில்லை.'' என்றனர்.

கற்றாலும் ஒழுக்கமில்லாத வழிப் பயனில்லை யென் பார்,

"கற்றும் பலபல கேள்விகள் கேட்டுங் கறங்கெனவே
சுற்றுந் தொழில் கற்றுச் சிற்றின்பத்தூடு சுழலி னென்னும்''

—பாயப்புலி 57.

என்றார்.

நூலறிவானது அறிவுக்கு அப்பாற்பட்ட கடவுளைக் காணப் பயன் படாதாதலின் திருவருளில் வழி அது பெரும் பயனைத் தராதென்பார்,

"நூலேணி விண்ணேற நூற்குப் பருத்தி வைப்பார்
போலே கருவி நன்னூற் போதம் பராபரமே''

—பராபரக்கண்ணி 186.

என்றார்.

நூலேணி என்றது சாத்திரங்களை. பருத்தி என்றது கருவி நூல்களை. ஏணி வைத்து ஆகாயத்தை எட்ட முடியாமை போலச் சுட்டறிவினு லுணரப்படும் நூலறிவு கொண்டு சுட்டிறந்த பெரும் பொருளை உணர முடியாது என்றது கருத்து.

'ஏட்டுச் சுரைக்காய் கறிக்காகாது' என்றபடி நூலிற் கற்றதை வாயினுற் பேசிக்கொண் டிருப்பதனுல் வாக்கு வாதம் உண்டாகுமேயன்றி இன்பம் யாது நுகர முடியாது. திருவருளில் நாட்டமில்லாது கிளிப்பிள்ளை போலக் கேட்டதைப் பேசிக்கொண்டிருப்பதாற் பயனில்லை. நுலாராய்ச்சி மாத்திரஞ் செய்து மகிழ்கின்றவர்கள் சிறு வீடுகட்டி மணற் சோறு சமைத்து விளையாடும் சிறு பிள்ளைகளை யொப்பர்.

"வாசகஞா னத்தால் வருமோ சுகம் பாழ்த்த
பூசலென்று போமோ புகலாய் பராபரமே"

"கேட்டதையே சொல்லுங் கிளிபோல நின்னருளி
னாட்டமின்றி வாய்பேச னன்றோ பராபரமே"

"சின்னஞ் சிறியார்கள் செய்தமணற் சோற்றை யொக்கும்
மன்னுங் கலைஞான மார்க்கம் பராபரமே"

—பராபரக்கண்ணி 188, 189, 187.

திருவருளின் வழிநிற்போர் தத்தந் தகுதிக் கேற்ற வாறு போக நெறியிலாவது வீட்டு நெறியிலாவது செல்லற் குரியர். சிவ சக்தி வழிபாட்டினுல் விரும்பிய பேறு கிடைக்குமென்பது அடிகள் கருத்து. ஆதி சத்தியாய் நின்று உயிர்களைப் போகத்திற் செலுத்தியும், அருட் சத்தியாய் நின்று வீட்டினிலுய்த்தும் பேருதவி புரியும் அம்மையை வழிபடுவதின் பயன் கூறுவார்,

"பதியுண்டு நிதியுண்டு புத்திரர்கள் மித்திரர்கள்
பக்கமுண் டெக்காலமும்
பவிசுண்டு தவிசுண்டு திட்டாந்தமாக யம
படரெனுந் திமிரமணுகாக்
கதியுண்டு ஞானமாங் கதிருண்டு சதிருண்டு
காயசித்திகளுமுண்டு
கறையுண்ட கண்டர்பா லம்மை நின்றாளிற்
கருத்தொன் றுமுண்டாகுமேல்"

—மலைவளர் காதலி 1.

"பட்ட வர்த்தனர் பராவு சக்ரதர பாக்யமான சுபயோகமும்
பாரகாவி யகவித்வ நான்மறை பாராயணஞ் செய்மதி யூகமும்
அட்டசித்தியு நல்லன்பருக்கருள விருதுகட்டிய
[பொன்னம்மே"—அகிலாண்ட நாயகி 1.

"பூதமொடு பழகிவள ரிந்திய மாம்பேய்கள்
புந்திமுதலான பேய்கள்
போராடு கோபாதி ராக்ஷசப் பேய்களென்
போதத்தை யூடழித்து
வேதனை வளர்த்திடச் சதுர்வேத வஞ்சன்
விதித்தா னிவ் வல்லலெல்லாம்
வீழும் படிக்குனது மௌன மந்த்ராதிக்ய
வித்தையை வியந்தருள்வையோ"

—மலைவளர்காதலி 8.

என்றது காண்க.

போக நெறியை விட்டு ஞானநெறியை யடைதல் மிகவும் அரிய செய்கை யென்பார், ஐம்புலன் நுகர்தற்குரிய பொருள்கள் நெருப்பாறுகவும், ஞானம் அதனைக் கடக்குமயிர்ப்பாலமாகவு மிருப்பதாகக் கூறினர்.

"ஏறு மயிர்ப்பால முணர்வு இந்த விடயங்கள் நெருப்பு
ஆறெனவு நன்று யறிந்தேன் பராபரமே.

—பராபரக்கண்ணி 174

தாயுமான அடிகள் உலக நெறியையுந் தவநெறியையும் ஒரு செய்யுளில் வேற்றுமை நயந் தோன்றக் கூறியுள்ளார்.

எங்கு நிறைகின்ற பொருள் 9-ம் பாட்டில் "என தன்பர்கள் மரவுரியை உடுத்திக் கொண்டும் மலை நெல்லினையும், காட்டு நெல்லினையும் பல்லினுற் கோதியுண்டும், மரங்களினின்று உதிர்கின்ற சருகுகள் தமது வாயில் வீழ்ந்தால் அவற்றைத் தின்றும், கடுமையான பசியைத் தவிர்த்துக் கொண்டும், தீ, வெயில், மழை முதலியவற்றால் வருந்திக் கொண்டும், மூலாதாரத்திலுள்ள அனலைத் தலைவரை எழுப்பியும், புனிதநீரில் மூழ்கியும், உடம்பு நம்முடையதல்லவென்றும் கருதி உடலின்பத்தை விரும்பாது அறிவின்பத்தை விரும்பி யோகம் நடத்தினார்கள். பாவிகளாகிய யாங்களோ விரும்பிய வண்ணம் அறுசுவை உணவுகளை அருந்தி, இடுப்பில் விரும்பிய உடைகளெல்லாம் உடுத்தி, மேடை மாளிகைகளிலமர்ந்து, வேறொரு வருத்தமுமில்லாமல் இரவும் பகலும் மகளிரோடு கலந்து இருப்பதானோம், நாங்கள் எவ்வாறு பிழைப்பதென்று சொல்வாயாக" என்றது காண்க.

எத்தன்மையான போகத்தை நுகர்ந்தாலும் திருவருளை மறவாத வரந்தந்து கடவுள் தம்மைக் காக்க வேண்டுமென்பார்,

"பூங்கொத்துக்கள் விரிந்து மணங் கமழும் பொழில்களிலே நல்ல நிழலிற்றங்கி யிருந்தாலும், குளிர்ந்த இனிய

நீரினைக் கையினலள்ளி உட்கொண்டாலும், அந்நீரிடை முழுகி விளையாடினலும், தண்ணிய சந்தன மணங்கலந்த காற்றனது முற்றத்தில் உலாவுவதுபோல நல்ல மாதர்கள் உலாவக்கண்டு மகிழும் வசதியமைந்த காலத்தும், வெண்ணிற மிக்க முழுமதி பட்டப்பகற்போல நிலவு வீசுதலைக் கண்டு இன்புறுங்காலத்தும், விண்ணவர் பெற்ற கடலமுதம் போன்ற அறுசுவையுணவு கொண்டின்புறுங் காலத்திலும் நறுமணமாலை, வாசனைப் பொருள்கள், வெற்றிலை பாக்கு முதலிய விரும்பின யாவும் விரும்பியே அளவு நுகர்ந்து பலவகை விளையாட்டுகளிற் பொழுதுபோக்கி இனிது துயின்றலும், எக்காலத்தும் நின்னருளை மறவா வரந்தந்து அடியேனைக் காத்தருள்வாய்'' என்றார்.

கடவுளை நம்பி அன்பொடு தொழுது வைதாலும், வாழ்த்தினலும் கடவுள் பொறுத்தருள்வர். எனினும் அவரை எக்காலத்தும் வாழ்த்துவதே சிறந்த முறை என்பார், "வாயார உண்டபேர் வாழ்த்துவதும் நொந்தபேர் வைவதும் இந்த உலக வழக்கம். ஆனல் உன்னுடைய ஞான நூல்முறை யாதெனின், உன்னை வாழ்த்தியவர்கள் பெறுதற்கரிய உயர்ந்த பேற்றினைத் தவறது எப்போதும் பெறுவர் என்பதே. அங்ஙனமிருக்க, அதற்கு மாறகக் குழறுதல் நல்லதன்று. ஆகலின் உலகமுறை இரண்டில் எது சிறந்ததென்று தாய்போற் குற்றம் பொறுக்கும் நீ தெளிவாக உரைத்தருள்வாய்'' —சச்சிதானந்தசிவம் 8.

என்றார்.

போகம் வேண்டிச் செல்லும் நெறியிலே பலகாலும் முயன்று முத்தி நெறியை விரும்பாத அறிவிலேன் என்று

தம்மை இகழ்ந்து, சித்தி நெறிக்குத் தாம் தகுதியிலராகார் என்று கூறி அன்பர் பணிசெய்யும் பத்தி நெறியாவது தமக்கு அருளவேண்டுமென்று அடிகள் வேண்டினர்.

"புத்திநெறியாக வுனைப் போற்றிப் பலகாலும்
முத்திநெறி வேண்டாத மூடனேன் ஆகெடுவேன்
சித்திநெறிக் கென்கடவேன் சீரடியார்க் கேவல்செயும்
பத்திநெறிக் கேனுமுகம் பார்ப்பீ பராபரமே"

—தீடமுறவே 9.

இதனல், சித்திநெறியும் முத்திநெறியும் ஒன்றோடொன்று தொடர்புடையன வென்பதும், இரண்டும் பத்திநெறியில் நிற்பதாற் பெறற்பாலன வென்பதும், பத்தி நெறி இவற்றிற்கு வேருவதென்பதும் அடிகள கருத்து என்பது தெளிக.

## அதிகாரம் 8.

### சித்தரியல்பு

முத்தி யடையும்வரை உடல் வேண்டப்படுமாகலான் பல பிறவி எடுப்பதற்குப் பதிலாக ஒரு பிறவியிலேயே காய சித்தி பெற்று முத்திக்குரியராதல் சிறந்ததென்பது அடிகள் கருத்தாதலின்,

"தேகம் யாதேனு மொருசித்தி பெறச் சீவன் முத்தி
யாகுநெறி நல்லநெறி யையா பராபரமே"

—பராபரக்கண்ணி 357.

என்ருர். இதனுள் யாதேனுமொரு சித்தி என்றது மூவகைச் சித்திகளுளொன்றை யென்க.

"முத்தியிலுந் தேகமிசை மூவிதமாஞ் சித்தி பெற்றோர்
எத்தனை பேரென் றுரைப்ப தெந்தாய் பராபரமே"

—பராபரக்கண்ணி 209.

என்றவிடத்து உருவசித்தி, அருவசித்தி, அருவுருவ சித்தி யென்பன குறிக்கப்பட்டன. சுந்தரமூர்த்திநாயனார் உருவ சித்தி பெற்றவரென்றும், சம்பந்தமூர்த்தியும் அப்பரும் அருவுருவசித்தி பெற்றவரென்றும், மணிவாசகப் பெருமான் அருவசித்தி பெற்றவரென்றுங் கூறுப. அகண்டாகார சிவத்தின் பேரருள் பதியப்பெற்ற அன்பரது திருமேனி கற்பூர தீபம்போல விளங்கும் என்பார்,

"சித்த நிருவிகற்பஞ் சேர்ந்தா ருடல்தீபம்
வைத்த கற்பூரம்போல் வயங்கும் பராபரமே"

—பராபரக்கண்ணி 245.

என்றார்.

அவர்கள் உடம்பு தூயதாயும், மயக்கஞ் செய்யாத அறிவுமயமாயு மிருக்குமென்றறிக.

"வெளியா யருளில் விரவு மன்பர் தேகம்
ஒளியாய்ப் பிறங்கியது முண்டோ பராபரமே"

—பராபரக்கண்ணி 190.

என்றதுமது. பட்டினத்தடிகள்போலச் சீவன்முத்தர் திருமேனி, அவர்கள் முத்தி யெய்தபின் இலிங்க வடிவமா யிருப்பது முண்டென்பதை,

"சத்தாகி நின்றோர் சடங்கள் இலிங்கமென
வைத்தாரும் உண்டோ என்வாழ்வே பராபரமே"

—பராபரக்கண்ணி 244.

என்ற வினவினு லறிவுறுத்தினர்.

காயசித்தி முத்தியின் பொருட்டாதலின் முத்தியடை யும்வரை உடல் வேண்டுமென்பார்,

"அறிவி லறியாமையற்று அறிவாய் நின்று
பிறிவற வானந்த மயம்பெற்றுக் குறியவிழ்ந்தால்
அன்றைக்கு உடல் வேண்டேன் ஐயா இவ்வாக்கையையே
என்றைக்கும் வேண்டுவனே யான்"

—உடல்பொய்யுறவு 33.

என்றார். உலகப் பொருளையறியும் அறிவும் அறியாமை யும் ஒழிந்து, அருளில் நிலைபெற்ற அறிவாய் நின்று சிவா னுபவம் பெற்றுத் தற்போத மொழிந்த அந்த நாளில் உடல் வேண்டேன். அதுவரை இந்த உடம்பே எப்போதும் வேண்டும் என்றது காண்க.

"சட்டையொத்த விவ்வுடலைத் தள்ளு முன்னே நான்சகச
நிட்டையைப்பெற் றையா நிருவி கற்பங் காண்பேனோ"

—காண்பேனோவென் கண்ணி 32.

என்றதுமது. முடிந்த பயனாகு உடற்சித்தியை அடிகள் வேண்டிற்றில ரென்பது,

"கற்றாலுங் கேட்டாலுங் காயமழியாத சித்தி
பெற்றாலும் இன்பமுண்டோ பேசாய் பராபரமே"

—பராபரக்கண்ணி 285.

என்றமையாலினிது விளங்கும். உடலுள்ளபோதே சீவன் முத்தியடையாமல், உடல்நீத்தபின் உயிர் முத்தியிற் சேர்த லென்பது பொருந்தாதென்பார்,

"உலக நெறிபோற் சடலம்ஓய உயிர்முத்தி
யிலகும் எனல் பந்தவியல்போ பராபரமே"

—பராபரக்கண்ணி 358.

என்றார்.

தமக்கு மேற்பிறவி யுண்டெனில், யோகநெறி நின்று காயசித்தி பெற்று முத்தி நாடும்படி உதவவேண்டும். பிறவி இல்லையெனின், அருட்சத்தி துணைகொண்டு உயிர் முத்தி யெய்தவும் உடல் கற்பூர தீபம்போல வயங்கவும் இறைவன் அருள்புரிய வேண்டும் என்பார்,

"இன்னமும் பிறப்பதற்கு இடமுண்டென்றால் இந்த உடம்பு இறவாதிருக்கும்படி மூலாதாரத்தில் உண்டாகின்ற அனலானது அமுதத்தை ஊற்றும் மதிமண்டலத்திற் பொருந்தும்படி என் தாயாகிய குண்டல சத்தியினிடத்திலே மாறுபாடு யாதுமில்லாது குழந்தைபோல என்னை வளர்த்திடும்படி பேயேனை ஒப்புவித்தல் வேண்டும். பிறவாத நெறி எனக்கு உளதாயின் இப்பிறவியிலேயே கற்பூர ஒளிபோல மின்னும்படி எங்கும் நிறைந்த அருட்சத்தியாகிய பராசத்தியினிடம் வினைபேனை ஒப்புவித்து வீட்டுநெறி அடைவித்தல் மிகவும் நல்லது. இந்த இரண்டு வழியுமில்லாது உலக நெறிதான் எனக்கு உண்டெனில் தன்னந் தனியனாயிருக்கிற சிறியேன் அதனைத் தாங்க மாட்டேன்" என்றது காண்க.

காயசித்தியும் முத்தியும் பெற்ற பெரியோர்களைச் சித்தர்கணத்தில் வைத்துப் போற்றுவாராயினர்.

—சித்தர்கணம் 8.

சித்தர்கள்பால் அடிகள் வேண்டும் வரம் சித்தர் கணம் நான்காவது பாட்டினிற் காணப்படும்.

இந்த அகன்ற உலகிலே நான் உள்ளபொழுதே திருவருளாகிய வான்மண்டலத்தினின்றே நிலைத்த வரமாக இன்ப மழையைப் பொழிகின்ற மேகத்தோடு சேர்ந்து என்

அறிவானது பரவசப்படும்படி செய்வது நன்று. அத்தகைய நிலையில் உறுதியுறும்வரை இந்த உடம்பின் கூத்துக் கலையாமல் குண்டலிசத்தி என்னும் அம்மையின் அருளினாலே ஆகாயத்திலுள்ள மதியின் அமுதமானது இடையறாது பொழியப் பெறுவான் உங்கள் அடிமையாக வேண்டுமேனென்றார்.

சித்தர்கள் அட்டாங்க யோகம் வாய்ந்தவர்களாதலால்,

"மெய்திகழும் அட்டாங்க யோக பூமிக்குள் வளர் வேந்தரே"

—சித்தர்கணம் 5.

என்றும்,

"என்றைக்கு மழியாத சிவராச யோகராய்"

—சித்தர்கணம் 6.

என்றுங் கூறினர்.

யோகம் என்பது நுண்ணிய உடம்பிலுள்ள சுழுமுனை என்னும் நாடியின் வாயிலாகப் பிராணவாயுவின் உதவியால் மூலாதாரத்துக்கு மேலுள்ள அனலைச் சிரசின் நடுவிலுள்ள சந்திர மண்டலத்திற் சேர்த்து அதன்கண் நின்றொழுகும் அமுதத்தினை உடலெங்கும் பரவச்செய்து நெடுநாள் உயிரோடிருத்தலாகிய காயசித்தியைக் கருவியாகக் கொண்டு கடவுளை நினைந்து வழுபடுமுறை.

"மூலப் பிராண னோடங்கியைச்
சோம வட்டத் தடைத்துஞ்
சொல்லரிய வமுதுண்டு மற்பவுடல் கற்பங்க
டோறு நிலைநிற்க வீறு
சித்தி செய்தும்"

என்றவிடத்து யோகத்தினியல்பு குறிக்கப்பட்டது காண்க. யோகத்தில் ஆறு ஆதாரமும் மூன்று மண்டலமும் இன்றியமையாதவை.

“ கெடிகொண்ட தலம்ஆறும் மும்மண் டலத்தினும்
கிள்ளாக்குச் செல்ல ” —சித்தர்கணம் 6.

என்றது காண்க.

இடைகலை, பிங்கலை, சுழுமுனை என்னும் மூன்று நாடிகளும் ஆறு ஆதாரத்தையும் மூன்று மண்டலத்தையும் ஊடுருவிச் செல்லுவன. சுழுமுனை என்பது உடம்பின் நடுவாக வுள்ளது. இடை என்பது இடது நாசியினால் உள்ளே வாங்கும் மூச்சாகும். பிங்கலை என்பது வலது நாசியின் வழியாகச் செல்வது. சுழுமுனை என்பது இரண்டு பெருவிரல் வரையும் இரு பிரிவாகவும் மூலாதாரத்தில் நின்று ஒரு பிரிவாகவும் உள்ளது. மூலாதாரமென்பது, குறிக்கும் குதத்திற்கும் நடுவே வட்ட வடிவமாயுள்ளது. அதன் நடுவே மின்னல் ஒளியுடைய முக்கோணம் ஒன்றிருக்கின்றது. அம்முக் கோணத்தின் நடுவே நாலிதழ்ப் பூ வொன்றிருக்கின்றது. அந்தப் பூவிற்கு நடுவில் ஓங்கார எழுத்து நிற்கும். அந்த ஓங்காரத்திற்கு நடுவில் கணபதியும் அவருடைய பச்சை நிறமான சத்தியும் எழுந்தருளி இருப்பார்கள். ஓங்காரத்திற்கு அணித்தாகக் குண்டலி சத்தி என்பது மூன்றரை வளையம் உள்ள பாம்புபோல் மூலாதாரத்துள்ள சுழுமுனையின் வாயை அடைத்துக் கொண்டிருக்கின்றது.

மூலாதாரத்துக்கு மேல் இரண்டங்குலத்தில் சுவாதிட்டான மென்னும் ஆதாரமுள்ளது. அது நாற்கோணமுடையது. அதன் நடுவில் ஆறிதழ்ப் பூ வொன்றுள்ளது.

அதன் நடுவில் நகர எழுந்துள்ளது. அதன்கண் அயனார் தமது சத்தியோடிருப்பார். இந்த இடம் பொன்னிற மானது. இது முதற்கலையின் கூறு.

உந்திக்கமலமே மணிபூரகமெனப்படும். இது ஏழாம் பிறை போன்றிருக்கும். இதன் நடுவே பத்து இதழை யுடைய மலர் வட்டமாயிருக்கும். அதன் நடுவிலே மகர வெழுத்துள்ளது. அதன்கண் திருமால் தனது சத்தியோ டிருப்பர். இது பளிங்கு நிறமுள்ளது. இது இரண்டாங் கலையின் கூறு.

இதய கமலம் அநாகத மெனப்படுவது. இதன் கண் ஒரு முக்கோணமும், அதன் நடுவில் பன்னிரண்டிதழுடைய ஒரு பூவும் உள்ளன. அந்தப் பூவின் நடுவில் சிகார வெழுத் துள்ளது. அதனடுவில் உருத்திரமூர்த்தி தமது சத்தி யோடு வீற்றிருப்பார். இது மூன்றாங்கலையின் கூறு.

கழுத்திலே விசுத்தி என்னும் ஆதார முள்ளது. இது அறுகோணமாயிருக்கும். அதன் நடுவிலே பதினாறிதழ்ப் பூவொன்றுளது. அதன் நடுவே வகார எழுத்திருக்கும். அதன் நடுவில் மகேசுவரர் தமது சத்தியோடு எழுந்தருளி யிருப்பர். இது நான்காம்கலையின் கூறு. இது மேக நிறமுள்ளது.

ஆஞ்ஞை என்னும் ஆதாரம் இரண்டு புருவத்திற்கு மிடையேயுள்ளது. மூன்றிதழ்ப் பூவொன்றின் நடுவில் யகாரத்தில் சதாசிவமூர்த்தி மனோன் மணியுடன் எழுந் தருளி இருப்பர். இது படிக நிறமாய், ஐந்தாங்கலையின் கூறாயுள்ளது.

இந்த ஆறு ஆதாரங்களிலும் உள்ள பூக்களின் இதழ் நுனிகள், கிரந்த எழுத்திலுள்ள ஐம்பத்தொரு எழுத்துப்

போலிருப்பதால் ஐம்பத்தொரு எழுத்துக்களும் அவைகளிலுள்ளன வென்று கூறுதல் மரபு. கிரந்த எழுத்து தமிழ் எழுத்திலிருந்து வந்தவை. க்ஷகரம் ஐம்பத்தொரு எழுத்தில் தனி எழுத்தன்று.

இந்த ஆறாதாரங்கட்குயிரான மந்திரங்கள் பிரணவமும் ஐந்தெழுத்துமாம்.

"ஓங்கார மாமைந் தெழுத்தாற் புவனத்தை யுண்டு பண்ணிப்"
பாங்கா நடத்தும் பொருளே யகண்ட பர சிவமே"

—பாயப்புலி 9.

என்றது காண்க.

க்ஷகாரமானது ககரமும் சகரமும் சேர்ந்தது ஆதலால் அதைத் தவிர்த்து எழுத்துக்கள் ஐம்பது ஆதலின்,

"ஐம்பதெழுத்தே அமர்ந்த வேதங்கள்
ஐம்பதெழுத்தே ஆகமாதிகள்
ஐம்பதெழுத்தின் அறிவை யறிந்தபின்
ஐம்பதெழுத்தே ஐந்தெழுத் தாமே"

என்ற திருமூலர் வாக்கானறிக.

இனி மும்மண்டலங்களாவன; நெருப்பு மண்டலம், ஞாயிற்று மண்டலம் திங்கள் மண்டலமென்பன. நெருப்பு மண்டலம் மூலாதாரத்திற்கு இருவிரற்கிடைக்கு மேலிருக்கின்றது. அது முதற் பூதமும் இரண்டாம் பூதமும் கூடினவிடத்தில் நாற்கோணமாய் நடுவேயொரு முக்கோணமுடையதாய் நாலிதழ்ப்பூப் போன்றிருக்கும்.

ஞாயிற்று மண்டலம் உந்திக்கு நாலுவிரலுக்கு மேலே இருதயகமலத்திற்கு அருகாக அறுகோணமாய் எட்டிதழ்ப் பூப் போன்றிருக்கும். திங்கள் மண்டிலம் தலைநடுவில்

மிகுந்த வொளியோடு அமுதகலையுள்ளதாய் விளங்கும். சிலர் நெருப்பு மண்டலம் மூல முதல் உந்திவரையிலும், ஞாயிற்று மண்டிலம் உந்தி முதல் கண்டம் வரையிலும், திங்கள் மண்டிலம் கழுத்து முதல் புருவம் வரையிலும் வியாபித்திருக்கின்றதென்பர். அசபை என்பது மூச்சினை இழுக்குங்காலும் வெளி விடுங்காலும் ஏற்படும் நுண்ணொலியாகிய மந்திரம். அதை அம்சமெனவும், சோகமெனவுங் கூறுவர்; ஊமை மந்திரமெனவு முரைப்பர். திங்கள் மண்டிலம் கீழ் நோக்கிப் பொழியும் அமுதத்தை நாபியின் மேலுள்ள கதிரவமண்டிலம் விழுங்கிவிடுகின்றதென்றும், அதனால் நரை, திரை, உண்டாகின்றனவென்றும், யோக நூலிற் கூறப்பட்டுள்ளது.

சிவராஜ யோகமென்பது யோகத்தைக் கருவியாகக் கொண்டு சிவத்தியானம், சமாதி என்பவற்றை முயன்றடைதலாகும். புருவநடுவிலிருந்து ஆறுவிரற் கிடைக்கப்பால், தலைநடுவில் (பிரமரந்தரத்தில்) இருக்கிற ஆயிரவிதழ்த் தாமரையைச் சிவசூரியனால் விரியச் செய்து, அத்தாமரைப் பூந்தாதுவினுள்ள திங்கள் மண்டிலத்தை மூல நெருப்பினால் இளக்கி அதன் அமுதத்தை எல்லா நாடிகளினும் பரவச் செய்வதே செய்புமுறையென்ப. யோகத்திற்கு முத்திரை, கரணம், பந்த முதலிய பல உபாயங்களினும், கடவுட்டியானம் சிறந்ததாகலின், யோகத்துடன் கூடிய சிவத்தியானத்தைச் சிவராஜயோகமென்பர். வெறும் யோகத்தினும் சிவயோகமே மிகச் சிறந்ததாகலின்,

"என்றைக்கு மழியாத சிவராச யோகமாய்"

என்றனர்.

சுழுமுனை நாடியின் வழியாக, இந்த யோகத்தினியல் பினை அடிகள் சிற்சுகோதய விலாசம் 6-ம் பாட்டினும், பாயப்புலி 28-ம் பாட்டினும் விளக்கியுள்ளார்.

சுழுமுனை வழியாகப் பிராணவாயு முதலியன செல்லுங்கால பலவகையான இசையொலிகள் கேட்கப்படும். அவற்றைத் திருமூல மாமுனிவர், ஒரு செய்யுளிலடக்குகின்றார்.

" மணிகடல் யானை வளர்குழல் மேகம்
மணிவண்டு தும்பி வளைபேரிகை யாழ்
தணிந்தெழு நாதங்கள் தாமிவை பத்தும்
பணிந்தவர்க் கல்லது பார்க்க வொண்ணாதே "

—திருமந்திரம் 606.

என்றது காண்க.

" தெசவித மாய்நின்ற நாதங்க ளோலிட "

—சித்தர்கணம் 6.

என்றதுமது.

யோகிகளுக்குத் திங்கள் மண்டிலம் விரிந்து அமுதம் பொழிதலின் அதனை •அரசர்களது கொற்ற வெண் குடைக்கு உவமையாக்கிப்,

" பூரண மதிக்குடை திகழ்ந்திட " —ஷை 3.

என்றார்.

இனி, அட்டாங்க யோகமானது பதஞ்சலி முனிவரால் யோக சூத்திரத்தில் விரிவாக விளக்கப்பட்டது. அவற்றின் பகுதியாவன:—இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன. இயமமென்பது கொல்லாமை, பொய்

யாமை, களவின்மை, பொறியடக்கம், உண்மை, பொறுமை நடுவு நிலைமை, தயை, தூய்மை, கள்ளுண்ணாமை, தூய, அளவான உணவுகோடல் என்பன. நியமமாவது:—தவம், செபம், மன நிறைவு, கடவுள் நம்பிக்கை, கடவுள்வழிபாடு, ஈகை, மெய்ந்நூற் கேள்வி, விரதம், நன்மையில் விருப்பம், பாவத்தில் வெறுப்பு என்பன.

ஆசன மென்பது முக்கியமாக எட்டுவகை இருக்கைகளைக் குறிக்கும். அவற்றுள் சிறப்பாகச் சொல்லப்படுவது, பதுமாசனம். அஃதாவது, இருதொடை மேலும் இரண்டு உள்ளங்கால்களையும், மாறித்தோன்ற வைத்தல். இடது தொடையில் வலக்காற் பரட்டையும் வலத் தொடையில் இடக்காற் பரட்டையும் வைத்திருத்தல் என்னலாம். ஆசன வகைகளை யோக நூல்களுட் காண்க. சுகாசன மென்பது உடம்பின் வசதிக்குத் தகுந்தபடி இருந்து கொள்ளுதல். அது எல்லார்க்கும் இயல்வதே.

பிராணயாமமென்பது மூச்சை இழுத்து நிறுத்தி வெளியிடுவது. அஃதாவது, இடது நாசி வழியாகப் பதினாறு மாத்திரைக்காலவளவிலே காற்றை இழுத்து அறுபத்துநாலு மாத்திரை அளவு உள்ளே நிறுத்தி முப்பத்திரண்டு மாத்திரையாகும்வரை வலது நாசியால் வெளிவிடுதலாம். மூச்சினை இழுத்தல் பூரகமெனவும், நிறுத்தல் கும்பகமெனவும், வெளிவிடுதல் ரேசகமெனவும் கூறப்படும். பிரத்தியாகார மென்பது, புறப்பொருள்களில் நின்று மனதை இழுத்து உள்ளே நோக்குதல்; தாரணை என்பது உள்ளே இருக்கும் ஆதாரங்கள் ஏதாவதொன்றில் மனதை நிறுத்துதல்.

தியானமென்பது ஐம்புலனையு மடக்கிக் கடவுளை இடைவிடாது நினைத்தல். சமாதி என்பது மனம் ஒடுங்கி நினைத்த தியானப் பொருளோடு இரண்டறக் கலந்து நிற்றல். எட்டு அங்கங்களையும் எட்டு மலைகளாகக் கூறுவதுமுண்டு. சுழுமுனையின் உச்சியை மேரு வென்பர். குண்டலி சத்தியை யோக முயற்சியால் எழுப்பியகாலை அது ஒரு நேரான கோல்போல் நிமிர்தலால் அதனை யோக தண்டக் கோல் எனக் கூறலுமுண்டு. சந்திர மண்டலத்தினுள்ள அமுத கலைகளை மேகங்கட்கு உவமை கூறுதலுண்டு.

"மைதிகழு முகிலினங் குடைநிழற் றிடவட்ட
 வரையினொடு செம்பொன்மேரு
மால்வரையின் முதுகூடும் யோகதண் டக்கோல்
 வரைந்து சயவிருதுகாட்டி"

—**சித்தர்கணம் 5.**

என்றதுமது.

யோகியர்க்குப் பிராண ஒடுக்கம் வாயிலாக மன ஒடுக்கம் அமைதலின் மலையமாயபின், ஞானத்தைப் பற்றுதல் எளிதாமாகலின், யோகியர்க்கே ஞானமொழுங்காம்,

"யோகியர்க்கே ஞான மொழுங்காம் பேரன் பான
தாகியரும் யோக முன்னே சார்ந்தோர் பராபரமே"

—**பராபரக்கண்ணி 90.**

என்றனர்.

பெருஞ் சித்தர்களியற்றும் அற்புதச் செயல்களைச் சித்தர்கணம் முதல் மூன்று பாட்டில் அடிகள் விளக்கினர். மனவேகம் போன்ற வேகத்தோடு எத்திக்கிலும் விரைந்து சென்று ஓடி ஆடி வருதலும், மேருமலையின் உச்சியில் விளங்கும் துருவத்தின்வரைபோய் நிற்றலும், எழுகடலையும்

உள்ளங்கை அளவாகக் கொண்டு பருகுதலும், விண்ணவரு லகத்தையும் இந்திரனது வெள்ளை யானையையும் பந்தாக விளையாடுதலும், வான் மண்டலங்களை எல்லாம் கடுகினிற் புகுத்தி எட்டுப் பெருமலைகளையுங் காட்டுவதும், வேறு வேறு மேலான சித்திகள் செய்வதும், கற்பக நிழலை உலகத் தில் வரவழைப்பதும், பதும நிதி, சங்க நிதி என்னும் இரண்டினையும் பணிகொள்ளுதலும் இரப்போரை மன்ன ராக்குதலும், ஊழி முடிவில் உண்டாகும் பெரு வெள் ளத்தை ஒரு கிணற்றி லடக்குவதும், உடைந்த ஓட்டினை ஆயிரத்தெட்டு மாற்றுள்ள பொன்னாக்குவதும், ஆதி சேடன் இளைப்பாறும்படி யோக தண்டத்திலே உலகத் தைச் சுமப்பதும், ஐம்பூதங்களும் ஒடுங்கிய காலத்துப் பர வெளியில் தங்கி யிருப்பதும், பிரளய வெள்ளத்தில் மிதந்து நீர் மேலுறையும் வண்டு போலச் சுழன்று சிவயோகத்தி லிருப்பதும், எழு மேகங்களும் மழைபொழியுங் காலத்து, மதிமண்டலத்தில் தங்கி விளங்குதலும், அயன் முதலி யோர் முடி வெய்துங்காலத்திலும் சிவ பிரான் அருளால் உலகத்திலுலாவுதலும், உலகங்களெல்லாம் கீழ் மேலாகப் புரளும்படி பெருங்காற்று வீசுங்காலத்தில் தாரண யோகத் தினால் மேரு போல அசையாமல் நிற்பதும் செய்ய வல்ல வர்கள் பெருஞ் சித்தர்கள் என்றனர்.

சிறந்த சித்திகள் எண்வகையாம். அவற்றுள் அணிமா வென்பது, அணுவினும் மிக நுட்பமான வடிவுற்று நிற்றல். இவ்வடிவோடு எத்திசையிலும் விரைவிற் செல்லுதல் எளிது. மகிமா வென்பது மேருவிலும் மிகப்பெரிய வடி வுற்று நிற்றல். இச்சித்தி கை வந்தவர், மேருவின் முடிவி லுள்ள ஒளிவட்டமாகிய துருவ மண்டலத்தினை அடைதல்

அரிதன்று. (மேருவின் உச்சியிலுள்ள ஒளிவட்டத்தினைத் தவஞ் செய்து துருவன் என்பவன் அடைந்தானாதலின் அதற்குத் துருவ மண்டல மென்று பெயர் வழங்கலா யிற்று.)

லகிமா வென்பது காற்றினும் மெல்லிய வடிவத்தொடு நிற்றல். இதனால் பிரளயகாலத்திலும், நீர்மேல் உலாவும் வண்டுபோல் உலாவலாம்.

பிராத்தி என்பது மனதால் எண்ணியதை எண்ணிய வாறு பெறுதல். இதனால் கற்பக நீழலும், சங்கநிதி, பதும நிதி முதலியனவும் விரும்பியவாறு பெறுதல் கூடும். இரப்பவரை மன்னராக்குதலும், ஓட்டைப் பொன்னாக்கு தலுங் கூடும்.

பிரகாமிய மென்பது மனதினால் ஆயிரம் மகளிரைப் படைத்து ஆயிரம் வடிவா யிருந்து அவர்களோடு விளை யாடுதல். இதனால் எவ்வுலக போகங்களையும் எளிதிற் பெறலாம்.

ஈசத்துவமென்பது அயன் முதலியோரிடத்தும் தன் னாணை செலுத்துதல். இதனால் அயன் பதவிக்கு மேலாய பதவி யேற்றலின், அத்தேவர்கள் முடிவு காலத்திற்குப் பின்னும் இறைவனருளால் நிலைபெற்றிருத்தல் கூடும்.

வசித்துவ மென்பது உலக முழுவதுந் தன்வசமாக்கு தலும் உலகினை உண்டாக்குதலுமாம். குறு முனிவர் போல எழு கடலையும் உளுந்தளவாக்கி யருந்துதலும், பிரளய வெள்ளத்தைக் கிணற்றி லடக்குதலுமாகிய பல வகை அற்புதங்களையு மியற்றுதலும், உலகத்தை யோக தண்டத்திற் பிணித்தலும் இதனு ளடங்கும்.

கரிமா வென்பது உலகப்பொருளை நுகர்ந்தும் அவற்றால் கட்டுப்பட்டு மயக்கமுறாமை. இது உயர்ந்த முத்திக்குத் தகுதி கொடுக்கும்.

இன்னும் அடிகள் சங்கற்ப சித்தரென்பவர்களைப் பற்றிக் கருணைகரக் கடவுள் 10-ம் பாட்டிலே சிறப்பாகப் பேசுகின்றார். அவர்கள் எக்காலத்தினும் பிறர்க்குதவுவார்கள். இன்சொல்லையன்றிக் கடுஞ்சொல் என்றும் பகரார். குற்றமாகிய பொய்யினைச் சொல்லார். உயிர்க்கிரங்குவார். கொலைகள் பயிலமாட்டார். அவர் நினைத்ததை நினைத்தபடியே இறைவன் அருள் புரிவாராதலின், அவருள்ளத்தில் உறைகின்ற கற்பக மரமாவர் கடவுள். பிரமரந்திரமாகிய தலை நடுவிற்குப் பன்னிரண் டங்குலத்திற் கப்பாலுள்ள பெரு வெளியிலே பரம்பொருளாகிய சிவபிரானைக் கண்டு களிக்கும் பெறும்பேறு பெற்றவர்களே சிறந்த யோகியரென்பார்,

"ஒன்றி ரண்டாய் விவகரிக்கும் விவகாரங் கடந்தேழாம் யோக
நின்று தெளிந்தவர் பேசா மௌன நியாயத்தை" [பூமி
—மண்டலத்தின் 2.

என்றார்.

"உன்மனிக்குள் ஒளிர்பரஞ் சோதியாம்"
—பொன்னைமாதரை 38.

என்றதுமது.

ஏழு யோக பூமிகளென்றது, ஆறாதாரத்தையும் பிரமரந்திரத்தையுமே. அவற்றைக் கடந்தவர், துவாதசாந்தப் பெருவெளியிலே முதல்வனைக் காண்பவர். 'நிலமேழும்' என்று குமரகுருபர அடிகள் கூறியது காண்க. 'அஞ்ஞான

பூமி ஏழென்று' தாயுமானப் பெருந்தகையார் எங்குநிறை கின்ற பொருள் 4-ம் பாட்டிலே குறித்தனர். அவை உபா திகளையாதல் ஆணவ காரியங்களை யாதல் குறிக்கும் என் றுணர்க.

"பொல்லாத வாதனை யெனுஞ்சத்த பூமியிடை"

—எங்குநிறைகின்ற பொருள் 4

என்றதுணர்க.

இதனுள் 'சத்தபூமி' என்பதற்கு ஒலி வடிவாய நூலறி வென்று கூறுவாருமுளர். ஆணவத்தின் காரியம் ஏழென ஆசிரியர் சிவஞான முனிவர் சிவஞான பாடியத்திற் கூறிப் போந்தனர். அவை மோகம், மதம், அராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் என்பன. அவை முறையே மயல் கோடலும், தான் பெற்றதை மயக்கத்தால் பெரிதாக மதித் தலும், ஆசை மிகுதலும், பிரிவாற்றுமையாற் கவலுதலும், கிடையாததைப் பெற விரும்புதலும், அதற்கு முயன்று வாடுதலும், பெற்றசிற்றின்பத்தில் திருத்தி யடைந்துபேரின் பத்தை அவாவாமையுமாம் என்று தெளிக. முத்தியில் விருப்பம், நற்கேள்வி, சத்திலே மன நாட்டம், சத்துற்பத்தி, சித்தி வெறுப்பு, பர நாட்ட மின்மை, விழியா நிலை என் பன இவற்றிற்கு எதிரிடையாய ஞான பூமிகளாம்.

பூதமைந்தினையும், மாயையையும் சகுண மூர்த்தங் களையும், உயிருக்கு அனன்னியமான ஏழுதத்துவங்க ளென்று கூறி இவற்றைத் தானெனக்கருதுதல் அஞ்ஞான மென்பர் ஏகான் மவாதிகள். தேகம், இந்திரியம், பிராணன், மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும் ஏழினையும் உபாதியாகக் கொண்டு இவற்றைச் சத்த பூமி என்பாரு முளர்.

இனி யோக பூமிகளை யோக வாசகத்திற் கூறிய படி கொள்ளுதல் ஏகான்ம வாதக் கொள்கை. சித்தர்களுள் திருமூலர் மரபினையும் நவநாத சித்தர்களையுமே அடிகள் விதந்தனர். அகத்தியர், மூலர், போகர் என்னும் மூவர் பரம்பரைகளையே சிறந்தன வெனக் கூறுப. நவநாதசித்தர்க ளென்ற சொற்றொடர், மௌனகுரு 7-ம் பாட்டிலும் கருணாகரக்கடவுள் 7-ம் பாட்டிலும் வந்துள்ளமை காண்க.

நவநாத சித்தர் என்போர் யோகத்தினுற் சுழு முனை யிலுண்டாகும் நாதத்தில் மனதை வைத்துச் சமாதியடைந் தவர்களென்றும் அதனால் மரணத்தை வென்றுபிரமாண்ட வெளியில் உலாவுகின்றவர்களென்றுங் கேட்கின்றோம். நவ நாத சித்தராவார் ஆதிநாதர், சத்தியநாதர், சதோகநாதர், வகுளிநாதர், மதங்கநாதர், மச்சேந்திரநாதர், கடேந்திர நாதர், அநாதிநாதர், கோரக்கநாதர் என்பவர்களாவர்.

சித்தர்களைக் கூறுமுகத்தான் யோகத்தினியல்பினை அடிகள் அறிவுறுத்தினர். ஏனைச் சரியை, கிரியைகளையும் அடிகள் தழுவியுரைத்தவற்றை ஆராய்வாம் :

"மூர்த்தி தலம் தீர்த்தம், முறையாய்த் தொடங் கினர்க்கு
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

—பராபரக்கண்ணி 156.

என்றவிடத்துச் சிவபெருமானை வடிவத்திலே வழிபடுவ தும் சிறந்த திருப்பதிகளுக்குச் செல்வதும், புனித நீரில் மூழ்குவதும் தவமென்று கூறப்பட்டன.

"விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்பு மலர் காய்கனிபோ லன்றோ பராபரமே"

—ஷை 157.

என்றமையால் நான்கு நெறிகளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன வென்பது குறிக்கப்பட்டது.

கடவுட் பூசைக்குரிய தொண்டுகளை அன்புடனியற்று பவர், கடவுளை நேரே பூசை செய்யவிரும்புவர். கடவுளைப் புறத்தே பூசை செய்வோர், அகப்பூசனை செய்ய விரும்பு வர். அகப்பூசை செய்பவர் அதனைச் செவ்விதினியற்றுதற் பொருட்டு யோக நெறியில் நிற்பர். யோகநெறி நிற்பவர் கடவுளை அகண்டிதமாய் வழிபடற் பொருட்டு ஞானநெறி அடைவர். சரியைத் தொண்டுகளுட் பாமாலையும் பூமாலை யும் சாத்துவது சிறந்தது. உனக்குப் பாமாலை வேண்டுமா? அல்லது பூமாலை வேண்டுமா? என்று இறைவனை வினவுவார்,

"நாவழுத்துஞ் சொன்மலரோ நாளுதிக்கும் பொன்மலரோ
தேவையுனக் கென்னதென்று செப்பாய் பராபரமே"

—பராபரக்கண்ணி 247.

என்றார்.

சிவலிங்கப் பெருமானைப் பூசனை புரிவோர் தற்சுத்தி, இடச்சுத்தி, பொருட்சுத்தி, மந்திரசுத்தி, வடிவச்சுத்தி என்னும் ஐவகைச் சுத்திகள் செய்து வழிபடுவா ராதலின்,

"பஞ்ச சுத்தி செய்து நின்னைப் பாவித்துப் பூசை செய்தால்
விஞ்சிய ஞானம் விளங்கும் பராபரமே"

—பராபரக்கண்ணி 154.

என்றார்.

உட்பூசை செய்தல் இறைவனுக்கு மிக உவந்த தாதலின்,

"நெஞ்சகமே கோயில்நினைவே சுகந்த மன்பே
மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய் பராபரமே"
—பராபரக்கண்ணி 151

என்றார்.

இதனுள் மனம் கோயிலாகவும், சிந்தனை பரிமளப் பொருளாகவும், அன்பு திருமஞ்சன நீராகவும் செப்பினமை காண்க.

இறைவனது திருவருள் வேண்டுவார் நான்கு நெறியில் ஏதாவதொன்றில் நிற்க வேண்டுமென்பதைத் தம்மேல் வைத்துக் கூறுவார்,

"எல்லா முதவு முனை யொன்றிற் பாவனை யேனுஞ் செய்து
புல்லாயினு மொரு பச்சிலை யாயினும் போட்டிறைஞ்சி
நில்லேன் நல்யோக நெறியுஞ் செயேனரு ணீதி யொன்றுங்
கல்லே னெவ்வாறு பரமே பரகதி காண்பதுவே"
—பாயப்புலி 31.

இதனுள் வடிவ வழிபாடு கூறவே சரியையுங் கிரியையுங் கூறப்பட்டன. அருள் நீதி யென்றது ஞான நெறியை. யோக நெறி நின்று அருந்தவங்கிடப்பாரது இயல்பைப் பற்றி ஆனந்த மானபரம் 4-ம் பாட்டில் விரிவாக அடிகளுரைத்தனர். அது,

"அறிவுமிக்க பெரியோர் உதிர்ந்த காயையும், இலையையும், கனியையும், சருகையும் மிகுந்த பசிவந்தகாலை அதை நீக்கப் பயன் படுத்தியும், பெரிய மலைக் குகையில் கருங்கல் போலசையாது கண்மூடி நெடுங்காலமிருந்தும், ஐந்தீ நடுவே நின்றும், புனித நீரில் மூழ்கியும், உடம்பு எலும்பெலும்பாய்த் தெரியும்படியாகத் தவநிலையில் நின்றும், குருவிகள்

தமது தலை மயிரிடைக் கூடுவைத்தலைக்கும்படி வெயிலி லிருந்தும், பிராண வாயுவை அடக்கியும் மனதினை ஒடுக்கி யும் பேசா நிலையிலிருந்தும், கூடுதணியும்படி சந்திர மண்ட லத்திலுள்ள அமுதத்தையுண்டு காட்டில் தங்கியும், ஆய்ந்த மறை முடிவான திருவருளை விரும்பித் தேடினார்கள். அடியேன் உலக வாழ்வை விரும்புதல் முறைமையாமோ," என்பது.

சரியை கிரியை யோகத்தினும் ஞானத்தையே சிறந்த தாக அடிகள் கருதினர்.

உலகப் பொருள்களை அறியும் அறிவும் அறியாமையும் நீங்கிச் சிவபெருமான் கொடுக்கும் கட்டுக்கடங்காத பேரறி வால் இறைவனை அறிவதே ஞானம் என்பது அடிகள் கருத்து.

"அறிவோ டறியாமை யற்றறி வினூடே
குறியிலறிவு வந்து கூடுநா ளெந் நாளோ"

—எந்நாட்கண்ணி நிற்குநிலை 2.

ஞானம் வந்த போது உயிரின் சிற்றறிவு மறைந்து பேர றிவு உதிக்கு மாதலின்,

"சிற்றறிவு மெள்ளச் சிதைந் தெம்மான் பேரறிவை
யுற்றறியா வண்ணமறிந் தோங்குநா ளெந்நாளோ"

—எந்நாட்கண்ணி நிற்குநிலை 17.

தந்திரமந்திரங்கள் வாயிலாக வழிபாடு நடத்தினால் அறிவு அவற்றைச் சார்ந்து நிற்கு மாதலின், அவையாவும் சடமாகிய தத்துவங்களின் அளவாக வமைதலின், ஞானமே இறைவனது திருவுருவாகக் கருதி அவனை வழி பட வேண்டு மென்றார்.

"தந்திரத்தை மந்திரத்தைச் சாரினவை யாமறிவென்
றெந்தை யுணர்வே வடிவா வெய்துநா ளெந் நாளோ" 18.

சுட்டிறந்து கடவுளை அறியுங்காலத்து அகண்டமாகிய உலகத்தை அவனது திருமேனியாகக் கருதுவார்க்கு இவ்வுலகமும் விண்ணுலகமுமாகிய வெல்லாம் ஞானப் பெருக்காகத் தோன்றுமாதலின் அத்தகைய யோகமே சிறந்த யோக மென்றார்.

"தாங்கிய பார் விண்ணாதி தானே ஞானுக் கினியா
யோங்கு மியோக வுணர்வுற்றிடுநா ளெந் நாளோ"

—எந்நாட்கண்ணி நிலைபிரிந்தோர் 11.

## அதிகாரம் 9.

### அத்துவித இயல்பு

இறைவன் உலகத்தோடு இரண்டறக் கலந்து நிற்கின்றானென்பதைக் கடவுள் அத்துவிதமா யிருக்கின்றார் என்று மறைகள் செப்பியவிடத்து, ஏகம் என்ற சொல்லைப் பயன்படுத்தாமல், அத்துவித மென்ற சொல்லை வழங்கியது, கடவுளும் உலகமும் பொருட்டன்மையால் வேறாயினும், கலப்பால் வேற்றுமை தோன்றாவாறு கடவுள் உலகத்தோடு கலந்திருக்கின்றார் என்று அறிவுறுத்தற்கெனத் தெரிந்து, அத்துவித பாவனை செய்வதே ஞானநெறியாதலின் அவ்வாறன்றிக் கடவுளும் உலகமும் வேறல்ல எனக்கருதி ஏகான்ம வாதங்கோடல் தவறாகுமாதலின், அத்துவிதமென்ற சொல்லின் பொருள் தெரிந்து சிவத்தோடத்துவித பாவனை செய்யவேண்டு மென்றார்.

" அத்துவித மென்ற வச்நியச்சொற் கண்டுணர்ந்து
சுத்த சிவத்தைத் தொடருநா ளெந்நாளோ "
—எந்நாட்கண்ணி நிலைபிரிந்தோர் 4

" ஒன்றிரண்டு மில்லதுவா யொன்றிரண்டு முள்ளதுவாய்
நின்றசம த்துநிலை நேர் பெறுவதெந் நாளோ "
—எந்நாட்கண்ணி நிற்குலை 15.

நாம் பிரமமென்று பாவனை செய்தால் நாமென்ற உணர்ச்சி ஆங்காரத்தை யுண்டாக்குமாதலால் அப்பாவனையை மறுப்பார்,

" நாம் பிரமமென்றால் நடுவே யொன்றுண்டாமால்
தேம்பியெல்லா மொன்றாய்த் திகழுநா ளெந்நாளோ "
—எந்நாட்கண்ணி நிலைபிரிந்தோர் 7.

என்றார்.

சிவத்தோடு இரண்டற்ற நிலையில் நிற்பார்க்கு சிவத்தைக் காண்கின்ற தானும் காணும் பொருளும் வேவ்வேறாகத் தோன்றுதல் கூடாது.

அகண்டாகாரமான சிவத்தின் தோற்றமொன்றே நிகழ்தற்குரியதாதலின்,

" காண்பானுங் காட்டுவதுங் காட்சியுமாய் நின்றவந்த
வீண்பாவம் போயதுவாய் மேவுநா ளெந்நாளோ "
எந்நாட்கண்ணி நிற்குநிலை 20.

என்றார்.

காண்பானும் காணும் பொருளுமாய்ப் பிரித்து நோக்குங்காலை காணும் பொருளை முன்னிலையாகச் சுட்டியுணர்தலால் அது சுட்டிறந்த ஞானத்திற்கு இடையூறுமாதலின்,

"முன்னிலை யொழிந்திட வகண்டிதா காரமாய்
மூதறிவு மேலுதிப்ப
முன்பிேனாடு கீழ் மேனடுப்பக்க மென்றுமன்
முற்றுமானந்த நிறைவே
யென்னிலைமையாய் நிற்க வியல்புகூ ரருள்வடிவ
மெந்நாளும் வாழிவாழி"

என்றார். —எங்கு நிறைகின்ற பொருள் 11

"முன்னிலைச் சுட்டொழி நெஞ்சே நின்போத முளைக்கில்
ஐயோ பின்னிலைச் சென்மம் பிறங்குங் கண்டாய்"

என்றதுமது. —பாயப்புலி 23.

அது என்று பரம்பொருளைக் குறித்து நினைத்தாலும், அது என்ற சொல் சுட்டுணர்வினை யெழுப்பி அதீத பாவனைக்கு இடையூறுமாதலின்,

"அது வென்றுன்னு மதுவு மறநின்ற
முதிய ஞானிகண் மோனப் பொருளது
எதுவென் றெண்ணி யிறைஞ்சுவ னேழையேன்
மதியு ணின்றின்ப வாரி வழங்குமே"

என்றார். —பொன்னை மாதரை 29.

எச்சொல்லாலும் இறைவனைச் சுட்டாதுணரும் நிலை பேசா நிலையெனப்படும். அதையே மோனமென்பர். "மோனமென்பது ஞானவரம்பு" என்ற அறநூல் உரையுங் காண்க. செயலுமற்றுப் பேச்சுமற்ற அந்நிலையே சும்மா விருக்கின்ற நிலை எனப்படும். அத்துவித நிலை, மோன நிலை, சும்மாவிருக்கும் நிலை என்பன ஒரு பொருளைக் குறிக்கும். மிகச் சுருங்கிய சொல்லாற் பெரிய பொருளைத் தெரிக்கும் அடிகள் அத்துவித நிலையைக் கூறுமிடத்து,

ஆகாரபுவனம் 22-ம் பாட்டினிறுதியில் "அது வானுலது வாவர்—அதுவே சொல்லும்" என்றார்.

இதன்கண், "அதுவானல்" என்பதின் பொருள் அத்துவித பாவனையுடையரானல் என்பது. 'அதுவாவர்' என்பதற்குச் சிவமாவரென்பது கருத்து. மூன்றாவது 'அது' சிவானுபவத்தைக் குறிக்கும். ஷை 23-ம் பாட்டில், "அது என்று சொன்னல் எது என்று ஒரு ஆசங்கை யுண்டாகும். ஆதலினல் அது என்ற கருத்தையும் அறவே யொழித்து மதுவுண்ட வண்டுபோற் சனகனாதி மன்னவர்களும், சுகர் முதலிய பெரு முனிவர்களும், பேரின்ப நுகர்ச்சியால் அசைவின்றி வாழ்ந்தனர்" என்றார். தேனுண்ட வண்டு தேனின் நினைவு தவிர வேறொன்றும் உணராதிருக்கும். அதுபோலச் சிவானுபவ முடையார்களுமிருப்பர் என்றவாறு. அத்துவித ஞானமாகிய மோனத்தைத் தவிர வீட்டின்பமடைதற்கு வேறு வழியில்லை யென்பது அடிகளது திண்ணிய கருத்து.

"முடிவிலா வீட்டின் வாழ்க்கை வேண்டினர்க்கு
உன் மோனமல்லால் வழியுண்டோ" —ஆரணம் 10.

"செகங்க ளெங்குந் திரிந்து நன் மோனத்தை
யுகந்த பேருனை யொன்றுவர் ஐயனே"
—பொன்னை மாதரை 44.

"அத்துவிதப் பெரும்பேறு அத்துவிதக்
கட்டுக்குள் ஆவ தென்றோ"

"மெய்ஞ்ஞானத் தாணுவினோ டத்துவிதஞ்
சாருநாள் எந்நாளோ" —எந்நாட்கண்ணி நிற்குநிலை 28.

என்றது காண்க.

அத்துவிதத்திற்குரிய உவமைகளை எந்நாட் கண்ணி 'நிற்கு நிலை' முதலிய இடங்களில் அடிகள் தொகுத்துள்ளார். பகலவன் முன் மதியினொளி அடங்கி நிற்பது போலவும் வானூடடங்கும் வளி போலவும், அப்பினிடை யுப்பெனவும், தீயினிரும்புபோலவும், நீரின்கண் நிழல்போலவும், பட்டப்பகல் விளக்கெனவும், உச்சிக் கதிரவனுக்கு எதிர்ப்பட்ட படிகம்போலவும், இறைவன் திருவடி நீழலிலடங்குதலே அத்துவித நிலையாம்.

'தாள்', 'தலை' என்ற இருசொற்கள் 'தாடலை' என்று புணர்ந்து நின்றகாலை டகரமானது ஈரெழுத்தினொற்றுமையை விளக்குதல்போல இறைவன் தாளில் உயிரின்றலை அடங்கிய ஞான்று, இருவரது கலப்பாகிய அத்துவித நிலை திகழுமென்பார்,

"ஆடலையே காட்டி யெமதாட லொழித் தாண்டன்பொற்
றாடலை மேற்சூடித் தழைக்குநாள் எந்நாளோ"

—எந்நாட்கண்ணி நிற்குநிலை 22.

என்றார்.

பேசா நிலையாகிய மௌனத்தை முடிந்த நிலையாகக் கடவுள் வைத்தற்கு ஏது, குற்றமுள்ள நெஞ்சன் இவன் வஞ்சமுடையவன் ஆதலால் இவனோடு வாய் பேசுதல் தவறென்று இறைவன் கருதினமையே யாமென்று நயம்படப் பலவகைக் கண்ணி ஆறும்பாட்டிற் கூறியுள்ளார். தமக்கு இறைவன் மோன நிலையாகிய நோக்கத்தினைத் தந்தருளினாரென்பதை ஆனந்தக்களிப்பு ஏழாம்பாட்டிற் குறித்திருக்கின்றார்.

" நலமேது மறியாத என்னைச் சுத்த
நாதாந்த மோனமா நாட்டந் தந்தே "
—ஆனந்தக்களிப்பு 17.

என்றது காண்க.

மௌனம் மௌனமென்று வாயினாற் பேசாமலும், கையை அசைக்காமலும் இருப்பதாற் பயனில்லை; இராப் பகலற்ற உணர்ச்சியோடு இறைவனை அறிவின்கண் நாடி யிருத்தலே அஃதாமென்பார்,

" வாய்க்குங் கைக்கு மௌன மௌனமென்
றேய்க்குஞ் சொற்கொண்டு இராப்பக லற்றிடா
நாய்க்கு மின்ப முண்டோ " —பொன்னைமாதரை 42.

என்றார்.

இதனால் மௌனமென்பது சுட்டிருந்த முதல்வனை யுணரும் ஞானநிட்டை என்பது தெளியப்படும்.

" கற்றதுங் கேட்டதுந் தானே ஏதுக்காக
கடபட வென்றுருட்டுதற்கோ * * *
குணங் குறியற்றின்ப நிட்டை கூடவன்றோ "
—நின்றநிலை 1.

" நேச நிருவிகற்ப நிட்டையல்லா லுன்னடிமைக்
காசை யுண்டோ நீயறியா தன்றே பராபரமே "
—பராபரக்கண்ணி 51.

என்றதுங் காண்க.

ஞான நிட்டையி னியல்பினைத் தேசோமயானந்தம் 4-ம் பாட்டில் சுருக்கமாக 'ஆடாமல் நின்றுவிட்ட பரம் போல மனமானது விசையொடுங்கி வீழவும், அறியாமை யான இருள் நீங்கவும், இருளொளி யிரண்டுமல்லாத

அருள் வெளியோ டத்துவிதமான என்னைக் கண்டு என்னுள்ளே யிருக்கும் சாந்தவெளியாகிய பரம்பொருளைக் கூடி, அதீதமான இன்ப நிலையை நான் கூடினே னல்லனே' யென்று தமது ஞானப் பெருவிருப்பைக் குறித்தார். ஞான நிட்டையினியல்பினைச் சின்மயானந்தகுரு 8-ம் பாட்டில் அடிகள் விரித்துரைத்தார்.

"கூடுதல், பிரிதல், பற்றுவைத்தல், குவிதல்,விரிதல்முதலிய செயற்கை யின்றி, முக்குணமற்று, போக்கு வரவுஞ் சுட்டுணர்வும் மனமாசும் இல்லாது, மேல், கீழ், நடு என்னும் பகுதிப்படுத்து நினைத்தலு முணர்தலு மின்றி, ஐம்பூதம், விந்து, நாத முதலியவற்றைக் கடந்து, காண்போன், காட்சி என்பவற்றி னுணர்ச்சி, வாட்டம் யாதுமின்றி யொன்று, இரண்டு என்ற விவகாரமற்று, மனமொடுங்கி முழுமுதற் பேரின்பக் கடலிற்றிளைத்துச் சிவமயமாய், வேறொன்றைத் தேடுதலுமில்லாத இடமே மேலாகியநிலை" என்றது காண்க.

இந்நிலையிலே யிருப்பதே சும்மாவிருத்தலெனை, அடிகள் கருதுதலால் அச்சொல்லினைப் பலவிடத்தும் அடிகள் வழங்குகிறார்.

சும்மா விருப்பதற்கு நீ ஓர் உபாயம் அருளுதல் கூடாதா? என்று இறைவனை வினவுவார்,

"எம்மா லறிவதற வெம் பெருமான் யாது மின்றிச்
சும்மா விருக்க வொரு சூத்திரந் தானில்லை யோ"

—இல்லையோ வேண்கண்ணி 3.

என்றார்.

சும்மா விருக்கும் விருப்பம் அடிகட்கு மிகுதியுமுண்டென்பது,

"சொல்லும் பொருளு மற்றுச் சும்மா விருப்பதற்கே
அல்லும் பகலு மெனக் காசை பராபரமே"

—பராபரக்கண்ணி 5.

என்பதாற்றெளிக.

"சும்மா விருக்கச் சுகமுதய மாகுமே"

—உடல்பொய்யுறவு 52.

"சும்மா விருக்கச் சுகஞ் சுக மென்று சுருதி யெல்லாம்
அம்மா நிரந்தரஞ் சொல்லவும்"

—பாயப்புலி 36

"நானெனவும் நீயெனவும் இருதன்மை நாடாமல் நடுவே
தான மரும் நிலையதுவே சத்தியம் சத்தியம்," [சும்மா

—ஆசையெனும் 32.

என்றும் வருவன காண்க.

இதனையே தூங்காமற் றூங்குத லென்றும் பகர்வர்.

"தூங்காமற் றூங்கிச் சுகம் பெறுமா நின்னிறைவில்
நீங்காமல் நிற்கு நிலை பெறவுங் காண்பேனோ"

—காண்பேனோ வென்கண்ணி 10.

"தூங்கி விழித் தென்ன பலன் றூங்காமற் றூங்கி நிற்கும்
பாங்கு கண்டாலன்றோ பலன் காண்பேன் பைங்கிளியே"

—பைங்கிளிக்கண்ணி 30.

என்றது காண்க.

சும்மா வென்பதை (ஒரு சொல்) ஒரு மொழி என்று அடிகள் சிறப்பிப்பது வழக்கம்.

"பாரீ ரொரு சொற்படியே யனுபவத்தைச்
சேரீ ரது வேதிறம்"

—உடல்பொய் யுறவு 10.

"சொன்ன வொரு சொல்லாற் சுகமா யிருமனமே
இன்ன மயக்க முனக்கேன்"

—ஷை 70.

"சொன்ன வொரு சொல்லை மறவாமற்
றோய்ந்தா னெஞ்சே யுன்னாலில்லை பிறப்ப தெனக்கே"

—ஷை 71.

என்றும் வருவன காண்க.

நினை வொன்று 9-ம் பாட்டிலே ஒரு மொழியின் பெருமையை விரிவாக வுரைத்தார். ஒரு சொல்லே, பொருள் விரிக்குங் காலை, பல சொல்லாலாகிய மெய்ந்நூற் கிடங் கொடுக்கும், அந்த ஒரு மொழியே பாசத்தை நீக்கும், குரு மொழிந்த ஒரு மொழியே மலைபோன்ற எல்லையாக விளங்குகின்றது. மற்ற மொழிகளைக் கைக் கொள்வதெல்லாம், கோடுவரையாமல் வட்டாடுதல் போலும் என்ற விடத்து ஒரு மொழி யென்றது ஓங்காரத்தை யெனவும், சும்மாவிருவென்பதை யெனவும் திருவைந் தெழுத்தை யெனவுங் கூறுப.

"ஓங்காரமாம் ஐந்தெழுத்தாற் புவனத்தையுண்டு பண்ணி"

—பாயப்புலி 9.

என்றமையால் ஓங்காரமே ஐந்தெழுந்தாதல் காண்க.

ஓங்காரத்தை ஒலித்தபோது நாதமும், எழுதியபோது விந்துவும் உகர அகர மகரங்களாகப் பிரித்தபோது மூவெழுத்துமாதலால் அஃது ஐந்தெழுத் தெனல் தெளிவுபடும்.

"அஞ்செழுத்தி னுண்மையது வானவப் பொருளை
நெஞ்சழுத்தி யொன்றாகி நிற்குநா ளெந் நாளோ"?

—எந்நாட்கண்ணி நிலைபிரிந்தோர் 13.

சும்மா என்னுஞ்சொல் 'சும்ம' என்பதன் விரிவு. அச் சொல்லில் உ, ம், அ, என்ற மூன்றெழுத்திருத்தல் காண்க. அவை ஓங்காரத்தின் உறுப்புகள், சகரமானது மகரத்தோடு சேர்ந்து அம்ச மந்திரமாகிய அசபையைக் குறிக்குமென்பர். 'சும்மாயிரு சொல்லற என்றலுமே அம்மா பொருளொன்று மறிந்திலனே' யென்ற அருணகிரிநாதர் அருண்மொழியை மிகவும் ஆர்வத்துடன் அடிகள்பாராட்டுகின்றார்.

"ஐயா அருணகிரி யப்பா வுனைப்போல
மெய்யாக வோர்சொல் விளம்பினர் யார்"

—உடல்பொய்யுறவு 26.

என்றது காண்க.

சும்மாவிருந்து ஞானநிட்டை கூடுதற்குத் திருவருளையே நாடி நிற்றல் வேண்டும். திருவருட் கண்ணாலேயே எல்லாப் பொருளையும் பார்க்க வேண்டுமாதலின்,

"அருளா லெவையும் பாரென்றான் அத்தை
யறியாதே சுட்டி யென்னறிவாலே பார்த்தேன்
இருளான பொருள் கண்ட தல்லால் கண்ட
என்னையுங் கண்டில னென்னேடி தோழி
—சங்கர சங்கர சம்பு" ஆனந்தக்களிப்பு 13.

இதனால் நிலையற்ற உலகப் பொருள்களை ஆணவத்தாற் காணுமிடத்துப் பொருள்களின் உண்மைத் தன்மை விளங்காமற் போவதல்லாமல் அந்தப்பொருள் வயமாய் நிற்கும் தன்னையு மறிதற்கிடமில்லை என்று உரைத்தவாறாயிற்று ஞானம் உதித்தற் பொருட்டு ஆசையின்மை இயற்கையாக அமைந்தால் அது தானே கனிந்த கனிபோலுமென்றும்,

பிராணனை யோகத்தால் வசப்படுத்தி மனவொடுக்கங் கொண்டு பற்றுதல் கனிவிக்க வந்த கனி என்றும் சுகவாரி 6-ஞ் செய்யுளில் அடிகள் தெரித்தருளினர்.

ஞானமில்லாமல் முத்தி கூடுதல் முடியாதென்பது அடிகள் கருத்து. சின்மயானந்தகுரு 11-ம் பாட்டில், 'அன்பு நெறியில் நிலைபெற்று நின்றாலும் ஒன்பது கண்டங்களையும் வலம் வந்தாலும் கடலில் மூழ்கினாலும், புனித நதிகளிற் குளித்தாலும் பசி தாகங்களைப் பொருட்படுத்தாது தீ நடுவே நின்றும் உதிர்ந்த சருகு, நீர், காற்று என்பனவற்றை மிகுந்த பசி வந்தபோது உண்டும், மௌனத்திலிருந்தாலும் உயர்ந்த மலைக்குகைகளிற் புகுந்து பத்து நாடியையுஞ் சுத்திசெய்து மூலாதாரத்திலுள்ள அனலையும் மூச்சுக்காற்றினால் மேலெழுப்பிச் சந்திர மண்டலத்து அடைத்துச் சிறந்த அமுதத்தை உண்டும் சிறிது காலம் நிற்கு முடம்பினைப் பலவூழிகள் நிலைபெறும்படி சித்திசெய்தாலும் ஞானம் பெறாதவிடத்து உயர்கதியடைதல் கூடுமோ' என்றார்.

இவ்வாறு மோனநிலை பெற்றவர்களே உய்வார்களென்பதைச் சச்சிதானந்தசிவம் 6-ம் பாட்டில், 'மிக்க மதங் கொண்ட யானைகள் மேகக்கூட்டங்கள் போல விளங்குகின்ற வெளிமுற்றமும் திங்கள் மண்டிலத்தின் மத்தியைத் தொடுவதுபோலுயர்ந்த முடிகளையுடைய மாடங்களும் கூடங்களுமுடைய மாளிகையின்கண்ணே, சந்திரகாந்தக் கல்லினாற் சமைத்த மணியிருக்கையி னுச்சியில் வீற்றிருந்து முத்தமிழ் முழக்கத்தோடு முத்துப்போன்ற பற்களையுடைய மடந்தைகளொடு காதல்கூர விளையாடி மோகநிலையிலிருந்தாலென்ன ? யோக நிலை நின்று மூச்சினைப் பிடித்தடைத்துக்கொண்டும், கையகத்து நகமாகிய ஆயுதங்

களை விரித்துக் கொண்டுலாவும் புலி, சிங்கம், கரடி முதலிய கொடியவிலங்குகள் புகுந்துலாவும் உட்பகுதிகளுள்ள காட்டிலும் மலை உச்சியிலும் உள்ள குகைக்குள் இருந்தாலும் என்ன பயன்? கையிலுள்ள நெல்லிக்கனிபோல, ஆரவாரமற்ற மோன நிலையைப் பெற்றவர்களே பிறவியின் நீங்கிப் பிழைத்தவராவர். இது சனகாதி முனிவர்களுடைய முடிவல்லவா?' என்றவிடத்து விளக்குகிறார்.

ஞானநெறியானது, கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என்று நான்கு வகைப்படும் என்பது,

"கேட்டன்முதல் நான்காலே கேடிலா நாற்பதமும்
வாட்டமற வெமக்கு வாய்க்குநா ளெந்நாளோ"
—எந்நாட்கண்ணி நிலைப்பிரிந்தோர் 5.

என்பதாற்றெளிக.

ஞானத்தை முற்றிலும் கைவரப் பெறாவிடின் சரியை, கிரியை, யோகமென்று மூன்றிற்குமுரிய பதமுத்திகளுள் ஒன்றாவது தமக்குக் கிடைக்கப் பெறவேண்டுமென்பார்,

"ஞானநெறி தானே நழுவிடினு முப்பதத்து
ளானமுத்தி நல்குமென வன்புறுவ தெந்நாளோ" —ஷை 2.

என்றார்

இதனுள் ஞானநிட்டை கைவராவிடினும் ஞான நூல்களைக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்னு மூன்றினையுமியற்றியவர்களுக்குரிய சுத்ததத்துவ புவனப் பதவிகளையே 'முப்பதத்தோ டானமுத்தி' என்று குறித்தா ரென்பாருமுளர்.

குருலிங்க சங்கமமென்ற மூன்றினுள் இலிங்கத்தின் பெருமை சிவபெருமானது வடிவவழிபாடு கூறுமிடத்து

விளக்கப்பட்டது. அம்மூன்றையும் ஒரு சிறு கண்ணியில் வழுத்தினர்.

"மூர்த்தி எல்லாம்வாழி எங்கள் மோனகுருவாழி-அருள்
வார்த்தை என்றும் வாழி அன்பர் வாழி பராபரமே"

—பராபரக்கண்ணி 229.

குருவின் பெருமையைத் தமது குருவாகிய மௌன குருவினைப் பாடிய மௌனகுரு வணக்கத்தில் செவ்விதின் அடிகள் உரைத்தனர்: "மௌனகுரு வணக்கம் முதற்பாட்டிலே, மௌனகுருவே! என்னையொரு அறிவு மதங் கொண்ட யானையாக வளர்த்தனை. எவ்வாறெனில், ஆசையாகிய விலங்கினைப் பொடிபடும்படி உதறி ஆங்காரமாகிய முளையைப் பிடுங்கியெறிந்து இரண்டன்மை விழைதலென்னும் மதங்கொண்டு ஆறுசமயமும், ஆறுபோலத் துதிக்கை பொழி நீரோகவமைய, பாசமாகிய இருளைத் தன்னிழலென்று கருதிச் சினந்து ஆரவாரஞ்செய்து, மேலேபார்த்த பெருமித நோக்குடன், பரந்து செல்லும் மனதைப் பெரியதோர் கவளமாக நிரம்பவுண்டு, முகத்திற்போர்த்த துணி போன்ற மாயையினைக்கிழித்தெறிந்து அறிவாகிய ஒளியோடு கூடிய உனது செவ்விய கையிற் பிடித்த சின்முத்திரையாகிய தோட்டி வசமா யடங்கிப் பேரறிவானந்தப் பெரு வெள்ளத்திற்றிளைத்து நின் திருவருளி னிறைவாகிய நன்னய வாசத்திலுலவும் படி செய்தனை."

மௌனகுரு 3-ம் பாட்டில் மௌனகுருவின் உயர் நிலை தெரிப்பார்,

'கண்ணுற் பார்த்தபோது காட்டிலுள்ள புலியானது பசுவோடு இணக்கமாய் உடன்றிரியும்; மதங்கொண்ட

யானையானது நீ கையினாற் குறிப்புக் காட்டியவுடன் நெருப்பிலிடுதற்குப் பெரிய கட்டைகளை மிகுதியும் ஏந்தி வரும். காமதேனுவாகிய விண்ணவர் பசு உன் பொன்னடியைத் தொழுது, உணவு ஆயத்தமா யிருக்கிறதென்று உனக்குத் தெரிவிக்கும். உலகத்திலுள்ள புரவலரும் பாவலரும் தவவேந்தன் என்றனை வழுத்தி 'வெற்றியொடு காக்க' வென வாழ்த்துவர். அறிவும் அருளும் நிறைந்த உனது திருமுகத்தைப் பார்த்த அளவிலே நவநாத சித்தர்களும் உன் நட்பினை விரும்புவர். சுவர், வாமதேவர் முதலிய ஞானிகளும் உன்னை மதித்துப் புகழ்வர். விண்ணவரும், மண்ணவரும் எதிர் வணங்கித் தொழுதற்குரிய நின் பெருமை சொல்ல எளிதாகுமோ' என்றனர்.

மௌனகுரு 8-ம் பாட்டில் 'சருகுகளையும் நீரையுமே உணவாகக்கொண்டு தவமியற்றுவார் ஒருகோடிக் கணக்கான கூட்டத்தினரும், நில வொளியை உணவாகக் கொள்ளும் செம்போத்துக்கள் போல மதிமண்டல வமுதினால் ஆழியாத் தன்மையடைந்த பலகோடி யோகியர்களும், இருவினை யொப்புற்றுக் காலங்கடந்த வொருமைப் பாடுடைய பேசாத பேரின்ப நிட்டையுடையார் எண்ணிறந்தோரும், இரசகுளிகை மருந்து முதலியவற்றால் எண்வகைச் சித்தியெய்தினோர் பல்லோரும் சூழ்ந்திருக்க அவர்கள் நடுவே செவ்விய நிறமிக்க மணிகளா லிழைத்த ஏற்றிருக்கையிற் கொலுவீற்றிருக்கும் நின்னைக் கையாற் கும்பிட்டுப் பன்முறை வீழ்ந்து பணிந்து என் மனக்குறை யெல்லாந் தீரும் வண்ணம் மணமிக்க மலர் தூவி உன் திருவடிகளைப் போற்றும் பொருட்டு நீ என்னை வாவென்றழைப்ப தெக்காலம்?'' என்றதுங் காண்க.

" உன் காட்சியிலிருந்து கொண்டு
வல்லாள ராயியம நியமாதி மேற்கொண்ட
மாதவர்க் கேவல் செய்து
மனதின் படிக்கெலாஞ் சித்தி பெறலா
ஞானம் வாய்க்கு மொரு
மனு வெனக்கு இங்கில்லாமை யொன்றினையு
மில்லாமை யாகவே
இப்பொழு திரங்கு கண்டாய் "

—எங்கு நிறைகின்ற பொருள் 8.

என்றதுமது.

அன்பர்க்குப் பணி செய்வதையே அடிகள் மிகவும் ஆர்வத்துடன் விரும்புகின்றார்.

" அன்பர்பணி செய்ய என்னை ஆளாக்கிவிட்டு விட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே "

—பராபரக்கண்ணி 155.

ஞானிகள் உலகைப் பாரார்; பார்த்தாலும் எல்லாம் சிவமாகக் கண்டிருப்பார் என்பார்,

" இச்சகத்தில் நேரார்கள் நேரிடினும்
தற்பரமாக் கண்டிருப் பார்தாம் "

—உடல்பொய்யுறவு 27.

என்றது காண்க.

கடவுளைக் கண்டவர்களைக் கண்டால் நற்கதி சேரலா மென்பார்,

" அண்ட பகிரண்டமு மறியாத நின்வடிவைக்
கண்டவரைக் கண்டாற் கதியாம்பராபரமே"

—பராபரக்கண்ணி 323.

என்றார்.

ஞானிகள், பாலர், பேய் பிடித்தவர், பித்தர் என்பவரது தன்மையை உடையராய் உலகத்துக்குத் தோன்றுவர். உலகத்தார்போல உண்டுடுத்து அணிகள் அணிந்து உலாவித் திரிதலையும் தொண்டர்கள் ஒரு விளையாட்டாகக் கொண்டிருப்பார்கள். ஆடுவதும் பாடுவதும் ஆனந்தமாகக் கடவுளை நாடுவதும் அடியவர் செய்கை என்பதைப் பராபரக்கண்ணி 141-ம் பாட்டிலும் இரவு பகலற்ற இறைவனைக் கண்ட ஞானிகள் வழி எங்கும் ஒரே தன்மையுடையது திருவருளை உயிராகப் பெற்றவர்கட்டு ஞாயிறு எங்கே உதித்தாலென்ன ? என்ற கருத்தை 145-ம் செய்யுளிலும் விளக்கிக் காட்டினர். சிவமாந் தன்மையெய்திய ஞானிகட்குத் தாம் மீளா அடிமை என்பார்,

"சித்தந் தெளிந்து சிவமானோர் எல்லோர்க்கும்
கொத்தடிமை யானகுடிநான் பராபரமே"

என்றார். —பராபரக்கண்ணி 148.

# அதிகாரம் 10.

## பேரன்பினியல்பு

எந்நாட்கண்ணி 'அன்புநிலை' யில் அன்பர் தன்மையை அடிகள் இனிது விளக்கியுள்ளார். "கல்லைக் கண்டால் ஓடுகின்ற காக்கைபோலப் பொய் மாயச் சொற்கண்டால் அன்பர் ஓடுவர். குலம், கல்வி முதலியவற்றால் விளையுஞ் செருக்கினையும் தோற்றப் பொலிவையும் அறவே ஒழித்த புனிதர் அவர்கள். வீண்தர்க்கம், சமயப் பிணக்கு என்பனவற்றை விழையார்."

—எந்நாட்கண்ணி அன்பர்நெறி 5, 6, 8.

ஆநந்தமென்று திருமூல மாமுனிவராற் கூறப்பட்ட நெறிகளில் நிற்போர் அன்பரெனவே அடிகளாற் கருதப் பட்டுள்ளாரென்பது,

" வீறிய வேதாந்த முதல் மிக்க கலாந்தவரை
ஆறு முணர்ந்தோ ருணர்வுக் கன்புவைப்ப தெந்நாளோ''
—எந்நாட்கண்ணி அன்பர்நெறி 9.

என்பதாற் றெளிக.

அன்பர் உள்ளம் இறைவர்க்குக் கோயிலென்பது,

" மாசற்ற வன்பர் நெஞ்சே மாறாத பெட்டகமாத்
தேசுற்ற மாமணிநின் றேசினையுங் காண்பேனோ"
—காண்பேனோவென்கண்ணி 4.

" உரையிறந்த அன்பருளத் தோங்கொளியா யோங்கிக்
கரை யிறந்த வின்பக்கடலே பராபரமே"
—பராபரக்கண்ணி 6.

" இரவு பகல் நினைப்பு மறப்பு என்னும் தொந்தம்
அறியார்கள் இதயம் வேதச்
சிரமென வாழ்—பராபரத்தை" —மண்டலத்தின் 6.

என்றமையா லறிக.

" அன்பர் கூட்டத்தையே முற்றுந் துணையென நம்புகண்டாய்"
—பாயப்புலி 57.

என்றதால் அன்பரிணக்கமே எவற்றினுஞ் சிறந்த தென்பது தெளிக. அதுவுந் திருவருளாலே அமையு மென்பது,

" உன் அன்பர்தயங்கு மடதைக் காத்திட்ட
சேடத்தால் விசேடமாய் வாழ
விடத்தைக் காத்திட்ட கண்டத்தோய்
நின்னருள் வேண்டும்" —ஆசையெனும் 27.

என்றமையாலறிக.

அன்பினால் உளதாம் மெய்ப்பாட்டினை அடிகள் பல விடங்களில் விளக்கியுள்ளார். சில உதாரணங்கள் வருமாறு:—

“உண்ணிறைந்த பேரன்பா லுள்ளுருகி
மொழி குளறி யுவகை யாகிக்
கண்ணிறைந்த புனலுகுப்பக் கரமுகிழ்ப்ப
நின்னருளைக் கருத்தில் வைப்பாம்”

—பொருள்வணக்கம் 10.

“ஐயா உள்ளன்பா யுருகி வாய் விட்டரற்றிச்
சேயாகி யெந்தை நின்னைச் சேரவைத்த லாகாதோ”

—ஆகாதோ என்கண்ணி 14.

“உடல் குழைய வென்பெலா நெக்குருக விழிநீர்க
ளூற்றென வெதும்பி யூற்ற
ஊசி காந்தத்தினைக் கண்டணுகல் போலவே
யோருறவு முன்னி யுன்னிப்
படபடென நெஞ்சம் பதைத்துண் ணடுக்குறப்
பாடி யாடிக் குதித்துப்
பனிமதி முகத்திலே நிலவனைய புன்னகை
பரப்பி யார்த்தார்த் தெழுந்து
மடலவிழு மலரனைய கைவிரித்துக் கூப்பி
வானேய வானி லின்ப
மழையே மழைத்தாரை வெள்ளமே நீடூழி
வாழியென வாழ்த்தி யேத்துங்
கடன் மடை திறந்தனைய வன்பரன் புக் கெளியை
கன்னெஞ்சனுக் கெளியை யோ
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணைகரக் கடவுளே.

—கருணைகரக்கடவுள் 9.

அன்பின் மெய்ப்பாட்டினை நுகர விரும்புவார்,

" இரவும் பகலும் தோற்றாமல்
அன்பிற் கரைந்து கரைந்துருகி அண்ணாவரசே எனக்கூவிப்
பின்புற்றழுஞ் சேயென விழிநீர் பெருக்கிப் பெருக்கிப்
துன்பக் கடல்விட் டகல்வேனோ" [பித்தாகித்
—சோல்லற்கரிய 4.

என்றார்.

" இடைந்திடைந் தேங்கிமெய் புளகிப்ப வெழுந்
தெழுந் தையநின்சரண
மடைந்தன னினிநீ கைவிடே லுனக்கே
யபயமென் றஞ்சலி செய்துள்
ளுடைந்துடைந் தெழுது சித்திரப்பாவை யொத்துநா
னசைவற நிற்பத்
தொடர்ந்துநீ யெனையாட் கொள்ளுநா ளென்றோ
சோதியே யாதிநாயகனே" —சிவன்செயல் 3

என்றதுங் காண்க.

எந்நாட்கண்ணியில்— அன்பின் இயல்பினை அன்பு நிலைமை என்னும் பகுதியில் அடிகள் அழகாக விளக்கி யுள்ளார்.

"உள்ளமானது கதிரவனைக் கண்ட கமலம்போல் திருவருளைக் கண்டபோது மலர்தல்வேண்டும். மேகங்கண்ட மயில்போல இறைவனது ஞான நடனத்தைக்கண்டு களித் தாடவேண்டும். திங்களொளியை நாடிச்செல்லும் சக்கிர வாகப் புள்போலத் தூய அறிவிலே தோன்றும் பரஞ்சோதி யை உயிர்நாட வேண்டும். அந்தரத்தே நின்றாடுகின்ற ஆனந் தக் கூத்தனுக்கே சிந்தையினைத் திரையாகக் கொடுத்து வணங்கவேண்டும். கள்ளன் இவனென்று கைவிடாதே யென்று வள்ளலைக் கூவி வருந்தவேண்டும். அண்ணு

வாவென்றரற்றவேண்டும். செய்வதெல்லாம் நின்பணி யென்று மாதேவனை வழுத்தல் வேண்டும். பரம்பொருளைக் கண்டுங் காணேனென்று கைகுவித்தல் வேண்டும். இன்பம் எங்கே யெங்கே யென்றிரங்க வேண்டும். கடல் மடை திறந் தாற்போலக் கண்ணீர் பெருகி யாறாகச் செல்ல உடல் வெதும்பி மூர்ச்சித்தருக வேண்டும். இறைவனைக் காணாத முகம் சருகாய் வாடி அலந்து ஏங்கவேண்டும். மனக்கவலை ஆற்றாது இறைவன் பொன்னடியைப் போற்றி ஆற்றே னாற்றேனென்றரற்ற வேண்டும்'' என்றிவ்வாறாக அன்பின் திறனை விரித்துரைத்தார்.

அன்பருக்கு இறைவன் பல வழியிலும் எளிவந்தருள் செய்வானென்பதை,

"பாட்டுக்கோ வன்பினுக்கோ பத்திக்கோ வன்பர் தங்கள்
நீட்டுக் கெல்லாங் குறுகினின்றாய் பராபரமே"

—பராபரக்கண்ணி 364.

"கல்லா லெறிந்துங் கைவில்லா லடித்துங் கனிமதுரச்
சொல்லாற் றுதித்து நற்பச்சிலை தூவியுந் தொண்டரின
மெல்லாம் பிழைத்தன ரன்பற்ற நானினி யேது செய்வேன்"

—பாயப்புலி 22.

என்றமையாற் றெளிவித்தார்.

பைங்கிளிக்கண்ணியில் — கடவுளைத் தலைவனாகவும், தம்மைத் தலைவியாகவுங் கருதிப் பல பாடல்களியம்பி னார்.

எவ்வகையான ஏட்டிலு மெழுதமுடியாத தலைவன் றிருவுருவத்தை உள்ளத்தில் எழுதமுடியுமோ என்பார்,

"எந்த மடலூடு மெழுதா விறை வடிவைச்
சிந்தை மடலா வெழுதிச் சேர்ப்பேனு பைங்கிளியே"

—பைங்கிளிக்கண்ணி 11.

"பாராதி விண்ணனைத்து நீயாய்ச் சிந்தை
பரியமடலா வெழுதிப் பார்த்துப் பார்த்து
வாராயோ வென் ப்ராண நாதா வென்பேன்"

—ஆகாரபுவனம் 24.

என்றார்.

உயிர் தன் உணர்ச்சியால் இறைவனைக் காண முயன்றால் அவனைக் காணமுடியாது. தன்னுணர்ச்சி யற்றுத் தன் செயலற்ற விடத்தே அவன் வெளிப்படுவான் என்றார்.

"நானே கருதின் வரநாடார் சும்மா விருந்தாற்
றானே யணைவரவர் தன்மை யென்னே பைங்கிளியே"

—பைங்கிளிக்கண்ணி 33.

இறைவனோடு இரண்டறக் கலத்தலையன்றி வேறொன்றினையும் அடிகள் விரும்புவரல்லர். விண்ணவர் பதவிகளை அவர் வெறுப்பார் என்பது,

"விண்ணவர்தம் பாலமுதம் வேப்பங்கா யாகவென்பாற்
பண்ணியதெம் மண்ணன்மயல் பார்த்தாயோ பைங்கிளியே"

—பைங்கிளிக்கண்ணி 52.

என்றதாற் றெளிக.

பிரிவாற்றாமையால் எல்லாரும் உறங்குங் காலத்தில் தனக்கு உறக்கமில்லை யென்பார்,

"மண்ணுறங்கும் விண்ணுறங்கு மற்றுமுள வெலாமுறங்குங்
கண்ணுறங்கே னெம்மிறைவர் காதலாற் பைங்கிளியே"

—பைங்கிளிக்கண்ணி 44.

என்றார்.

தலைவனைக் கண்டபோது தலைவி அவன் வசப்படுதல் இரும்பைக் காந்தம் கவர்தல்போலா மென்பார்,

" காந்த மிரும்பைக் கவர்ந்திழுத்தா லென்னவருள்
வேந்த னெனை யிழுத்து மேவுவனோ பைங்கிளியே "

—பைங்கிளிக்கண்ணி 17.

என்றார்.

பண்டைப் பெரியோருட் கல்லால நீழலின் கண்ணே கடவுள் அருள்பெற்ற நால்வரையும் சுகர், வாமதேவர் என்னும் முனிவர்களையும் அடிகள் விதந்தோதினர்.

" துங்கமிகு பக்குவச் சனகன்முதன் முனிவோர்கள் "

—சின்மயானந்தகுரு 1.

" அந்தணர் நால்வர்காண அருட்குரு வாகிவந்து "

—தேன்முகம் 10.

" அன்றந்த நால்வருக்கு மற்புதமாய் நீயுரைத்த தொன்று"

—பராபரக்கண்ணி 279.

என்ற வாக்குகளால் பண்டை நால்வர் சிறப்புக் குறிக்கப் பட்டது. சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் என்னும் நால்வரே கல்லால நீழலின்கண் ஞானோபதேசம் பெற்றதாகப் புராணங் கூறும்.

ஆகாரபுவனம் 23-ம் பாட்டில் இந்நால்வரையும், மௌனகுரு 7-ம் பாட்டில் சுகர், வாமதேவர், முதலிய ஞானிகளையும் அடிகள் விதந்தனர். சுகர் என்பவர் கிளிவடிவோடிருந்த ஒரு தேவமாதுக்கும் வியாசருக்கும் பிறந்தவர். இவர் பிறந்தவுடன் முழுத்துறவு கொண்டமையால் முனிவர்களுள் இவரே சிறந்தவ ரென்ப. முனிவர்களுள் இவரே மாதர் வசப்படாதவர். அரம்பை என்னும்

விண்மாது இவரைத் தன்னோடு சேரும்படி காதல் காட்டியும் சித்தநிலை தெரியாதிருந்தவர் இவர் ஒருவரே என்று கூறுவதுமுண்டு. சுகர், மார்க்கண்டர், முதலியோர்கள் சித்தாந்த நித்தியரென அடிகள் கருதுவது,

"திவ்யகுண மார்க்கண்டர் சுகராதி முனிவோர்கள்
சித்தாந்த நித்ய ரலரோ" —கருணாகரக்கடவுள் 7.

என்பதாற் புலனாகும்.

பேரின்பத்தை உலகிலிருந்து பெறுதற்குத் தடைகள் பலவாதலின் சுகர் உலகத்தில் தங்காது அருந்தவங்கிடத் தற்பொருட்டு நிடதமலைக்குச் சென்றமையால்,

"பேரின்ப முத்தி யிப்பூமியிலிருந்து காண
எத்தனை விகாதம் வருமென்று சுகர்சென்றநெறி
இவ்வுலகம் அறியா ததோ"—எங்குநிறைகின்றபொருள் 10.

என்றார்.

"ஓதரிய சுகர்போல வேனோ னென்ன
ஒருவர் இலயோ வெனவும் உரைப்பேன்தானே"
-- ஆகாரபுவனம் 32.

என்றமையாலும் விளங்கும்.

சுகமுனிவர் உடம்பு முழுவதும் சிவவடிவமே யாகப் பெற்று இறைவனைக் கூவியபோது இறைவன் என்ன வென்னவென்று பதில் விடுத்தாரென்பார்,

"அங்கமே நின்வடிவ மானசுகர் கூப்பிடநீ
யெங்குமே னேனென்ற தென்னே பராபரமே"
—பராபரக்கண்ணி 211.

என்றார்.

இங்கே குறித்த சனகனென்பவன் மிதிலையை ஆண்ட மன்னன். இவன் தனது நகரம் நெருப்பு வாய்ப்பட்டு அழிந்த காலையும் அதன் பொருட்டுக் கவலையடையாதவன்.

மார்க்கண்டர் சிறப்பையும் அடிகள் பாராட்டியுள்ளார். மார்க்கண்டர் கதையால் அன்பர்கள் நமனுக்கு அஞ்சவேண்டாமென்பது தெளிவாயிற் றென்பார்,

"மார்க்கண் டர்க்காக மறலிபட்ட பாட்டையுன்னிப்
பார்க்கின் அன்பர்க் கென்ன பயங்காண் பராபரமே"
—பராபரக்கண்ணி 128.

என்றது காண்க.

**எந்நாட்கண்ணியுள்** குருமரபின் வணக்கங் கூறிய விடத்து முதற்கண்ணே கல்லால நீழலில் வீற்றிருந்த கடவுளையும், அவர்பால் உபதேசம் பெற்ற நந்தியெம் பெருமானையும் அவரது ஞானப் புதல்வராகிய சனற்குமாரர் முதலியவர்களையும் வாழ்த்தியபின், ஆசிரியர் மெய்கண்டார், அருணந்தி சிவாசாரியார், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவம் என்னுஞ் சந்தான குரவர் நால்வரையும் தனித்தனி வாழ்த்துகின்றார். பின்னர்ச் சைவ ஆசிரியர்களுக்கெல்லாம் பொது வணக்கங்கூறித் தமது குருவாகிய மௌனகுருவை இனிது வாழ்த்துகின்றார். மெய்கண்டார் வணக்கம் வருமாறு:—

"பொய்கண்டார் காணாப் புனிதமெனு மத்துவித
மெய்கண்ட நாதனருள் மேவுநா ளெந்நாளோ"
—எந்நாட்கண்ணி குருமரபு வணக்கம் 4.

இதனால் மெய்யான அத்துவித உண்மையை அனுபவத்திற்கண்டு உலகிற் குணர்த்தியவர் மெய்கண்ட தேவ

ரென்பது தெளியப்படும். அருணந்தி சிவாசாரியர் வணக்கம் வருமாறு:—

"பாதிவிருத்தத்தா லிப்பார் விருத்த மாகவுண்மை
சாதித்தார் பொன்னடியைத் தான்பணிவ தெந்நாளோ"
— ஷை 5.

இதனுள் பாதிவிருத்தமென்றது சிவஞான சித்தியார் எட்டாஞ் சூத்திரம் முப்பதாம் பாட்டின் முதற் பாதியாகும்.

"அறியாமை யறிவகற்றி யறிவி னுள்ளே
யறிவுதனை யருளினு னறியாதே யறிந்து
குறியாதே குறித்தந்தக் கரணங்க ளோடுங்
கூடாதே வாடாதே குழைந்திருப்பை யாயின்"

இதன்கண் தம் அறிவினுல் அறிவதையும் தமது அறியாமையையும் ஒழித்துத் திருவருள் நெறியால் உண்மையறிந்து சுட்டியுணராது, சுட்டிறந்த முறைமையில் முதல்வனைக் கருதி மன முதலிய கரணங்கள் அடங்கப் பெற்று இறைவன்பால் அன்பு செலுத்துந் தளர்ச்சியற்ற தெளிவு நிலை கூறப்பட்டது. அடிகள் கண்ணிகளில் இக்கருத்தைத் தெளிவாகச் செப்பினமை காண்க.

"அறிவோ டறியாமை யற்றறி வினூடே
குறியிலறிவு வந்து கூடுநா ளெந்நாளோ"?
—எந்நாட்கண்ணி நிற்குநிலை 2.

"அறியாத நிந்தெமையா ளண்ணலை நாமாகக்
குறியாத வண்ணங் குறிக்குநா ளெந்நாளோ" ,, 24.

அடியார் வணக்கத்துட் சமய வேந்தராகிய திருஞான சம்பந்தர், சிவபோக நுகர்ச்சியிற் றலை சிறந்த திருநாவுக்கரசர், இறைவனைப் பரவை பால் தூதனுப்பிய திருநாவலூரர்,

புத்தரை வாதில் வென்ற திருவாதவூரடிகள் என்னும் சைவ சமயத் திருநெறித் தலைவர் நால்வரும் முதற்கண் வாழ்த்தப்பட்டனர். பின்னர் பட்டினத்தார், பத்திரகிரியார், சிவ வாக்கியர், திருமூலர், அருணகிரி நாதர் என்பவர்கள் சிறப்பாகவும் பிற அன்பர்கள் பொதுவாகவும் துதிக்கப்பெற்றனர்.

ஆகாரபுவனம் 30, 31-வது பாட்டுகளிலே இவ்வடியார் சிறப்பு சுருக்கமாக உரைக்கப்பட்டது.

"துன்று மனக் கவலை கெடப் புலை நாயேனைத்
தொழும்பு கொளச் சீகாழித் துரையே! தூது
சென்றிடவே பொருளை வைத்த நாவலோய்! நஞ்
சிவனப்பா வென்ற வருட் செல்வத் தேவே!"
தேவர் தொழும் வாதவூர்த் தேவே! என்பேன்;
திரு மூலத்தேவே! இச்சகத் தோர் முத்திக்
காவலுறச் சிவ வென்வாக் குடனே வந்த
வரசே! சும்மா விருந்துன் னருளைச் சாரப்
பூவுலகில் வள ரருண கிரியே! மற்றைப்
புண்ணியர் காளோ வென்பேன்

கல்லாலின் 14-ம் பாட்டில் தேவாரத்தின் இனிமை குறிக்கப்பட்டது.

" மொழிக்கு மொழி தித்திக்கும்
மூவர் சொலும் தமிழ் கேட்குந் திருச் செவிக்கே
மூடனேன் புலம்பிய சொல்
முற்று மோதான் "

சிவபெருமான் தானே நேராகத் திருவுருத்தோற்றி மணிவாசகப் பெருமானுக்குக் குருவருள் நல்கியது போல மற்றெவர்க்கும் அங்ஙனம் தோன்றவில்லை என்பார்,

" உருவெளி தான் வாத வூருத்தமர்க் கல்லாலின முங்
குருவழி நின்றூர்க்கு முண்டோ கூறுய் பராபரமே"

என்றூர். —பராபரக்கண்ணி 356.

எங்நாட்கண்ணி அறிஞருரையுள், தேவார திருவாசகத் திருவருட் பாடல்கள் சிலவற்றின் சிறப்படிகளை அடிகள் விதந்து எடுத்துக் காட்டினமை காண்க. முதலாவது பாட்டில், 'இரு நிலனய்த் தீயாகி' என்ற அப்பர் சுவாமிகள் திருத்தாண்டகத்தின் கருத்தும் திருஞான சம்பந்தர் திருவாக்கின் உட்கிடையும் மூன்றுவது நான்காவது பாட்டுகளுள் 'தானென முன்படைத்தான்' 'என்னுடைய தோழனுமாய்' என்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளது தேவாரத்திருப்பாட்டுகளின் நுட்பமும், ஐந்தாவது பாட்டிலே, 'உன்னினுன்னும்' என்ற அப்பர் சுவாமிகள் திருவாக்கின் உண்மையும் ஆறு, ஏழு, எட்டுச் செய்யுள்களிலே 'நினைப்பற நினைந்தே' 'சென்று சென்றணுவாய்த்தேய்ந்து தேய்ந் தொன்றும்' 'ஆதியு மந்தமு மில்லா அரும் பெருஞ் சோதி' என்னும் திருவாசகப் பகுதிகளின் பெற்றியும் சுருக்கமாய் உணர்த்தப்பட்டன. பதின்மூன்றுவது கண்ணியில், 'அறிவை யறிவது பொருு'ளென்ற அருணகிரி நாதர் திருவாக்கின் கருத்துக் குறிக்கப்பட்டது.

பட்டினத்தடிகளைப் போல் அருந்துறவு பூண்டவர்கள் உலகத்திலில்லை என்பது அடிகள் கருத்து ஆதலின்,

" பாரனைத்தும் பொய் யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்
ஆருந் துறக்கை யரிதரிது" [போல்

—உடல் பொய்யுறவு 57.

என்றனர்.

அருணகிரி நாதரைப்பற்றி முன்னமே சும்மா விருத் தலைப்பற்றிப் பேசுமிடத்துக் கூறப்பட்டது. அவர் முருகப் பெருமான் திருவருளால் சிவானுபூதி பெற்றவ ரென்பது,

"கந்தரனு பூதி பெற்றுக் கந்தரனுபூதி சொன்ன
எந்தை அருள் நாடி இருக்கு நாளெந் நாளோ ?"

—எந்நாட்கண்ணி அடியார் வணக்கம் 8.

என்றமையால் தெளிக.

சிவ வாக்கியர் என்பவர் பிறக்கும் பொழுதே 'சிவ சிவ' என்று சொல்லிக் கொண்டே பிறந்தமையால்,

"கண்டது பொய்யென்ற கண்டாகார சிவமெய் யெனவே
விண்ட சிவவாக்கியர்தாள் மேவுநா ளெந்நாளோ"

—எந்நாட்கண்ணி அடியார் வணக்கம் 6.

என்றனர்.

சிவஞானயோகத்தில் தலைசிறந்தவர் திருமூலமா முனிவர் என்பதே அடிகள் கருத்து. திருமந்திரத்தில் கூறிய வாறே யோக முறைகளைப் பயில வேண்டுமென்று குறிப்பிப் பார்,

"மந்திர மாலிகை சொல்லு மியம நியம மாதியாம்
மார்க்கத்தில் நின்று கொண்டு" —தேசோமயானந்தம் 1.

என்றார்.

யோக சூத்திர ஆசிரியராய பதஞ்சலி முதலிய எவரினும் பெரியவர் திருமூல ரென்று குறிப்பானுணர்த்துவார்,

"சக்கர வர்த்தி தவராச யோகி யெனும்
மிக்கதிரு மூலனருள் மேவுநா ளெந்நாளோ ?"

—எந்நாட்கண்ணி அடியார் வணக்கம் 7.

என்றார். கொல்லா விரதத்தை உலக மெலாம் கைக் கொள்ள வேண்டுமென்று அடிகள் விரும்பியது போலவே எல்லாரும் தவஞ் செய்தல் வேண்டு மென்பதும் அடிகள் பெருவிருப்ப மாதலின்,

"முன்னுண் மெய்ஞ்ஞான முனிவர் தவ மீட்டுதல்போல்
இந்நாளிற் காணவெனக் கிச்சை பராபரமே"
—பராபரக்கண்ணி 222.

என்றார்.

தமிழ்ப் பாட்டினாலே இறைவனைத் துதிப்பதின் சிறப்பைச் சில இடங்களில் அடிகள் குறித்துள்ளார்.

"அடியிட்ட செந்தமிழி னருமை யிட்டாரூரி
லரிவை யோர் பரவை வாயிலம் மட்டு மடியிட்டு நடைநடங்
ளடியீது முடியீதென மடியிட்ட மறை பேசு [தருளடிக
பச்சிளங் கிள்ளையே"
—மலைவளர்காதலி 4.

என்ற விடத்துச் செந்தமிழின் சுவையினை நுகர்ந்து மகிழ்ந்து இறைவன் பரவையாரிடம் தூது போயதாகக் கூறியது காண்க.

"தொண்டருக் கெளியா னென்று தோன்றுவான்.
வண்டமிழ்க் கிசைவாக மதிக்கவே"
—பொன்னை மாதரை 70.

என்றவிடத்துஞ் செந்தமிழ்ப் பாடல் பாடும் அன்பர்க்கு யாவரும் மதிக்கும்படியாக எளிவந்து தோன்றுவானென்பது குறிக்கப்பட்டது.

அன்போடு தண்டமிழ் மாலையைத் தொடுக்கின்றவர்களது குறைகளைச் சிறிதும் பொருட்படுத்தாது இறைவன் திருவருள் புரிவானென்பார்,

"தண்டமி ழலங்கல் தொடுக்கின்றோர்களைச் சோதியாதது
பரஞ் சோதி"
—ஆசையெனும் 6.

என்றார்.

அடிகள் தமது தமிழ்ப் பாடலின் இயல்பினைப் பற்றியும், தாம் விரும்பும் மதிப்பைப் பற்றியும், உருக்கம் உண்டாகும்படி சொல்வது சித்தர் கணம் 8-ம் பாட்டு.

"கருப்பஞ்சாற்றின் சுவை போலவும், முக்கனிகளின் இனிமை போலவும், வாயூறுதற்குக் காரணமான கற்கண்டின் தித்திப்புப் போலவும், மதுரமான அடியைத் தெய்வங்களொன்றும் எனக்கெடுத்துக் கொடுக்கவில்லை. பேய் போலப் பல கால் அழுது மனதில் தோன்றியவைகளெல்லாம் என்னுடைய அறியாமை, அறிவு என்னும் இரண்டு பகுதியுங் கலந்து சொல்லிய தமிழ் மாலை என்னுடைய தமிழாகும். ஆசை மேலிட்டாற் புகலப்பட்டமையால் உயர்ந்தோராகிய உலகம் அதற்குக் குற்றங்கூறுது; முத்தி சித்திகளெல்லா மமைந்த நெறியினை நன்குணர்ந்த சித்தர் கூட்டங்களாகிய உங்களைப் பார்த்து இத்தமிழைச் சொன்னவன் யார்? என்று பெரியோர் வினவ அவ்வினவிற்கு விடையாக இத்தமிழைச் சொன்னவன் சிறிது சாந்தகுணம் வாய்ந்தவன் என்று எனக்குப் புகழ் உண்டாகும்படி நீங்கள் கூற அச்சொல்லை அடியேன் கேட்டு, மனமகிழ்ச்சி யடைவது எக்காலம்?" என்றது காண்க.

---

The B. N. Press, Mount Road, Madras.

## கா. சுப்பிரமணியம் பிள்ளை, எம்.ஏ., எம்.எல்.

# இயற்றிய பிற நூல்கள்

---

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| திருக்குறட் பொழிப்புரை ராப்பர் | ... | 0 | 14 |
| ,, கலிகோ | ... | 1 | 4 |
| சந்தாநசாரியார் சரிதம் (சித்தாந்த விளக்கத்துடன்) | ... | 0 | 8 |
| திருஞானசம்பந்த சுவாமிகள் சரிதம் (ஆராய்ச்சியுடன்) ராப்பர் | ... | 1 | 4 |
| ,, கலிகோ | ... | 1 | 8 |
| திருநாவுக்கரசு சுவாமிகள் சரிதம் (ஆராய்ச்சியுடன்) ராப்பர் | ... | 0 | 12 |
| ,, கலிகோ | ... | 1 | 4 |
| சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரிதம் (ஆராய்ச்சியுடன்) ராப்பர் | ... | 1 | 2 |
| ,, கலிகோ | ... | 1 | 6 |
| மாணிக்கவாசக சுவாமிகள் சரிதம் (ஆராய்ச்சியுடன்) ராப்பர் | ... | 0 | 14 |
| ,, கலிகோ | ... | 1 | 4 |
| சேக்கிழார் சரிதம் (ஆராய்ச்சியுடன்) ராப்பர் | ... | 1 | 0 |
| ,, கலிகோ | ... | 1 | 6 |
| அறிவுவிளக்க வாசகம் | ... | 0 | 5 |
| திருஞானசம்பந்தர் தேவார இயற்கைப் பொருளழகு | ... | 0 | 4 |

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| சைவசித்தாந்த உண்மை வரலாறு | ... | 0 | 3 |
| சைவசித்தாந்த விளக்கச் சுருக்கம் | ... | 0 | 1 |
| இந்து சமயங்களின் சுருக்க வரலாறு | ... | 0 | 3 |
| தமிழ் இலக்கிய வரலாறு | ... | 2 | 8 |
| A short sketch of the Hindu Religions of the Tamil Country | ... | 0 | 2 |
| Metaphysics of the Saiva Siddhantam | ... | 0 | 8 |
| A note on the Hindu Religious Endowments Bill | ... | 0 | 4 |
| Principles of Criminology | ... | 12 | 0 |
| Lectures on the Indian Penal Code | ... | 6 | 0 |
| | | முன் விலை | |
| பட்டினத்தடிகள் வரலாறும் நூலாராய்ச்சியும் | ... | 0 | 12 |
| குமரகுருபரர் வரலாறும் நூலாராய்ச்சியும் | ... | 1 | 0 |
| சிவஞானமுனிவர் வரலாறும் நூலாராய்ச்சியும் | ... | 1 | 8 |
| சைவசித்தாந்த சாத்திர வசனம் | ... | 2 | 0 |
| தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்துரை | ... | 2 | 0 |
| சைவச் சடங்கு விளக்கம் | ... | 1 | 4 |
| தமிழ்மொழி வரலாறு | ... | 2 | 0 |

**மணிவாசக மன்றம்,**

**திருநெல்வேலி.**